
# ஒரு தொண்டரின் பாதை

## சமூகத்தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் வாழ்வும் பணிகளும்



JPL
C13035

...ராஜா

(..., லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

பொது நூலகம்
19 NOV 2019
மாநகர சபை
யாழ்ப்பாணம்

# ஒரு தொண்டரின் பாதை

சமூகத்தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின்

வாழ்வும் பணிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# ஒரு தொண்டரின் பாதை

## சமூகத்தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் வாழ்வும் பணிகளும்

பொதுசன நூலகம்
19 NOV 2019
மாநகர சபை
யாழ்ப்பாணம்

**என்.செல்வராஜா**
நூலகவியலாளர்
லண்டன்

274287

வெளியீடு
புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு
சர்வோதய நற்பணி ஒன்றியம்
என்னெப்பெட்டல், ஜேர்மனி
05 ஒக்டோபர் 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
274287CC

23


நூலியல் தகவல்

நூலின் தலைப்பு : ஒரு தொண்டரின் பாதை: சமூகத்தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் வாழ்வும் பணிகளும்

ஆசிரியர் : என். செல்வராஜா, லண்டன்

வெளியீட்டாளர் : புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் என்னெப்பெட்டல், ஜேர்மனி.

பதிப்பு : 1வது பதிப்பு, 05.10.2019

அச்சகம் : குமரன் அச்சகம்
39, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 6.

பக்கங்கள் : xx + *284*

அட்டை வடிவமைப்பு : கௌதமன் செல்வராஜா

Title : **Oru Thondarin Paathai**
Path of a Volunteer: Life and Works of Late Mr.Kandiah Thirunavukkarasu, Founder, North Ceylon Sarvodayam, Pungudutivu, Jaffna District of Sri Lanka

Compiler : N.Selvarajah, London

Publishers : Pungudutivu Thondar Thirunavukkarasu Sarvodayam Welfare Association, Germany.

Edition : 1st Edition, 05th October 2019

Printers : Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo 6.

Pages : xx + *284*

Cover Design : Gauthaman Selvarajah




© Copy Right 2019 by N.Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the Author.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 NOV 20



13035cc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எழுத்து என்பது எம் அனைவரினதும் உயிர்மூச்சாகும். எழுத்துக்களே எம் இருப்பின் அடையாளம். இதுவே இனங்களின் ஆணிவேராகவும் உள்ளது. புங்குடுதீவு என்றாலே அது தனித்துவம் மிக்கது. அதனிலும் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர் களின் பணி வாசனை மிக்கது. அத்தகைய தொண்டர் பயணித்த வாழ்வுப் பாதையினை உலகம் அறிய வேண்டுமென்ற பெரும் அவாக்கொண்ட இலண்டன் நூலகவியலாளரும் வட இலங்கை சர்வோதயத்தின் ஆரம்பகால மத்திய நூலகப் பொறுப்பாளருமான திரு. என்.செல்வராஜா அவர்கள் உரிமையோடும் உணர்வோடும் எழுதிய ஒரு தொண்டரின் பாதை என்ற நூலை வெளியிடுவதில் நாம் அனைவரும் பெருமை கொள்கின்றோம். இந்நூல் இவர் இதுவரை எழுதிப் பிரசுரமாகியுள்ள 53ஆவது நூலாகும்.

தாயகப் பணிகளை முன்னெடுத்து வரும் புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் யேர்மனியிலே நடப்பாண்டு விழாவிலே “வரலாற்றைப் படித்து வரலாற்றைப் படைத்து வரலாறாகவே வாழ்கின்ற” தொண்டர் திருவினுடைய சிறப்பு மலரோடு இந்நூலையும் வெளியிட்டு வைப்பதில் பேருவகை அடைகின்றோம்.

பணி செய்வதே இலக்கு என்ற இலட்சிய வாழ்வுதனை தான் இறக்கும்வரை வாழ்ந்துசென்ற குருவிற்கு என் இளமைக் காலத்தில் அவருடனே இணைந்து பணியாற்றும் காலகட்டத்திலே மக்கள் நலன் கொண்ட அம்மாமனிதனுக்கு சிலையொன்று அமைக்க வேண்டும். மக்கள் வழிபடும் நாயகனாக அவர் மிளிர வேண்டும் என்ற எண்ணங்கள் தொண்டர் உயிருடன் வாழும் பொழுதிலேயே எனக்குள் பிறந்துவிட்டன. அந்த எண்ணங்களுக்கு உயிர் கொடுக்கும் முகமாகத்தான் 05.06.2019 அன்று புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வோதய சேவை வளாகத்திலே தொண்டருக்குத் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது.

தொண்டருக்கு ஏன் இந்தத் திருவுருவச் சிலை என்ற வினாவிற்கு விடையளிக்கும் முகமாகத்தான் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களின் “ஒரு தொண்டரின் பாதை” என்னும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை வாசிக்கும்போது தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களைப்பற்றி தெரியாத பல விடயங்களையும் தன் கண்களினூடாக அவர் கண்ட சம்பவங் களையும் மிக அழகாக எழுத்து என்னும் ஆயுதத்தால் புதையல் எடுத்துத் துடைத்துத் தந்திருக்கின்றார்.

இதனைப் படிக்கும் நாமும், எமது எதிர்காலச் சந்ததியினரும் திருநாவுக்கரசு என்ற ஒரு பெருந்தொண்டனைப்பற்றி அறிந்து கொள்ள இந்நூல் உதவியாக இருக்கும் என நாம் நம்புகின்றோம். இந்நூல் சிறப்பாக எல்லோரது கரங்களிலும் தவழும் வகையில், இப்படியான படைப்புக்களை மேன்மேலும் எமது சகோதரர் என். செல்வராஜா அவர்கள் படைக்க வேண்டும் என்பதுடன் தொண்டர் திருநாவுக்கரசு பயணித்திருந்த நல்வழியை எமக்குக் காட்டும் இந்நூலை புங்குடுதீவு தொண்டர் திருநாவக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் இரண்டாவது பிரசுரமாக ஜேர்மனியில் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம். தலைப்பைப் பாருங்கள். வாசிக்க, படிக்கத் தானாகவே தாகம் எடுக்கும்.

திரு. கணேசு மகாலிங்கம்
வட இலங்கை சர்வோதய சர்வதேச ஒருங்கிணைப்பாளர்.
ஒன்றிய அமைப்பாளர்,
புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய
நற்பணி ஒன்றியம்-யேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

எம் தாய் மண்ணின் எழுத்தாளர்களுள் ஒருவராம் திரு. என். செல்வராஜா அவர்கள், புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் பிறந்த மண்ணையும் மக்களையும் மறவாது வாழ்பவர். தொண்டர் திருநாவுக்கரசு அவர்களோடு இணைந்து பணிசெய்த தனது ஞாபகங்களை மீட்டிப் பார்க்கும் முகமாகவும் தொண்டரின் பணிகளைப் பற்றிய மலரும் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் வகையிலும் "ஒரு தொண்டரின் பாதை" என்னும் தலைப்பிலான இந்நூலினைப் படைத்திருக்கின்றார். இவரது படைப்பாக்கத்தை எண்ணி நானும் வட இலங்கை சர்வோதய குடும்பமும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

எத்தனையோ நூல்கள் முன்னர் எழுதப்பட்டிருந்தாலும் எங்கள் தொண்டரைப் பற்றி அவர் எழுதிய இந்த நூலிலே, தொண்டரின் பல்வேறு பணிகளும் உயிரோட்டமாக எழுந்து நிற் கின்றன. அதற்காக அரும்பாடுபட்டு உழைத்து எங்கள் கைகளில் இந்நூலை அழகாகத் தவழவைத்திருக்கிறார். அதுமட்டுமன்றி, தொண்டர் திருநாவுக்கரசு அவர்களின் திருவுருவச் சிலை எழுந்த அதே ஆண்டில் திரு.என்.செல்வராஜா அவர்களின் நூலும் வெளிவருவதென்பது மனதிற்கு இரட்டிப்பான மகிழ்ச்சியையும் மன நிறைவையும் எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

தொண்டர் திருநாவுக்கரசு அவர்களோடு இணைந்து பணியாற்றிய வேளையில் சர்வோதய மத்திய நிலையத்தில் நுலகப் பொறுப்பாளராக இருந்த செல்வாண்ணர் அவர்கள், கூடவே சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்திவந்திருந்தார். எமது தாய்மண் பெற்றெடுத்த தவப்புதல்வரான அண்ணரவர்கள் இதுவரை ஐம்பத்திரண்டு நூல்களை எழுதியுள்ளார். இன்று அவர் எங்கள் கரங்களில் ஒப்படைத்துள்ள அவரது ஐம்பத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது நூலான "ஒரு தொண்டரின் பாதை" மேன்மேலும் எமது மண்ணுக்குப் பெருமைசேர்த்துள்ளது என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

தொண்டர் திரு அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் போது, "உய்த்துணர்ந்து உண்மையை உலகிற்கு உணர்த்திய உயிர்ப்பு நூலகர் இவர்" என்று துணிந்து கூறத் தோன்றுகின்றது. இது செல்வாண்ணரின் மானசீகப் படைப்பு. உள்ளதை உள்ளபடி துல்லியமாக, தெளிவாக விளக்கும் மனோநிலையும், எழுத்தாற்றலும் கொண்டு மெருகிட்ட தொண்டரின் வரலாற்று நூலை வாசிக்கும் போது மெய்சிலிர்க்கின்றது. இந்நூலினை உற்று நோக்கும்போது "தொண்டர்மீது இவர் கொண்ட பற்றுறுதியையும் தணியாத தாகத்தின் உயிர்த்துடிப்பையும்" உணரக்கூடியதாக உள்ளது. இது உண்மையில் செல்வாண்ணர் அவர்கள் தொண்டர் அவர்களை சர்வோதய நிலையத்தில் முதன்முதலில் சந்தித்த வேளையில் நடைபெற்ற "நயன தீட்சை"யின் பயனாகவும் இருக்கலாம்.

அதுமட்டுமன்றி, தொண்டர் திருநாவுக்கரசு அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்க்கை வரலாற்றைத் தத் ரூபமாக சித்திரித்து, அத்தியாயங்களாக வகுத்து, அழகாக நகர்த்திச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. செல்வாண்ணர் தன் சமூகப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றவேண்டுமென்றும் மிகச்சிறந்த எழுத்தாளராக மிளிரவேண்டுமென்றும் வாழ்த்து கின்றோம்.

"ஒரு தொண்டரின் பாதை" எனும் தலைப்பில் செல்வாண்ணர் உருவாக்கிய இந்நூலானது தொண்டுப் பாதையில் பயணிக்கும் அனைவருக்கும் சிறந்த வழிகளைக் காட்டும் கலங்கரை விளக்காய்த் திகழும் என நம்பகின்றேன்.

புலம்பெயர் வாழ்வின் சுமைகளுக்கு மத்தியிலும் செல்வாண்ணர் ஒரு சிறந்த பணியினை மேற்கொண்டுள்ளார். இந்நூலானது அழகான முறையில் வடிவமைத்த அன்புச் சகோதரர் அவர்கள் இன்னும் பல படைப்புகளை படைக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்வதுடன், இந்நூலை வெளியீடு செய்கின்ற யேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தினருக்கும் உளமார நன்றிகூறி, உங்கள் பணி தொடரவும், எம்மோடு எக்காலத்திலும் தாங்கள் கைகோர்த்து நிற்கவேண்டு மென்றும் எல்லாம் வல்ல சிவயோக சுவாமிகளின் பாதம் பணிந்து வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

வாழ்க வளமுடன்,

பொ. ஜமுனாதேவி
அறங்காவலர்
வட இலங்கை சர்வோதயம்




தொண்டரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் அறங்காவலர் பொ.ஜமுனாதேவி தொண்டருக்கு மலர்வணக்கம் செலுத்துகின்றார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

வட இலங்கை சர்வோதய அறங்காவலரும், தமிழ்கூறும் நல்லுலகினால் நன்கு அறியப்பட்டவரும், வாழ்நாள் முழுவதும் சமூக மேம்பாட்டுக்காக அல்லும் பகலும் உழைத்தவருமான அமரர் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் வாழ்வும் பணிகளும் தொடர்பாக சிரேஷ்ட நூலகரும், ஆவணக்காப்பாளரும், அமரரோடு நெருங்கிப் பழகியவருமான உயர்திரு நடராஜா செல்வராஜா அவர்களால் எழுதி வெளியிடப்படும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதையிட்டு பெருமை கொள்கின்றேன்.

இன்றைய சூழலில் சமூகத்தை நேசிப்பவர்கள் எனத் தம்மை இனம்காட்டிக்கொண்டு, அதன் வாயிலாக மறைமுகமாகத் தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளும் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில் சமூகத்தின் உயர்வே தனது லட்சியம் என சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டி, நிகழ்காலத்தவர் மட்டுமல்லாது எதிர்கால சந்ததியினரும் கடைப்பிடிக்கக்கூடிய வகையில் வாழ்ந்த பெருமகன் தான் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்கள். விவசாயக் குடும்பத்தில் பிறந்து தவிர்க்க முடியாத நிலையில் இடைத்தரக் கல்வியோடு தனது பள்ளிக் கல்வியை நிறுத்தி சமூகப் பணியை மேற்கொள்ளப் புறப்பட்ட திருநா அண்ணர் என அன்போடு அழைக்கப்பட்டவரே தொண்டர் திருநாவுக்கரசு அவர்கள். சமூகப் பணியில் ஆர்வம் கொண்டிருந்ததன் காரணமாக கிராமத்து இளைஞர்களை ஒன்றிணைத்து தான் பிறந்து வளர்ந்த புங்குடுதீவுக் கிராமத்தைக் களமாகக் கொண்டு தனது பதின்ம வயதில் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக இளைஞர் அமைப்புகள், கிராமசபை போன்றவற்றினூடாகச் செயற்பட ஆரம்பித்த அண்ணர் திருநா அவர்கள் யாருமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL



செய்யத் துணியாத பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை கிராமத்தில் மேற்கொண்டு அதில் வெற்றிபெற்றுள்ளதை நான் நன்கறிவேன்.

அன்னியரால் விட்டுச் சென்ற இன முரண்பாடுகளால் அவதிப்படும் தமிழர் சமூகத்திற்கான விடிவினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக தந்தை செல்வாவின் வழிநின்று களங்கள் பல கண்டு போராடிய இனப்பற்றாளன். உயரிய கொள்கைப் பிடிப்போடு புறப்பட்ட இவருக்கு அரசியலில் சந்தர்ப்பவாத அரசியல் பரிணாமம் உருவாகத் தொடங்கவே, மனச்சாட்சியைத் தொட்டுப்பார்த்து அதனை விரும்பிச் செல்பவர்களுக்கு இடையூறாகவிருக்காது அதிலிருந்து ஒதுங்கி நலிவுற்ற மக்களுக்கு சேவையாற்றவெனத் தீர்மானித்து இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்துடன் இணைந்து பணிசெய்யத் தொடங்கினார்.

தூர நோக்கும் பரந்த ஆளுமையும் கொண்ட தொண்டர் அவர்கள் 1983ஆம் ஆண்டு தமிழர்பால் திட்டமிட்டு ஏவப்பட்ட இனவன்முறையினால் தமிழர் சமூகம் பல்வேறு அனர்த்தங்களைச் சந்தித்தது. அக்காலங்களில் இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருட்களை வழங்குவதில் காட்டிய பாரபட்ச நிலையில் அதிருப்தி அடைந்து அதனை தலைமைப் பீடத்திற்குச் சுட்டிக் காட்டியதை செவிமடுக்காத நிலை ஏற்படவே அவ்வமைப்பில் தொடர்ந்தும் பயணிப்பது சரியா என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு நாற்பத்திமூன்று நாட்கள் மௌனவிரதமிருந்து எடுத்த தீர்மானத்திற்கமையவே வட இலங்கை சர்வோதயம் என்ற அரசுசார்பற்ற நிறுவனத்தை உருவாக்கி அதன் தலைமைச் செயலகத்தினை புங்குடுதீவில் அமைத்து வடமாகாணத்தைச் சேவைப்பரப்பாகக் கொண்டு பணிசெய்ய ஆரம்பித்தவர் தான் அமரர் தொண்டர் திருநாவுக்கரசு அவர்கள்.

இடைத்தரக் கல்வியோடு பள்ளிக்கல்வியைப் பூர்த்திசெய்த தொண்டர் அவர்கள் பின்னாட்களில் சமூகப் பணிகள், அரசியல் பணிகளையாற்றியபோது கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

தேடிக் கற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். காந்திய வழியில் நின்று ஆங்கிலம், தமிழ் நூல்களைப் பெற்று வாசிப்பதில் ஆர்வம் கொண்டதன் விளைவாக பின்னாட்களில் மும்மொழிப் புலமை கொண்டவராக தம்மை மேம்படுத்திக்கொண்டார்.

புங்குடுதீவுக் கிராமத்தினை மையமாகக் கொண்டு வட மாகாணத்தில் பல கிராம இராச்சியங்களை உருவாக்கும் நோக்குடன் பல்வேறு செயற்றிட்டங்களை வகுத்து நடைமுறைப் படுத்துவதில் வெற்றிகொண்ட பெருந்தகையாளர் அவர். குறிப்பாக, விவசாய ஊக்குவிப்பு, வைத்திய மற்றும் சுகாதார வசதிகளைப் பேணல், ஆன்மீக உணர்வினை மக்களிடம் சென்றடைய வைத்தல், கலாசார விழுமியங்களை மக்கள் விருப்புடன் பின்பற்ற வைத்தல் போன்ற பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்கள் மனம்கவர் அன்பராக எம்மோடு வாழ்ந்தவர். சிறப்பாக, புங்குடுதீவு கிராமத்தின் நீர்ப்பிரச்சினையினை போக்குவதிலும் மக்கள் புலம்பெயர்வின் பின்னர் கிராமத்தை மீளக்கட்டியெழுப்புவதிலும் காட்டிய அக்கறையானது எமது மனங்களில் நிலைத்துள்ளது.

நேர்மை, நியாயம், நீதி என்பவற்றில் அசைக்கமுடியாத பற்றுள்ளம் கொண்ட தொண்டர் திருநா அண்ணரின் சமூக செயற்பாட்டில் சமூகத்தை நேசிப்பவர்கள், அரச நிர்வாகிகள், துறைசார் அன்பர்கள் எனப் பலரின் ஒத்துழைப்பும் ஆசியும் இருந்ததின் காரணமாக அவரது சேவைப்பரப்பு விசாலித்த தாகவிருந்தது. எனினும் தானும் செய்யாது மற்றவர் செய்வதில் குறைகாண்பதில் சமூகத்தில் ஆங்காங்கே காணப்பட்ட சிலரின் இடையூறுகளை செவிமடுக்காது என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற தாரக மந்திரத்தை உச்சரித்து சேவையாற்றிய பெருந்தகையே தொண்டர் அவர்கள்.

இத்தகைய பல்பரிமாணத்தைக் கொண்ட தொண்டர் திருநா அண்ணர் அவர்களின் வாழ்வு தொடர்பாகவும் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் தொடர்பாகவும் நிகழ்கால சமூகத்தினருக்கு மட்டுமல்லாது எதிர்கால சந்ததியினருக்கும் கொண்டுசெல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆரம்பத்தில் வாடகைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் சாரதியாகவிருந்து ஆளுமைமிக்க மாமனிதனாகத் தன்னை உயர்த்தியது மட்டுமல்லாது தான் கொண்ட குறிக்கோளை இறுகப் பற்றி தன்னோடு இணைந்து பயணித்த சமூகத்தவர்களுக்கு தனது உச்சமட்ட சக்தியைப் பயன்படுத்தி அவர்கள் வாழ்வுக்கு ஒளியூட்டிய ஒருவரான தொண்டரின் வாழ்வுப் பாதையை தெரியப்படுத்தும் முகமாக வெளியிடப்படும் "ஒரு தொண்டரின் பாதை" என்ற நூல் காலத்தின் தேவையுணர்ந்து எழுதப்பட்டுள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்கது.

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட உயர்திரு என்.செல்வராஜா அவர்கள் ஆனைக்கோட்டையைப் பூர்வீகமாகக் கொண்டவர். புங்குடுதீவு உட்பட தீவுப்பகுதிக்கு 1979ஆம் ஆண்டுக்கு முன்னர் சென்றிராதவர். அவ்வாண்டு வரை தொண்டர் பற்றி எதுவும் தெரிந்திராதவர். நூலகத் துறையில் ஆர்வம் கொண்ட நூலாசிரியர் நூலகங்களில் பணியாற்றிய அனுபவம் பெற்றவர். புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் நூலகம் ஒன்றை உருவாக்கவென நூலகர் தேவை என பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்தைப் பார்த்து போக்குவரத்துப் பிரச்சினையினைக் கருத்திற்கொண்டு விண்ணப்பிக்கத் தயங்கிய நிலையில், தனது சகோதரனும் ஊர்காவற்றுறை சுகாதாரத் திணைக்களத்தில் சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்றியவரும், பின்னாட்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியருமான வைத்திய கலாநிதி ந.சிவராஜா அவர்களுடன் விளம்பரம் தொடர்பாக சம்பாஷித்தபோது, அவர் தனக்கு தொண்டரை நன்றாகத் தெரியும் என்றுகூறி அவர் ஆற்றிவந்த சமூகப் பணிகளையும் எடுத்துக் கூறியதற்கிணங்க புங்குடுதீவுக்குச் சென்றவரே நூலாசிரியர் என்.செல்வராஜா அவர்களாவார்.

நூலாசிரியர் நூலகராகப் பணியாற்றிய காலத்தில் தொண்டர் அவர்களின் செயற்பாடுகள் மற்றும் அவரது ஓய்வுநேரங்களில் அவர் ஆற்றும் பணிகள் தொடர்பாக சிலாகிக்கும் வழக்கங்கள், கிராமத்தில் உள்ளவர்களோடு பழகும் சுபாவம் என்பன இணைந்த கலவைதான் இந்நூலென்றால் மிகையாகாது. குறிப்பாக புங்குடுதீவுக் கிராமத்தில் பிறந்து வளர்ந்த என் போன்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட அறிந்திராத பல்வேறுபட்ட சமூக, சமயப் பணிகள் சார்ந்த விடயங்களை தொண்டர் திருநா அண்ணரை மையப்படுத்தி சமூக, அரசியல், ஆன்மீகம், சுகாதாரம், கலை, கலாச்சாரம், விவசாயம் போன்ற கிளைகள் பல பரப்பி தொண்டரோடு இணைந்து பயணித்தவர்களை உள்வாங்கி எழுதி வெளியிட்டுள்ள திரு. என். செல்வராஜா அவர்கள் போற்றுதற்குரியவர். குறிப்பாக புங்குடுதீவுக் கிராமத்தின் ஆறு தசாப்த கால வரலாற்றை எடுத்துக்கூறும் இந்நூலானது எதிர்காலத்தில் புங்குடுதீவு கிராமம் பற்றி எழுதுபவர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய நூலாகும். நூல்களை ஆவணப்படுத்தும் துறையில் விற்பன்னரான திரு செல்வராஜா அவர்கள் புங்குடுதீவுக் கிராமத்தின் வரலாற்றை இந்நூலினூடாக ஆவணப்படுத்தியுள்ளார் என்பதில் மகிழ்வடைகின்றேன்.

குறிப்பிட்ட சில காலப்பகுதியில் புங்குடுதீவுக் கிராமத்தில் வாழ்ந்திருந்த திரு.என்.செல்வராஜா அவர்கள் பின்னாட்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓரங்கமான ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவன நூலகத்தில் 1991 வரை நூலகராகவிருந்து நாட்டுச் சூழ்நிலை காரணமாக இங்கிலாந்துக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்திருக்கும் நிலையில் தொண்டர் திருநா அண்ணரின் சத்திய வழிநின்ற சேவையைப் போற்றி தான் மட்டுமல்லாது தனது குடும்ப உறவுகளையும் வட இலங்கை சர்வோதயத்துடன் இணைத்து பணியாற்றிவரும் மிகச்சிறந்த பண்பாளரினால் எழுதி வெளியிடப்பட்டுள்ள இந் நூலானது சமூக சேவைக்குத் தம்மை உள்வாங்கும் ஒவ்வொருவருக்குமுரிய பாடநூலாக அமைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும் நூலாசிரியர் 13,000 இலங்கைத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தி, 13 தொகுதிகளை வெளியிட்டதன் மூலம் தமிழ்கூறும் நல்லுலகினால் பாராட்டப் பெற்றவராக உள்ளதுடன் இப்பணியை தொடர்ந்தும் செய்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வட இலங்கை சர்வோதய நிறுவனம் தொண்டர் அவர்களைத் தொடர்ந்து செயற்படுமா என்ற எண்ணம் பலரிடத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டிருந்த நிலையில் அவரால் பயிற்றுவிக்கப்பட்ட செல்விகள் பொ.ஜமுனாதேவி, க.புஷ்பமணி ஆகியோரின் வழிகாட்டலில் சேவைப் பரப்பினை பன்மடங்கு விசாலித்து செயற்படுத்தப்பட்டு வருவதானது தொண்டரினால் வழங்கப்பட்ட சிறந்த வழிகாட்டலே என்றால் மிகையாகாது.

அமரரின் 80ஆவது அகவையில் இந்நூலினை ஜேர்மனி-புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தினர் சிறந்த முறையில் வெளியிட்டுள்ளனர். தொண்டரின் சேவையை ஆவணப்படுத்தி, காலத்தின் தேவையுணர்ந்து வெளியிடப்படும் இந்நூல் சமூக சேவையை விரும்பும் ஒவ்வொருவருக்கும் நல்லதொரு கலைக்களஞ்சியமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**பேராசிரியர் கா. குகபாலன்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




*30.09.2001* அன்று கொழும்பில் கொட்டாஞ்சேனையில் தேசிய சேமிப்பு வங்கியில் நடைபெற்ற கூட்டத்தில் தொண்டர் திருநாவுக்கரசு ஆற்றிய இறுதி உரை. அருகில் பேரா.கா.குகபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

வெளியீட்டுரை

வாழ்த்துரை

அணிந்துரை

1. என்கடன் பணி செய்து கிடப்பதே 1

2. நிறைமொழி மாந்தர் பெருமை 8

3. தமிழரின் அரசியல் வரவேற்கிறது 22

4. கிராமசபையில் நான்கு ஆண்டுகள் 43

5. தொண்டர் திருவின் சமூகப்பணிகள் 64

6. புங்குடுதீவில் சர்வோதய இயக்கம் 80

7. திருநா அண்ணரும் சர்வோதய இயக்கமும் 94

8. முரண்பாடுகளின் அறுவடை 120

9. திருநா அண்ணரின் விவசாயப் பணிகள் 131

10. திருநா அண்ணரின் சுகாதாரப் பணிகள் 142

11. திருநா அண்ணரின் கலை கலாச்சாரப் பணிகள் 153

12. திருநா அண்ணருடனான எனது ஊடக/நூலக அனுபவம் 160

13. திருநா அண்ணரின் ஆன்மீக ஈடுபாடு 174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கனவுகளைக் கலைத்த இடப்பெயர்வுகள் 192

15. திருநா அண்ணரின் இறுதிப்பயணம் 213

16. அண்ணர் உருவாக்கிய பாதையில் தொடரும் பயணம் 224

பின்னிணைப்பு 1

இறுதிக் கடிதம்: புங்குடுதீவில் அவசர வேலையும் நிர்மாணப் பணிகளும் 261

பின்னிணைப்பு 2

அமரர் க.திருநாவுக்கரசு அவர்களின் அரசியல் கோட்பாடு 271

பின்னிணைப்பு 3

அமரர் கந்தையா திருநாவுக்கரசு பற்றிய தகவல் அடங்கியுள்ள பிற நூல்கள் 279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 1

# என்கடன் பணி செய்து கிடப்பதே

ஈழத்தின் பிரபல சமூகவியலாளர் சாந்தி சச்சிதானந்தன் எழுதிய "வறுமையின் பிரபுக்கள்" என்ற ஒரு நூலை சிலகாலங்களுக்கு முன்னர் வாசித்தேன். Lords of Poverty என்ற பெயரில் Graham Hancock எழுதிய ஆங்கில நூலின் தலைப்பிலிருந்து சாந்தி சச்சிதானந்தன் தனது நூலுக்கான தலைப்பை உபயோகப் படுத்தியிருக்கின்றார். தனது நூலில் Graham Hancock, அபிவிருத்தி நிறுவனங்களில் பணிபுரிபவர்களை வறுமையின் பிரபுக்கள் என்று குறிப்பிடுகின்றார். வறுமையின் பெயரால் தாம் வாழும் பிரபுத்துவ வாழ்க்கையை உருவகப்படுத்தும் நோக்கிலேயே அவர் அவ்வாறு குறிப்பிடுகின்றார். தாயகத்தில் இன்றுள்ள நிலையும் அவ்வாறுள்ளதையே சாந்தியும் தன் வறுமையின் பிரபுக்கள் என்ற நூலின் வாயிலாக வெளிக்கொண்டுவர முனைந்துள்ளார்.

வடஇலங்கை சர்வோதய இயக்கம், வறுமையின் பிரபுக்களின் ஆக்கிரமிப்புக்கு உட்படாத- அவர்களின் வாசனையைக் கண்டிராத ஒரு அமைப்பு என்பது எனது அனுபவபூர்வமான அபிப்பிராயம். காந்தீய வழிநின்று முற்றிலும் சுயநலநோக்கற்று அந்த அமைப் பினைக் கட்டியெழுப்பிய சர்வோதய அமைப்பாளர் அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் சீரிய வழிநடத்தலில் துளிர்த்து வளர்ந்து இன்று அவரது பெறாமகள் செல்வி பொ.ஜமுனாதேவியின் தலைமையில் விழுதெறிந்து பெரு விருட்சமாகி நிற்கின்றது. இவ்வமைப்பின் தொண்டூழியர்களின் தன்னலமற்ற பணிக்கு பாதை அமைத்துக் கொடுத்து அவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியையும் வழங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருநா அண்ணர்" என வழங்கும் அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் ஆளுமை பற்றிய சில அவதானிப்புகளை அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய இந்நூலில் பதிவுசெய்திருக்கின்றேன். அதன் மூலம் சர்வோதய இயக்கத்தின் வரலாறும் பின்னப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்வியை எட்டாம் வகுப்பு வரையே தொடர முடிந்த அவரது வாழ்வை நெறிப்படுத்தியது யாழ்ப்பாணப் பொது நூலகமே என்று அடிக்கடி எனக்குக் கூறிவந்த திருநா அண்ணரின் மனதில், நூலகம்- நூலகர் பற்றிய கருத்துநிலை ஒரு பக்தியாகவே உருவெடுத்திருந்ததை அவதானிக்கமுடிகின்றது. அமரர் வே.இ.பாக்கியநாதன் யாழ்ப்பாண பொது நூலகத்தின் பிரதம நூலகராகப் பதவியேற்றிருந்த அறுபதுகளின் இறுதிப் பகுதிகளில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் அன்றாட வாசகராக இவர் இருந்துள்ளார். அக்காலத்தில் அங்கிருந்த திராவிடர் கழகத்தினதும், குறிப்பாக அறிஞர் அண்ணா, பெரியார், பாரதிதாசன் போன்றோரின் ஆரம்பகால நூல்களும் அவருடைய அறிவுப் பசிக்குத் தீனியிட்டிருந்தன. பின்னாளில் அவரை மிகச்சிறந்த மேடைப் பேச்சாளராகவும், சிந்தனாவாதியாகவும் வளர்த்து, எம்மிடையே ஒரு தலைவனாக வலம்வரச் செய்ததும், யாழ்ப்பாணப் பொது நூலகமும், அவர் வாசிப்பின் வழியாகத் தேடிப்பெற்ற நூல்களின் உறவும், வாழ்க்கையில் அவர் சந்தித்திருந்த அனுபவங்களும் அவருக்கு ஊட்டிய அறிவே என்றால் அது மிகையாகாது. அதன் காரணமாகவே நூலகங்களின் பால் எப்பொழுதும் அவருக்கு அதீத பக்தி காணப்பட்டது. நூலகத்தைக் கோவிலாகவும், நூலகரை அந்தணராகவும் கண்டு போற்றும் அவரது பெரும்பண்பை இன்றுவரை வேறு எவரிடமும் நான் காணவில்லை. அவர் கொண்ட அத்தகையதொரு புனிதமான கருத்துருவாக்கமே என்னையும் திருநா அண்ணரையும் இணைக்கக் காரணமாகியிருந்தது. அதுவே இன்று திருநா அண்ணரது வாழ்க்கை வரலாற்றை உங்கள்முன் சமர்ப்பிக்க வழிகோலியுமுள்ளது.

தமக்காக வாழாது மற்றவர்களுக்காக வாழவேண்டும் என்று போதிப்பதுடன் மாத்திரம் நிறுத்திவிடாமல் தானே அவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து காட்டியவர் திருநா அண்ணர். வாழ்நாள் முழுவதும் சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் வழியில் நின்று, தன்னை நெறிப்படுத்தி, லௌகீக உலகின் பகட்டான வாழ்வைத் துறந்து, பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். மக்கள் சேவையே மகேசன் சேவை எனத் தான் வாழ்ந்ததுடன் மட்டும் நின்றுவிடாது, தன் தாய், சகோதரியரையும், மற்றும் உறவுகளையும் இணைத்துத் தன் குடும்பத்தையை தான் பிறந்த மண்ணுக்காக சர்வோதய வழியில் காந்தீய சிந்தனையுடன் உழைத்துவாழ வழிகாட்டிச் சென்றவர் அவர்.

அரசியல் ரீதியில், 1950களின் பின்னரும் 60களின் முற்பகுதி களிலும் அமரர் க.திருநாவுக்கரசு அண்ணரின் தமிழரசுக் கட்சியின் பாற்பட்ட ஈடுபாடு புங்குடுதீவில் தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு வளர வாய்ப்பளித்தது. 1964இல் புங்குடுதீவில் வீசிய புயற்காற்றின் போது தடைப்பட்டிருந்த பாதைப் போக்குவரத்தை சீர்செய்ய தனிமனிதனாகப் புறப்பட்டு இளைஞர்களையும் இணைத்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டவர் அவர். தீவகத்துக் குளங்களை சீர்செய்து மழை நீரைச் சேகரித்து அந்த மண்ணுக்கு நல்ல நீர் வளம் சேர்க்கத் தனிமனிதனாகப் பணியாற்றியதும், எதற்கும் அரசாங்கத்தையே நம்பியிராது நாமே நமது கிராமத்தை சுயதேவைப் பூர்த்திசெய்யும் ஒரு காந்தீயக் கிராமமாக வளர்த் தெடுப்போம் என்ற நம்பிக்கையை இளைஞர் மத்தியில் கொண்டு சேர்த்ததும் அவரே. முதலாளித்துவ, வர்த்தக சிந்தனையில் ஊறித் திளைத்திருந்த தீவகத்து மனிதர்களில் மனமாற்றத்தை ஏற்படுத்தி அவர்களை சமூகநலன்விரும்பிகளாகவும் மாற்றலாம் என்று இறுதிவரை அவர் நம்பிச் செயலாற்றியிருந்தார்.

தீவுப்பகுதி மக்கள் பஞ்சத்தில் வாடியபோது தனது தாயின் தங்கச் சங்கிலியை விற்று அதனைப் பணமாக்கி அதன்மூலம் மரவள்ளிக்கிழங்கு வாங்கி கஞ்சியூற்றிய செயற்பாடு இளம் வயதிலேயே இவருக்கும் சமூகத்துக்கும் இடையிலான இறுக்கமான பிணைப்புக்கு உதாரணமாகின்றது. இத்தகைய ஒரு மாமனிதரின் காலத்தில் இவருடன் இணைந்து சிறிது காலமாவது அம் மண்ணுக்கும் மக்களுக்கும் பணியாற்றிய பெருமையை அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிய காலத்தில் மட்டுமல்லாது அதன் பின்னரும்கூட நான் பெற்றதுண்டு.

வடஇலங்கை சர்வோதய இயக்கம், கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்னாவின் இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்துடன் இணைந்து அதன் வடமாகாண பிராந்திய அலுவலகமாக இணைந்திருந்த ஒரு காலகட்டத்தில், அதன் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்னாவுடன் கருத்து வேறுபாடுகள் முகிழ்த்தெழத் தொடங்கியவேளை அது. 1983 இனக்கலவரம் வெடித்த காலகட்டமும் அதுவே. தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் உறவுகளை, உடைமைகளை இழந்து குடும்பம் குடும்பமாக காங்கேசன்துறையில் கப்பலில் இருந்து தரையிறக்கப்படுகிறார்கள். அவர்களுடைய நலன்பேணும் வகையில் ஒரு நலன்புரி சேவை மண்டபத்தை காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியில், சர்வோதய சிரமதானச் சங்கம் நடத்தியது. அக்காலகட்டத்தில் தென்னிலங்கையிலிருந்து கப்பல் மூலம் அகதிகளாகத் தரையிறங்கும் எம்மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்க சர்வதேச அமைப்பொன்று மொரட்டுவை சர்வோதயத் தலைமையகத்திற்கு ஏராளமான நிதியுதவியை வழங்கியிருந்தது. அதைப் பயன்படுத்தி தென்னிலங்கையிலிருந்து தேங்காய், மரக்கறி, டின்மீன், பருப்பு வகைகளை யாழ்ப்பாணத்துக்கு நேரில் கப்பலில் அனுப்ப ஆரியரத்தினா ஒழுங்குசெய்திருந்தார்.

இனக்கலவரத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்த வடஇலங்கை - தென்பகுதிப் போக்குவரத்துக் கட்டமைப்பானது, ஏற்றுமதிக்கான மீன் மற்றும் விவசாயிகளின் விளைபொருட்களை வடபகுதி களிலேயே முடக்கிவிட்டது. உற்பத்திப் பொருட்கள் விற்பனையாக வழியின்றி, உற்பத்தி விலையில் கூட அவற்றை உள்ளூர் சந்தைகளில் விற்கமுடியாது தமிழ் விவசாயிகளும், மீனவர்களும் திண்டாடிய வேளையில், யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் பதனிடப் பட்ட உணவுப் பொருட்களை சிங்கள வர்த்தகர்களிடமிருந்து கொள்வனவுசெய்து, மொரட்டுவையில் இயங்கிய தலைமையகமான இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஆரியரத்னா அனுப்ப முயற்சிசெய்வதை அறிந்த திருநா அண்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நடவடிக்கையை முற்றாக எதிர்த்தார். பாதிக்கப்பட்ட வடபகுதி உள்ளூர் உற்பத்தியாளர்களிடமே மரக்கறி மீன் வகைகளை நேரில் கொள்வனவு செய்தால் உற்பத்தியாளர்களுக்கும், வட பகுதிப் பொருளாதாரத்திற்கும், அதனை நுகரக் காத்திருந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சிறந்த நன்மையளிக்கும் எனத் தலைமையகத்திற்கு விளக்கமுனைந்தார்.

அக்காலகட்டத்தில் திட்டமிடப்பட்டிருந்த ஜனாதிபதி தேர்தலை முன்வைத்து அரசியல் லாபமீட்ட விரும்பியிருந்த தலைவர் ஆரியரட்னா அதை ஏற்றுக்கொள்ளவில்லை. திருநா அண்ணர் இந்த நிராகரிப்பால் பெரிதும் மனமொடிந்திருந்தார். தமது மக்களுக்கு உதவும் ஒரு வாய்ப்பை தலைமைத்துவம் மறுத்து தென்னிலங்கையிலிருந்து தேங்காய் முதல் அனைத்துப் பொருட் களையும் அனுப்பியமையானது அவருக்கு எவ்வகையிலும் நியாயமாகப்படவில்லை. கண் கலங்கி வருந்திய அவரது மன உளைச்சலை என்னால் நேரில் கண்டு கலங்கத்தான் முடிந்தது. காலக்கிரமத்தில் இந்த விரிசல் வடஇலங்கை சர்வோதயம் தனித்தியங்கும் தீர்மானத்தை எடுக்கும் அளவுக்கு பெரிதாகியது. திருநா அண்ணரின் ஆழமான தாயக மண்பற்றினை இச்சம்பவம் எமக்குத் துல்லியமாக வெளிக்காட்டியிருந்தது.

பின்னாளில் ஒரு தடவை அப்போதைய இலங்கை ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஜனாதிபதி தேர்தல் காரணமாக யாழ்ப்பாணம் வந்திருந்தார். சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் என்ற வகையில் திருநா அண்ணரைத் தான் சந்திக்க விரும்புவதாக தனிப்பட்ட அழைப்பொன்றினை ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரியின் வாயிலாக அனுப்பி யிருந்தார். ஜே.ஆர்.அப்போது “யுத்தமென்றால் யுத்தம் சமாதான மென்றால் சமாதானம்” என்று சூளுரைத்து தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருந்த காலகட்டம். அவரைச் சந்திக்க விரும்பாத திருநா அண்ணரை காவல்துறையினர் தாமே வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று ஜனாதிபதியை யாழ்ப்பாணத்திலிருந்த அரச விருந்தினரகத்தில் சந்திக்க வைத் திருந்தனர். ஜே.ஆர்., திருநா அண்ணரை வரவேற்று, உங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என்ன வகையில் உதவி செய்யவேண்டும்? என்று கேட்டாராம். அதற்கு திருநா அண்ணர் "நாட்டில் எமது மக்கள் நிம்மதியாக வாழவேண்டும். அதைத் தவிர நான் உங்களிடம் எதைக் கேட்பது?" என்று நெற்றியடியாகப் பதில் சொல்லிவிட்டு வந்தாராம். இதை மறுநாள் காலையில் நான் திருநா அண்ணரைச் சந்தித்தபோது சாவதானமாக என்னிடம் கூறிச் சிரித்தார். ஒரு நாட்டின் ஜனாதி பதியை சந்தித்துவிட்டு வந்த ஒருவரின் உணர்வினை அன்று அவரது செயலிலும் சிந்தையிலும் என்னால் அணுவளவும் காண முடியவில்லை.

திருநா அண்ணரின் தியாக சிந்தையும் துணிச்சலும், உறுதியும் இணைந்த நேர்மையான செயற்பாடும் அவரை யாழ்ப்பாண மண்ணில் ஒரு தொண்டரடிப்படையிலான நிறுவனத்தை உருவாக்கி, சிக்கலான போர்க்காலச் சூழ்நிலையிலும், தடம் பிறழாது அதை வழிநடத்தும் வல்லமையைக் கொடுத்திருக்கிறது. 03.10.2001இல் திருநா அண்ணர் அமரத்துவம் அடைந்த பின்னர் அவர் வழிநின்று அமைப்பினை பின்னாளில் இக்கட்டான அரசியல், பொருளாதார, போர்க்கால இடைஞ்சல்களுக்கு மத்தியிலும் முன்னெடுத்துச்செல்லும் சர்வோதயச் சகோதரிகள் பொ.ஜமுனாதேவியினதும் க.புஷ்பமணியினதும் தலைமைத்துவச் செயற்பாடுகளும், திருநா அண்ணரின் வழிகாட்டலால் செதுக்கி உரமேற்றப்பட்ட தூயசிந்தனை வழிப்பட்டவையாகவே உள்ளன. அதனாலேயே திருநா அண்ணரின் பாதையில் சர்வோதய இயக்கத்தை யுத்தகால சூழலிலும் நிலைகுலையாமல் நம்பிக்கை யுடன் வழிநடத்திச் செல்ல இவர்களால் முடிந்துள்ளது.

தமிழ் மண்ணில் வறுமையின் பிரபுக்களாகவே பார்க்கப்பட்டு வருகின்ற செல்வம் கொழிக்கும் சர்வதேச சமூக சேவை அமைப்புகளிடையே வித்தியாசமானதொரு மணப்பற்றுக்கொண்ட, சுய விளம்பரம் தேடமுனையாத உள்ளூர் அமைப்பொன்றாகவே வடபகுதியில் சர்வோதயம் தனித்துவமான பாதையில் பயணிக்கின்றது. அப்பயணத்துக்கான பாதையைச் சமைத்து, வழிகாட்டிச் சென்றுள்ள அந்தத் தானைத் தலைவனின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்தம் பணிகளையும் ஆவணப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கில் இந்நூலை எழுதத் துணிந்தேன். திருநா அண்ணரின் வாழ்வும் பணிகளும் பற்றிய அறிதல் என்பது எதிர்காலத்தில் ஈழத்துத் தமிழ் மண்ணில் சமூகசேவை வழங்கவென விருப்புடன் வெளிக்கிளம்பும் ஒவ்வொரு இளைஞர், யுவதிக்கும் திறந்ததொரு பாடப்புத்தகமாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே இந்நூல் உங்கள்முன் விரிகின்றது.



புங்குடுதீவு கிராமப் பெரியார்களின் கௌரவிப்பு விழாவின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 2

# நிறைமொழி மாந்தர் பெருமை

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து

மறைமொழி காட்டிவிடும்"

நிறைவான அறிவுடைய மெய்யுணர்வாளரின் பெருமையை, உலகிற்கு அவர் தந்த வாழ்க்கை நெறிகளே காட்டிவிடும் என்பது திருவள்ளுவரின் "நீத்தார் பெருமை"யில் காணப்படும் குறளின் கருத்தாகும். அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் பெருமையை, அவர் வாழ்ந்துசென்ற வாழ்க்கை நெறியும், அவர் வழியில் அவர் பதித்துச் சென்றுள்ள பாத அடிகளைத் தொடரும் அவரது தொண்டர்களின் பணிகளும் எமக்குக் காலம் காலமாக நினைவூட்டும்.

அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களுடனான எனது தொடர்பின் காரணமாகவே புங்குடுதீவுடனான எனது அறிமுகமும் தொடர்பும் உறவும் தொடங்கியது. புங்குடுதீவில் "திரு" என்றும் "திருவர்" என்றும், சர்வோதய வளாகத்தில் "அண்ணா" என்றும் "மாமா" என்றும், சர்வோதயத்தை நாடி வருகை தருவோர் "அமைப்பாளர்" என்றும், மொரட்டுவை ராவத்தாவத்தையைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வோதய தாய்ச்சங்க வளாகத்தில் "திருவையா" என்றும் சர்வோதயத் தலைவர் ஏ.ரீ.ஆரியரட்னாவால் அன்புடன் "திரு மல்லி" என்றும் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக அவரை விழித்து அழைத்துவந்தனர். இந்நிலையில் அவரை நான் எப்பொழுதும் "திருநா அண்ணர்" என்றும் அவர் எப்போதும் என்னை "செல்வாண்ணர்" என்றும் பரஸ்பரம் அழைத்துக்கொள்வது வழமையாகிப் போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை எழுதும் வேளையில் "திருநா அண்ணர்" என்ற பதத்தையே பயன்படுத்தத் தீர்மானித்திருக்கிறேன். அதுவே எனக்கு இயல்பாகவும், இதயத்துக்கு நெருக்கமாகவும் அமைகின்றது. 15 ஆண்டுகள் என்னைவிட மூத்தவரான திருநா அண்ணர் என்னை அழைக்கும் போது எப்பொழுதும் "செல்வாண்ணர்" என்றே அழைப்பார். அது ஏனென்று இன்றுவரை புரியவில்லை. எனது தந்தையின் ஸ்தானத்திலிருந்து என்னை வளர்த்த எனது மூத்த சகோதரர் வைத்திய கலாநிதி அமரர் ந.சிவராஜா அவர்கள் 12.03.1938இல் பிறந்தவர். 01.03.1939இல் பிறந்த திருநா அண்ணருக்கும் அவருக்கும் இடையே ஒரு வயது தான் வித்தியாசம் இருந்தது. அதனால், ஆரம்பத்தில் திருநா அண்ணர் என்னை "அண்ணர்" என்று அழைத்தமை எனக்குக் கூச்சமாக இருந்ததுண்டு. காலப்போக்கில் சர்வோதயக் குடும்பத்தவர் அனைவரும் "வயது வேறுபாடின்றி" என்னை செல்வாண்ணர் என்று அழைக்கத் தொடங்கியதும் இன்று அதுவே பழக்கமாகிவிட்டது. அந்த உறவே இன்றும் தொடர்ந்துவருகின்றது.

**திருநா அண்ணரின் படிமம்**

உயர்ந்த தோற்றம், கம்பீரமான நடை, தோளில் தவழும் ஒரு துவாய்த் துண்டுடன், பெரும்பான்மையான வேளைகளில் அரைக் காற்சட்டையுடன் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கும் ஒருவர் அவர். வளாகத்தில் அவரை அவ்வப்போது வெள்ளை தேசிய (நேஷனல்) உடையுடன் நீங்கள் காணநேர்ந்தால் அன்று அவர் ஏதோவொரு கூட்டத்திற்கு ஆயத்தமாகிறார் என்பது தெளிவு. கனிவு தவழும் முகம் - அதில் நேர்கொண்ட ஊடறுப்புப் பார்வை கொண்டு ஒளிரும் ஈரம் கசியும் கண்கள், பிறரை அன்புடன் நேசிக்கும் பண்பு, இன்முகத்தோடு மற்றவரைக் கவரும் வசீகரப் பார்வை, உள்ளத்தில் உள்ளதை வெளிப்படையாகக் கூறிப் பழகும் பண்பு, தன்னை அண்டினோரை ஆதரிக்கும் இளகிய தூய உள்ளம், எளிமையான காந்தீய வாழ்க்கை, தடையற்ற, பிசிறற்ற ஆற்றொழுக்கான உரைநடையில் அமைந்த பேச்சு, பேச்சுக்களின்போது தன்னையறியாமல் பொங்கிடும் உள்ளத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியால், கரகரத்து உடைந்து கலங்கி விம்மித் தணியும் மெல்லுணர்வு, மேடையேறியதும் இயல்பாக வந்துவிடும் சிம்மக் குரலும், அனைத்தையும் ஊடுருவி அடிவானத்து ஒளிர்வினைத் தேடுவதுபோன்ற கூரிய பார்வையும், எடுத்த காரியத்தை இனிதே நிறைவேற்றும் ஒரு கர்மவீரனின் வேட்கைமிக்க மனதும் என, இவை அனைத்தினதும் உறைவிடமே திருநா அண்ணர் என்ற மனிதநேயன்.

மகாகவி பாரதியார் கூறிய "நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறியும், திமிர்ந்த ஞானச் செருக்கும்" கொண்டமைந்த பாத்திரமாகவே திருநா அண்ணர் அன்றிலிருந்து இன்றுவரை எமது மனதில் நீங்காமல் பசுமரத்தாணிபோன்று நிலைபெற்றிருக்கிறார்.

பெற்றோர் தம் பிள்ளைக்கு இடும் பெயருக்கேற்ப, ஒருவரின் குணாதிசயங்களில் சிலவாவது சிலவேளைகளில் அமையலாம். வைத்தியலிங்கம் பின்னாளில் வைத்தியராகப் பரிணமிப்பதும், சட்டநாதன் பின்னாளில் சட்டத்தரணியாவதும் சாத்தியமானதுமுண்டு. இந்த வகையில் மூத்த சைவ நாயனாரும் செஞ்சொற் செல் வருமாகிய திருநாவுக்கரசர் போலச் சென்ற நூற்றாண்டிலே புங்குடுதீவில் பிறந்த இரு திருநாவுக்கரசுகள் பெயர்பெற்றிருந்தனர். இவர்களுள் நாவேந்தன் என்றழைக்கப்பட்ட மூத்த திருநாவுக்கரசு (தம்பிராசா திருநாவுக்கரசு, *14.12.1932-10.07.2000*) இலங்கையின் மூத்த படைப்பாளிகளில் ஒருவராகவும், சிறுகதை ஆசிரியராகவும், பத்திரிகையாளராகவும், கட்டுரையாளராகவும், கவிஞராகவும், ஆய்வாளராகவும், விமர்சகராகவும், கல்வியியலாளராகவும், நாவேந்தராகவும் தொழிற்சங்கவாதியாகவும் எனப் பல்பரிமாணங் களைக் கொண்டியங்கியவர். இளைய திருநாவுக்கரசு (கந்தையா திருநாவுக்கரசு, *01.03.1939-03.10.2001*), இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் செயலாளராகவும், பின்னாளில் வடஇலங்கை சர்வோதய இயக்கத்தின் அமைப்பாளராகவும் வாழ்ந்தவர். திருநாவுக்கு அரசனாக, நல்லதொரு பேச்சாளராகத் தன்னை அரசியல் வாழ்விலும், சமூக வாழ்விலும் இனம்காட்டிக் கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு திருநாவுக்கரசர்களுமே 2000இலும், 2001இலும் ஒருவர் பின் ஒருவராக அமரத்துவம் அடைந்துவிட்டனர். எங்கள் திருநா அண்ணர், அப்பர் சுவாமிகளைப்போன்று நைஷ்டிகப் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தவர். சமூகத் தொண்டராக "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற உயர்ந்த இலட்சியத்தைக் கொண்டவராக, "செய் அல்லது செத்துமடி" என்ற தாரக மந்திரத் துடன் சிறந்த கர்மவீரனாக வாழ்ந்ததுடன், தன் வாழ்க்கையின் பிற்கட்டத்தில் யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் சிந்தனைகளின் பால் ஈடுபாடு கொண்டு ஆத்மீகத்தோடு கூடிய சமூக சேவையை "மக்கள் சேவையே மகேசன் சேவை" யெனச் செய்துவந்தவர்.

**எனது முதல் சந்திப்பு**

நான் இலங்கை நூலகச் சங்கத்தில் இணைந்து நூலகத்துறையில் உயர்கல்வியைப் பூர்த்திசெய்துவிட்டு, உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்படும் மூன்றாவது தரத்திலான பொதுசன நூலகர்களுக்கான அரச நியமனத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அவ்வேளையில், மே 1978இல் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நூலகராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மிகக்குறைந்த வேதனம் காரணமாக அப்பணியில் நீண்டநாட்கள் நிலைக்கும் எண்ணம் என்னிடம் இருக்கவில்லை. தொழில்துறைப் பயிற்சி அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதே அப்போதைய எனது பிரதான இலக்காக இருந்தது.

இந்நிலையில் 1979 ஜனவரி மாதத்தில் "ஈழநாடு" பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்திருந்தது. புங்குடுதீவில் இயங்கும் சர்வோதய இயக்கத்தில் இணைந்து நூலகப் பணியாற்ற ஒருவரை தேடுவதாக அவ்விளம்பரம் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் அந்நாட்களில் "நூலகர்" தேவை என்று பொதுத் தளங்களில் விண்ணப்பம் கோரும் நிலையில் நிறுவனங்கள் இருக்கவில்லை. எனவே ஆர்வத்துடன் உடனடியாக அப்பதவிக்கான விண்ணப்பத்தினை தபால் மூலமாக அவர்கள் கேட்டுக்கொண்டபடி அனுப்பியிருந்தேன். இரண்டு மாதங்களாக பதில் எதுவும் வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் எனது மூத்த சகோதரருடன் வீட்டில் சாவகாசமாக உரையாடிக்கொண்டிருந்த வேளையில், நான் சர்வோதய இயக்கத்தில் நூலகர் பதவிக்காக இருமாதங்களுக்கு முன்னர் விண்ணப்பித்திருந்ததை குறிப்பிட்டிருந்தேன். எனது அண்ணர் ஏற்கெனவே சர்வோதய இயக்கத்தையும், அதன் அமைப்பாளரான திருநா அண்ணரையும் நன்கறிந்தவர் என்பதை அப்போதுதான் அவரிடமிருந்து அறிந்துகொண்டேன்.

அக்காலகட்டத்தில் (1978-1981), ஊர்காவற்றுறையில் சுகாதார சேவை அதிகாரியாக (M.O.H) பணியாற்றியவர் எனது மூத்த சகோதரர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா அவர்கள். புங்குடு தீவில் அவரது தனித்துவமான சுகாதார சேவையின் காரணமாக ஏற்கெனவே அப்பிரதேச மக்களிடையே நன்கு அறிமுகமானவர். குறிப்பாக சர்வோதய இயக்கத்தினரின் உதவியுடன் புங்குடுதீவில் தொழுநோயாளர்களுக்கு சிகிச்சை அளித்தும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிசுக்களுக்கும் திரிபோஷா மற்றும் சத்துணவுத் திட்டங்களை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியும் அதுவரை காலமும் தீவுப்பகுதிகளில் உச்சத்திலிருந்த கர்ப்பிணி-சிசு இறப்பு வீதத்தை பிற மாவட்டங்களை விடக் குறைத்தது மட்டுமல்லாமல், தீவகத்தில் அதிகரித்துக் காணப்பட்ட தொழுநோயாளர்களைக் குணமாக்கி அப்பிரதேசத்தில் தொழுநோயை தான் அப்பிரதேசத்தில் பணியாற்றிய நான்காண்டுகளில் முற்றிலும் கட்டுப்படுத்தியவர் அவர். இவரது பணிகள் அனைத்தும் சர்வோதய அமைப்பினதும், அவ்வமைப்பில் இருந்த பயிற்றுவிக்கப்பட்ட சர்வோதய சுகாதார ஊழியர்களினதும் தன்னலமற்ற சேவைகளினால் முன்னெடுக்கப் பட்டவையாகும்.

அடுத்த தடவை எனது சகோதரர் புங்குடுதீவுக்கு சுகாதார முகாம் நடத்தச் சென்றிருந்த வேளை என்னைப் பற்றியும் திருநா அண்ணரிடம் குறிப்பிட்டிருந்தார். அவரது சகோதரன் நான் என்றதும் உடனடியாகவே தன்னை வந்து சந்திக்கும்படி வைத்திய கலாநிதி சிவராஜா அவர்களின் மூலமாகவே திருநா அண்ணர் எனக்குத் தகவல் அனுப்பியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

274287
KOHA-JPL
1303

அழைப்புக் கிட்டியதும் புங்குடுதீவுக்கு ஒருநாள் காலை பஸ் ஏறினேன். அதுவே தீவகத்தை நோக்கிய எனது முதல் பயணம். அதற்கு முன்னர் பண்ணைப் பாலத்தைத் தாண்டி நயினாதீவுக்குக் கூட சென்றறியாதவன் நான்.

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தில் பெருங்காடு என்ற இடத்தில் அமைந்திருந்த சர்வோதய வளாகத்தை சென்றடைந்து, முன் அறிமுகமில்லாத அந்நிய உணர்வுடன் உள்ளே நுழைந்த என்னை பசுமையான நிழல்தரு மரங்கள் சூழ்ந்த தூய்மையான அமைதியான சர்வோதய வளாகம் வரவேற்றது. மிகவும் பாதுகாப்பான சுற்று மதில்களுடன் புதிதாக எழுந்த நீல வண்ணம் தீட்டிய கட்டிடங்களுடன், இடைக்கிடையே நேர்த்தியாக நடப்பட்டிருந்த இளம் தென்னங்கன்றுகளும் எனக்கு ஒரு ஆன்மீகச் சுற்றாடலில் அமைந்த ஆச்சிரமத்தினைச் சென்றடைந்த உணர்வையே அப்போதைய சூழல் ஏற்படுத்தியிருந்தது.

என்னை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்ற ஒருவரால், அங்கு நுழைவாயிலோடு இருந்த புதிய கட்டிடமொன்றின் முகப்பில் இருந்த ஒரு வாங்கில் சென்று அமர வேண்டப்பட்டேன். அந்தக் கட்டிடம்தான் எதிர்காலத்தில் சர்வோதய நூலகமாகத் தன்னை வளர்த்தெடுக்க, அன்றைய தினம் என்னை எதிர்பார்த்துக் காத்திருந்தது என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.



சர்வோதய நூலகம் அமைந்திருந்த கட்டிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

சற்று நேரத்தில் ஒரு காக்கி அரைக் காற்சட்டை அணிந்து தோளில் துவாய்த் துண்டொன்றை தரித்திருந்த ஒரு உயர்ந்த மனிதர் சிரித்தபடி வெகு வேகமாக என்னை நோக்கி வந்து கரங்குவித்து வணக்கம் தெரிவித்தபடி என்னெதிரே இருந்த மற்றொரு வாங்கில் அமர்ந்தார்.

"நீங்கள் தான் எம் ஓ எச் ஐயாவின் தம்பியா?" என்ற அவரது வினாவுக்கு "ஆம்" என்றேன். குசலம் விசாரித்த பின்னர், தனக்கும் எனது நூலக ஆசான் "வே.இ.பாக்கியநாதன்" அவர்களுக்கும் உள்ள தொடர்பினை விபரித்து, தனக்கு யாழ்ப்பாண நூலகத்தில் நல்ல நூல்களைத் தேடித்தந்ததுடன் வாசிப்பில் ஆர்வத்துடன் தன்னை ஈடுபடவைத்து, உலக அறிஞர்களையெல்லாம் அறிந்து கொள்ளத் துணையாக நின்றவர் அவரே என்று உணர்வுபூர்வமாக விதந்துரைத்தார்.

அமரர் வே.இ.பாக்கியநாதன் அவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முகாமையாளர் சபையில் முன்னைநாள் எழுதுவினைஞராக விளங்கிய புங்குடுதீவைச் சேர்ந்த அமரர் வே.இளையதம்பியின் மகனாவார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற் கல்வி பயின்று அங்கு மூன்று வருடங்கள் வரை ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர், இந்தியாவிலே தமது கலைமாணிப் பட்டப் படிப்பை மேற்கொண்டவர் வே.இ.பாக்கியநாதன் அவர்கள். பட்டதாரி யாகியபின் கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த காலத்தில், "புல்பிரைட்" (Fulbright) புலமைப் பரிசில் பெற்று அமெரிக்காவின் அத்திலாந்தா (Atlanta) பல்கலைக்கழகத்தில் நூலகவியல் முதுகலைமாணிப் பட்டம் பெற்றபின்னர், கலிபோர்னியாவில் உள்ள சாந்தியாகோ பொதுசன நூலகத்தில் ஒரு வருடகாலம் சிறுவர் நூலகப் பிரிவில் கடமை யாற்றியுமிருந்தார். இலங்கையில் நூலகத்துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்ற முதலாவது தமிழ் நூலகர் இவரேயாவார். நாடுதிரும்பியதும், யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் முதலாவது பயிற்சிபெற்ற பட்டதாரி நூலகராக 1964 முதல் 1968 வரை பதவி வகித்திருந்தார். அக்காலத்தில் யாழ்ப்பாணப் பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தின் சிறுவர் நூலகப் பிரிவினை யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவியுடன் இலங்கையின் மிகச்சிறந்த சிறுவர் நூலகப் பிரிவாக மாற்றியமைத்தவரும் இவரேயாவார். 1969ஆம் ஆண்டு தொடக்கம் பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகக் கல்லூரியில் நூலக விரிவுரை யாளராகச் சேவையாற்றி, 1971 ஆம் ஆண்டு யாழ். பல் தொழினுட்ப நிறுவனத்திற்கு மாற்றலாகி, அங்கு வர்த்தகத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றி, 1982இல் உப அதிபராகப் பதவி உயர்வு பெற்றிருந்தார். 1964ஆம் ஆண்டிலிருந்தே இலங்கை நூலகச் சங்கத்தின் விரிவுரையாளராகப் பணியாற்றி, நூலகவியல் துறை மாணவர்களுக்கு நூற்பகுப்பாக்கம், பட்டியலாக்கம் பற்றி விரிவுரையாற்றி வந்தவர். அவரது முதன்மை மாணாக்கருள் ஒருவனாக நான் இருந்தேன். அவுஸ்திரேலியாவில் அவரது மறைவு வரை என்னுடன் தொடர்பில் இருந்தவர் அவர்.

ஆசான் பாக்கியநாதன் அவர்கள் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் நூலகராக 1964 முதல் 1968 வரை பணியாற்றிய காலகட்டத்திலேயே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் செயலாளராகப் பணியாற்றிவந்த 25 வயதான திருநா அண்ணரும், நூலகத்தின் தீவிர வாசகராக வலம்வந்திருந்தார். திருநா அண்ணருடனான எனது முதல் சந்திப்பின்போதும் முக்கிய பேசுபொருளாக யாழ்ப்பாணப் பொது நூலகமும், திரு. பாக்கிய நாதனின் நூலகப் பணிகளும் அமைந்துவிட்டன.

இடையில் பாரதிதாசனின் "புத்தகசாலை" என்ற கவிதையில் வரும்,

> "வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
> மரியாதை காட்டி அவர்க்கிருக்கை தந்தும்
> ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
> அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
> நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
> நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
> மாசற்றதொண் டிழைப்பீர் சமுதாயச்சீர்
> மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்"

என்ற புரட்சிக் கவிஞரின் கவிவரிகளைக் கூறி, பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிய அதே குணாதிசயங்களுடன் ஆசான் பாக்கியநாதன் அவர்கள் தன்னை வளர்த்தெடுத்ததாகக் குறிப்பிட்டார்.

அந்தவேளையில் பாரதிதாசனின் அக் கவிதைவரிகள் எனக்குப் புதிதாகவே இருந்தன. அந்தச் சிறிய அறிமுகத் தொடர்பாடலில் இருந்து எனக்கு சில விடயங்கள் அக்கணத்தில் அவர் சொல்லாத சேதிகளாக என் மனதுள் பதிந்தன.

1. பாரதிதாசன் கூறிய நூலகரின் பாத்திரமாகவே சர்வோதயத் திற்காகத் தான் எதிர்பார்க்கும் நூலகரும் இருக்கவேண்டும் என்று இம்மனிதர் விரும்புகின்றார்.

2. உயர்கல்விச் சமூகமாக நான் அதுவரை கருதியிருந்த ஒரு பாடசாலை நிர்வாகியை விட, நூலகரை மதிக்கும் தெளிவான ஒரு மனிதர் இப்போது என் முன்னிலையில் உரையாடிக்கொண்டு இருக்கிறார்.

3. இந்த நூலகத்தை சுதந்திரமாகத் திட்டமிட்டு உருவாக்கும் பொறுப்பினை இந்த மனிதர் எனக்கு வழங்கத் தயாராக இருக்கிறார்.

4. பார்வைக்கு எளிமையான சாமானியராகத் தோன்றினாலும், மிகுந்த அறிவுமிக்கவராகவும், தேடல் மிகுந்தவராகவும் இவர் காணப்படுகிறார்.

திருநா அண்ணருடனான முதல் சந்திப்பில், எனது மனதில் படிமமாக நிலைத்தவையே நான் மேற்குறிப்பிட்ட நான்கு விடயங்களுமாகும்.

அதன் பின்னர் அதிகநேரம் அங்கு தரித்திராமல் என்னையும், சர்வோதய அலுவலகத்தில் கணக்குப் பகுதியில் பணியாற்றிவந்த "தேவி" என்ற சகோதரியையும் தனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அதே தெருவில் அருகிலேயே இருந்த மற்றொரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்குதான் நான் தங்கவேண்டியிருக்கு மெனவும், வார இறுதிகளில் யாழ்ப்பாணம் செல்லலாம் எனவும் கூறினார். அங்கு மற்றுமொரு அறையைத் திறந்து உள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் சென்றார். அறை முழுவதும் ஏராளமான பெட்டிகள் காணப்பட்டன. அனைத்தும் புத்தகங்கள். அவர் வாசித்து முடித்த புத்தகங்கள்.

"இதுதான் எனது அறிவுச் சொத்து. நான் தேடித்திரிந்து வாங்கிப் படித்தவை. இவை அனைத்தையும் நீங்கள் தான் ஒரு வடிவமைப்புக்குள் கொண்டு வருவதுடன் புங்குடுதீவில் 25000 நூல்களுடன் ஒரு நூலகத்தை உருவாக்கவேண்டும் என்ற எனது நீண்டநாள் கனவினை நனவாக்கவேண்டும்" என்று முடித்தார்.

அந்த முதல் சந்திப்பிலேயே என்மீது அக்கறையும் நம்பிக்கையும் வைப்பதற்குக் காரணமாக எனது சகோதரரின் மீது அவர் வைத்திருந்த அதீத மதிப்பும், கௌரவமும், எனது ஆசான் கலாநிதி வே.இ.பாக்கியநாதன் அவர்களின் மீது அவர் கொண்டிருந்த பக்தியும், நம்பிக்கையுமே காரணமாகியிருக்கவேண்டும்.

அதன் பின்னர் ஏப்ரல் 1979இல் முழுநேர ஊழியராகப் பணியாற்றத் தொடங்கினேன். படிப்படியாக சர்வோதய சிந்தனை களும் என்னை வார்த்தெடுக்கத் தொடங்கின. நூலகராகத் "தொழில்தேடித் திரிந்த" எனக்கு நூலகராக "வாழ்வது" எப்படி என்ற வேதத்தை புரியவைத்தவை திருநா அண்ணரின் வழி காட்டலும், அவரது தன்னலமற்ற பொதுநோக்கம் கருதிய சிந்தனைகளுமே.

## பிறப்பும் உடன்பிறப்புகளும்

திருநா அண்ணர் 1939ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியில் புங்குடுதீவில் பிறந்தவர். 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதியன்று இவ்வுலக வாழ்வினை நிறைவுசெய்து மறைந்தவர். இடையில் அவர் வாழ்ந்த அறுபத்தியிரண்டு ஆண்டுகள் அர்த்தம் செறிந்தவை. படிப்பினைக்குரியவை. இந் நூலில் அவர் வாழ்ந்த அந்த 62 ஆண்டுகளையும் முடிந்தவரையில் எனது பார்வையில் ஆவணப்படுத்தும் நோக்கில் தொகுத்து வழங்கியிருக்கிறேன். ஆனாலும் அந்த அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கும் அப்பால் இன்றும் மக்கள் மனங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலம் நிலைத்திருக்கும் வகையில் அவர் விட்டுச் சென்ற முதுசொங்களையும், சிந்தனைகளையும், செயல்களையும் அவர் பற்றிய செய்திகளையும் வாழ்க்கை முறைகளையும் வரலாறாக இந்நூலில் நான் எழுதியதைவிடவும், எழுதப்படாத வரிகளினூடாக அடுத்த தலைமுறையினருக்கும் நிச்சயமாகக் காவிச் செல்லும் என்றே நம்புகின்றேன்.

புங்குடுதீவின் நான்காம் வட்டாரத்தைச் சொந்த இடமாகக் கொண்ட கந்தையா- பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாக அவதரித்தவர் திருநாவுக்கரசு அவர்கள். குடும்பத்தில் மூத்த பிள்ளையான இவருக்கு மங்கையர்க்கரசி, விநாயகமூர்த்தி, மகேஸ்வரி, புஷ்பமணி, தியாகராஜா ஆகிய ஐவரும் உடன் பிறப்புக்கள்.

**ஆரம்பக் கல்வி**

திருநா அண்ணர் தன் ஆரம்பக் கல்வியை உள்ளூர் பாடசாலையான சேர். துரைசாமி வித்தியாசாலையில் தொடங்கியவர். இளம் வயதில் அளவுக்கதிகமான குறும்புகள் செய்து வந்தமையால், பாடசாலைக் கல்வி இவருக்குக் கைவரவில்லை. பள்ளிக்கூடத்தின் அறைகளுக்குள் சிறைப்பட்டிராது, விரிந்து பரந்த உலகில் பறவையெனச் சுற்றித் திரிந்து உலக அறிவை இயற்கையின் ரசிப்பிலும், தாய் மண்ணின் அரவணைப்பிலும் தானாகப் பெற்றுத் தெளியவே அவரது குழந்தைப்பருவ உள்ளம் விரும்பியிருந்தது. அதனால் இவர் அடிக்கடி பள்ளிக்குச் செல்வதைத் தவிர்த்துவந்தார். இவரது பள்ளிப்பருவத்தை நேர்வழிப்படுத்த இயலாத நிலையில் கவலையடைந்திருந்த பெற்றோர் அவரை வெளியூரிலிருந்த அவரது சிறிய தகப்பனாரிடம் அனுப்பி அவரின் பாதுகாப்பில் வளரவிடுவதென்ற கடினமானதொரு முடிவினை எடுத்திருந்தனர்.


சிறிய தந்தையார் அம்பலவாணர் ஒரு பொலிஸ் சார்ஜன்ட்டாக அனுராதபுர மாவட்டத்திலுள்ள கெக்கிறாவை என்ற சிங்களப் பிரதேசத்தில் அப்பொழுது பணியாற்றிவந்தார். கண்டிப்புக்குப் பெயர்போன சிறிய தந்தையாரான சார்ஜன்ட் அம்பலவாணருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தமையால் அவரது கண்டிப்பு திருநா அண்ணரின் இள வயதுக் குளப்படிகளை கடிவாளமிட்டுக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். புங்குடுதீவு துரைசாமி வித்தியாசாலையில் இருந்து கெக்கிறாவை தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அவர் மாற்றப்பட்டார்.

அவரது சிறிய தந்தையார் காவல்துறைப் பணிநிமித்தம் அவ்வப்போது வேறு மாவட்டங்களுக்கு மாற்றலாகிச் செல்லும் வேளைகளிலெல்லாம் இவரும் தனது பாடசாலைகளை இடத்துக் கிடம் மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. தொடர்ச்சியான, நிலையான பாடசாலைக்கல்வி கிட்டாத நிலையில், எட்டாம் வகுப்புவரையே இவரது கல்விப் பயணம் தட்டுத்தடுமாறித் தொடர்ந்தது. தாயகத்தைவிட்டுப் பிரிந்து தனக்கு அந்நியமான மண்ணில் சிறிய தந்தையரின் பாதுகாப்பில் வாழ்ந்த வாழ்க்கை அவருக்கு எப்பொழுதும் உவப்பாயிருக்கவில்லை. 1952இல் இவர் பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு 13 வயதுச் சிறுவனாக ஊர் திரும்பினார்.

அவரது வரவு பெற்றோரையும் அவரது உறவினர்களையும் மீண்டும் கவலையில் ஆழ்த்தியது. பாடசாலைக் கல்வியில் ஈடுபாடற்றிருந்த நிலையில் அவரை ஏதேனும் வேலையில் சேர்த்துவிட்டால் தனது எதிர்கால வாழ்க்கையைப் பார்த்துக் கொள்வார் என்று அவரது அப்பாவிப் பெற்றோர் நினைத்தனர்.


இளம் தொண்டன் திருநாவுக்கரசு

புங்குடுதீவைச் சேர்ந்த வர்த்தகரான திரு ஆறுமுகம் அவர்கள் திரு நா அண்ணரின் பெற்றோருக்குப் பழக்கமானவர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று திருநா அண்ணரை தனது போசனசாலையில் பணிக்கு அமர்த்தினார் ஊரவரான திரு ஆறுமுகம். அங்கிருந்த வேளையில் தான் அவருக்குப் புத்தகங்களின் அறிமுகம் கிட்டியிருந்தது. தான் பாடசாலைக் கல்வியின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறியாத பல விடயங்களை புத்தகங்களின் மூலமும், அங்கு உணவுண்ண வரும் பிரமுகர்களிடமிருந்து செவிவழியாகவும் அறியமுடிந்ததை அச்சிறுவயதில் உணரத் தொடங்கினார். தான் இழந்த பாடசாலைக் கல்வியின் பயனை வாசிப்பின்மூலம் அடைந்துவிடலாம் என்று அவர் கருதினார்.

திருநா அண்ணரின் நம்பகத்தன்மை, நேர்மை, மற்றும் பொறுப்புணர்வு என்பவை திரு. ஆறுமுகம் அவர்களைக் கவர்ந் திருக்கவேண்டும். அதன் பயனாக சாவகச்சேரியில் அவருக்குச் சொந்தமான "மகேஸ்வரி போசனசாலை" யிலும் அவர் பணியாற்ற ஒழுங்குசெய்திருந்தார். அதன் பின்னர் திருநா அண்ணரின் வாழ்க்கை படிப்படியாகத் திசைமாறிச்செல்ல ஆரம்பித்தது. 1956ஆம் ஆண்டு இலங்கை அரசியலில் குறிப்பாகத் தமிழ் அரசியலில் நடந்த மாற்றங்கள் திருநா அண்ணரின் சிந்தனையைத் தட்டி எழுப்பின. அப்பொழுது அவருக்கு வயது பதினேழு ஆகியிருந்தது.

போசனசாலை வேலையுடன்தான் தனது வாழ்க்கை முடிந்து விடப்போகின்றதோ என்ற ஏக்கம் அவரை வாட்டியது. அவரால் வாசிக்கமுடிந்த நூல்களின் மூலமும், தனது உணவகத்திற்கு பசியாறிச்செல்ல வரும் புத்திஜீவிகள், அரசியல்வாதிகளின் கதைகளைச் செவிமடுத்ததாலும், புதியதொரு அறிவுலகின் கதவுகள் தனக்குள் மெல்லத் திறந்து கொண்டதை அவர் அறிந்துகொண்டார்.

மேலைத்தேய நாடகாசிரியர் ஜோர்ஜ் பேர்ணாட் ஷோ அவர்கள் "இந்த உலகத்திலே பிறப்பெடுத்த உங்களுக்கு ஒரு வேலைதான் இறைவனால் விதிக்கப்பட்டுள்ளது. அது என்னவென்று தேடிக் கண்டுபிடித்துச் செய்யுங்கள்" என்றார். பலருக்கு தாம் முதுமை யடையும்வரை இந்த உலகத்திலே தமக்கு என்ன வேலை இறைவனால் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பது தெரிவதில்லை. அதனைக் கண்டறியும் வேளையில் அவர்களுக்கு அதிக வாழ் நாட்கள் எஞ்சியிருப்பதில்லை. திருநா அண்ணரைப் பொறுத்த வரையில், இறைவனால் தனக்கென விதிக்கப்பட்ட வாழ்க்கை இதுவல்ல என்பதை மட்டும் அவர் அவ்வேளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துகொண்ட போதிலும், தனக்கென இறைவன் வகுத்த பாதை எது என்பதை அவரால் உறுதியாகக் கணித்துக்கொள்ள அந்தப் பதின்ம வயதில் இயலவில்லை.

"தேடிச் சோறு நிதந் தின்று
பல சின்னஞ் சிறுகதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிக உழன்று
பிறர் வாடப் பல செயல்கள் செய்து
நரை கூடிக் கிழப்பருவ மெய்தி
கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வே னென்று நினைத்தாயோ?"

என்று அவர் விரும்பி வாசித்த மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிவரிகள் அவரது மனதில் ஆழப்பதிந்து வேர்விட்டிருந்தன. அதுவே அவரைப் புதிய உலகை நோக்கிச் சிறகடித்துப் பறந்துசெல்லத் தூண்டியது. தனக்கு இறைவனால் விதிக்கப்பட்ட வேலை சமூகத்தொண்டனாக வாழ்வதுதான் என்பதை அறிந்து கொள்ள அவருக்கு மேலும் சிலகாலம் எடுத்தது.



*சர்வோதய வளாகத்தில் நிலையக் குழந்தைகளுடன்
திருநா அண்ணர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 3

# தமிழரின் அரசியல் வரவேற்கிறது

### இலங்கைத் தமிழர்அரசியலில் மாற்றம்

1949ஆம் ஆண்டு மார்கழி 18இல் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஈழத்தமிழரின் அரசியல் பாதையொன்றைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுவதற்காக "தந்தை செல்வா" எனப் பெயர்பெற்ற சா.ஜே. வே.செல்வநாயகம் அவர்களின் தலைமையில் ஒன்றுபட்டு நின்ற தமிழர்களால் தொடங்கப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உருவாக்கம், தமிழ் மக்களிடையே அரசியல் விழிப்புணர்வினையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த வழிசெய்கின்றதென்ற எச்சரிக்கை மணியினை சிங்கள அரசியல்வாதிகளிடையே எழுப்பியிருந்தது. இலங்கைத் தமிழரசுக்கட்சி தமிழர்-சிங்களவரிடையே பிரிவினை வாதத்தை ஊட்டுகின்றது என்ற குற்றச்சாட்டு அன்றைய பெரும் பான்மைக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினரால் முன்வைக்கப் பட்டது.

இலங்கை சுதந்திரக் கட்சி 1937ஆம் ஆண்டு S.W.R.D. பண்டாரநாயக்காவால் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள மகா சபையின் பரிணாம வளர்ச்சியில் தோன்றிய ஒரு அரசியல் கட்சியாகும். சிங்கள மகா சபையானது 1945 பொதுத் தேர்தல் வரை ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து வந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் பண்டாரநாயக்காவுக்கு உரிய இடம் கொடுக்கப்பட வில்லை என்ற கருத்து சிங்கள மகா சபையிடம் காணப்பட்டது. D.S. சேனநாயக்கா தனது அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தின் போது S.W.R.D. பண்டாரநாயக்காவுக்கு பதில் பிரதமர் பதவியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க மறுத்ததைக் காரணம் காட்டி 1951 இல் ஐ.தே.கவுக்கான தனது ஆதரவை விலக்கி கொண்டது. 1951இல் பண்டாரநாயக்கா சிங்கள மகா சபையை முழுமையான அரசியல் கட்சியாக மாற்றியமைத்தார். புதிய கட்சிக்கு இலங்கை சுதந்திர கட்சியென்ற பெயர் இடப்பட்டது. 1954ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து சிங்களம் மாத்திரமே இந்நாட்டின் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்ற கோரிக்கை தென்னிலங்கை அரசியலில் வலுப்பெறத் தொடங்கியிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் போக்கும் இத்தகைய இனவாதச் சிந்தனைப் போக்குக்கு ஆதரவாகவே இருந்துவந்தது.

இந்நிலையில் 1955ஆம் ஆண்டு ஏப்ரல் 16-17ஆம் திகதிகளில் திருக்கோணமலையில் தமிழரசுக் கட்சியின் மூன்றாவது மாநில மாநாடு நடைபெற்றது. அதில் கோப்பாய் கோமகன் கு.வன்னியசிங்கம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

அதே வேளை, 1955இல் மொழிச் சமத்துவத்தை வலியுறுத்தி பாராளுமன்றத்தில் டாக்டர் என்.எம்.பெரேரா அவர்கள் ஒரு தீர்மானத்தை கொண்டுவந்தார். அங்கு பேசிய S.W.R.D. பண்டாரநாயக்காவின் உரை பத்தாண்டுகளுக்கு முன்னர் அவர் கொண்டிருந்த “அரசாங்க சபையில் தமிழும் ஆட்சிமொழியாக வேண்டும்” என்ற கருத்துக்கு நேர் எதிராக அமைந்திருந்தது.

“பட்டினங்களிலும் கிராமங்களிலும் வியாபார நிலையங்களிலும் சிறு கடைகளிலும் பெரும்பகுதி வேலை தமிழ்பேசும் மக்களின் கையில் இருப்பதால், தவிர்க்க முடியாத வகையில் சிங்கள மொழி சுருங்கி-அருகிவிடுமென்ற நியாயமான பயம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது” என்று அங்கு பண்டாரநாயக்கா பேசியிருந்தார். அக்கருத்தியலின் பரிணாம வளர்ச்சியின் காரணமாக, 1956ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி களனியில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆறாவது மகாநாட்டில் சிங்களம் மாத்திரமே இந்நாட்டின் ஆட்சி மொழியாக வேண்டுமென்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடுத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அக்கட்சியிலிருந்த தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் உறுப்புரிமையைத் துறந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் துரோகத்தால் கொதிப்படைந்த தமிழரசுக் கட்சியினர் 1956ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி பூரண கதவடைப்புப் போராட்டத்தை (ஹர்த்தால்) தமிழர் பிரதேசங்களில் தொடங்கினர்.

S.W.R.D. பண்டாரநாயக்காவின் பேச்சின் தீவிரத் தன்மையை இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் உணரக்கூடியதாயிருந்தது. கடைகளையும் வர்த்தகத் தொடர்புகளையும் மேற்கொண்டிருந்த தீவகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களை, அவர்களது பொருளாதாரத்தை இந்நிலைப்பாடு நேரடியாகப் பாதிக்கத் தொடங்கியது. சிங்களக் கிராமங்களிலே இனவாத உணர்வுகள் படிப்படியாக மேலோங்கத் தொடங்கின.

இலங்கையில் ஏற்பட்டிருந்த இந்த அரசியல் மாற்றங்கள் அனைத்தையும் திருநா அண்ணர் தனது இளமைப் பராயத்தில் கூர்ந்து அவதானித்து உள்வாங்கியபடியே வந்திருந்தார். தன் மக்களுக்குத் தொண்டுசெய்ய அரசியல் ஒரு வாய்ப்பினைத் தேடித்தரும் என்று அப்பொழுது அவர் இதயசுத்தியுடன் நம்பத் தலைப்பட்டார். அதனால் அவரையறியாமல் இலங்கையின் தமிழ் அரசியலில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில் அரசியல் உரையாடல்களிலும், அரசியல்சார்ந்த வாசிப்பிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளத் தொடங்கினார். யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் பயன்பாடு அவருக்குக் கைகூடிற்று. அவ்வேளையில் அவரது கைகளுக்கு அதிகமாக எட்டியவை தமிழகத்தின் திராவிடக் கட்சிகளின் தமிழ் எழுச்சிப் பிரசுரங்களாகும். தமிழ் எழுச்சிப் பாடல்களையும் கவிதைகளையும் எழுதி வந்தவர் களின் - குறிப்பாகப் பாரதியாரினதும், பாரதிதாசனினதும் கவிதை களை மனப்பாடம் செய்யத் தொடங்கினார். தமிழக மேடைப் பேச்சாளர்களின் உரை நுல்களை வாங்கி வாசித்துவந்தார்.

"விரைவிலே வெற்றி கூறுமின் வெண்சங்கு ஊதுமின்" என்று காந்தியின் தலைமையில் புது நெறியை நிலைநாட்ட பாரத மக்கள் முன்வந்துள்ளதாக காந்தியடிகளை, மகாகவி பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL 274287

போற்றி எழுதிய வாசகங்கள் திருநா அண்ணரைக் கவர்ந்திழுத்தன. அரசியல் நெறியாயினும், இதர நன்னெறிகள் அனைத்திற்கும் அறவழியே சிறந்தது என்று சாத்திரங்கள் கூறுவதை பாரதி தெளிவாகத் தனது கவிதைகளில் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

"விடுதலை பெறுவீர் விரைவா நீர்
வெற்றி கொள்வீர் என்றுரைத் தெங்கும்
கெடுதலின்றி நம்தாய்த் திருநாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்கின்றான்
சுடுதலும் குளிரும் உயிருக்கில்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை
எடுமினோ அறப்போரினை யென்றான்
எங்கோ மேதக மேந்திய காந்தி என்றும்
"பாரதப் பொன்னாடெங்கும்
மாந்தரெல்லாம் சோர்வை
அச்சத்தை மறந்து விட்டார்"
காந்தி சொற்கேட்டார். காண்பார்
விடுதலை கணத்தினுள்ளே"

19 NOV 2019 மாநகரசபை யாழ்ப்பாணம்

என்று கூறி, காந்தி வழியில் இந்திய விடுதலை உறுதி என்று காலத்தைக் கணித்து பாரதி கூறிய வாசகங்கள் திருநா அண்ணரின் மனதில் பசுமரத்தாணியாகின. அவருக்கு நம்பிக்கை நட்சத்திரங் களை அடிவானில் காட்டின.

இந்நிலையில் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்தேறிய இலங்கையின் பொதுத் தேர்தல் தமிழ் மக்களின் அரசியல் விழிப்புணர்வின் அடையாளமாகியது. 1952இல் நடந்த பொதுத் தேர்தலில் 45,331 வாக்குகளை மாத்திரம் பெற்றிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி இத்தேர்தலில் 1,42,036 வாக்குகளைப் பெற்றிருந்தது. தமிழ் அரசியல்வாதிகளுக்கு நெஞ்சில் பாலை வார்த்த இம்முடிவுகள், சிங்கள ஆட்சியாளர்களிடம் தவறானதொரு செய்தியைக் கொண்டுபோய்ச் சேர்த்தன.

தேர்தலில் வெற்றியடைந்த S.W.R.D. பண்டாரநாயக்காவினால் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் 1956இல் தனிச்சிங்களச் சட்டம் அவசர அவசரமாக அமுல்படுத்தப்பட்டது. இது தமிழர்களுக்கு எதிரான இனவாத அரசியல்போக்கைக் கட்டவிழ்த்து விட்டது. இந்நிலையில் தமிழரசுக்கட்சியின் மூத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களுக்குத் தங்கள் தீவிர அரசியல் களப்பணிகளை மேற்கொள்ள சக்திமிக்கதொரு இளைஞர் அணியின் பலம் தேவைப்பட்டது. இதனைத் தீர்க்கதரிசனமாக கண்டிருந்த தமிழ் அரசியல் தலைவர்கள், 1953ஆம் ஆண்டு தை மாதம் பொங்கல் தினத்தன்று கொக்குவில் ந.அருணாசலம் அவர்களின் பெரு முயற்சியின் பயனாக ஏற்கெனவே தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணியை உருவாக்கியிருந்தார்கள். இருப்பினும் போதிய அளவில் இளைஞர்களை அக்காலகட்டத்தில் அவர்களால் அரசியலில் ஈர்க்கமுடியவில்லை. 1956இல் தனிச்சிங்களச் சட்டம் அமுலாக்கப்பட்டதும் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியில் ஏராளமான தமிழ் உணர்வு கொண்ட இளைஞர்கள் இணையத் தொடங்கினார்கள். S.W.R.D.பண்டாரநாயக்காவின் இனவாதப் போக்கு, தமிழ் அரசியல் வாதிகளுக்கும் தமிழரசுக் கட்சியில் இளைஞர்களை பெரும் எடுப்பில் உள்வாங்க வாய்ப்பினை ஏற்படுத்தி இருந்தது.

**அமரர் வ.கந்தையாவின் பார்வையில்**

அமரர் வித்துவான் வல்லிபுரம் கந்தையா (13.11.1913 - 18.8.2006) தமிழரசுக் கட்சியின் ஆரம்பகாலத் தூண்களில் ஒருவர். ஆனைக்கோட்டை பிடாரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவான இவர் திருநா அண்ணர் மறைந்த வேளையில் 90 வயதை அடைந்திருந்தவர். திருநா அண்ணர் பற்றிய தனது மலரும் நினைவுகளைப் பசுமையாகப் பாதுகாத்துத் தன் முதுமைப் பருவத்தில் இவ்வாறு எழுதுகிறார்.

“திருநாவுக்கரசு என்றால் எனக்குத் தமிழரசுக் கட்சி தான் ஞாபகத்துக்கு வரும். 50களின் பிற்பகுதியிலும் 60களின் முற் பகுதியிலும் தமிழரசுக் கட்சியை அறிமுகப்படுத்தல், அதன் செயற்திட்டங்களை அமுலாக்கல் என்ற கடினமான பணிகளுக்கு இளைஞர்கள் தேவைப்பட்டார்கள். இது இலகுவான பணியாக இருக்கவில்லை. ஏற்கெனவே, தமிழ்ப் பகுதிகளில் செல்வாக்குடன் இருந்த தமிழ்க் காங்கிரஸை அப்புறப்படுத்தி அவ்விடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வா தலைமையில் தமிழரசைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. தன்னலம் கருதாத தொண்டர் பலம் இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகக் கூடிய நிலை.

“தமிழரசுக் கட்சியைத் தீவுப் பகுதியில் அறிமுகப்படுத்துவதில் புங்குடுதீவு வாலிபர்களே பொறுப்பேற்றுக் கொண்டார்கள். தமது ஆற்றலாலும் அயராத உழைப்பாலும் இவர்கள் கட்சியை வளர்ப்பதில் நாடு முழுவதிலும் முன்னோடிகளாக மாறினார்கள். தமிழரசுக் கட்சி நடாத்திய (வாகன இலக்கத் தகடுகளில் பொறிக்கப்பட்ட) சிங்கள “ஸ்ரீ” எதிர்ப்புப் போராட்டம், சத்தியாக் கிரகப் போராட்டம் என்பவற்றில் புங்குடுதீவு மக்களின் பங்களிப்பு வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

“அத்தகைய பெருமைக்குரிய மக்களுள் ஒருவராக வளர்ந்து கட்சியோடு தன்னை இறுகப் பிணைத்துக் கொள்கை வழி நின்று புகழ்பெற்றவர் தம்பி திருநாவுக்கரசு. தமிழரசுக் கட்சியின் எந்த மேடைகளிலும் 1960 களுக்குப் பின்னர் திருநாவுக்கரசு முழங்காது விட்டதில்லை. இவ்வளவு ஆற்றல் இந்த இளைஞனுக்கு எப்படி வந்தது என்று எண்ணி நான் வியந்துள்ளேன்.

“பின்னாளில் கட்சிப் பணி துறந்து தூய சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட திருநாவுக்கரசு, சர்வோதயம் மூலம் காந்திஜி கண்ட கனவுகளை தமிழ் மண்ணில் நனவாக்குவதில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அரசியல் என்றாலும் சரி, சமூக சேவை என்றாலும் சரி, தியாக சிந்தை, உறுதி, ஊக்கம் இவை இருந்தால் சாதித்தே காட்டலாம் என்பதற்குத் திருநாவுக்கரசின் வாழ்க்கை சிறந்ததொருபாடமாகும்” (திருமலர், 2001).

**திருமலை யாத்திரை**

தனிச்சிங்களச் சட்டத்தை இலங்கை அரசு அமுல்படுத்தியதை எதிர்த்து தமிழரசுக்கட்சியினர் கொழும்பு காலிமுகத்திடலில், அவ் வாண்டு ஆனிமாதம் ஐந்தாம் திகதி சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினர். அதனை சிங்கள இனவாதிகள் வன்முறைகள் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துக் கலகத்தை உண்டாக்கினர். அதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர்கள் அம்பாறைக் கலவரத்திற்கும் முகம் கொடுத்தனர். கல்லோயாவில் தமிழர் பாரம்பரிய இருப்பிடத்தி லிருந்து துரத்தியடிக்கப்பட்டனர். பின்னர் அப்பிரதேசம் சிங்களமய மாக்கப்பட்டது. துறைநீலாவணையில் தமிழர்கள் திரண்டெழுந்து வன்முறைகளுக்கு எதிர்ப்புக் காட்டியதால் சிங்களவர்கள் ஓட வேண்டியதாயிற்று. அதன் வெளிப்பாடாக அரசாங்கம் அவசர காலச்சட்டத்தைப் பிரயோகித்து தமிழ் மக்களின் எழுச்சியை அடக்க முனைந்தது. இதற்காக தமிழ் மக்களின் எதிர்ப்பினை வெளிக்காட்டும் பொருட்டு தமிழ்த் தலைமையினால் திருக் கோணமலை நகரை நோக்கிய “திருமலை யாத்திரை” மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்ப்பிரதேசத்தின் வடக்கெல்லையில் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற ஊர்களிலிருந்தும், மேற்கே மன்னாரில் இருந்தும், தெற்கே திருக்கோவிலில் இருந்தும் தலைவர்களும் தொண்டர்களும் கால்நடையாகத் திருக்கோணமலையை நோக்கிச் செல்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

"திருமலைக்குச் செல்லுவோம்
சிறுமை அடிமை வெல்லுவோம்"

என்று தொடங்கும் பண்டிதர் இளமுருகனாரின் திருமலை யாத்திரைப் பாடலை இசைத்தபடி வடக்கிலும் மேற்கிலும் தெற்கிலுமிருந்து திருக்கோணமலையை நோக்கி தமிழ் மக்கள் பாதயாத்திரைகளை மேற்கொண்டனர். அவர்கள் பலமுனை களிலிருந்தும் பத்து நாட்கள் நடந்து 1956 ஆம் ஆண்டு ஆவணி 16ஆம் திகதி திருக்கோணமலையை சென்றடைந்தனர். திருக்கோணமலை முற்றவெளியில் தமிழரசுக் கட்சியின் நான்காவது மாநில மாநாடு 17 முதல் 19 வரை நடந்தது. இந்த அரசியல் அசைவியக்கங்களில் திருநா அண்ணர் படிப்படியாக உள்வாங்கப்பட்டிருந்தார். அவற்றில் பங்கேற்ற இளைஞர் அணியில் முன்னணியில் இருந்தார். திருமலை யாத்திரை பிறப்பித்திருந்த அரசியல் உணர்வலைகளும், இலங்கையில் துரிதமாக மாற்றமடைந்து வந்த தமிழ் மக்களுக் கெதிரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசின் இனவாதக் காய்நகர்த்தல்களும் திருநா அண்ணரை மிகவும் பாதித்திருந்தன.

**யாழ்ப்பாணக் கச்சேரியில் நடந்த மறியல் போராட்டம்**

யாழ்ப்பாணக் கச்சேரியில் நடந்த மறியல் போராட்டம் பற்றி, திருநா அண்ணருடன் சமகாலத்தில் அரசியலில் ஈடுபட்டு பின்னாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் பின்வருமாறு விபரிக்கிறார்.

"1961இல் தான் அவரை (க.திருநாவுக்கரசுவை) முதலில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இக்காலத்திற்றான் அன்றைய கொழும்பு அரசுக்கெதிராக தந்தை செல்வா, தலைவர் அமிர்தலிங்கம் போன்றோரின் வழிகாட்டலுடன் வட-கிழக்கு மாகாணங்களிலுள்ள கச்சேரிகளின் முன்பாகச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. இதன் விளைவாக மூன்று மாதங்களாகக் கச்சேரி நிர்வாகமே ஸ்தம்பித்தது. இப்போராட்டத்தில் இளைஞர்களாக இருந்த நாம் இருவரும் தொண்டர்களாக இணைந்தது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். நண்பர் திருநாவுக் கரசு ஒரு சுறுசுறுப்பான இளைஞனாக மிடுக்குடன் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து ஆற்றிய பணிகள் பல. சிறந்த நாவன்மையாளராகவும், எவருடனும் இனிமையான சுபாவத்துடன் பழகும் பாங்குடையவராகவும் இவர் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியை வளர்த்தெடுப்பதில் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. இருந்தும் நாளடைவில் அரசியலில் மக்களுக்குச் சேவையாற்ற வந்த இவர் பின்னர் மக்களின் தொண்டனாகப் பணிபுரிய விழைந்தார்." (திரு மலர், 2001).

1956ஆம் ஆண்டு திருநா அண்ணர் பதினேழு வயதை அடைந்திருந்தார். தான் பணியாற்றிய போசனசாலையிலிருந்து நீங்கி தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் முழுநேர உறுப்பினராகத் தன்னையும் அவர் அக்காலகட்டத்தில் இணைத்துக் கொண்டிருந்தார். அவரது நோக்கம் அரசியல் முன்னெடுப்புகளால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு வேண்டிய சமூக விழிப்புணர்வினைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரசியல் தொண்டன் திருநாவுக்கரசு

தான் ஏற்படுத்தவேண்டும் என்பதாகவே இருந்தது. இலங்கை அரசியல்வாதிகளின் சுயநலம்மிக்க கபடத்தனமான அரசியல் சதுரங்க விளையாட்டின் மற்றொரு பக்கத்தை அந்தத் தூய சமூக சேவையாளன் அப்போது அறிந்திருக்கவில்லை. மாறாக, திருக்கோணேசர் ஆலய மலை உச்சியில் இருந்து தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் நாட்டிற்காக அர்ப்பணிப்போம் என்று சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்ட இளைஞர்களுள் ஒருவராகத் திருநா அண்ணரும் அங்கிருந்தார்.

சமகால கட்டத்தில் தமிழகத்தின் அரசியலிலும் திராவிடப் பேரலையொன்று உருவாகியிருந்தது. ஈ.வே.ராமசாமிப் பெரியார் தோற்றுவித்திருந்த திராவிடக் கட்சியிலிருந்த சீ.என்.அண்ணாத்துரை 1949இல் பிரிந்து திராவிட முன்னேற்றக்கழகம் என்ற பெயரில் புதுக்கட்சியொன்றை ஆரப்பித்திருந்தார். 1956 மே மாதம் வரை அக்கட்சி மாநிலத் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்கவில்லை. தமிழக மக்களை அரசியலுக்குத் தயார்ப்படுத்த அவர்களுக்கு நீண்டகாலம் தேவைப்பட்டிருந்தது.

அவ்வாண்டு இடம்பெற்ற மாநிலத் தேர்தலில் 112 இடங்களில் போட்டியிட்டு 15 இடங்களிலேயே திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி வென்றிருந்தது. தமிழக மக்களிடையே தமது திராவிடக் கருத்துக்களைக் கொண்டுசென்று சேர்ப்பதற்கு அந்நாட்களில் ஜனரஞ்சகமான முறைகளில் நிறையவே அவர்கள் பாடுபட்டு வந்தார்கள். சினிமா, கலைநிகழ்வுகள், நாடகம், ஆக்க இலக்கியம் எனப் பல்வேறு ஊடகங்களின் வழியாகவும் கழகக் கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் செல்லவேண்டியவர்களாகத் தமிழக அரசியல்வாதிகள் இருந்தார்கள். கடல்கடந்தும் இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழ்மக்களிடையேயும் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் இயக்கப் பிரச்சாரங்கள் எடுபட்டிருந்தன. இதன் ஒரு வளர்ச்சிப் போக்காக, தமிழகத்தின் பிரச்சாரப் பிரசுரங்களும், தமிழர் விழிப்புணர்வுப் பிரசுரங்களும், எழுச்சிக் கவிதைகளும், இலங்கையில் தமிழரசுக் கட்சியினரின் இயக்கப் பிரசுரங்களாகவும், மேடைப் பேச்சுக்களாகவும் அந்நாட்களில் இருந்துவந்துள்ளன. தமிழக அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தப்பட்ட மேடைப் பேச்சுகளும், பத்திரிகைச் செய்திகளும் அக்காலப் பகுதியில் தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் கொண்டிருந்த தீவிர ஈடுபாட்டுக்கு உதாரணங்களாக உள்ளன.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே
திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள். ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டம் என்றும் சிறியோர்க்கு
ஞாபகம் செய் முழங்கு சங்கே
சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென்று ஊது சங்கே
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு
வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோள் எங்கள் வெற்றித் தோள்கள்
கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள்
ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்
வெங்குருதி தனில் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற
தமிழ் எங்கள் மூச்சாம்

என்று “சங்கநாதம்” முழங்கிய பாரதிதாசனின் கவிதைவரிகள் தமிழகத்துக்கு நிகராக, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இளைஞர் களினது வேதவாக்காகவும் அன்றைய காலகட்டத்தில் பயன்படுத்தப் பட்டிருந்தது. தமிழகத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது செந்தமிழ்கொஞ்சும் மேடைப் பேச்சுக்களும் நூல் களாக வெளிவந்து இலங்கையின் வடக்கு-கிழக்கை ஆக்கிர மித்திருந்தன. திருநா அண்ணர் இந்நூல்களை கையில் காசு கிடைக்கும் போதெல்லாம் வாங்கித் திரும்பத் திரும்ப வாசித்தது மல்லாமல், முடிந்தால் மனப்பாடமும் பண்ணி வைத்திருந்தார்.

**கோடையிலே கொடுவேயிற் காயும் போதும்**
**கொழுந்தமிழ் பாமழையிற் தோயவேண்டும்**
**வாடையிலே வெற்றுடல் நடுங்கும் போதும்**
**வண்டமிழின் கதகதப்பிற் காயவேண்டும்**
**பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்**
**பைந்தமிழில் அழுமோசை கேட்கவேண்டும்**
**ஓடையிலே ஒண்சாம்பர் கரையும் போதும்**
**ஒண்தமிழே சலசலத்து ஓயவேண்டும்**

என்பது சுவாமி விபுலானந்தர் காலத்தில் வாழ்ந்த மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு தமிழ்ப்புலவரின் பாடலாகும். இந்தப்பாடலை திருநா அண்ணர் தமிழர் அரசியலை விட்டு நீங்கி, சர்வோதய வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்துவிட்ட வேளையிலும் கூட அடிக்கடி உச்சரித்தபடியே இருந்ததை அவருடன் நெருங்கிப்பழகிய பலரும் அறிவார்கள்.

தமிழ் மொழியை, தமிழ் இலக்கியத்தை, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றோரின் இன்தமிழ் மேடைப் பேச்சுகளை, பெரியார் ஈ.வே. ராமசாமியின் பகுத்தறிவுப் பாசறை நூல்களை, மகாகவி பாரதியார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாரதிதாசன் ஆகியோரின் பாடல்களை, ஆர்வத்துடன் வாசித்து உள்வாங்கி, முடிந்தால் மனனஞ்செய்து வைத்திருக்கும் பழக்கம் அவரை படிப்படியாக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் மேடைகளில் கொண்டுபோய்ச் சேர்த்தன. அரசியல் மேடைகளில் திருநா அண்ணரின் உரைகள், தமிழரசுக்கட்சி அரசியல்வாதிகளுக்கு ஏராளமான மக்களை கூட்டத்துக்கு வரவழைக்க உதவின. திருநா அண்ணரின் அரசியல் மேடைப் பங்களிப்பு, படிப்படியாக அவரை தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணியின் மத்திய வலயத்துக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுபோய்ச் சேர்த்தன. ஒரு கட்டத்தில் திருநா அண்ணர் உரையாற்றாத கட்சிக் கூட்டங்களே இல்லை என்ற நிலை இருந்த தென்றால் அது மிகையல்ல. இதன் விளைவாக 1962இல் தந்தை செல்வாவின் தலைமையில் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் செயலாளர் பதவியையும் திருநா அண்ணர் ஏற்றுக்கொண்டிருந்தார். இதன் காரணமாக இலங்கையின் தமிழ்க்கிராமங்கள் எல்லாம் திருநா அண்ணரின் பாதம்பதிந்தவையாகவே மாறின. கிராமங்கள் தோறும் மக்களை சந்தித்து அளவளாவும் வாய்ப் பினையும் அவர் பெற்றிருந்தார். காலக்கிரமத்தில் அவரது மனதில் தான் கண்டுவந்த மக்களின் துயர்தோய்ந்த வாழ்க்கைநிலையும் அடிக்கடி தோன்றி உறுத்தத் தொடங்கியது.

1961ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிறிமாவோ அரசாங்கம் நிறைவேற்றிய "நீதிமன்றங்களில் சிங்கள மொழிப் பிரயோகம்" பற்றிய சட்டத்தினை எதிர்த்து யாழ் கச்சேரி வாசலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை நடத்தினர். வவுனியா, மன்னார், திருக்கோணமலை பிரதேசங்களுக்கும் விரிவாக்கப்பட்ட இப்போராட்டம் இராணுவ வன்முறை கொண்டு அடக்கப்பட்டது மட்டுமல்லாது போராட்டத்தில் ஈடுபட்ட தமிழரசுக் கட்சித் தலை வர்கள் அவசர காலச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். இக்காலகட்டத்தில் தமிழ் எழுத்துக்களுக்கு தார்பூசி அழிக்கும் இயக்கம் சிங்களப் பகுதியில் ஆரம்பித்தது. 1961இல் யாழ். கச்சேரி முன்றலில் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் பொலிஸாரால் அடித்து நொருக்கப்பட்டதோடு, முதன் முதலாக சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தினால் வடக்குக்கு இராணுவம் அனுப்பப்பட்டது. சத்தியாக்கிரகப் போராட்டம் யாழ்ப்பாணக் கச்சேரி வாயிலிலும் திருமலை, மட்டக் களப்புப் போன்ற இடங்களிலும் நடந்தபோது அதில் திருநா அண்ணரும் பங்குபற்றியிருந்தார்.

திருநா அண்ணரின் இளமைக்காலத்தில் அவரை நன்கறிந் திருந்தவர் புங்குடுதீவு சிவன்கோவில் தர்மகர்த்தா சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள். அவர் திருநா அண்ணரின் மறைவையொட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பெற்ற "திருமலர்" என்ற நினைவுமலரில் பின்வருமாறு தன் மலரும் நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார்.

"அவரிடம் தாய்நாட்டுப் பற்றும் தாய்மொழியான தமிழ்மொழியின் பற்றும் ஆழமாக வேரூன்றி அவர் உயிரோடு கலந்துவிட்டது என்றால் மிகையாகாது. தமிழுக்காக அந்த நாட்களில் தமிழரசுக் கட்சியின் தொண்டராகி, கூட்டங்களில் பேசியும், பிரச்சாரங்கள் செய்தும் அக்கட்சியின் உறுப்பினர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிய பெருமை இவரையே சாரும். கூட்டத்தில் திருநாவுக்கரசு பேசுகிறார் என்றால் அதைக் கேட்பதற்கும், ரசிப்பதற்கும் ஒரு கூட்டமே காத்திருக்கும். ஏனென்றால், அந்தப் பேச்சிலே அர்த்தமும் - அரசியலும் - தத்துவமும் நிறைந்திருக்கும். அதேபோல சத்தியாக்கிரகப் போராட்டம் யாழ்ப்பாணக் கச்சேரி வாசலிலும், திருமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் நடந்தபோது அதிலே பங்குபற்றி அடிகள், உதைகள் கூட வாங்கியவர்."

திருநா அண்ணருடன் அக்காலகட்டத்தில் அரசியல் நட்பு வட்டத்தில் இருந்தவர்களில் திரு.விஸ்வலிங்கம், திரு. அருணாசலம், கோவை மகேசன், நாக பத்மநாதன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கு.வி.செல்லத்துரை மாவை சேனாதிராசா ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர். இப்பட்டியல் நீண்டது.

பின்னாளில் திருநா அண்ணரின் மறைவின்போது, கொழும்பு, ஜெயரட்ண மலர்ச்சாலையில் அவரது பூதவுடலுக்கு 05.10.2001 அன்று அஞ்சலி செலுத்தி மாவை சோ.சேனாதிராசா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகளை இங்கு குறிப்பிடுவது, திருநா அண்ணரின் தமிழரசுக்கட்சி - இளைஞர் அணிக் காலங்களை மீட்டுப் பார்க்க உதவக்கூடும்.

"புங்குடுதீவு தந்த ஒரு பொக்கிஷம் திருநாவுக்கரசு. தமிழன்னைக்கு அவர் ஆற்றிய பணிகள் வரலாற்றில் நிலைத்திருக்கும். அன்றைய காலகட்டத்தில் சுகபோக வாழ்க்கை, உயர் கல்வி, வருமானம் தரும் பல தொழில்துறைகள் எனப் பல மார்க்கங்கள் இருந்தும் தமிழ்மீதும் தமிழ் மண்ணின் மீதும் கொண்ட பற்றினால் இவை யாவற்றையும் துறந்துவிட்டுக் காடு மேடெல்லாம் அலைந்து திரிந்து கட்சிப்பணி செய்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அண்ணன் திருவை நாங்கள் வழிகாட்டியாகவே கொண்டு செயற்பட்டோம். தமிழ் இளைஞர் பேரவை என்பது தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியிலிருந்து கிளைத்தது தான். வாலிபர் முன்னணியின் பொதுச் செயலாளராக இனைளஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார் அமரர் திருநாவுக்கரசு. அவரது இலட்சிய வேட்கைக்கும் துடிப்புமிக்க செயலாற்றலுக்கும் இது தக்க சான்று பகர்வதாக உள்ளது.


"தமிழரசுக் கட்சிக்குள் ஒலித்த தீவிரவாதக் குரல்களைச் சமாதானப் படுத்துவதில் அண்ணர் திரு எவ்வளவோ பாடுபட்டுக் கட்சியின் ஒருமைப்பாட்டைக் கட்டிக்காக்க உழைத்தார். கட்சி அலுவலகத்தில் இருபத்திநான்கு மணி நேரமும் தங்கிப் பணி யாற்றிய காலமும், எங்களுக்காக உணவு கூடச் சமைத்துப்போட்ட நாட்களும் உண்டு. எதுவுமற்று வெறும் தேநீருடன் நாம் காலம் கழித்த நாட்களும் மனக்கண்ணில் நிழலாடுகின்றன.

"திருமலை மாவட்டத்தில் பெரும்பான்மையினத்தின் அத்துமீறல் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக எனது கல்வியைக்கூட கைவிட்டு நான் அங்கு சென்றபோது எம்மை வரவேற்ற புங்குடுதீவுப் பட்டாளத்தில் அண்ணன் திருவும் முக்கியமானவராக இருந்தார். எந்த அச்சுறுத்தலுக்கும் தயாராக, ஆயுதபாணிகளாகக் கூட எம்மைக் காத்தவர்களில் புங்குடுதீவு இளைஞர்கள் நிறையவே இருந்தார்கள். அவர்கள் திருவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்கள்." (திருமலர் 2001)

**புங்குடுதீவு இளைஞர் கழகம்**

அமரர் வே.க.சோமசுந்தரம் அவர்கள் பற்றியும் தமிழறிஞர் கு.வி.செல்லத்துரை அவர்கள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டி யுள்ளது. இருவரும் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இருவரும் திருநா அண்ணரின் சமூக வாழ்வின் வளத்திற்குக் காரணமாக இருந்தவர்கள். அமரர் வே.க.சோமசுந்தரம் பற்றி பிறிதொரு அத்தியாயத்தில் சொல்லப்படுவதால் இங்கு தமிழறிஞர் கு.வி.செல்லத்துரை அவர்கள் பற்றிச் சில வார்த்தைகள் பதிவுசெய்ய விரும்புகின்றேன். கொழும்பு விவேகானந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புங்குடுதீவு இளைஞர் கழகம்

வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், புங்குடுதீவு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அரும்பணியாற்றியவர் தமிழறிஞர் கு.வி.செல்லத்துரை அவர்கள். புங்குடுதீவில் கௌரவமான சமூக சேவையாளரான அவர் புங்குடுதீவு மக்கள் சேவா சங்கத்தின் தலைவராகவிருந்து நயினை நாகபூஷணி அம்பாள் தேர்த் திருவிழாவின்போது ஆயிரக்கணக்கான அடியார்களுக்குத் தண்ணீர்ப்பந்தல் அமைத்து நீராகாரம் வழங்கி வந்தவர். கூட்டுறவு புனரமைப்புக்கு முன்னர் புங்குடுதீவு மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் பணி யாற்றியவர். தமிழரசுக் கட்சியின் புங்குடுதீவுக் கிளைத் தலைவராகவும் பணியாற்றி, சத்தியாக்கிரகப் போராட்டத்திற்குப் பூரண ஆதரவு தந்து தீவக இளைஞர்களை வழிநடத்தியவர். புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் இருந்தவர். தமிழறிஞர் கு.வி.செல்லத்துரை அவர்கள் புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் திருநா அண்ணர் உள்ளிட்ட பத்தொன்பது தொண்டர்களுடன் மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாலை மறியல் போராட்டங்களில் கலந்துகொள்ளச் சென்றபொழுது அதற்குத் தலைமை தாங்கிச் சென்றிருந்ததுடன் யாழ்ப்பாணக் கச்சேரியில் நடந்த மறியல் போராட்டத்தின்போது அரச காவல் துறையினரின் தாக்குதலுக்கும் உள்ளானவர். இவர் 07.02.1973இல் காலமானார்.

புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் மற்றொரு ஆரம்பகால உறுப்பினராகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர் வித்துவான் பொன் அ.கனகசபை (30.10.1917 - 15.03.1997) அவர்கள். புங்குடு தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓர் ஆசிரியர், எழுத்தாளர், சிறந்த பேச்சாளர். ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் இவர், 1974ஆம் ஆண்டு புங்குடுதீவு இளைஞர் கழகத்தில் தனியார் கல்வி நிறுவனத்தை நிறுவி அதன் பணிப் பாளராக இருந்து புங்குடுதீவு இளைஞர்களின் கல்விப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றினார். சிறந்த மாணாக்கர் பலரை புங்குடுதீவிலிருந்து உருவாக்கிய பெருந்தகை இவர்.

திருநா அண்ணர் தன் இளமைக்கால வாழ்வில் தமிழரசுக் கட்சியின் அரசியலில் ஈடுபட்டிருந்தாலும், தன் தாய்மண்ணை முற்றிலும் மறந்தவராக இருக்கவில்லை. அரசியல் மேடைப் பேச்சுக்காக இலங்கையின் எப்பாகத்துக்குச் சென்று வந்தாலும் தான் பிறந்த மண்ணாகிய புங்குடுதீவை ஒருபோதும் அவர் மறந்துவிடவில்லை. தான் சென்றுவந்த கிராமங்களில் உள்ள மக்களுடன் அன்பாகப் பழகி அவர்களது கஷ்ட நஷ்டங்களை அவர்களின் வாயிலாக நேரடியாகக் கேட்டு வந்தவர். பின்னாளில் முழுமையாகக் கட்சி அரசியலிலிருந்து ஒதுங்கி, முழுநேர சமூகத் தொண்டனாக இவர் மாறுவதற்கும் இக்கிராம மக்களிடமிருந்து இவர் பெற்ற அனுபவங்களே காரணமாகியிருந்துள்ளன.

புங்குடுதீவு இளைஞர் கழகத்தில் செயலாளராக திருநா அண்ணர் 1958 முதல் சேவையாற்றி வந்திருந்தார். அவ்வாண்டி லேயே இவருக்கு சிவயோக சுவாமிகளின் தரிசனமும் ஆசியும் கிடைத்திருந்தது. இதனைத் தனது எதிர்கால சமூக வாழ்க்கைக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த ஆசீர்வாதமாகவே அவர் கருதினார். அதனால் தனது ஆன்மீகப் பணிகளையும், சமூகப் பணிகளையும் இணைந்து முன்னெடுத்துச் செல்ல அவர் தவறவில்லை. கடவுளுக்குச் செய்யும் தொண்டுகளையும், தன் மக்களுக்குச் செய்யும் சேவை யையும், மனிதரல்லாத விலங்கினங்களிடம் காட்டும் ஜீவகாருண் யத்தையும் இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டாகவே கருதும் மனப்பக்குவத்தை அவர் இளவயதிலேயே அடைந்திருந்தார்.

திருநா அண்ணருடன் நட்பைப் பேணிய மற்றொரு பெரியார் பண்டிதர் சி.சரவணனார் ஆவார். பண்டிதர் அப்பா, பண்டிதர் ஐயா என்று அவரை பலவாறாகவும் சர்வோதய உறவுகள் அழைப்பதுண்டு. 1908ஆம் ஆண்டு வேலணைக் கிராமத்தில் பிறந்த பண்டிதர் சி.சரவணனார், புங்குடுதீவில் திருமணம் செய்திருந்தவர். தீவிர சைவசமயப் பற்றாளரான அவர், மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன், இந்திய காங்கிரஸ் கட்சியிலும் உறுப்பினராக இருந்தவர். 20 வருடகாலம் காந்தீயத் தொண்டராக இருந்த காலத்தில் இலங்கைக்குத் திரும்பி வந்து இலங்கைச் சிறைச்சாலைகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டு தண்டனைக்காகக் காத்திருக்கும் சிறைக் கைதிகளுக்கு அவர்களின் இறுதிக்காலத்தில், அவர்களது மரணத்தின் முன் அவர்களுக்கு பல்வேறு நற்சிந்தனைகளைப் போதித்து ஆன்ம ஈடேற்றத்திற்கு அவர்களை ஆற்றுப்படுத்தி வந்தவர். அதற்காக எவ்வித வேதனத்தையும் சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் இருந்து பெறாதவர். யோகர் சுவாமிகள், தாளையான் பாபா ஆகியோரைக் குருவாக ஏற்றுக் கொண்ட இவருக்குத் தன் இறுதிக் காலத்தில் புங்குடுதீவு சர்வோதயமே ஆச்சிரமமாக-சரணாலயமாக அமைந்துவிட்டமை இறைவனின் சித்தமேயாகும்.

காந்தியவாதியான இவர் தன் சர்வோதய சிந்தனைகளை சர்வோதய அமைப்பாளர் திருநா அண்ணருக்கும், அவரது உடன்பிறப்புகளுக்கும், சர்வோதய ஊழியர்களுக்கும் அன்றாடம் மாலை வேளைகளில் குடும்ப சந்திப்புகளின்போது போதித்து வந்தார். திருநா அண்ணர் அப்பெரியாரிடம் அளவுகடந்த மரியாதையும் பாசமும் வைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பண்டிதர் சரவணனார் வழிபட்ட சர்வோதய
ஈஸ்வரன்ஆலயத்தில் பூசை வழிபாட்டில்
செல்வி க.புஷ்பமணி

பெரியார் பண்டிதர் சி.சரவணனார் சர்வோதய வளாகத்தில் உருவாக்கிச் சென்ற சிவலிங்க பூசை வழிபாடுகள், நீண்டகாலமாக திருநா அண்ணரின் சகோதரியும், சர்வோதய நிலையப் பொறுப் பாளருமான புஷ்பமணி அவர்களால் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. “பண்டிதர் ஐயா” நாற்பதாண்டுகளாகப் பூசித்துவந்த சிவலிங்கமும் மீனாட்சியம்மையும், இன்று சர்வோதய வளாகத்தில் நிரந்தரமாகக் கோவில்கொண்டெழுந்தருளியுள்ளனர். போர்க்காலத்தில் நிகழ்ந்த பாரிய இடப்பெயர்வின்போது ஊரே திரண்டு புங்குடுதீவிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற வேளையிலும் கூட நிலையப் பொறுப்பாளரான புஷ்பமணி அக்கா அவர்கள், எஞ்சியிருந்த சில ஊரவர்களுடன் சர்வோதய வளாகத்தில் தங்கியிருந்து சிவன்கோவிலிலும் யோகர் சுவாமிகள் சமாதியிலும் ஆராதனை செய்துவந்தார். அக்காலகட்டத்திலே சர்வோதயத்தின் அணையாத அகல்விளக்கு அவரால் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட பெரியார்களினதும் இன்னும் பலரினதும் ஆசியுடன் திருநா அண்ணரின் அரசியல் பயணமும், புங்குடு தீவுக்கான சமூக முன்னேற்றப் பணிகளும் தொடர்ந்தன. படிப் படியாகத் திருநா அண்ணரின் தன்னலம் கருதாத சமூக உணர்வு, புங்குடுதீவு இளைஞர் கழகத் தொண்டர்களிடமும் தொற்றிக்கொள்ள ஆரம்பித்தது. ஒரு இளம் சமூகத் தலைவனை தீவக மக்கள் புரிந்துகொள்ள ஆரம்பித்திருந்தனர்.

**வாடகைக்கார் சாரதி**

திருநா அண்ணரின் சமூகப் பணிகளுக்கான போதிய பொருளாதாரப் பின்புலம் அந்நாட்களில் அவருக்கு இருக்கவில்லை. அதனால் அவரது சிந்தனையின் வேகத்திற்கு ஈடாக செயற்பாடுகளை துரிதப்படுத்த இயலாமல் அவர் தவித்துவந்தார். அவ்வேளையில் புங்குடுதீவில் வாழ்ந்திருந்த வைத்திய கலாநிதி பசுபதிராஜா, தமிழறிஞர் கு.வி.செல்லத்துரை ஆகிய பெரியோர் இருவரும் தாம் முதலீடு செய்து ஒரு காரை கொள்வனவு செய்து அதனை வாடகைக் காராகப் பயன்படுத்துமாறு திருநா அண்ணருக்கு ஒரு தொழில்வாய்ப்பிற்கு வழியமைத்துத் தந்தார்கள். அவ்வாகனத்தின் வாடகைக்கார் சாரதியாக திருநா அண்ணர் தன் தொழிலைத் தொடங்கினார். நாளாந்த வாடகை வருவாயில் சிறுகச்சிறுக காருக்கான முதலீட்டை அப்பெரியோருக்கு வழங்கி காலக்கிரமத்தில் அக்காரின் உரிமையாளரானார் தொண்டர் திருநாவுக்கரசு. கார்ச்சாரதியாக அவர் பணியாற்றிய வேளையில் தமிழறிஞர் கு.வி.செல்லத்துரை அவர்களின் அரசியல் கூட்டங்களுக்கு அவரை அழைத்துச் செல்லும் பெரும்பணி திருநா அண்ணருக்குரியதாயிற்று. முன்னணி அரசியல்வாதிகளின் உரைகளைக் கேட்கும் வாய்ப்பு திருநா அண்ணருக்கு இலகுவாகக் கிட்டியது. இதைப்பற்றி புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய அதிபராகவிருந்த அவரது நண்பர் எஸ்.கே.சண்முகலிங்கம் அவர்கள் பின்வருமாறு தான் அன்று கண்ட இளம் திருநாவுக்கரசு பற்றிக் குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர் (திருநாவுக்கரசு) ஒரு சாதாரண கார்ச் சாரதியாக இருந்தவர். கடின உழைப்பால் பின்னர் கார் உரிமையாளராகவே மாறினார். அக்காலத்தில் எந்நேரமும் அறிஞர் அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் எழுதிய நூல்களை நன்றாக வாசித்துவந்தவர். அத்துடன் வாடகைக் கார் ஓடுகின்ற சமயங்களில், காத்திருப்பின் போதும், ஓய்வின்போதும், நூல்களை வாசிப்பதை முக்கிய பணியாக மேற்கொண்டவர்."

திருநா அண்ணர் வாடகைக் கார்ச் சாரதியாகப் பணியாற்றி உழைக்கும் ஊதியத்தினை, அதாவது காரின் பராமரிப்புச் செலவினம்போக, எஞ்சிய பணத்தையும் தன் கிராமத்தின் சமூக சேவைகளுக்குப் பயன்படுத்தத் தொடங்கினார். அதனால் அவரது நிதி நிலைமை அடுத்தவரைத் தங்கியிராததொரு கட்டத்திற்குச் சிறிதாக நகர்ந்தது. இருப்பினும் அவரது திட்டங்கள் எப்பொழுதும், நீண்டதாகவும், பெரிதாகவுமே இருந்தன. எப்பொழுதும் நிதிப் பற்றாக்குறை இருந்தே வந்தது. தனது எளிமையான சிக்கன வாழ்க்கை முறைகளினால் அவரால் நிதிப்பற்றாக்குறையை ஓரளவு கடந்துசெல்லவும் முடிந்துள்ளது.

சென்ற நூற்றாண்டின் ஐம்பது, அறுபதுகளில் தமிழரசுக் கட்சியிலே இணைந்து அக்கட்சியில் ஒரு பிரதான பேச்சாளராகவும் வாலிப முன்னணியின் செயலாளராகவும் திருநா அண்ணர் சிறப்பாகச் செயற்பட்டார். அக்கால கட்டத்திலே வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று மக்களை நேரடியாக அறியவும் அவர்களுடன் பேசவும் தமக்கு வாய்ப்புக்கள் கிட்டியதாக அவரே மிக மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார். அங்கு அறிந்த பேருண்மையே அவருக்குள் போதிமரத்து ஞானோதயத்தை படிப்படியாகக் கட்டி வளர்த்தது. அரசியல் வேறு சமூக நலன் வேறு என்பதை ஒருவாறாகக் கண்டறிந்தார்.

திருநா அண்ணர் தேசிய அரசியலில் தன்னை ஓரளவு நம்பிக்கை நட்சத்திரமாக வளர்த்துக்கொண்டபோதிலும் அவரால், அவ்வரசியலின் நெளிவு சுளிவுகளுக்கு இணங்கி, இணக்க அரசியல் செய்ய முடியவில்லை. இதன் விளைவாக அவரது பிடிவாதமான அரசியல் நேர்மை பலநோக்கம் கொண்ட சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநல அரசியல்வாதிகளுக்கு பிரச்சினையைத் தோற்றுவிக்க ஆரம்பித்தன. நேர்மைமிக்க ஒரு தொண்டனை முறையாக வளர்த்தெடுக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி அந்நாளில் தவறிவிட்டதாகவே பிற்காலத்தில் அவர் வருந்தியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் ஒருசில உள்ளூர் அரசியல்வாதிகளின் அசமந்தப் போக்கும், உள்ளூர் கூட்டுறவு அமைப்புகளினதும், சமூக சேவை அமைப்புகளினதும், செயல்திறன் இன்மையும் அவருக்கு எரிச்சலூட்டின. நிர்வாகிகளாக இருப்பவர்களால் காழ்ப்புணர்வுடன் தனது சமூக வேலைத்திட்டங்களுக்குப் போடப்படும் முட்டுக்கட்டைகளும் திருநா அண்ணரை மனதளவில் பாதித்திருந்தன. அதன் விளைவாக, 1964இல் கிராமசபைத் தேர்தலில் தன்னையே நேரில் ஈடுபடுத்திக்கொள்ளத் தீர்மானித்தார். அதன் மூலம் சமூகத்திற்கு தன்னாலான சேவைகளைச் செய்யலாம் என்றும் அதுவே எதிர்காலத்தில் நல்லதொரு கிராமசபைக்கு உதாரணமாக அமையும் என்றும் அவர் கருதினார். அதன் விளைவாக புங்குடுதீவு கிராம சபையின் நான்காம் வட்டாரத்துக்கான அடுத்த நான்காண்டுகளுக்கான (1964-1968) தேர்தலில் நின்று, அதில் வென்று நான்காம் வட்டாரப் பிரதிநிதியாக தேர்வுசெய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 4

# கிராமசபையில் நான்கு ஆண்டுகள்

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்"

விவசாய நிலத்தின் வரப்பை உயர்த்தினால், வயலில் நீர் அதிகளவு தங்கியிருக்கும். அப்போது நெல் விளைச்சல் உயரும். நெல் விளைச்சல் நன்றாக அமைந்தால் தான் மக்களின் வாழ்வு மகிழ்ச்சியாக இருக்கும். மக்களின் வறுமை ஒழியும். அப்போதுதான் அரசு சிறக்கும். ஒரு அரசின் பெருமை, வரப்பு உயர்வதை ஆதாரமாகக் கொண்டே அமைந்து விடுகிறது என்பதை மேற்கண்ட பாடலில் ஔவையார் எளிமையாக விளக்குகிறார்.

எந்தவொரு தேசத்தின் மாற்றமும் சாதாரண குடும்பத்தில் தொடங்கவேண்டும் என்றார் காந்திஜி. ஒரு குடும்பத்தில் பெற்றோர் தம் பிள்ளையை நல்லவனாக வளர்த்தால் அவன் வாழும் சமூகமும் நல்லவர்களால் அமையும். இதனால் நாடே நல்லவர் களால் நிறைந்திருக்கும். இந்த இயற்கை விதி நாட்டின் வளர்ச்சிக்கும் மிகப்பொருந்தும் என்பதையே திருநா அண்ணர் காந்திஜியின் சுயராஜ்ஜிய சிந்தனைகளில் இருந்து கற்றுக்கொண்டார். பிற்காலத்தில் திருநா அண்ணரின் கனவாக அமைந்த சர்வோதய கிராமோதய எழுச்சித் திட்டங்களை, தான் பிறந்த மண்ணில் எவ்வாறு செயற்படுத்தப்படலாம் என்பதையிட்டு எப்பொழுதும் சிந்தித்தபடியே இருந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக் கட்சியின் அரசியல் செயற்பாட்டில் ஆர்வம் காட்டி வந்திருந்த காலகட்டத்திலிருந்தே அதிகமான தமிழ்க் கிராமங்களில் அவர் ஊடாடித்திரிய நேரிட்டது. அக்கிராமங்களில் தான் கண்டறிந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, குடியேற்றத் திட்டங்கள் அமைத்தல், சிரமதானப் பணிகள், சுகாதாரப் பணிகள், விவசாயப்பணி, கல்விப்பணி, நீர்சேமிப்புத் திட்டங்கள், குடிநீர் விநியோகத் திட்டம், முதியோர் கௌரவிப்பு, சனசமூக நிலையங்களை அமைத்தல்-ஆதரித்தல், அதன்வழியாக கிராமங்களில் தலைமைத்துவச் செயற்பாடுகளை வளர்த்தெடுத்தல், கலை, கலாச்சார ஆன்மீக நிகழ்வுகளை கிராமங்களில் ஒழுங்கு செய்து கிராமியக் கலைகளை பேணி, அவற்றை செழிப்புற வளர்த்தல் என்று தனது கிராமத்தை முன்னிறுத்திய வேலைத் திட்டங்களிலும் ஆங்காங்கே திருநா அண்ணர் ஈடுபட்டு வரத் தொடங்கியிருந்தார். தன் வாழ்வின் இறுதிவரை அவர் இச்செயற்பாடுகளில் ஆர்வம் காட்டிவந்ததுடன் செயற்கரிய பல சாதனைகளையும் செய்து காட்டியிருந்தார். இவை பற்றி இந்த அத்தியாயத்திலும் பின்னரும் காண்போம்.

திருநா அண்ணரது கிராமம் சார்ந்த வேலைத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்தும் அதிகாரம் அடுத்தவர் கைகளில் தங்கியிருந்ததை ஆரம்பத்திலேயே அவர் உணர்ந்துகொண்டார். சமூக நன்மைக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய அந்த அதிகாரத்தை வெறும் கட்சி அரசியலினதும், தனிநபர் வளர்ச்சியினதும் நன்மைக்காக செயற்படுத்தப்படுவதைக் கண்டு மனம் வருந்தினார். அரசியல் அதிகாரத்தை ஜனநாயக முறையில் தன் கையில் கொண்டுவந்து அதன்மூலம் சமூக நன்மையை மாத்திரம் முன்னெடுக்கமுடியாதா என்ற கேள்விக்கான பதிலைத் தானே முயன்று பார்த்துவிடத் துணிந்தார். அதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது 1964ஆம் ஆண்டு புங்குடுதீவு கிராமசபைத் தேர்தல்.

புங்குடுதீவு கிராம சபையின் ஒரு வட்டாரத்தின் பிரதிநிதித்துவத்தை முதலில் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டார். அதற்கான நம்பிக்கையை புங்குடுதீவு இளைஞர்கள் அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே பல்வேறு சிரமதானப் பணிகளில் ஒத்துழைத்திருந்ததன் மூலம் வழங்கியிருந்தார்கள். கிராமத்தின் பல்வேறு நல்ல மனிதர்களின் ஆதரவும், ஆன்மீகப் பெரியோர்களின் ஆசியும் அவருக்கு அப்போது கிடைத்திருந்தது.

புங்குடுதீவுக் கிராமம் பன்னிரு நிர்வாக வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| முதலாம் வட்டாரம் | : | கள்ளிக்காடு |
| இரண்டாம் வட்டாரம் | : | மாவடி- வைத்தியசாலை அடங்கிய பகுதி |
| மூன்றாம் வட்டாரம் | : | பெருங்காடு (குறிகாட்டுவான், நடுவுத் துருத்தி) |
| நான்காம் வட்டாரம் | : | இறுப்பிட்டி, நுணுக்கல் |
| ஐந்தாம் வட்டாரம் | : | பெரிய இறுப்பிட்டி, தனிப்பனை |
| ஆறாம் வட்டாரம் | : | கழுதைப்பிட்டி |
| ஏழாம் வட்டாரம் | : | ஊரதீவு |
| எட்டாம் வட்டாரம் | : | மடத்துவெளி |
| ஒன்பதாம் வட்டாரம் | : | வல்லன் |
| பத்தாம் வட்டாரம் | : | ஆலடி |
| பதினொராம் வட்டாரம் | : | குறிச்சிக் காடு |
| பன்னிரெண்டாம் வட்டாரம் | : | அம்பலவாணர் அரங்கடி, அம்மா கடைச் சந்தி, கண்ணகை அம்மன் கோவில் அடங்கிய பகுதி. |

இவற்றில் நான்காம் வட்டாரத்திற்கான (இறுப்பிட்டி, நுணுக்கல்) பிரதிநிதியாக அவர் போட்டியிட்டு 1964இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். திட்டமிட்டபடியே, அவர் 1964-1968 வரையான தனது பிரதிநிதித்துவ காலகட்டத்தில் பல அரும்பெரும் சேவைகளை புங்குடுதீவு மண்ணுக்குச் செய்திருந்தார். கிராமசபைக்கான புதிய கட்டிடம் அமைத்தல், நூல்நிலையம் அமைத்தல், சித்த ஆயுர்வேத வைத்தியசாலை அமைத்தல், இலவச குடிநீர் விநியோகத் திட்டத்தை செயற்படுத்துதல், பன்னிரண்டு வட்டாரங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் குடிநீர்ப்பாவனைக்காகப் பொதுக்கிணறுகளை அமைத்தல், வீட்டுக்கொரு மலசலகூடத்தை அமைத்தல், பொது வீதிகளை அகலித்தல், போன்ற பல வேலைத் திட்டங்களில் அவரது பங்களிப்பு இருந்துள்ளது. கிராமமட்டத்தில் அரசியல் அதிகாரத்தைக்கொண்டு தன் மக்களுக்கு என்னவெல்லாம் பெற்றுக்கொடுக்கலாம் என்று அவர் திட்டமிட்டிருந்தாரோ அவற்றை பெரும்பாலும் அவரால் தொடக்கிவைக்க முடிந்தது. புங்குடுதீவு மக்களுக்கு அந்த நான்காண்டுகள் சமூக பொருளாதார வளர்ச்சியின் முக்கியமான காலகட்டமாக அமைந்திருந்தன.

போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சுடன் தொடர்புகொண்டு வீதிகளை அகலித்துத் திருத்தம் செய்தும், காந்தி வீதி, தொழிலாளர்புர வீதி, மாக்கொண்டை வீதி, சிவலப்பிட்டி வீதி, கொம்பாபிட்டி வீதி, சங்குமாலடி வீதி போன்ற பல வீதிகளை அமைத்தும், புனரமைத்தும் மக்கள் பயணத்தை இலகுவாக்கினார். 1570 அடி நீளமான மணியகாரன் வீதியைப் புதிதாகத் திறந்து கொடுத்தும் மக்கள் இலகுவாகப் பிரயாணம் செய்ய உதவி செய்தவர் திருநா அண்ணர். வீதிகள் அமைக்கும்போது மக்களின் சிறு பிரிவினரிடமிருந்து வந்த எதிர்ப்புகளையெல்லாம் கண்டும் நிலை தடுமாறாது தான் எடுத்த கருமத்தை முடித்துவைத்த கர்மவீரன் அவர்.

“கொழும்பிலிருந்து எம் கிராமத்திற்கு அன்றொரு நாள் காரில் வந்திருந்த என் நண்பர் திகைப்புடன் என்னிடம் கேட்டார். வேலியின் ஒரேயொரு கதியால் தடியை தள்ளி நட்டுவிட்ட பிரச்சினைக்காக பெரிய கோட்டில் இருபது வருஷங்கள் வழக்காடிற எங்கட ஆக்களின்ற வேலியெல்லாம் வெட்டி எப்பிடி இந்த மாதிரி றோட்டு வந்தது. ஒவ்வொரு ஒழுங்கையும் பட்டினத்துப் பெரிய றோட்டு மாதிரிக் கிடக்குது என்றார். எல்லாம் தொண்டர் திருவின் பணியே என்றேன். எப்பிடிச் சனம் விட்டுக் கொடுக்குது என்றார். எல்லாம் சாம, பேத, தான தண்ட உபாயங்களைப் பயன்படுத்தித் தான் திரு சாதித்தார் என்றேன்.” (வி.ரி. இளங்கோவன், மண் மறவா மனிதர்கள், 2011).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கிராமசபைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதே ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கையின் பாரிய இயற்கை அனர்த்தமொன்றுக்கு தீவகமும், குறிப்பாக புங்குடுதீவும் இலக்காகியிருந்தது.

1964இல் வீசிய சூறாவளியானது, இந்தியாவின் தென் பகுதியில் உள்ள தனுஷ்கோடியையும், இலங்கையின் வடக்குப் பகுதியையும் டிசம்பர் 22 முதல் டிசம்பர் 25 வரை பாரிய அளவில் தாக்கியழித்தது. இதன் காரணமாக தமிழகத்திலும் இலங்கையிலும் 1800 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். பாம்பன் பாலம் உள்ளிட்ட இராமேசுவரம் தீவின் கிழக்கு முனையில் அமைந்திருந்த தனுஷ்கோடி நகரம் முழுவதும் புயலால் அழிந்து போனது. பாம்பன் பாலத்தில் அப்போது பயணித்துக்கொண்டிருந்த புகையிரதம் பிரயாணிகளுடன் அள்ளுண்டு போனது. பின்னாளில் தமிழக அரசு இப்பிரதேசத்தை வாழத் தகுதியற்ற இடம் என்று பிரகடனப்படுத்தியதிலிருந்து சூறாவளியின் பாதிப்பின் கொடூரத்தைப் புரிந்துகொள்ளலாம். புயலின் அழிவின் வடுக்களை இன்றும் அங்கு நாம் காணக் கூடியதாக உள்ளது.

தனுஷ்கோடிப் புயல் 1964 டிசம்பர் 22 இல் இலங்கையின் வடக்குப் பகுதியையும் தாக்கியது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏறத்தாழ 5000 வீடுகளும் 700 மீன்பிடி வள்ளங்களும் அழிந்தன. பல நெல் வயல்கள் பாதிப்புக்குள்ளாயின. மன்னாரிலும் புயலால் பெரும் சேதம் ஏற்பட்டது. இப்புயலின் காரணமாக திருக்கோணமலைத் துறைமுகமும் சேதமடைந்தது. தனுஷ்கோடிப் புயலின் பாதிப்பு புங்குடுதீவிலும் உணரப்பட்டது. பாரிய மரங்கள் வீதிகளுக்குக் குறுக்காகக் குடை சாய்ந்து புங்குடுதீவினுள் உள்ளகப் போக்குவரத்தே முற்றாகத் தடைப்படுத்தப்பட்டது. மக்கள் ஊரைவிட்டு வெளியேற முடியாதபடியும் நிவாரணங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவுக்கு அனுப்பிவைக்க இயலாத வாறும் பாதைகள் சீர்கெட்டிருந்தன. கடல்நீர்ப் பெருக்கின் காரண மாக கிணறுகளில் உப்புநீர் கலந்து மக்களின் அன்றாட நீர் விநியோகம் தடைப்பட்டது. புயலால் குடிசைகளின் கூரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதமுற்றன. கால்நடைகள் ஆங்காங்கே இறந்து கிராமமெங்கும் சுகாதாரச் சீர்கேடடைந்து துர்நாற்றம் வீசத் தொடங்கியது.

1964இல் தனுஷ்கோடியை சூறாவளி தாக்கிய சம்பவமானது திருநா அண்ணரின் சமூக வாழ்வின் ஒரு திருப்புமுனையாக அமைந்திருந்தது. அவரது மண்பற்றையும், சமூகப்பற்றையும் பரிசோதனைக்குள்ளாக்கும் ஒரு களம் அவருக்காக இயற்கை அன்னையால் புங்குடுதீவில் அன்று திறந்துவிடப்பட்டிருந்தது.

புயலின் பின்னர் நிவாரண உதவிகளை எதிர்பார்த்து அரச திணைககளங்களை நம்பி மக்கள் காத்திருந்து ஏமாறத் தொடங் கினர். போக்குவரத்து சீரடையாமல் நிவாரண உதவிகள் உடனடி யாக புங்குடுதீவுக்குள் நுழைய முடியாத நிலை காணப்பட்டது. புங்குடுதீவில் பொருளாதார வசதியற்றிருந்த பல ஏழை மக்கள் அநாதரவாக விடப்பட்டனர். திருநா அண்ணர் தன் அரசியல் செல்வாக்கையும், கிராமசபை உறுப்புரிமையையும் பிரயோகித்து அவசர உதவிகளை புங்குடுதீவுக்குப் பெற்றுத்தர முயன்றார். அனைத்தும் ஆமை வேகத்தில் தான் நகர்ந்தன. இறுதியில் தன் கையே தனக்குதவி என்ற நிலைமையில் சிரமதானமே அவருக்கு இருந்த ஒரே வழியாகியது.

வெளியாரின் வருகைக்காகக் காத்திருக்காமல், புங்குடுதீவு இளைஞர் கழக தொண்டர்களுடன் பாதிக்கப்பட்ட பாதைகளை மீட்க அவர் அரைக்காற் சட்டையுடன், கையில் கோடரியுடன் மழை வெள்ளத்தைப் பொருட்படுத்தாமல் அதிகாலை 5 மணிக்கே, சிரமதானப்பணி செய்யக் கிளம்பிவிட்டார். பாதைகளின் குறுக்காக வீழ்ந்துகிடந்த பெரு மரங்களை வெட்டிச் சாய்த்தார். குடிதண்ணீர் வளங்களைச் சென்றடைந்து, தன் மக்களுக்கு நன்நீர் எடுத்துவந்து வழங்கினார். பட்டினியால் காத்திருந்த மக்களுக்கு மரவள்ளிக் கிழங்குக் கஞ்சி தயாரித்து அவர்களின் பசியாற்றினார். ஒருவர் பின் ஒருவராக மக்கள் திருநா அண்ணரின் பின்னால் அணியெனத் திரண்டு சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர்.

அரசு தன் தீவகக் குடிமக்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கும் முன்னரே புங்குடுதீவில் திருநா அண்ணராலும் அவரது நண்பர்களாலும் ஓரளவு பாதுகாப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. ஒரு கட்டத்தில் தனது தாயாரின் தங்கச் சங்கிலி ஒன்றை அடைவுவைத்து, அந்தப் பணத்தில் பிராந்தியத் தலைநகர் சென்று அங்கு மரவள்ளிக் கிழங்கு கொள்வனவு செய்து வந்து புங்குடுதீவுச் சனங்களின் பசியை ஆற்றினார்.

அருந்த நீரும், உண்ண உணவுமின்றி ஆங்காங்கே மரணித்து அனாதரவாக விழுந்துகிடந்த கால்நடைகளை எரித்தும் புதைத்தும் அப்புறப்படுத்தி, சுகாதார சீர்கேட்டைப் போக்கி கிராமத்தைப் புனிதப்படுத்தினார். தனித்தியங்கி அவர் தொடங்கிய சிரமதானச் சமூகத் தொண்டைக் கண்ட இளைஞர்களும், ஊரவர்களும் படிப்படியாக அவருடன் இணைந்துகொண்டார்கள். சிரமதானம் என்றால் என்ன என்பதை புங்குடுதீவு இளைஞர்களுக்கு வெற்றுப் போதனைகளாகவன்றி, தன் செயற்பாடுகளால் அவர் புரிய வைத்தார். அன்று வேகம்கொண்ட திருநா அண்ணரின் தீவிர சமூகத்தொண்டு பன்னெடுங்காலம் தீவகத்தில் தொடர்ந்தது.

புங்குடுதீவைப் புயல்தின்ற பொழுதுகளில் நடந்தவற்றை கண்ணால் கண்ட சாட்சியாக இருந்த சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள் (புங்குடுதீவு சிவன்கோவில் தர்மகர்த்தா) பின்வருமாறு அதனைப் பதிவுசெய்கிறார்.

“1964ஆம் ஆண்டு வீசிய புயற்காற்று, பெருமழை முதலியவற்றால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் வீதிகளில் மரங்கள் முறிந்து பாதையைத் தடைசெய்திருந்தன. அதிகாலை 5 மணிக்கு சோட்ஸ்சோடும் பெனியனோடும் வீதிகளில் இறங்கி அங்கிருந்த



கவனிப்பாரற்று துர்நாற்றம் வீசி சூழலை மாசாக்கிய கால்நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களையும் தடிகளையும் தறித்துப் பாதையைத் தனியே நின்று சீர்செய்ததை யாரால் மறக்க முடியும்? அதுமட்டுமல்ல, இதே வேளையில் குழந்தைகள், பெரியோர்கள், வயோதிபர்கள் எல்லோரும் வெள்ளத்தினால் அகதிகளாக்கப்பட்டனர். அவர்களைப் பாடசாலைகளில் குடியேற்றி அவர்களுக்கான உணவுகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்குச் சென்று எடுத்து வந்து அவர்களுக்கு உணவளித்து உவகை கொண்டவர். நாட்டில் நன்னீர் வேண்டும் என்பதற்காக வெள்ளம் ஓடும் வாய்க்கால்களை அணைகட்டி வெள்ளத்தைத் தேங்கவைத்து நன்னீராக்கப் பெரும் பாடுபட்டவர்.

"குளங்களைச் சீர்செய்தும் துப்புரவு செய்தும் மாடுகளையும் வாழச் செய்தவர். அப்போது மாமரங்கள் நோயினால் பாதிப்புற்றிருந்தபோது எல்லா மாமரங்களுக்கும் மருந்தடித்து மரங்களைக் காப்பாற்றியவர். அதே போல் தென்னை மரங்களுக்கும் நோய் ஏற்பட்டது. அதற்கும் மருந்துகளைத் தென்னை அபிவிருத்திச் சபையிலிருந்து எடுத்துவந்து தென்னைகளைக் காப்பாற்றிய பெருமையும் அவரையே சாரும். மாடுகள் மேய்வதற்குப் புல் இல்லை. இவ்வேளையில் பனையோலைகளை வெட்டி அந்த மாடுகளுக்கு உணவாகக் கொடுத்து அவைகள் சாப்பிடுகின்ற போது அதைப் பார்த்து ரசித்து இன்புறுவதை என் கண்ணாலேயே கண்டிருக்கிறேன்" (சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள், திரு மலர், 2001).

"அண்ணர் திரு அவர்கள் கூட்டுறவே நாட்டுறவு என்ற குறிக் கோளிலும் வாழ்ந்தவர். அதற்கு எடுத்துக்காட்டாகப் புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் கடமை ஆற்றினார். அக்காலத்தில் கூட்டுறவை தீவகத்தில் சிறந்த முறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் திறமையாக நிர்வாகத்தை நடாத்திய வேளையில், ஒரு தடவை ஊழியர்களுடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டபோது, ஊழியர்கள் லொறியிலிருந்து பொருட்களை இறக்க மறுத்த அந்த வேளையில் தான் சங்கத் தலைவர் என்ற நிலையையும் மறந்து தானே முன்வந்து அந்த லொறியிலுள்ள அனைத்துப் பொருட்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்து சென்று களஞ்சிய அறையில் களஞ்சியப்படுத்தியதன் மூலம், சம்பந்தப்பட்ட ஊழியர்களைத் தம் தவறினை உணர்ந்து தலைகுனியச் செய்த ஒருவர் என்பதை யாரும் மறக்கமுடியாது." (S.K.சண்முகலிங்கம், அதிபர், புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம், திரு மலர் 2001).

திருநா அண்ணர் கிராமசபையில் நான்காண்டுகள் பணியாற்றிய பின்னர் பதவிக்காலம் முடிவடைந்து கிராமசபையிலிருந்து வெளியேறியபோது, தனது நான்காண்டு சேவைக்காலப் பணியினை ஒரு அறிக்கை உருவில் அச்சிட்டு தன்னில் நம்பிக்கை வைத்து வாக்களித்து, தமது பிரதிநிதியாகத் தன்னைச் சமூகத் தொண்டாற்ற அனுப்பிவைத்த புங்குடுதீவு மக்களுக்கு விநியோகித்தார். அவ்வறிக்கையின் மூலம் தான் செய்து முடித்த கிராமப் பணிகளை, பூர்த்திசெய்யப்பட வேண்டிய குறையிலுள்ள பணிகளை, அப்பணிகளுக்காகச் செலவிட்ட நிதி விபரங்களை பகிரங்கப்படுத்தி அனைத்தையும் தெளிவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் அச்சிட்டு வழங்கியிருந்தார். அவரது அறிக்கையை இங்கு மீள்பதிவு செய்வதன் மூலம் 29 வயதேயான ஒரு இளம் சமூகத்தொண்டன் அக்காலத்தில் ஆற்றிய பெரும்பணியினை வாசகர் இனம்கண்டுகொள்வது இலகுவாக இருக்கும்.

**புங்குடுதீவு கிராமசபையில் நான்கு ஆண்டுகள் 1964-1968**

பெருமதிப்புக்குரிய நாலாம் வட்டார வாக்காளப் பெருமக்களே! பொது மக்களே!

கடந்த நான்கு ஆண்டுகளாகக் கிராமசபையில் உங்கள் பிரதிநிதியாகக் கடமையாற்ற நீங்கள் பணித்த நாட் தொடக்கம் கிராம சபைக்கு உள்ளேயும் வெளியேயும் எமது வட்டாரத்திற்கும் நாட்டிற்கும் எவ்வகையில் செயலாற்றியுள்ளேன் என்பதையும் தலைவரும் நாங்களும் கிராமத்துக்கு எவ்வகையில் பணியாற்றியுள்ளோம் என்பதையும் தெளிவாகத் தங்களுக்கும் நாட்டுக்கும் சமர்ப்பிக்க வேண்டியது பதவிக் காலம் முடிவடைந்து செல்லும் எனது கடமை என்பதை நன்குணர்ந்து, இந்த சுற்றுநிருபத்தைத் தங்கள் கரங்களில் ஒப்படைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சுற்று நிருபத்தில் எமது கிராமசபையின் கடந்தகால நிதி நிலைமை, நாங்கள் பதவி ஏற்றபின் உருவாக்கப்பட்டுள்ள பண வரவு, அரசாங்க நன்கொடைகள், அவைகள் செலவுசெய்யப்பட்ட விபரங்கள் கடந்த தேர்தலில் எமது வட்டாரத்தில் நான் கூறிய வேலைத்திட்டப்படி நிறைவேற்றப்பட்டுள்ள வேலைகள், சோலை வரியால் எதிர்காலத்தில் சபையின் நிதி நிலைமை ஆகியவைகளைப் பற்றித் தெளிவாகப் புள்ளி விபரங்களுடன் விளக்கியுள்ளேன். இவற்றையெல்லாம் நன்கு பரிசீலனை செய்து எதிர்காலத்தில் கிராமசபை நல்லமுறையில் இயங்கப் பொதுமக்கள் அனைவரும் ஊக்கமெடுக்க வேண்டுமெனக் கரம்கூப்பி வேண்டுகின்றேன். இல்லாவிட்டால் கிராமசபைக்கு நீங்கள் செலுத்தும் வரிப்பணம் ஒருவித பலனுமற்று பாழாக்கப்பட்டுவிடும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**4-ம் வட்டாரத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்**

**தெருக்கள்**

1.கோரக்குண்டு வீதி

இவ்வீதியைப் பரிபூரணமாகத் திறந்து செப்பனிட முடியவில்லை யாயினும் போக்குவரத்திற்கு மிகக் கஷ்டமான பகுதி திருத்தி யமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சிறிது முயற்சித்தால் இவ்வீதியைப் பூரணமாக அமைத்து முடிக்கலாம்.

2. காளி கோவில் வீதி

முடிவெல்லை மட்டும் இவ்வீதியை அமைத்து முடிக்க முடிய வில்லையாயினும் அரைவாசி வேலைவரை பூர்த்தியாக்கப் பட்டுள்ளது. தொடர்ந்தால் இவ்வேலையை பூர்த்தியாக்கலாம்.

3. பாடசாலை வீதி

சிறிய ஒழுங்கையான இவ்வீதி 200 அடி வரை செப்பனிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அடைக்காத்த குளம் வீதி

எமது வட்டாரத்திலேயே மிக மோசமாக இருந்த இவ்வீதியைக் கடின உழைப்பு மூலம் திருத்தியமைத்துள்ளோம். இவ்வேலையைப் பூர்த்தியாக்கக் காரணமாக இருந்தவர்கள் இவ்வீதியில் வசிக்கும் இளைஞர்களும் பெரியோர்களும் சகோதரிகளும் மாணவர்களுமே. இவர்களின் தொண்டுக்கு சிரம் தாழ்த்தி வணக்கம் கூறுகின்றோம்.

5. நுணுக்கல் வீதி

நுணுக்கல் குடியேற்றத் திட்டம் தொடக்கப்பட்ட காலம் தொடக்கம் இப்பகுதி மக்கள் போக்குவரத்திற்குப் பட்ட துன்பமெல்லாம் இவ்வீதி அமைத்ததன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. இவ்வீதி கழுதைப்பிட்டி பிரதான வீதியில் இருந்து தொடங்கி குறிகாட்டு வான் வீதியைத் தொடுகின்றது. 4000 அடி நீளமான இவ்வீதியை அமைக்க ரூபா 36,000 அரசினரால் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாபெரும் பணியை நிறைவேற்ற எமது பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு வ.நவரத்தினம் அவர்கள் எடுத்த பெரு முயற்சிக்கு எமது நாடே நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. மிகுந்த முயற்சியின் பலனாக எமது வட்டாரத்திற்கு இப்பெருந் தொகையான பணத்தைக் காணி அமைச்சு வழங்கியுள்ளது. இம்முயற்சியில் எமக்கு உதவிய எமது முன்னாள் கிராம சேவை யாளர் வெ.பொன்னம்பலம் அவர்களுக்கும் யாழ். அரசாங்க செயலகத்தார்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

**குளங்கள்**

1. கண்டியன் குளம்

எமது வட்டாரத்தின் நன்னீரூற்றுக் குளங்களில் இக்குளமும் ஒன்றாகும். பல வருடங்களாக சுத்திகரிக்கப்படாமையால் கோடையில் வரண்டுவிடும் நிலையில் இருந்துவந்தது. இதனால் எமது கால்நடைகள் குடி தண்ணீருக்குப் பட்ட துன்பம் எழுத்திலோ பேச்சிலோ சொல்லமுடியாததாகும். இக்குளம் செப்பனிடப் பட்டதால் இப்பொழுது கோடைக்கும் வற்றாமல் கால்நடைகளுக்குத் தண்ணீர் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மக்கிக் குண்டுக் குளம்

குப்பைகளாலும் மண்ணாலும் மூடப்பட்டிருந்த இச்சிறு குளம் திருத்தி அமைக்கப்பட்டதினால் கால் நடைகளுக்குத் தண்ணீர் வழங்குகின்றது.

3. அடைக்காத்த குளம்

இக்குளத்தைப் பதித்து அணை கட்ட வேண்டுமென பல ஆண்டுகளாகப் புங்குடுதீவு மேற்கு பயிர்ச்செய்கைக் குழுவினரை வற்புறுத்தி வந்தோம். இதன் பலனாக சென்ற ஆண்டு அரசினரால் 3225 ரூபாய் இக்குளத்தைச் செப்பனிட ஒதுக்கப்பட்டது. இக்குளம் சிறந்த முறையில் பதிக்கப்பட்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. அணைகளுக்கு புற்கத்தை அடுக்கும் வேலையும் கிழக்குப் பக்க அணை வேலையும் இவ்வாண்டு பூர்த்தியாகும். இக்குளத்தினால் பொதுமக்களும் காலநடைகளும் மிகுந்த பலன்பெற்று வருகின்றனர். இவ்வேலை பூர்த்தியாக எமக்குதவிய புங்குடுதீவு மேற்கு பயிர்ச் செய்கை குழுவின் முன்னாள் செயலாளராகக் கடமையாற்றிய திரு.வே.க.சோமசுந்தரம் அவர்களுக்கும், தற்போதைய செயலாளர் திரு. மா.குமாரசாமி அவர்களுக்கும் செயற்குழுவுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கக் கடப்பாடுடையோம்.

4. பாதாளமுடைப்பு மறிப்பு

மழைநீர் முழுவதும் இவ்வோடையால் கடலுக்கு வடிவதால் இவற்றைத் தடுத்து மறிப்பு அமைக்கப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற எமக்குதவிய புங்குடுதீவு மேற்கு பயிர்ச்செய்கை குழுவினருக்கு எமது நன்றியைக் கூறுகின்றோம்.

5. சலவைத் தொழிலாளர் குளம்

இக்குளம் சேறுகள் நிறைந்து தண்ணீர் குறுகியதால் தொழிலாளர் தொழில்வளம் குன்றி அல்லல்பட்டனர். இக்குறையைப் போக்க இக்குளம் சிரமதான இயக்கத்தால் செப்பனிடப்பட்டது. இச்சிரம தானப் பணிக்கு எம்மோடு ஒத்துழைத்த சலவைத் தொழிலாளர் களுக்கும் தொண்டர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் குளத்தடியில் தொழிலாளர்கள் இளைப்பாறுவதற்காகக் கிராமசபை மூலம் ஒரு சிறு மடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கூரைவேலை இவ்வாண்டு பூர்த்தியாகும்.

6. அடைகாத்த குளத்தில் பொதுக்கிணறு

எமது நீராடல் வசதிக்காக இக்குளத்தில் கிராமசபை மூலம் 1700 ரூபாய் செலவில் நவீன வசதியுடன் ஒரு கிணறு நிறுவப்பட இருக்கின்றது. இப்பணிக்கு எமக்குதவிய எமது தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்கட்கும் எமது வணக்கங்கள்.

**கட்டிடங்கள்**

1. நெசவு நிலையம்

1964ஆம் ஆண்டு புயலால் பாதிக்கப்பட்ட இக்கட்டிடத்தை எமது கிராம முன்னேற்றச் சங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுத்ததின் பயனாக, திருத்தி அமைக்க 1500 ரூபாய் அரசினரால் ஒதுக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது. இப்பணிக்கு எமக்கு உதவிய கிராம முன்னேற்ற உத்தியோகத்தர் திரு. அ.வி.இராசகுலசிங்கம் அவர்களுக்கு எமது நன்றியைச் செலுத்துகின்றோம்.

2. பாடசாலை

எமது சேர். துரைசாமி வித்தியாசாலையில் 200இற்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள். இவர்களுக்குப் போதிய கட்டிட வசதி இல்லாத குறை நீண்டகாலமாக இருந்துவந்தது. இக்குறை யைப் போக்க கல்விப் பகுதியினரால் 16,000 ரூபாய் செலவில் புதிய கட்டிடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இப்பணிக்கு எமக்குதவிய எமது பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு வ.நவரத்தினம் அவர்களுக்கு நாம் அனைவரும் நன்றி செலுத்துகின்றோம். எமக்கு இப்பணிக்கு ஊக்கம் தந்த காலம்சென்ற ஆசிரியர் திரு.சு.செல்வரத்தினம் அவர்களுக்கும் கட்டிடத்தைச் சிறந்த முறையில் அமைத்து முடித்த பாடசாலையின் ஏனைய ஆசிரியர் களுக்கும் மாணவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரமதானத்தில் 6115 மனித சக்தி உபயோகம்**

நாங்கள் ஆற்றிய பணிகளுக்கெல்லாம் எமக்குக் கைகொடுத்து உதவியது சிரமதான இயக்கமே. இந்த இயக்கம் ஆரம்பித்து முடியும்வரை 6115 மனித சக்திகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வளவு தொகையான மனித சக்தியை உபயோகித்த பெருமை எமது வட்டாரத்தையே சாரும். கோரக்குண்டு வீதி, காளிகோயில் வீதி, பாடசாலை வீதி, அடைகாத்த குள வீதி, கண்டியன் குளம், மக்கிக் குண்டுக் குளம், சலவைத் தொழிலாளர் குளம் ஆகிய வேலைத் திட்டங்கள் எல்லாம் சிரமதான இயக்க மூலமே நிறைவேற்றப்பட்டன. இந்தப் பெரும் பணிக்கு எமக்குதவிய தீவுப்பகுதி முன்னாள் காரியாதிகாரி உயர்திரு பி.எல்.பற்றிக் அவர்களுக்கும் தற்போதைய காரியாதிகாரி உயர்திரு எஸ்.விநாயகலிங்கம் அவர்களுக்கும் கிராம முன்னேற்ற அதிகாரி திரு. அ.வி.இராசகுலசிங்கம் அவர்களுக்கும் அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரா அவர்கட்கும் எமது முன்னாள் கிராமசேவையாளர் திரு.வே.பொன்னம்பலம் அவர்களுக்கும் தற்போதைய கிராமசேவையாளர் திரு.வ.நடராசா அவர்களுக்கும் இந்தப் பணிகளுக்கு ஆறு மாதங்களாக எம்மோடு இரவும் பகலும் அயராது வெயிலிலும் மழையிலும் பாடுபட்ட தொண்டர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

**வைத்தியசாலைக் கிளை திறப்பு**

பல வருடங்களாக எமது வட்டாரத்தில் இயங்கி மூடப்பட்ட கிராமசபையின் ஆயுள்வேத வைத்தியசாலைக் கிளை நீண்ட போராட்டத்தின்பின் மீண்டும் எமது வட்டாரத்தில் திறக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலை சிறந்தோங்கப் பொதுமக்கள் நன்கு பயன்படுத்துமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

எமது வைத்தியசாலைக்கு அரசினர் வழங்கிவந்த மானியம் படிப்படியாகக் கூடி 1966ஆம் ஆண்டு 4045.00 ரூபாவாகவும் 1967ஆம் ஆண்டு 4645.00 ரூபாவாகவும் உயர்ந்து இவ்வாண்டு 6000 ரூபாவாகக் கூடியுள்ளது. பொதுமக்கள் இவ்வைத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையைப் பெரும்பகுதி பயன்படுத்தினால் எமது சபைக்கு 15000 ரூபா வரை வைத்திய உதவி மானியமாகக் கிடைக்க வழிபிறக்கும். எனவே நோயாளர்கள் இவ்விலவச வைத்திய உதவியை நன்கு பயன்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

**நான்கு ஆண்டுகளில் எமது வட்டாரத்தில் செலவிடப்பட்ட நிதி**

| | |
|---|---|
| 1. நுணுக்கல் வீதி | 36000.00 |
| 2. சேர். துரைசாமி வித்தியாசாலைக் கட்டிடம் | 16000.00 |
| 3. நெசவு நிலையக் கட்டிடம் | 1500.00 |
| 4. அடைகாத்த குளம் | 3225.00 |
| 5. கிராமசபை மூலம் உத்தேச வரவு | 4500.00 |
| 6. சிரமதானப் பணியின் உத்தேச மதிப்பீடு | 10000.00 |
| 7. பாதாளமுடைப்பு மறிப்பு | 1500.00 |
| 8. அடைக்காத்த குளம் பொதுக்கிணறு | 1700.00 |
| மொத்தம் | 74425.00 |

**எமது வட்டாரத்தின் சிரமதானப்பணிக்கு அரசினரின் உணவு அன்பளிப்பு**

| | |
|---|---|
| மாமூடை | 79 |
| மீன் அடைப்பிகள் | 336 |
| பால்மா | 40 றாத்தல் |

**எமது காலத்தில் கிராமசபையின் நிதி நிலைமை**

| | |
|---|---|
| 1964-ம் ஆண்டு கிராம வரி, அரசாங்க நன்கொடை, கழுதைப்பிட்டி, நயினாதீவு ஆயம் உட்பட கிராமசபையின் மொத்த வருமானம் | 13,741.43 |
| கழுதைப்பிட்டி, நயினாதீவு ஆயத்தால் வரவு | 5,643.68 |
| 1965-ம் ஆண்டு ஆயம் நீக்கி மொத்த வருமானம் | 12,366.73 |
| 1966-ம் ஆண்டு மொத்த வருமானம் | 21,009.04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967-ம் ஆண்டு மொத்த வருமானம் 28,117.78

1968-ம் ஆண்டு எதிர்பார்க்கும் உத்தேச

மொத்த வருமானம் 36,265.33

ஆண்டுகள் தோறும் சபையின் முயற்சியாலும், சோலை வரித்திட்டத்தினாலும் சபையின் வருமானம் கூடிவந்திருப்பதை மேற்காட்டியுள்ள புள்ளிவிபரம் எடுத்துக்காட்டுகின்றது. எதிர் காலத்தில் எமது கிராமத்திற்கு சேவை செய்யக் கிராமசபை போதிய நிதிப்பலம் பெற்றுள்ளது என்பதைத் தங்கள் கவனத்திற்குத் தருகின்றோம்.

**எமது காலத்தில் அரசினரின் விசேட நன்கொடைகளும் அவை செலவிடப்பட்ட இடங்களும்:**

1965-66ஆம்ஆண்டு நன்கொடைகள்.
5-ம் வட்டாரத்தில் பிள்ளையார்கோவில் வீதிக்குச் செலவிடப்பட்டது.
மொத்தத் தொகை: ரூபா 17,876.00

1967-ம் ஆண்டு நன்கொடை.
புங்குடுதீவு கிழக்கு பண்டத்தனை வீதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
மொத்தத் தொகை: ரூபா 8,500.00

1964-ம் ஆண்டு சூறாவளி நன்கொடை.
அவரங்கால் சங்குமாவடி வீதிக்கு செலவிடப்பட்டது.
மொத்தத் தொகை: ரூபா 5,000.00

விசேட சூறாவளி நன்கொடை.
கழுதைப்பிட்டிப் பாலத்திற்கு செலவிடப்பட்டது.
மொத்தத் தொகை: ரூபா 6,000.00

புதிய கிராமசபைக் கட்டிடம் அமைப்பதற்கு செலவிடப்பட்ட தொகை. ரூபா 11,500.00

11-ம் வட்டார தல்லமிக்குளம் கிணற்றுக்கு நன்கொடை.
ரூபா 1,491.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6-ம் வட்டாரத்தின் கிணற்றுக்கு நன்கொடை
ரூபா 1,355.00

1-ம் வட்டார சிறிய கொண்டல் கிணற்றுக்கு நன்கொடை
ரூபா 1,695.00

4-ம் வட்டார அடைக்காத்த குளக் கிணற்றுக்கு நன்கொடை
ரூபா 1,700.00

**எமது காலத்தில் கிராமசபையில் உத்தியோக நியமனங்கள்**

1. கிராமசபையின் வைத்தியசாலை விஸ்தரிக்கப்பட்டு மேற்கிலும் கிழக்கிலும் இரண்டு கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. வைத்தியருக்கு உதவியாளராக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
2. மக்கள் அறிவு வளர்ச்சியை பெருக்குவதற்காக பொதுமக்கள் நூலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பாளராக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
3. கிராமத்தின் நன்மை கருதி கொண்டுவரப்பட்ட சோலைவரியை அறவிடுவதற்கு ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். எமது காலத்தில் கிராமசபை வளர்ச்சி அடைந்ததன் பலனாக இம்மூன்று நியமனங்களும் வழங்கப்பட்டன. எதிர்காலத்திலும் சிறந்த முறையில் கிராமசபை இயங்கினால் இன்னும் பலருக்கு உத்தியோக வாய்ப்புகள் அளிக்கலாம்.

**அரசினர் நியமனம்**

எமது கிராம எல்லைக்குள் வரி வசூல் ஒழுங்காக நடைபெறவும் அவற்றைச் சிறந்த முறையில் அமுலாக்கவும் வரி வசூல் அதிகாரி ஒருவரை அரசினர் நியமித்துள்ளார்கள். இந்நியமனத்திற்குக் கிராமசபை வளர்ச்சியே காரணமாகும்.

**பொது நூலகத்திற்கு அன்பளிப்பு**

கிராமசபையினால் திறக்கப்பட்டிருக்கும் பொது நூலகத்திற்கு எமது தலைவர் அவர்கள் 1000.00 ரூபா பெறுமதி வாய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை அன்பளிப்பதாக நூலகத் திறப்பு விழாவில் வாக்குறுதி யளித்துள்ளார்கள். விரைவில் இந்நூல்கள் எமது நூலகத்திற்குக் கிடைக்கவிருக்கின்றன. தலைவரின் இந்த மகத்தான செயலைப் போல் எமது கிராமத்தின் ஏனைய செல்வந்தர்களும் எங்கள் நூலகத்திற்கு உதவ முன்வந்தால், வெகு விரைவில் நாம் ஒரு மத்திய நூலகத்தை நிறுவி சிறந்த அறிவுத்தொண்டு வழங்கலாம். இப்பணிக்கு முன்வருமாறு எமது கிராமச் செல்வந்தர்களைக் கரம்கூப்பி அழைக்கின்றோம்.

**சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தினருக்கு எமது நன்றி**

அன்று எமது வெற்றிக்குப் பெரும் துணையாக நின்ற இந் நிலையத்தினருக்கு நாம் பலமுறை நன்றி செலுத்தக் கடப்பாடுடையோம். தமது முன்னோர்களை விட புதிய வாழ்க்கைப் பாதையில் இலட்சியப் பற்றுடன் சமூகத்திற்கும் கலைக்கும் தொண்டாற்றும் இந்த இளைஞர் கூட்டத்தை இந்த நாடே போற்றக் கடமைப்பட்டுள்ளது. இவர்களின் கூட்டுறவும் நாட்டுப்பற்றும் என்றும் வளர்க என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**எமது பாராளுமன்ற உறுப்பினரின் அரிய சேவைகள்**

எமது (பாராளுமன்றப்) பிரதிநிதி அவர்கள் எமது கிராமத்திற்கு ஆற்றிய சேவைகளில் சிறிதளவு நாமும் தொடர்புடையோம் என்ற காரணத்தால், அவரைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டுள்ளோம். தற்போது புங்குடுதீவு கிழக்கில் அமைக்கப் பட்டுவரும் பகிரங்க வீதி எமது பிரதிநிதியவர்களின் மிகப்பெரிய முயற்சியினால் உருவானதாகும். ஊரதீவிலும் ஆலடிச் சந்தியிலும் நிறுவப்பட்ட நெசவு நிலையங்கள் புங்குடுதீவு மேற்கில் திறக்கப் பட்டிருக்கும் தையல் நிலையம், கூடிய கெதியில் நிறுவப்பட இருக்கும் தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையம், கிராம மின்சாரம், எமது வட்டார வேலைகள், நெடுந்தீவு போக்குவரத்து வசதி ஆகிய பெரும் பணிகள் எல்லாம் எமது கிராமத்திற்கு நிறைவேற்றப்பட்டும், நிறைவேறவும் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மேற்படி சேவைகளுக்கு எமது நாட்டின் சார்பில் நன்றி கூறுகிறோம்.

**எங்கள் தலைவரைப் பற்றிச் சில வார்த்தைகள்**
**(திரு. கு.வி.தம்பித்துரை, ஜே.பீ.அவர்கள்)**

நான்கு ஆண்டுகள் தலைவரின்கீழ் சேவை புரியும் சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். தலைவர் தெரிவில் அவரை நாம் எதிர்த்து வாக்களித்தது நாடறிந்த விடயம். நாம் எதிர்க்கட்சிக்காரரர் என்ற பாகுபாடு இன்றி நாட்டுக்குத் தேவையான திட்டங்களையும் கருத்துக்களையும் சபையில் சமர்ப்பித்தபோதெல்லாம் அவற்றை ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவந்த பெருந்தன்மைக்கு நாம் வணக்கங் கூறுகின்றோம். எமது ஆட்சிக் காலத்தில் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ. மு.திருச்செல்வம் அவர்கள், இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்கள் உட்பட பல உத்தியோகத்தர்கள் எமது கிராமத்திற்கு விஜயம் செய்துள்ளனர். இவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளுக்கும் விருந்துகளுக்கும் கிராம நிதியிலிருந்து சிறுதொகையே செலவிடப்பட்டது. மிகுதிச் செலவுகள் முழுக்க தன் சொந்தப் பணத்திலேயே செலவு செய்தார். இதனால் கிராமநிதி பெருமளவு மிச்சமாகியது. எமது கிராமத்திற்குக் கிடைத்த சில விசேட நன்கொடைகளுக்கு அவருக்கு மேலிடத்தில் இருந்த செல்வாக்கே காரணமாகும் என்பதை யாருமே மறுக்க முடியாது.

கடந்த காலங்களில் பதவி வகித்த தலைவர்களால் திருத்தமுடியாமல் இருந்த ஊழல்கள் எல்லாம் எமது காலத்தில் திருத்தி அமைக்கப்பட்டமைக்கு அவரின் உறுதியான நடவடிக்கைகளே காரணமாகும். சமூகப்பணி, சமயப்பணி, கல்விப் பணி, விவசாயப்பணி ஆகிய சகல துறைகளிலும் முன்னணி வகித்து, மன்னார் பகுதி விவசாய மன்னன் என அரசினால் கௌரவிக்கப்பட்டு சேவைபுரியும் தலைவரை எமது நாடு பெற்றெடுத்தது பெரும் பாக்கியமே. இன்று நமது நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் செல்வந்தர்களும் கல்விமான்களும் விவசாயிகளும் பின்பற்றக்கூடிய வழிகாட்டி அவர் என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய செயல்வீரராகத் தொண்டனாகக் கலைவாணி அருளால் வாழ்ந்துவரும் இத்தலைவனின் சேவையை நாம் என்றும் பேறுவோமாக! உணவு உற்பத்தியில் பின்பற்றுவோமாக! பெருந்தன்மையில் பங்குகொள்வோமாக!

வாழ்க கலைவாணி! வளர்க அவர் தொண்டு!

பெருகுக அவர் செல்வம் ! நாம் பெறுவோம் அவர் சேவை!

**விடைபெறுமுன்**

இதுவரை எமது பணிகளைப் பற்றியும், கிராமசபை நிதி விபரங்களைப் பற்றியும் உங்கள்முன் தெளிவாக ஒப்படைத்துள்ளேன். வயதில் சிறியவனான என்னை அன்று நம்பி வாக்களித்து உங்கள் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டதற்கு நான் ஓரளவு உங்களுக்குத் தொண்டு புரிந்துள்ளேன் என்று நம்புகின்றேன். என் மனச்சாட்சிக்கு மாறில்லாமல் என் அறிவுக்கும் ஆற்றலுக்கும் உட்பட்ட அளவு இந்த நான்கு ஆண்டுகளும் இயங்கி வந்திருக்கிறேன். இப்பொழுது என்னால் ஆரம்பித்து குறையாக இருக்கும் வேலைத்திட்டங்களைப் புதிய பிரதிநிதியவர்களின் ஒத்துழைப்போடு நிறைவேற்றி வைப்பேன் என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகின்றேன். எனது காலத்தில் தெரிந்தோ தெரியாமலோ எந்தப் பொதுமகனுக்கும் நான் ஏதாவது தவறு செய்திருந்தால், நீதி செலுத்தத் தவறியிருந்தால், அவற்றை மன்னித்தருளுமாறு சிறியேனாகிய நான் வணக்கத்தோடு ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்கின்றேன். நான் பதவிக்காலம் முடிந்து சென்றாலும் என்றென்றும் உங்கள் தொண்டனாகவே இருப்பேன் என்பதை மட்டும் உங்கள் முன் உறுதியாகக் கூறுகின்றேன். உங்களுடைய அன்பும் ஆதரவும் என்றும் உண்டு என்ற நம்பிக்கையோடு இந்த நான்கு ஆண்டுகளும் என்னோடு தோளோடு தோள்நின்று நிறைவேற்றிய பணிகளுக்கு உதவியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமும் அன்பும் ஆதரவும் தந்த பெரியோர்கள், தாய்மார்கள், சகோதரிகள், வாலிப நண்பர்கள், சிறு தம்பிகள், தங்கைகள் ஆகிய அனைவருக்கும் எமது சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகின்றேன். எம்மை வாழவைத்த சிரமதானப் பணியை என்றும் செய்வோமாக! ஒற்றுமையை வளர்ப்போமாக! ஒன்றுசேர்ந்து வட்டாரத்திற்கும் நாட்டுக்கும் சேவை செய்வோமாக!

வணக்கம் .

வாழ்க தமிழ் ! வளர்க புங்குடுதீவுத் தாய் !




புங்குடுதீவு இறுப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் திறப்பு விழாவின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 5

# தொண்டர் திருவின் சமூகப்பணிகள்

தமிழரின் அரசியல், சமூக விடுதலை என்பது கிராமிய மட்டத்தில் தான் தொடங்கப்படவேண்டும் என்பதில் திருநா அண்ணர் அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். ஒவ்வொருவரும் தன் வீட்டைச் சுத்தமாக வைத்திருந்தால், அந்தக் கிராமமே சுத்தமாகும். கிராமங்கள் சுத்தமாக இருந்தால் அந்த ஊரே சுத்தமாகும் இவ்வாறே முழுநாட்டையும் சுத்தமாக்கலாம் என்பது காந்தீய சர்வோதய தத்துவங்களாகும். இதனையே திருநா அண்ணரும் தன் வேதமாகக் கடைப்பிடித்துவந்தார்.

### தந்தை செல்வாவின் அரவணைப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சா.ஜே.வே. செல்வ நாயகம் அவர்கள் தனித்துவமானவராகத் திகழ்ந்தவர். நிதம் நிதம் மக்களுக்காக ஓய்வில்லாமல் உழைத்தார். அரசியலுக்காகத் தனது வருமானத்தையெல்லாம் கரைத்தார். தன் உடல் நலத்தையும் கெடுத்தார். தமிழர் தாயக மீட்புப் பணிக்கு அனைத்தையும் அவர் அள்ளிக் கொடுத்தார். எனவேதான் ஓர் ஈழப்புலவன்,

"சத்தியமே உருவெடுத்த தத்துவ ஞானி - இவர்

தளர்ந்த உடல் ஈழத்திலே தமிழருக் கேணி" எனப் பாடி இப்பெரியவருக்கு மேலும் பெருமை சேர்த்தான்.

உழைப்பிலே கடுமை, தொண்டிலே தூய்மை, சொல்லிலே உண்மை, உடையிலே எளிமை, வாழ்விலே நேர்மை என்றால் திரு. செல்வநாயகம் என்றுதான் பொருள் என்று அன்று அவரைச் சுற்றியிருந்தோர் அவரைப் போற்றிவந்தார்கள். "ஈழத் தமிழ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலர் சா.ஜே.வே. செல்வநாயகம்" என்று அவரை வர்ணித்தவர் இந்தியாவின் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள். அகிம்சா மூர்த்தியான இவரை "ஈழத்துக் காந்தி" என்று இந்தியத் தலைவர்களும் அழைத்தார்கள்.

"ஈழத்துக் காந்தி"யாகப் போற்றப்பெற்ற தந்தை செல்வா பற்றிய படிமம், மகாத்மா காந்தியின் சர்வோதய சித்தாந்தத்தை மனதில் தேக்கிவைத்திருந்த திருநா அண்ணரை வெகுவாக ஈர்த்தெடுத்தது. காந்தத்தை நோக்கி நகரும் இரும்புத்துண்டைப் போல, தந்தை செல்வாவின் பால் ஈர்க்கப்பட்டு, அவரது அரசியலில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். இதன் படிமுறை வளர்ச்சியாக தமிழரசுக் கட்சியின் நிறைவேற்று அதிகார சபையின் "அகில இலங்கை தமிழர் வாலிப முன்னணி"யின் செயலாளர் பதவியைப் பெற்றுக்கொண்டார். தந்தை செல்வாவின் சாத்வீகப் போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட அவர் தந்தை செல்வாவுடன் நெருங்கிய தொடர்பினைத் தக்கவைத்துக்கொண்டு, அணுக்கத் தொண்டராகி, அவரது அன்புக்கும் பாத்திரமாகி அவரால் கரிசனையுடன் வளர்த்தெடுக்கப்பட்டார். இருப்பினும் திருநா அண்ணரால் முழுநேர அரசியல்வாதியாகத் தன்னை வளர்த்துக்கொள்ள அவரது மனம் இடம்தரவில்லை. அவர் விரும்பியிருந்தால் ஊர்காவற்றுறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகியிருக்கலாம். ஆனால் இன்றுபோல நாடுபோற்றும் சமூகத் தொண்டனாக அவரால் வந்திருக்க முடியுமா என்பது கேள்விக்குரியது.

## திரு.வே.க.சோமசுந்தரம் அவர்களின் வழிகாட்டல்

திருநா அண்ணரின் அரசியல் சமூகச் செயற்பாடுகளுக்கு, அவர் வாழ்ந்த புங்குடுதீவு, வேலணை மண்ணில் சமகாலத்தில் வாழ்ந்த பல பெரியார்களின் அறிமுகமும் முக்கிய காரணமாகும். அவர்கள் பற்றி ஆங்காங்கே இந்நூலில் பிற அத்தியாயங்களில் குறிப்பிட்டும் வந்துள்ளேன். இப்பெரியார்களுள் திரு.வே.க.சோமசுந்தரமும் ஒருவராவார். இலங்கைத் தமிழரசுக்கட்சியில் திருநா அண்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஈடுபடுவதற்கும் அவரே பிரதான காரணமாக அமைந்துள்ளார்.

மலேயாவில் பணியாற்றிய வேளையில் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக இந்தியத் தேசிய இராணுவத்திற்குப் படை திரட்டிக் கொடுத்த பயிற்சிகளும், ஜவஹர்லால் நேரு போன்ற பெருந்தலைவர்களுக்கு தமிழ் மண்ணில் வரவேற்பளித்து, அரசியல் கூட்டங்கள் நடத்திப் பழகிய அனுபவங்களும் கொண்ட வே.க.சோமசுந்தரம் அவர்களின் இனப்பற்று, விடுதலை உணர்வு, பொதுநல உணர்வு என்பன திருநா அண்ணரை அவர்பால் ஈடுபாடு காட்ட வைத்தது. அவரின் உணர்ச்சிமிக்க உரையாடல்களும், இந்திய சுதந்திரப் போராட்டம் சார்ந்த அவரது அனுபவப் பகிர்வுகளும் இளம் திருநா அண்ணர் உள்ளிட்ட சமகால இளைஞர்களை 1956இல் தமிழரசு மூவர்ணக் கொடியின்கீழ் திரண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து பணியாற்ற வைத்தது.

1925இலேயே உருவாகியிருந்த புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை 1960ஆம் ஆண்டு தொடக்கம் அமரர் வே.க.சோமசுந்தரம் அவர்கள் ஏற்றிருந்தார். புனரமைக்கப்



புங்குடுதீவு இளைஞர் கழக வாசகர் வட்ட நூலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ.இரத்தினம், மாவட்டசபைத் தலைவர் வே.க.சோமசுந்தரம் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

பெற்று, புதிய இரத்தம் பாய்ச்சப்பெற்ற இக் கழகத்தில் வே.க.சோமசுந்தரம் அவர்களது முயற்சியால் திருநா அண்ணரும் மேலும் பல இளைஞர்களும் ஆர்வத்துடன் அங்கத்தவர்களாக இணைந்துகொண்டனர். அரசியல், சமூகம், கலை, கலாச்சாரம், கிராம நிர்மாணம் ஆகிய சகல துறைகளிலும் இளைஞர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சியை வழங்கி அவர்களை பின்னாளில் பல்வேறு துறைகளிலும் அளப்பரிய சேவையாற்ற வைத்த பெருமை வே.க.சோமசுந்தரம் அவர்களது தலைமைத்துவத்துக்கே உரியதாகும்.

பலத்த பொலிஸ் கெடுபிடிகளுக்கு மத்தியில், அரசின் கண்களில் மண்ணைத்தூவி, "தமிழரசு தபால் சேவையை" தானே முன்நின்று புங்குடுதீவில் தனது இல்லத்திலேயே நடத்தியவர் பெரியார் வே.க.சோமசுந்தரம் அவர்களே. புங்குடுதீவு வைத்திய சாலையின் அபிவிருத்திக்கும் அளப்பரிய பங்களிப்பை அவர் வழங்கியிருந்தார்.

வே.க.சோமசுந்தரம் அவர்களின் சமூகப்பார்வையின் தாக்கம், திருநா அண்ணரின் பிற்கால சமூகப்பணிகளின் வழியாக எம்மால் காணக்கூடியதாக இருக்கிறது. முன்னையவர் தொடக்கிவைத்த பல பணிகளை திருநா அண்ணர் தொடர்ந்து மேற்கொண்டுவந்தார்.



புனரமைக்கப்பெற்ற புங்குடுதீவு இளைஞர் கழக தொடக்க விழாவில் இளைஞர் அணியுடன் தொண்டர் திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுவந்திருந்த போதிலும் பிற்காலத்தில் திருநா அண்ணர் தன்னை ஒரு முழுநேர அரசியல் வாதியாக மாற்றிக்கொள்ளும் எண்ணத்தை எப்பொழுதுமே கொண்டிருந்ததில்லை என்பதை இன்று அவரது வாழ்வுப் பணிகளை அறிந்துள்ள எம்மால் இலகுவில் புரிந்துகொள்ள முடிகின்றது. அவரது அரசியல் ஈடுபாடு என்பது, தான் சார்ந்திருந்த அரசியல் அதிகாரமையத்தின் உதவியுடன், தன் புங்குடுதீவு மண்ணை எவ்வாறு வளம்படுத்தலாம் என்பதிலேயே குறியாக இருந்து வந்துள்ளது. அதன் காரணமாக அவரது தொண்டுகளின் செயற்பாட்டுத் தளங்கள் பெரும்பாலும் புங்குடுதீவிலேயே நிலைபெற்றிருந்தன.

திருக்கோணமலையிலே சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட தொண்டர் திருநாவுக்கரசுவும் அவரது நண்பர்களும் புங்குடுதீவுக்குத் திரும்பியதும் முதலாவது சிரமதானப் பணியாக, கிராமங்களில் கடும் வரட்சியினால் உண்ண உணவும், அருந்த நீருமின்றித் துடிதுடித்து வெளிகளில் இறந்திருந்த கால்நடைகளின் உடல்களைக் குழிதோண்டிப் புதைத்தும் எரித்தும் அப்புறப்படுத்தி சுகாதார சீர்கேட்டைப் போக்க நடவடிக்கையினை மேற்கொண்டார்கள்.

கைகளில் காசில்லாத நிலையில் அன்னையின் கழுத்தில் கிடந்த சங்கிலியை அடகுவைத்துப் பணம் புரட்டி புங்குடுதீவில் போதிய உணவின்றித் தவித்த ஏழைமக்களுக்கு மரவள்ளிக் கஞ்சி தயாரித்து வழங்கியதும் அவரது ஆரம்பகால சமூகச் செயற்பாட்டில் பதிவுசெய்யப்படவேண்டியதாகும்.

**நயினாதீவு கடற்தொண்டர் படையமைப்பு**

1960களில் திருநா அண்ணர் இளைஞராக இருந்த காலகட்டத்தில் இத் தொண்டர் படையமைப்பை தொண்டுள்ளம்கொண்ட நீச்சல் பயிற்சிபெற்ற புங்குடுதீவு, நயினாதீவு இளைஞர்களின் உதவியுடன் உருவாக்கினார். யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நயினாதீவுக்குச் செல்லும் யாத்திரீகர்கள் புங்குடுதீவின் வழியாகவே தமது பயணத்தை மேற்கொள்வது வழமை. இறுப்பிட்டி இறங்குதுறை யிலிருந்து கடல்மார்க்கமாக நயினாதீவுக்குச் செல்லும் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு திருவிழாக்காலத்தில் கடற் தொண்டர் படை அணியினருடன் தயார் நிலையில் தொண்டர் திருநாவுக்கரசு

பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டு இக்கடற்தொண்டர் படையமைப்பினை அவர்கள் உருவாக்கினார்கள். இவ்விளைஞர் களின் சேவை பற்றிய தகவலை அறிந்துகொண்ட நயினாதீவுப் பெரியாரான திரு. நாகமணி காராளபிள்ளை என்பவர் உயிர் பாதுகாப்புச் சேவைக்காகத் தாமாகவே மனமுவந்து வழங்கிய படகினைப் பயன்படுத்தி நயினாதீவு கடற்தொண்டர் படையமைப்பை திருநா அண்ணர் நடத்திவந்தார். கால ஓட்டத்தில் உயிர்ப் பாதுகாப்புச்சேவை குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு மாற்றப் பட்டது. அதன் பின்னர் இப்பணியினை ஸ்ரீ ஞானவைரவர் கடற் பிரயாணிகள் உயிர்பாதுகாப்புச் சேவையினர் இன்றுவரை சுமார் 40 ஆண்டுகளாகக் கட்டமைப்புக் குலையாது இயக்கி வருகின்றார்கள்.

### புங்குடுதீவுக்கான நன்னீர் வழங்கல்

தீவகத்தின் மற்றைய பகுதிகளைப் போன்றே புங்குடுதீவிலும் நீண்ட காலமாக நன்னீர்த் தட்டுப்பாடு நிலவிவந்தது. நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

நன்னீர் வேண்டும் என்பதற்காக மழைகாலத்தில் வெள்ளம் ஓடும் வாய்க்கால்களை அணைகட்டி மழைநீரைத் தேக்கவைத்து நன்னீர் வளத்தைப் பெருக்கப் பெரும்பாடுபட்டவர் திருநா அண்ணர் என்பதை அனைவரும் நன்கறிவர். 1960களின் ஆரம்பத்தில் தனது இளவயதில் இப்பெரும்பணிகளை சிரமதான முறையில் முன்நின்று நடத்திய இவரது மண்சார்ந்த, அதன் புவியியல் வளம்சார்ந்த ஞானத்தை எந்தக் கல்லூரியில் இருந்தும் அவர் பெற்றிருக்கவில்லை. மண்ணையும் மக்களையும் நேசித்த அவரின் ஆழ்ந்தகன்ற அனுபவ ஞானமும், தேடலும் தான் இதற்கு உதவியுள்ளன என்று நம்புகின்றேன்.

புங்குடுதீவின் நன்னீரூற்றுக் குளங்களில் கண்டியன் குளமும் ஒன்றாகும். சுத்திகரிக்கப்படாது கவனிப்பாரற்றுப் பல வருடங்களாக கோடையில் வரண்டுபோயும், மாரியில் நிரம்பியும் கிடந்த இக்குளத்தைத் தான் கிராமசபை பிரதிநிதியாகப் பதவிபெற்றதும், சிரமதானம் மூலம் தூர்வாரி, செப்பனிட்டு மாரியில் அக்குளத்தில் தேங்கும் நீர், கோடையிலும் வற்றாமல் கால்நடைகளுக்குத் தண்ணீர் வழங்கும் வகையில் மேம்படுத்தியிருந்தார்.

புங்குடுதீவு மேற்குப் பகுதியில் இருந்த அடைக்காத்த குளத்தைப் பதித்து, செப்பனிட்டு, அணைகட்டி அவ்வணைக்கட்டு மீண்டும் தூர்ந்து போகாமல் அணைகளுக்கு மேல் புல்வளர்த்துப் பராமரித்து பொதுமக்களினதும் கால்நடைகளினதும் பாவனைக்கு உகந்ததாக மாற்றியமைத்தார். இவரது பணிக்கு உறுதுணையாக புங்குடுதீவு மேற்கு பயிர்ச்செய்கை குழுவின் செயலாளர்களான திரு.வே.க. சோமசுந்தரம் அவர்களும், திரு. மா.குமாரசாமி அவர்களும் உதவியாயிருந்தனர். புங்குடுதீவின் பல குளங்கள் ஆழமாக்கப்பட்டு தரிசு நிலங்கள் விவசாயக் காணிகளாக மாற்றமடைய வைத்தமைக்கு அவரது இறுதிக்கால சாட்சியமாக இன்றும் விளங்குகின்றது அடைகாத்த குளம்.

இப்பிரதேசத்தில் கைவிடப்பட்ட மற்றொரு சிறு குளமாக இருந்த மக்கிக் குண்டுக் குளத்தை, பொறுப்பற்ற விதத்தில் அப்பிரதேச மக்களினால் குப்பைகளாலும் மண்ணாலும் மூடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்த நிலையில், அதனைச் செப்பனிட்டு, மழைநீரைத் தேக்கி, கால்நடைகள் தாகம் தீர்த்துக்கொள்ள வழிசமைத்தார்.

இப்பிரதேசத்திலிருந்த சலவைத் தொழிலாளர் குளம் போதிய பராமரிப்பின்றி, சேறுகள் நிறைந்து தண்ணீர் கொள்ளளவு குறுகியதால் தொழிலாளர் தொழில்வளம் குன்றி அல்லல்பட்டனர். இக்குறையைப் போக்க சலவைத் தொழிலாளர்களின் குடும்பங் களையும் அப்பிரதேச இளைஞர்களையும் இணைத்து அவர்களின் உதவியுடனேயே அக்குளத்தை சிரமதானமுறையில் செப்பனிட்டு அவர்களின் பொறுப்பில் மீள வழங்கினார்.

திருநா அண்ணர் கிராம சபையில் பணியாற்றிய வேளையில் சலவைத் தொழிலாளர் குளத்தையண்டிய ஒரு இளைப்பாறு மண்டபத்தையும் அப்பிரதேசத்தின் சலவைத் தொழிலாளர்களுக்கு கட்டிக்கொடுத்தார்.

மழைநீர் கடலுக்குள் விரயமாகும் பாதாளமுடைப்பு ஓடையை மறித்துக்கட்டி தீவகத்தின் நிலத்தடி நீரைச் சேமிக்க உதவினார். இதுபற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை பேராசிரியர் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியது.

"புங்குடுதீவுக் கிராமத்தவர்கள் தூய குடிநீர்ப் பற்றாக்குறையால் அவதிப்படுவதையுணர்ந்து மழைக்காலங்களில் வீராமலையிலிருந்து வடிந்தோடும் நீரினை கள்ளியாற்றில் மறித்துக்கட்டி, நிலத்தடி நீரினைச் சேமித்து நன்னீராக்கும் முயற்சியில் கணிசமான வெற்றி கண்ட போதிலும் அதன் பலனை மக்கள் அனுபவிக்க விஷமிகள் சிலர் விடவில்லை. நீரைக் கடலுடன் கலக்கச் செய்தனர். இருப்பினும் அதனைத் தொடர்ந்து குளங்கள் தூர்வார்தலிலும் ஈடுபாடு காட்டினார்." (பேராசிரியர் கா.குகபாலன், திருமலர் 2001).

திருநா அண்ணர், மக்களின் நன்னீர் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அடைகாத்த குளத்தில் பொதுக்கிணறு ஒன்றைத் தோண்டி அப்பிரதேச மக்களின் பாவனைக்குப் பெற்றுக் கொடுத்தார். இதற்கான நிதிவசதியை தான் அக்காலகட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்திவந்த கிராமசபையின் நிதியிலிருந்து பெற்றுக்கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப்பகுதியில் பலரும் அறிந்த சமூகசேவகரான சதாசிவம் மாணிக்கவாசகர் அவர்களின் உதவியுடன், தீர்க்கதரிசனத்துடன் வேலணைப் பிரதேசத்தில் உள்ள சாட்டிப் பகுதியில் நல்லதண்ணீர் கிடைக்கும் ஓரிடத்தில் ஐந்து பரப்பு காணி ஒன்றினை வாங்கி, மதில்கட்டிப் பாதுகாத்து, அந்நிலத்தில் கிணறுகள் தோண்டி, வட்டாரம் தோறும் தொட்டிகள் அமைத்து பவுசர்கள் மூலம் தண்ணீர் வழங்கினார். நாற்பதாண்டுகளுக்கும் மேலாக இன்றும் இப்பணி தொடர்வது குறிப்பிடத்தக்கது.

திருநா அண்ணரின் தலைமைத்துவத்தின்கீழ் பல்வேறு சிரமதானப் பணிகள் அவ்வூர் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இச்செயற்பாடானது மற்றைய அயல் கிராமங்களுக்கும் முன்மாதிரியாக அமைந்தது.

**வீதிகள் விரிவாக்கம்பெறல்**

“பாதைகளை நாம் உருவாக்குவோம்

பாதைகளில் நாம் உருவாகுவோம்” என்பது சர்வோதய இயக்கத்தின் ஒரு பொதுமொழியாகும்.

புங்குடுதீவில் இன்று மக்கள் பாவனையில் உள்ள பல வீதிகளை அகலமாக்குவதில் முன்னின்று உழைத்தவர் திருநா அண்ணர். அதற்கான வாழும் சாட்சியமாகப் பல வீதிகளை அக்கிராமத்தில் இன்றும் காணலாம். குச்சொழுங்கைகளாக இருந்த பாதைகளைக் காணி உரிமையாளர்களுடன் பேசி, வீதி அகலிப்பை மேற்கொண்டவர் இவர். இதன்போது சில பின்னடைவு களையும் சந்தித்தபோதிலும், பொதுநோக்கம் கொண்ட இவரது செயற்பாட்டுக்குப் பலரிடமிருந்தும் ஆதரவு கிடைத்திருந்தது. இருப்பினும், இதற்காகச் சில காணி உரிமையாளர்களின் இறுக்க மான சுயநலப்போக்கை உடைத்தெறிந்து, பொதுநலம் சார்ந்து அவர்களைச் சிந்திக்கவைக்க திருநா அண்ணர் அரும்பாடுபட வேண்டியுமிருந்தது.

திருநா அண்ணர் ஊரவர்களின் ஒத்துழைப்புடன் சிரமதான முறையில் செப்பனிட்ட, அகலித்த வீதிகளுள் கோரக்குண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி, மகாத்மா காந்தி வீதி, காளி கோவில் வீதி, பாடசாலை வீதி, அடைக்காத்த குளம் வீதி, நுணுக்கல் தொழிலாளர்புரம் வீதி போன்றவை குறிப்பிடத்தக்க சிலவாகும்.

அடைக்காத்த குளம் வீதி, புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்திலேயே மிக மோசமான நிலையில் முன்னர் இருந்தது. கடின உழைப்பின் மூலம் இவ்வேலையைப் பூர்த்தியாக்கக் காரணமாக இருந்தவர்கள் இவ்வீதியில் வசிக்கும் இளைஞர்களும் பெரியோர்களும் சகோதரி களும் மாணவர்களுமே என்று அவர் பெருமைகொண்டதுண்டு.

முதலாம் வட்டாரத்தில் அமைந்திருக்கும் பிரதான வீதிகளை தர்மக்குண்டு குளம் வரையில் செப்பனிட்டு விரிவாக்கி வைத்தார். ஐம்பது வருடங்களாக கவனிப்பாரற்று, யாருமே பயணிக்க முடியாதிருந்த ஒரு காணியை உரியவர்களிடமிருந்து மீட்டெடுத்து மணியகாரன் வீதி என்ற பாதையை அமைத்து பொதுமக்களுக்காகத் திறந்துவைத்திருந்தார்.

அவ்வாறே நுணுக்கல் குடியேற்றத் திட்டம் தொடக்கப்பட்ட காலம் தொடக்கம் இப்பகுதி மக்கள் போக்குவரத்திற்குப் பட்ட துன்பமெல்லாம் நுணுக்கல் தொழிலாளர்புரம் வீதியை அமைத்ததன் மூலம் தீர்க்கப்பட்டது. இவ்வீதி கழுதைப்பிட்டி பிரதான வீதியில் இருந்து தொடங்கி குறிகாட்டுவான் வீதியைத் தொடுகின்றது.



பனை ஓலைகளை வெட்டி பசுக்களுக்கு உணவாக்கி மகிழும் ஜீவகாருண்ய சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4000 அடி நீளமான இவ்வீதியை அமைக்க ரூபா 36,000 மட்டுமே அரசினரால் ஒதுக்கப்பட்டிருந்து. பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு வ.நவரத்தினம், முன்னாள் கிராம சேவையாளர் வெ.பொன்னம்பலம் ஆகியோர் இவ்வீதியமைப்பில் திருநா அண்ணருக்குப் பக்கபலமாக இருந்தனர். இதன் பயனாக கழுதைப்பிட்டியிலிருந்து பங்களாவடிச் சந்தி வரையிலான பாதையை அகலிப்புச் செய்துதர இவரால் முடிந்துள்ளது.


**மாடுகளை பராமரித்தவர்**

“அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள் ஐந்தறிவு கொண்ட கால்நடைகளுக்கும் உற்ற தோழனாவார். உரிமை கொண்டாடப்படாது பல்கிப் பெருகியுள்ள ஜீவராசிகளுக்கு - குறிப்பாக மாடுகளுக்கு ‘கோதானம்’ என்ற பெயரில் அவர் ஆற்றிவரும் சேவை மகத்தானது. இது மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமை கின்றது. கால்நடை களுக்குத் தண்ணீர் குடிப்பதற்கு அடைகாத்த குளத்தை தூர்வாரியும் பனையோலைகளை உணவாக்கியும் வழங்கி அவைகளின் புன்முருவல்களால் பூரிப்புக் கண்டார்.” (பேரா. கா.குகபாலன், திருமலர் 2001).

“குளங்களைச் சீர்செய்தும் துப்பரவு செய்தும் மாடுகளையும் வாழச்செய்தவர். மாடுகள் மேய்வதற்குப் புல் இல்லை. இவ் வேளையில் பனையோலைகளை வெட்டி அந்த மாடுகளுக்கு உணவாகக் கொடுத்து அவைகள் சாப்பிடுகின்றபோது அதைப் பார்த்து அவர் ரசித்ததை என் கண்களால் கண்டிருக்கிறேன்.” என்று சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் தன் பதிவொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். (திரு மலர், 2001).

கோமாதா பசிதீர்த்தல் என்ற திட்டப்படி புங்குடுதீவின் வரண்ட காலப்பகுதியில் நாளாந்தம் 20 பனை வீதம் பனை ஓலைகளை வெட்டி பசுக்களுக்கு உணவாக்கி அவை உண்ணும் போது கண்குளிரப் பார்த்து மகிழ்ந்த ஜீவகாருண்ய சேவை அவரது வாழ்வின் இறுதிவரை நடைபெற்ற ஒரு நிகழ்வாகும். இதற்குச் சாட்சியமாக மேற்கண்டவர்களின் குறிப்புக்கள் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோமாதாக்களின் தாகம் தீர்க்கும் குடிதண்ணீர் தொட்டிகள்-மடத்துவெளி

அரசாங்கத்தின் கால் நடை அபிவிருத்திக்கான பிரிவினருடன் தொடர்புகொண்டு, கால்நடைகளுக்கு மருந்து, தடுப்பூசி முதலியவற்றைக் கொடுப்பதற்கு ஆவன செய்தார். கட்டாக்காலி மாடுகள் மற்றும் கால்நடைகள் பொது வெளிகளில் இறந்துபோகும் வேளையில் அதனைக் கண்டறிந்து அவற்றை எரித்தோ, புதைத்தோ கிராமத்தில் சுகாதாரத்தைப் பேணும்வகையில் செயற்படுவது திருநா அண்ணரின் ஆரம்பகால, அன்றாடப் பணியாக இருந்துவந்துள்ளது. கவனிப்பாரற்ற கால்நடைகளின் அநாதரவான உடல்களைக்கூட, கௌரவமான முறையில் அடக்கம் செய்யும் ஜீவகாருண்யம் அவருடைய வாழ்வின் ஓரங்கமாகக் காணப்பட்டதை அவருடன் நெருங்கிப்பழகும் எவரும் எளிதில் உணர்ந்துகொள்வர்.

கோமாதாக்களின் தாகத்தைத் தீர்க்க புங்குடுதீவில் பரவலாக 10 தண்ணீர் தொட்டிகளைக் கட்டி அன்றாடம் அவற்றில் தண்ணீருற்றி தாகம் தீர்த்தவர் திருநா அண்ணர். பின்னாளில் புங்குடுதீவில் கால்நடைகளின் அவல மரணங்களை அதிகம் காணமுடியாது போனதற்கு மௌனமாகப் பொழிந்த திருநா அண்ணரின் ஜீவகாருண்ய மழைதான் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கல்வி மற்றும் அபிவிருத்தி

சிறுவரின் கல்வி வளர்ச்சிக்காக சிறுவர் பாடசாலைகளை தீவகமெங்கும் நிறுவியும் அந்தணச் சிறுவர்களின் நன்மை கருதி, சைவாலய நிர்வாகிகள் மற்றும் அந்தணர்களுடன் உரையாடி, சமஸ்கிருத பாடசாலையை அமைத்து சமஸ்கிருதக் கல்வியை அந்தணச் சிறுவர்களுக்கு ஊட்டியும், சமய அறிவுக்காக வித்துவான் பொன். அ.கனகசபை ஆசிரியர் மூலமாக சமயக் கல்வியைப் போதித்தும் கல்வியை வளர்த்த பெருமகன் திருநா அண்ணராவார்.

பெருங்காடு தெற்கு கிராம மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் உப-தலைவராகவும், பின்னாளில் அக்குழுவின் ஆலோசகராகவும் இருந்து சிறுவர்களின் முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் மன எழுச்சிக்குமான பல திட்டங்களை முன்வைத்து அதற்குத் தனது பங்களிப்பை நல்கி அவற்றைச் செவ்வனே நடைமுறைப்படுத்தினார்.

அறிவு வளர்ச்சிக்காக முன்பள்ளிகள் அமைத்து, ஆத்திசூடி முற்றோதல் விழாவையும் மாலைநேர வகுப்புகளையும் சிறுவர் வாசகர் வட்டத்தையும் உருவாக்கி நடாத்தினார்.




வட இலங்கை சர்வோதயம் ஒழுங்குசெய்த சிறுவர் சேமிப்புத்திட்ட நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கி அதிகாரிகளுடன் திருநா அண்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்த்தெடுப்பதற்காக, தேசிய சேமிப்பு வங்கியினரைப் புங்குடுதீவுக்கு அழைத்து சிறுவர் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு வித்தும் இட்டார்.

தீவகமடங்கிலும் கிராம மாணவர்களின் கல்வியறிவு வீதத்தை மேம்படுத்தும் நோக்கமாக எட்டு கிளை நூலகங்களை, சர்வோதய கிராமோதய நிலையங்களில் உருவாக்கிக் கொடுத்தார். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்ற கருத்தை இம்மண்ணிலே நிலைநிறுத்தி அதற்கான பயனையும் திருப்தியையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர் நூலகங்களை கிராமங்களில் அமைக்க முன்னின்று செயற்பட்டார். அத்தோடு புங்குடுதீவுக் கிராமத்திலே உள்ள சிறார்களின் முன்னேற்றத்துக்கும் அவர்களை தலைசிறந்த மாணாக்கர்களாக்கும் நோக்கிலும், கல்வியில் பின்னடைவு ஏற்பட்ட மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களை முன்னேற்றமுறச் செய்யவும் முன்பள்ளி மாலைநேர வகுப்புகள், அறநெறிப் பாடசாலைகள் போன்றவற்றையும் அவர் அமைத்திருந்தார்.

**சமூகப்பணிகளுக்கான கௌரவிப்பு**

திருநா அண்ணர் தன் வாழ்நாளில் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் தனது சமூகப்பணிகளை மேற்கொண்டு வந்தவர். அரசியலில் இருந்தபோதும் குறிப்பாக, தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் செயலாளர் பதவியில் அமர்ந்தபோதும் அவர் தன்னை ஒரு கட்சித் தொண்டராகவே நிலைநிறுத்திக்கொண்டார். பின்னர் சமூக சேவைகளை முன்னெடுத்த வேளைகளிலும் சமூகத் தொண்டராகவே வாழ்ந்தார். சர்வோதய இயக்கத்தில் இணைந்து செயலாற்றியபோதும் சர்வோதயத் தொண்டராகவே தன்னை அவர் முன்னிலைப்படுத்திக்கொண்டார். சிரமதானப் பணிகளில் முதலில் மண்வெட்டியைத் தோளில் வைப்பவர் அவராகவே இருப்பார். மற்றவரை பணிசெய்யவிட்டுத் தான் ஒதுங்கிக்கொள்ளும் பண்பு அவரிடம் என்றுமே காணமுடியாதிருந்த தொன்றாகும். தன்னை எப்போதும் எளிமைப்படுத்திக் கொண்டதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அவரால் தன் செயல்களில் தூய்மையான பற்றுறுதியைக் கடைப்பிடிக்க முடிந்துள்ளது. வாழ்வின் உயர் பதவிகளும் புகழும் அவரைநாடி வந்தவேளைகளில் அவற்றை நாசூக்காக அவர் தவிர்த்துக்கொண்டு வந்ததை அவருடன் இருந்தவேளைகளில் பல தடவைகள் அவதானித்துள்ளேன்.




மண்கும்பான் மேற்கு கிராமோதய நிலையத்தில் கிராம நூலகம் திறப்பு விழா

“கஷ்டப்படும் என் மக்களுக்குப் பணிசெய்யக்கூடியதாக எந்தப் பதவி என்னைத் தேடி வந்தாலும் அதனை தட்டிக்கழிக்காமல் ஏற்றுக்கொள்வதில் ஒரு அர்த்தமுண்டு. மக்களுக்கு எந்தவிதமான பணிகளையும் முன்னெடுக்க உதவாத வெற்றுப் பதவிகள் எமக்கெதற்கு? அவை வெறும் சுமைகளே. சுமைகளைக் குறைத்துக் கொண்டவனால் தான் நீண்ட தூரம் நடக்கமுடியும்” என்பார்.

அவர் வாழும் காலத்தில் அவரை நோக்கிப் பல முனைகளி லிருந்தும் எய்யப்பட்ட அம்புகளும் இதனாலேயே கூர்மழுங்கிப் போயின. அவருக்கு அவதூறு ஏற்படுத்தும் வண்ணம் சர்வோதய இயக்கத்தின் ஆரம்பகாலங்களில் தெருச்சுவர்களில் விஷமிகளால் கிறுக்கப்பட்டிருந்த வாசகங்களை புன்முறுவலுடன் கடந்துசெல்லும் பண்பு அவருடையது.

பின்னாளில் காலத்தின் தேவையினால் அவரை நாடிப் பதவிகள் பல வந்திருந்தபோதும் பணிவும் கூடவே துணிவும் அவரிடம் வந்து சேர்ந்துகொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநா அண்ணரின் முப்பத்தெட்டாவது வயதில் 1977இல் அவரிடம் புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பதவிவந்துசேர்ந்தது.

“அக்காலத்தில் கூட்டுறவை சிறந்த முறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் சிலகாலம் திறமையாக நடத்திய வேளையில் ஒரு தடவை ஊழியர்களுடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டபோது, நிர்வாகத்தைப் பழிவாங்கும் நோக்குடன் ஊழியர்கள் லொறியிலிருந்து பொருட்களை இறக்க மறுத்து நிர்வாகத்துடன் முரண்பட்டிருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் தான் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்ற நிலையைக்கூடக் கவனத்திற்கெடாமல், தானே அந்த லொறியிலுள்ள அனைத்துப் பொருட்களையும் சுமந்துசென்று களஞ்சியப் படுத்தினார்.” என்று குறிப்பிடும் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் அவர்களின் கூற்றினை திருநா அண்ணரின் எளிமைக்கு ஒரு உதாரணமாகப் பார்க்கலாம்.

அவரது நாற்பத்தியொராவது வயதில் (1980இல்)அவரை நாடி யாழ். மாவட்ட சமாதான நீதவான் என்ற கௌரவப் பதவி வந்து சேர்ந்தது. இரண்டாண்டுகளில் அதாவது 1982இல் புங்குடுதீவு சமாதான சபையின் செயலாளர் பதவி வந்து சேர்ந்தது. அடுத்த ஆண்டிலேயே 1983இல் இலங்கை அரசினரால் சிறந்த சமூக சேவையாளர் என்னும் விருதிற்குத் திருநா அண்ணர் தெரிவு செய்யப்பட்டார்.

திருநா அண்ணரின் சிறுவர்நலத் திட்டங்களை அவதானித்து, அதனால் கவரப்பெற்ற பிரதேச செயலாளர், பின்னாளில் 2000ஆம் ஆண்டு அவரை பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழு உப தலைவராக்கினார் என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

**“தொண்டுக் கென்றே அலைவான் கேலிக்கு ஆளாவான்**<br>
**கண்டு கொள்வாய் அவனை ஞானத் தங்கமே**<br>
**அவன் கடவுளின் பாதியடி ஞானத் தங்கமே”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 6

# புங்குடுதீவில் சர்வோதய இயக்கம்

### சர்வோதயம் ஒரு சிறிய அறிமுகம்

சர்வோதயம் (Sarvodaya) என்பது மகாத்மா காந்தி கண்ட சமுதாயக் கொள்கைகளின் வடிவத்துக்கு வழங்கப்பட்ட பெயராகும். காந்தியடிகள் தான் அடைய விரும்பிய கிராம சமுதாயத்தைச் "சர்வோதயச் சமுதாயம்" என்ற முறையில் வடிவமைத்தார். இச்சமுதாய முறைமை ஒழுக்கத்தை முதன்மைப்படுத்துவதாக இருந்தது.

சர்வோதயம் என்னும் சொல் முதன்முதலில் சமண சமய நூல்களில் பயன்படுத்தப் பெற்றது. மகாத்மா காந்தி அவர்கள் ஜான் ரஸ்கினின் Unto This Last (கடையனுக்கும் கடைத்தேற்றம்) என்ற நூலின் சாரத்தை குஜராத்தி மொழியில் 1908இல் எழுதிய போது அதற்கும் "சர்வோதயம்" என்றே தலைப்பிட்டிருந்தார். 1983-ஆம் ஆண்டில் காந்தி சேவா சங்கத்தால் மகாத்மா காந்தியின் தத்துவத்தை விளக்குவதற்காகத் தோன்றிய மாத இதழுக்கும் "சர்வோதயம்" (Sarvodaya) என்ற பெயரே வழங்கப்பட்டது.

"சர்வோதயம்" என்னும் சொல் "சகலரதும் நலம்" என்று நேரடிப் பொருளைத் தருவதாகும். சமுதாயத்தில் வாழும் அனைவரின் நலனுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட வாழ்வியல் முறைமை "சர்வோதயம்" எனும் சொல்மூலம் விளக்கப்படுகின்றது. காந்தியின் வாழ்வு முறைகளையும் அவரது கொள்கைகளையும் பின்பற்றும் காந்தியவாதிகள் இச்சொல்லை ஆழ்ந்த பொருளில் பயன்படுத்தி வருகின்றனர். சமுதாயத்திலுள்ள அனைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களின் முழுவளர்ச்சியையும் நலனையும் குறிப்பதாக இச்சொல் அமைகிறது.

காந்தியடிகள் தான் விரும்பிய சமுதாய முறையை உயிரோட்ட முள்ள தத்துவமாக வழங்கினார். காந்தியின் சர்வோதயம் கோட்பாடாக உருவாக அடிப்படையாக அமைந்தது ஜான் ரஸ்கினின் "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்னும் நூலில் காணப்படும் மூன்று கருத்துகளாகும். அவை,

1. எல்லாருடைய நலனில்தான் தனிப்பட்டவரின் நலன் அடங்கி யிருக்கிறது.

2. தங்கள் உழைப்பினால் வாழ்வில் பொருளாதாரத்தைத் தேடிக் கொள்ளும் அனைவருக்கும் ஒரே மாதிரியான உரிமை உண்டு. அதனால் சாக்கடையைத் துப்பரவாக்கும் ஒரு தொழி லாளியின் பணியின் மதிப்பும், ஒரு வைத்தியனின் பணியின் மதிப்பும் ஒன்றே.

3. நிலத்தில் உழுது பாடுபடும் குடியானவரின் வாழ்க்கையும், கைத்தொழில் செய்பவரின் வாழ்க்கையுமே வாழ்வதற்கு உகந்த மேன்மையான வாழ்க்கையாகும்.

ஜான் ரஸ்கினின் இந்த மூன்று கருத்துக்களையும் குறித்துக் காந்தியடிகள் எழுதும்போது, பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"முதலில் கூறப்பட்டதை நான் அறிவேன். இரண்டாவதாகக் கூறப்பட்டிருந்ததை அரைகுறையாகவே அறிந்து கொண்டிருந்தேன். மூன்றாவதாகக் கூறப்பட்டதோ என் புத்தியில் தோன்றவேயில்லை. இரண்டாவதும் மூன்றாவதும் முதலாவதிலேயே அடங்கி இருக் கின்றன என்பதை, Unto This Last என்ற நூல் உள்ளங்கை நெல்லிக்கனி போல எனக்குத் தெளிவுபடுத்தியது" என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.

சர்வோதயம் மனித குலத்தை எல்லாம் ஒன்றெனக் கருதும் சமுதாய அமைப்பு முறையாகும். பிறப்பினாலோ, செய்யும் தொழிலினாலோ எந்த வகையான ஏற்றத் தாழ்வுகளுக்கும் சர்வோதயம் இடமளிக்கவில்லை. ஆண்களும் பெண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிசமமாக வாழும் முறையைச் சர்வோதயம் வலியுறுத்துகிறது. சர்வோதய சமுதாயத்தில் அன்பே முதற்பொருளாகும்.

சர்வோதயத்தின் பொருளியல் கொள்கைகள் இன்றைய மேற்குலகப் பொருளியல் கொள்கைகளிலிருந்து அடிப்படையில் வேறுபட்டவை. சுரண்டலற்ற பொருளாதார அமைப்பை உரு வாக்குவதே சர்வோதய சமுதாயத்தின் நோக்கமாகும். எல்லோரும் உழைத்து வாழும் சர்வோதய சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தோன்றுவதில்லை. உற்பத்தி சாதனங்கள் யாவும் சமுதாயத்தின் உடைமைகளாக இருக்கும்.

சர்வோதயக் கொள்கைகளின்படி அரசு என்பது மிகவும் குறைவான பணிகளையே மேற்கொள்ளும். அரசாங்கத்தின் அதிகாரம் பரவலாக்கப்படும். ஒவ்வொரு சிறிய சமுதாயமும் பஞ்சாயத்து முறையில் தன்னைத்தானே கிராம மட்டத்தில் கவனித்துக் கொள்ளும். சர்வோதயத்தின் அரசியலானது, பதவி அதிகாரத்தைப் பயன்படுத்துவதாக அல்லாமல் தொண்டு செய்வதற்கே முன்னுரிமை அளிக்கிறது. தனி மனித, சமுதாய வளர்ச்சிக்குத் துணை செய்கிற வகையில் அரசியல் நிறுவனங்கள் செயல்படும்.


சர்வோதயம் தனிச் சமயக் கொள்கைகளை வலியுறுத்தவில்லை. எல்லாச் சமயங்களின் சாரங்களையும் ஏற்று எல்லாத் துறைகளிலும் அதை வளர்ச்சிக்கு அனுமதிக்கும். சர்வோதய சமுதாயத்தில் சமயச் சமத்துவம் நிலைநாட்டப்படும். சமய வேறுபாடுகளுக்கு அச்சமுதாயத்தில் இடமில்லை.

எல்லாரும் அமரநிலை அடையவேண்டும் என்னும் அடிப்படைக் கொள்கையிலேயே சர்வோதயம் உருவாக்கம் பெற்றது. வல்லவனுக்கே வாழ உரிமை உண்டு என்னும் விலங்கு நிலையிலிருந்து முன்னேறி, “நீயும் வாழு, மற்றவரையும் வாழ விடு” என்னும் மனித நிலைக்கு உயர்ந்து, இறுதியில் அந்த மனிதனை “பிறர் வாழ நீ வாழ்” என்னும் தெய்வ நிலைக்கு உயரும் கொள்கைகளைச் சர்வோதயம் வகைப்படுத்திக் கற்பிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவில் திருநா அண்ணர் சமூக பொருளாதார, கிராம எழுச்சிச் சிந்தனையுடன் 1972இல் அறிமுகப்படுத்திய சர்வோதய இயக்கம் பற்றி அறிய முற்படும் எவரும் அதே மண்ணில் சிலகாலங்களுக்கு முன்னர் 1968இல் மு.தளையசிங்கம் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வோதய இயக்கம் தொடர்பான வரலாறு பற்றியும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது.

**மு.தளையசிங்கத்தின் பூரண சர்வோதய இயக்கம்**



பூரண சர்வோதய இயக்க சிந்தனையாளர் எழுத்தாளர் மு.தளையசிங்கம்

1935ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் பிறந்த மு.தளையசிங்கம், இரத்தினபுரி புனித அலோஷியஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1965இல் தான் பிறந்த மண்ணுக்குத் திரும்பி புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரியப் பணியாற்றத் தொடங்கியவர். அவரது சிறப்பான ஆசிரியப்பணி அவருக்கு தீவகத்தில் முற்போக்கு உணர்வுடைய ஒரு மாணவர் அணியைத் தேடிக்கொடுத்திருந்தது. பாடசாலை முடிந்ததும் உயர்தர மாணவர்களுக்கான இலவச சிறப்பு வகுப்புகள் நடத்தி அறிவார்ந்ததொரு மாணவர் சமூகத்தை உருவாக்க மு.தளையசிங்கம் பாடுபட்டார்.

அந்நாட்களில், பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு, வேலையற்று வீண்பொழுது போக்கிய இளைஞர்களை சமூக உணர்வுள்ளவர்களாக மாற்ற விரும்பினார். விளையாட்டு என்ற குவிமையத்தில் அவர்களை ஒன்றிணைக்க முற்பட்டார். அந்த இளைஞர்களின் விளையாட்டுத் தேவைக்காக வலைப்பந்துகள் வாங்கி வழங்கி, அவர்களை கட்டுக்கோப்பும் ஒழுக்க சிந்தையுமுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களாக்கினார்.

இவர்களை ஒன்றுதிரட்டி "சக்தி கூட்டுறவு இயக்கம்" என்ற பெயரில் இளைஞர் சமூக அமைப்பொன்றையும் அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கினார். அவர்களுக்கான சிறு தொழில்வாய்ப்புகளையும் தன் எல்லைக்கு எட்டிய அளவில் ஏற்படுத்திக் கொடுத்தார். எல்லாத் தொழிலும் புனிதமானவை என்ற சர்வோதய சித்தாந்தத்தை அவர்களுக்கு ஊட்டும் வகையில், கடலில் மீனவர்கள் பிடித்துவரும் மீனை நேரடியாகக் கொள்வனவுசெய்து மு.தளையசிங்கமும் அவரது இளைஞர் அணியும் அதனை பொதுமக்களுக்கு விற்று அந்த இளைஞர்களின் வாழ்வாதாரத்துக்கு வழியமைத்திருந்தார்.

புங்குடுதீவில் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டு, கைவிடப்பட்டு, பாழடைந்திருந்த கிணறுகளையும், குளங்களையும் அவ்வூர் இளைஞர்களை ஒன்றுசேர்த்து சிரமதானம் மூலம் துப்பரவாக்கி மக்களுக்கு மீண்டும் வழங்கியதன்மூலம் ஒரு சமூக சேவையை கூட்டு முயற்சியாக மேற்கொண்டார்.

அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்திவந்த "இராமன் குண்டு" என்ற குளத்தை சிரமதானம் மூலம் புனரமைத்து வழங்கினார். சாதிய வேறுபாடின்றி அனைவரையும் இணைத்து மனித சக்தியின் மூலம் அக்குளத்தை தூர்வாரித் திருத்தி அவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கினார். சிரமதான வேலைகளின் போது சமபந்தி போசனத்தையும் அறிமுகப்படுத்தினார். இத்தகைய சமூகப் புரட்சிகள் புங்குடுதீவு மக்களிடையே அவருக்குப் பின்னாளில் ஆதரவு அலைகளும், எதிர்ப்பு அலைகளும் கிளம்பக் காரணமாக அமைந்தன.

இவ்வாறாக ஆரம்பித்த மு.தளையசிங்கத்தின் பொதுப்பணி படிப்படியாக வளர்ந்து 1968இல் "பூரண சர்வோதய இயக்கம்" உருவாகக் காரணமாயிற்று. புங்குடுதீவு மகாவித்தியாலய முன்றலில் இளையப்பா வாத்தியாரின் தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மு.தளையசிங்கம் உள்ளிட்ட ஐந்து இயக்க உறுப்பினர்கள் தமது ஜீவதான சத்தியாக்கிரக சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து படிப்படியாக மு.தளையசிங்கத்தின் அக்கறை, தீவுப்பகுதிகளில் உயர்சாதிக்காரர்களால் உரிமைகள் பறிக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கம் திரும்பியது. ஒரே கிராமத்துக்குள் காணப்பட்ட உயர்வு-தாழ்வுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்செய்வதையே தனது சர்வோதயக் கடமையாகக் கருதிச் செயற்பட்டார். இதன் தொடக்கமாக, தாழ்த்தப்பட்ட மக்களை கல்வியறிவில் உயர்த்திவிடவும், அவர்களிடையே ஆரம்ப சுகாதார அறிவை வழங்கி, சுகாதாரத் தூய்மையை அவர்களிடம் வளர்க்கவும் அவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டிவந்தார். அவரும் அவரது தோழர்களும் தாழ்த்தப்பட்டோர் வழிபட்டுவந்த "பெத்தப்பா" கோவிலுக்குச் சென்று ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் அவர்களோடு வழிபாட்டில் பங்குபற்றினர். தாழ்த்தப்பட்டவர்களை படிப்படியாக செங்கந்திடல் பிள்ளையார் கோவில், கலட்டிப் பிள்ளையார் கோவில், கண்ணகை அம்மன் கோவில் ஆகியவற்றுக்கும் அழைத்துச் சென்று அவர்களுடன் இணைந்து கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்தினார்.

அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிற மாவட்டங் களில் காணப்பட்டதைப் போலவே புங்குடுதீவிலும் மேல்சாதியினர் பயன்படுத்தும் பொதுக் கிணறுகளில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் அள்ளுவது சமூகக் குற்றமாக வழக்கில் இருந்துவந்தது. இந்நிலையில் ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்ற போக்கில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் நன்னீர் கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் தண்ணீர் அள்ளும் உரிமை வழங்கப்படவேண்டும் என்று கோரி மு.தளையசிங்கம் இரண்டு மாதங்களுக்கும் அதிகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகிலிருந்த பத்திரகாளி அம்மன் கோவிலில் தொடர்ந்து சத்தியாக்கிரக உண்ணாநிலைப் போராட்டத்தை நடத்தினார்.

இவரது சமூகப் புரட்சிகளுக்கு கவிஞர் சு.வில்வரத்தினம், மு.தளையசிங்கத்தின் இளைய சகோதரரான கவிஞர் மு.பொன்னம்பலம், செ.சிவநாதன், குமாரதாஸ் போன்றோர் ஆதரவாகச் செயற்பட்டிருந்தனர். சத்தியாக்கிரப் போராட்டத்தின் போது, ஒரு தடவை போலிசாரால் தாக்கப்பட்டு மு.தளையசிங்கம் சிறையில் அடைக்கப்பட்டார். இத்தாக்குதலின் பின்விளைவாகத் தன் உடல்நிலை பாதிக்கப்பட்டு, தனது முப்பத்தெட்டாவது வயதிலே 02.04.1973இல் காலமாகிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த எழுத்தாளரான மு.தளையசிங்கம் போர்ப்பறை, மெய்யுள், ஈழத்தின் ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி, முற்போக்கு இலக்கியம், கலைஞனின் தாகம், ஆகிய பல நூல்களையும் ஒரு தனிவீடு என்ற நாவலையும் எமக்காக வழங்கியவர். உள்ளொளி, ஈழவிடுதலை ஆகிய பத்திரிகைகளையும் தன் கருத்தியல் சித்தாந்தங்களைப் பரப்புரை செய்வதற்காக வழி நடத்தியவர் அவர். தான் வாழ்ந்த முப்பத்தெட்டு ஆண்டுகளில் தீவகத்தில் சமூக விழிப்புணர்வை வேண்டி அவர் திரட்டிய இளைஞர் அணியின் வளர்ச்சி இன்றளவில் அவரது பெயரைத் தக்கவைத்திருக்கின்றது. இலங்கையின் முற்போக்கு இலக்கிய வரலாற்றில் மு.தளையசிங்கத்தின் பெயர் அழிக்கவும், தவிர்க்கவும் முடியாதவொரு முக்கிய பாத்திரமாகும்.

மு.தளையசிங்கத்தின் சாதி மறுப்புக் கொள்கையினை முன்னிலைப்படுத்தி வளர்க்கப்பட்ட பூரண சர்வோதய இயக்கத்தின் உருவாக்கம் பலத்த தாக்கத்தை சமூகமட்டத்தில் ஏற்படுத்தியிருந்தது. மக்கள் வாழ்வில் ஆழமாக வேரூன்றியிருந்த சாதிய உணர்வுகள் மு.தளையசிங்கத்தின் பூரண சர்வோதய இயக்கத்தினை வளர்த்துச் செல்லத் தடையாக இருந்தன. அவரது மறைவின் பின்னர், அவர் 1968இல் உருவாக்கிச் சிறிதுகாலம் வழிநடத்திச் சென்ற "பூரண சர்வோதய இயக்கமும்" படிப்படியாகச் செயலிழந்தது. (நன்றி: தம்பிஐயா தேவதாஸ், புங்குடுதீவு வாழ்வும் வளமும், 2006).

**புங்குடுதீவில் இலங்கைச் சர்வோதய சிரமதானச் சங்கம்.**

இந்நிலையில் மொரட்டுவையில் ராவத்தாவத்தை என்ற இடத்தில் தலைமையகத்தைக் கொண்ட இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கம் தென்னிலங்கையில் சிங்கள மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியையும், கிராம எழுச்சியையும் அடிப்படையாகக் கொண்ட சிரமதான அமைப்பாக 1958இல் உருவாக்கப்பட்டிருந்தது. அதன் ஸ்தாபகர் ஏ.ரீ.ஆரியரத்தினாவும் ஒரு ஆசிரியராகவே தனது தொழிலை தொடங்கியவர். மு.தளையசிங்கத்தின் வழியில் சாதி எதிர்ப்புடன்கூடிய வேலைத்திட்டத்தை மக்களிடம் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் செல்லவில்லை. மாறாக, மாணவர்களை கிராம எழுச்சியைநோக்கியே ஆற்றுப்படுத்தியவர். கூட்டு முயற்சியின் மூலம் கிராமங்களைக் கட்டியெழுப்பும் "கிராமோதய வேலைத் திட்டங்களையே" அவர் சர்வோதய இயக்க வேலைத்திட்டமாகக் கட்டியெழுப்பினார். பின்னாளில் இலங்கையின் பிரதமராக/ ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாச அவர்கள், தனது "ஜனசவிய", "கம் உதாவ" வீடமைப்பு கிராம நிர்மாணத் திட்டங் களினை, சர்வோதய கிராமோதயத் திட்டக் கருத்தியலிலிருந்தே முன்னெடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சர்வோதயத் தலைவர் ஏ.ரீ.ஆரியரத்தினா அவர்கள், தனது கிராமிய சுயராஜ்யத் திட்டங்களை "பாதைகளை நாம் உருவாக்குவோம், பாதைகளில் நாம் உருவாகுவோம்" என்ற பதாதையுடனேயே கிராமங்களுக்குள் சிரமதானச் செயற்பாடுகளின்மூலம் முன்நகர்த்தியவர்.

அரசியல் அதிகாரத்தின் மூலமாகத் தமிழ் மண்ணில் தன்னால் கிராம மக்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களைச் சுதந்திரமாகப் பெற்றுக்கொடுக்க முடியாதெனக் கண்ட திருநா அண்ணர் தனது பணிகளை முன்னெடுக்க காந்திய வழியில் சென்று சர்வோதய சிரமதான இயக்கத்தின் வாயிலாகத் தன் மக்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுக்கலாம் என்று நம்பிக்கை கொண்டார். இந்நிலையில் அவர் தனது அரசியல் பணிகளைப் படிப்படியாக நிறுத்திக் கொண்டதுடன், நேரடியான முழுநேரச் சமூகப்பணிகளில் முழுமூச் சுடன் ஈடுபடத் தொடங்கினார்.

இலங்கையின் வடமாகாணம் தவிர்ந்த சகல பாகங்களிலும் பரவி வியாபித்திருந்த இவ்வமைப்பின் வடமாகாண சர்வோதய இணைப்பாளராக திருநா அண்ணர் 1972ஆம் ஆண்டு ஆடி மாதம் 23ஆம் நாள் பொறுப்பேற்றுக்கொண்டார்.

திருநா அண்ணரின் மறைவின்போது இரங்கலுரை ஒன்றினை வழங்கிய சர்வோதய சிரமதானச்சங்கத்தின் தலைவர் ஏ.ரி. ஆரியரத்தினா அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"Around 1970, when I was addressing a meeting in Jaffna Shri Thirunavukkarasu was in the audience. Immediately after the meeting was over he came and spoke to me and expressed his desire to join the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Movement. I promptly agreed and invited him to our head quarters in Moratuwa. He came to know all our leaders and within no time he earned the love and admiration of all of us. Subsequently, he was elected as a Vice President of the Sarvodaya Movement and he was in charge of the activities in the Northern Province. Up to 1983 Thiru Malli as we used to call him was a vibrant leader of the Movement not only in the North but also in other parts of the Country. Everybody looked up to him as a golden bridge between Sinhala and Tamil people amongst whom a lot of suspicion, fear and alienation were taking place at that time. On my part I gave Thiru Malli all the assistance to carry out his work in Vavuniya, Mullaitivu, Mannar, Kilinochchi, Jaffna and Pungudutivu which benefited thousands of people in these areas. He was very grateful to me for giving him that opportunity.




தலைவர் ஆரியரத்தினா புங்குடுதீவுக்கு வருகைதந்தவேளை 50 மாங்கன்றுகள் சர்வோதய நிலையங்களில் நாட்டப்பெற்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1970ஆம் ஆண்டளவில் நான் யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றியிருந்தேன். திரு. க.திருநாவுக் கரசுவும் அவ்வுரை நிகழ்வில் ஒரு பார்வையாளராக பிரசன்னமாகி இருந்தார். எனது கூட்ட நிகழ்வு முடிவடைந்த பின்னர் திருநாவுக்கரசு நேரடியாகவே என்னை வந்து சந்தித்திருந்தார். தான் எமது அமைப்பில் இணைந்து பணியாற்ற விரும்புவதாகத் தெரிவித்தார். நான் உடனேயே அதற்கிணங்கி, அவரை மொரட்டுவையிலுள்ள எமது தலைமையகத்திற்கு வந்து ஒரு தடவை என்னைச் சந்திக்கும் படி அவரிடம் கேட்டிருந்தேன். அதன் பிரகாரம் அவர் மெரட்டுவைக்கு வந்து என்னையும் மற்றைய சர்வோதய தலைமைப் பொறுப்புகளில் இருந்தவர்களையும் சந்தித்து நன்றாக உரையாடி அவர்கள் அனைவரையும் அறிந்துகொண்டார். எம் அனைவரையும் சொற்ப நேரத்திலேயே தன் உரையாடல்களால் கவர்ந்திழுத்துக் கொண்டார். எம் அனைவரினதும் அதிசயத்திற்கும், விருப்புக்கும் உரியவராகிவிட்டார். அதனைத் தொடர்ந்து அவர் சர்வோதய இயக்கத்தின் உபதலைவர்களுள் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டதும், வடமாகாண சர்வோதயத்தின் நடவடிக்கை களுக்கான பொறுப்பினை வழங்கி அதன் இணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். அன்று முதல் 1983 வரை "திரு மல்லி" என்று என்னால் அன்பாக அழைக்கப்பட்ட அவர், வடமாகாணத்துக்கு மாத்திரமல்லாது முழுச் சர்வோதய சிரமதானச் சங்கத்தினதும் திறமைமிக்க ஒரு தலைவராகப் பரிணமித்திருந்தார். தமிழ் சிங்களச் சமூகங்களுக்கிடையே சந்தேகமும் காழ்ப்புணர்வும் வளர்ந்து செறிந்திருந்த அக்காலகட்டத்தில் இலங்கைத்தீவின் தமிழ் சிங்கள மக்களிடையே ஒரு தங்கப் பாலமாகவே அவரை நாங்கள் கண்டோம். என்னைப் பொறுத்தவரையில் திரு மல்லிக்கு வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், புங்குடுதீவு என அனைத்துப் பிரதேச மக்களின் நலன்களுக்காகவும் அவர் கேட்ட நிதி உதவிகள் அனைத்தையும் தட்டாமல் வழங்கிவந்தேன். அதற்கு அவரும் பல தடவைகள் எனக்கு நன்றி தெரிவித்திருந்தார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வோதய வளாகத்தில் புதிய அலுவலகக் கட்டிடத்தை திறந்துவைக்கும் தொண்டர் திருநாவுக்கரசு

திருநா அண்ணர் அடுத்துவந்த பதினொரு ஆண்டுகள் ஸ்ரீலங்கா சர்வோதய சிரமதானச் சங்கத்துடன் இணைந்து பணியாற்றினார். வட பகுதியின் பல பகுதிகளிலும் கிராமோதய நிலையங்கள் அமைத்து விவசாயப் பண்ணைகள், சிறுவர் பாடசாலைகள், சுகாதார சேவை நிலையங்கள், மலிவு விலைக் கிராமக் கடைகள், சேமிப்பு வங்கி நடைமுறைகள், முத்தமிழ் கலை இலக்கிய நிகழ்வுகள், சிரமதானங்கள், அன்னதானங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் என்று பல நிகழ்வுகளின் மூலம் கிராமங்களை எழுச்சியடையச் செய்தார்.

இதைப்பற்றிய தன் கருத்தினை பதிவுசெய்துள்ள புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அதிபரான எஸ்.கே.சண்முகலிங்கம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரியரத்தினா தலைமையிலான சர்வோதயத்தில் தொடர்பு வைத்து வடமாகாண அமைப்பாளராக நியமனம் பெற்று அதன் தலைமைக் காரியாலயத்தைப் புங்குடுதீவில் அமைத்து அமரர் கு.வி.செல்லத்துரை, நாக.பத்மநாதன் போன்றவர்களின் கூட்டு முயற்சியுடன் சிறந்த முறையில் தொண்டாற்றினார். இலங்கைச் சர்வோதய சிரமதான சங்கத்தின் நிதி நன்கொடைகளைப் பயன் படுத்தி புங்குடுதீவிலுள்ள அனைத்துக் குளங்களையும் ஆழமாக்கி புனரமைத்தார். அத்துடன் சிறிய ஒழுங்கைகள் அனைத்தையும் வாகனப் போக்குவரத்துச் செய்யக்கூடிய பாதைகளாக சர்வோதய அமைப்பின் செலவிலேயே மாற்றியமைத்தவர்." (திருமலர், 2001).

திருநா அண்ணர்- ஏ.ரீ.ஆரியரத்தினா உறவில் 1983இல் பாரிய விரிசல் ஏற்படும்வரை இத்தொடர்பு பெருமளவிலான நிதியை புங்குடுதீவில் காணிகளை கொள்வனவு செய்யவும், கட்டிடங்களைக் கட்டிக் கொள்ளவும், வேலைத்திட்டங்களை




வேலணை துறையூரில் சர்வோதய கிராமோதய கட்டிடத் திறப்பு விழாவின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வேலணை துறையூரில் சர்வோதய கிராமோதய கட்டிடத் திறப்பு விழாவின்போது

முன்னெடுக்கவும் உதவியது. அவருக்கு புங்குடுதீவுக்கு அப்பாலும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட தாயகத்தின் பல பிரதேசங்களிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய ஏராளமான நிதிவளங்களையும் பெற்றுக்கொடுத்தது. 1983இற்குப் பின்னர் சர்வோதய தலைமைச் சங்கத்தினால் வடபகுதி அபிவிருத்தித் திட்டங்கள் படிப்படியாக ஓரங்கட்டப்படுவதையும், வடபகுதிக்கென வெளிநாடுகளால் வழங்கப்பட்ட நிதி தன்னை வந்தடையாமல் பிற மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதையும் அவரால் கண்டறிந்து கொண்டபின்னும் மௌனமாக இருக்க முடியவில்லை. அதனால் அவ்வாண்டிலிருந்து தாய்ச்சங்கத்துடனான தொடர்புகளைத் துண்டித்து, வட இலங்கை சர்வோதயம் என்ற அமைப்பினைத் தனியாகத் தாபித்து 1984 முதல் சுதந்திரமாக இயங்கத் தலைப்பட்டார்.

1983 இனக்கலவரத்தின் பின்னர் வடபுலத்தின் சமூக வாழ்க்கைநிலைமை படிப்படியாக சீர்குலைந்து, அரச நிர்வாகம் ஸ்தம்பிதமடைந்து, அரசின் திட்டமிட்ட பொருளாதாரத்தடை, மின்சாரத் தடை, யாழ்ப்பாணப் பெருநிலத்துடனான தென்னிலங் கையின் போக்குவரத்துத் தடை, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் மண்ணெங்கும் இலங்கை இராணுவப் படையெடுப்புகள், உள்ளகப் புலப்பெயர்வுகள் என ஒரு போர்க்காலச் சூழலுக்குள் எமது மண்ணும் மக்களும் தள்ளப்பட்டு இயல்பு வாழ்வைத் தொலைத்திருந்த வேளையில் இலங்கை சர்வோதயச் சிரமதானச் சங்கத்தின் தொடர்புகளும் திருநா அண்ணருடன் முற்றாக முடிவுக்குக் கொண்டவரப்பட்டுவிட்டன.



மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சர்வோதய நிலையத்தில் தொண்டர் திருநாவுக்கரசு உரையாற்றுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநா அண்ணரும் சர்வோதய இயக்கமும்

திருநா அண்ணருக்கு காலவோட்டத்தில் அவர் வரித்துக்கொண்ட அரசியல்பாதை கசந்தது. தான் கனவுகண்ட தமிழ் மக்களின் சமூக முன்னேற்றத்தை அரசியல் பாதையின் மூலம் கண்டுவிட முடியாது என்று அறிந்துகொண்டார். அரசியல் செயற்பாடுகளால் கட்சிக்கும், அதன் தலைவர்களுக்கும், அவர்களை ஆட்சிக் கதிரைகளில் தக்கவைக்கும் முயற்சிகளுக்குமே முன்னுரிமை வழங்கப்படுவதை அவரது அனுபவ ஞானம் படிப்படியாகப் புரியவைத்திருந்தது. அரசியல் தலைவர்கள் வேறு சமூகத் தலைவர்கள் வேறு என்பதையும், இருவரது பாதைகளும் வெவ்வேறு திசைகளிலேயே எப்போதும் பயணிப்பவை என்பதை அவர் உணரத் தலைப்பட்டார்.

தனது கிராமத்தில் தன் சுற்றாடலில் இருந்து வந்த சில சமூக நலன் நாடிய பெரியார்களையும் அவர்களது பாதைகளையும் அவதானிக்கத் தொடங்கினார். அன்றைய காலகட்டத்தில் தமிழாசிரியர் சங்கத் தலைவராகப் பணியாற்றிய திரு. கு.வி. செல்லத்துரை போன்றோர் வழங்கிய ஆலோசனைகள், வழிகாட்டல் என்பன அவரை கிராமம் சார்ந்த அபிவிருத்திப் பணிகளில் முழுநேரமும் ஈடுபடுத்தத் தக்கதான மனத் திடத்தை அவருக்கு வழங்கியிருந்தன.

ஊர்காவற்றுறைத் தொகுதியின் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினராகப் பின்னாளில் தெரிவுசெய்யப்பட்டிருந்த திரு. வே.க.சோமசுந்தரம் அவர்கள் ஏற்கெனவே தீவகத்தில் சமூகப் பணிகள் பலவற்றை ஆற்றி திருநா அண்ணரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமதிப்புக்குரியவராக வலம்வந்திருந்தார். அவரும் திருநா அண்ணரின் சமூகப் பணிகளை இளவயதிலிருந்தே அறிந்திருந்தார். அதனைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தியும் வந்திருந்தார்.

"மண் மறவா மனிதர்கள்" என்ற தனது நூலில் வி.ரி. இளங்கோவன் அவர்கள் திருநா அண்ணரைப்பற்றிப் பேசும் ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"சாமி தம்பு அவர்கள் யோகாப்பியாசம், தியானம் என்பன குறித்து திருவுக்கு பெரிதும் அறிந்துகொள்ள உதவினார். யோகசுவாமிகள் ஆச்சிரமத் தொடர்பும் அங்கு பணியாற்றும் சுவாமிகளின் ஆசிகளும், வாழ்த்துக்களும் திருவின் உள்ளத்தை செம்மையாக்கின. இல்லற வாழ்வை ஒதுக்கி பிரம்மச்சாரியாகவே பணிகளைத் தொடர்ந்தார். வித்துவான் பொன். கனகசபை, பண்டிதர் சரவணனார் ஆகியோர் திருவின் தமிழறிவு வளரவும் பணிகள் சிறக்கவும் ஊக்கம் கொடுத்து வந்தனர்." (வி.ரி.இளங்கோவன், மண் மறவா மனிதர்கள், 2011).

நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் நாம் அறிந்தோ அறியாமலோ எமது மனதினுள் சில விருப்பத்துக்குரிய நபர்கள் புகுந்து ஒளித்துக்கொண்டிருப்பார்கள். பள்ளிப் பருவத்திலேயே இது தொடங்கிவிடுகின்றது. எமக்கு ஒரு ஆசிரியரைப் பிடித்துவிட்டால் அவரது பாடமும் எமக்கு அத்துப்படியாகி விடுகின்றது. அதே வேளை அவரது சில குணாதிசயங்களும் நம்முடன் ஒட்டிக் கொள்கின்றன. நாம் காலக்கிரமத்தில் அவரது குண நலன்களை எம்முடைய வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டியாகக் கொண்டு விடுவதும் உண்டு. திருநா அண்ணரின் வாழ்வில் வினோபா பாவே அத்தகைய ஒரு முக்கிய கதாபாத்திரமாக இளவயதிலிருந்தே விளங்கியுள்ளார்.



வினோபா பாவே மறைந்தபின் பாரதரத்னா விருது வழங்கியவேளை வெளியிட்ட நினைவு முத்திரை 1983

வினோபா பாவே (விநாயக் நரகரி பாவே 11.09.1895-15.11.1982) ஒரு இந்திய அறப்போராளியும், சிறந்த இந்து ஆன்மீகப் போதகரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள் ஆதரவாளரு மாவார். இவரே மகாத்மா காந்தியின் ஆன்மீக வாரிசாக கருதப்படுபவர். இவர் மராட்டிய மாநிலம் (மும்பை மாவட்டம்), கொலபா எனும் கிராமத்தில் கொங்கணஸ்த் பிராமணர் குலத்தில் நரசிம்புராவ் பாவே-ருக்மணிதேவி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். இவரது குடும்பத்தினர் கொங்கணி/மராத்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். மகாத்மா காந்தியுடன் இணைந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டவர் விநோபா பாவே. இந்தியாவில் பெரும் நில உரிமையாளர்கள், நிலம் இல்லாதோருக்கு தாமாக முன்வந்து தமது நிலங்களில் ஒரு பகுதியைக் கொடையாக அளிக்க முன்வரவேண்டும் என்ற "நிலக்கொடைத் திட்டத்தை" (பூமிதானம்) 1951 ஆம் ஆண்டு வினோபா பாவே தொடக்கிவைத்தார்.

1940களின் இறுதியில் தெலுங்கானா பகுதிகளில் இந்திய பொதுவுடைமைக் கட்சி ஆயுதமேந்திய கிளர்ச்சி ஒன்றை நடத்திக் கொண்டிருந்தது. "தெலுங்கானா போராட்டம்" என்று இதனை வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். நிலமற்ற ஏழை விவசாயிகளின் ஆதரவு இந்த கிளர்ச்சியாளர்களுக்குப் பெருவாரியாக இருந்தது. இந்தப் புரட்சியை அடக்குவதற்கு மாநில மற்றும் மத்திய அரசாங்கங்கள் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டன. அப்போது வினோபா பாவே நிலமின்மையால் தான் மக்கள் ஆயுதமேந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள், அரசிடமிருந்து இவர்களுக்கு நிலம் கிடைக்கப்படுவதே இல்லை, இச்சிக்கலைத் தீர்க்க நிலமுடையவர்களே தாமாக முன்வந்து நிலக்கொடையளிக்க வேண்டுமென்று வேண்டினார். நிலக்கொடை இயக்கம் அல்லது பூமிதான இயக்கம் (பூதான்) என்பது இந்தியாவில் சமூக இயக்கமாக பின்னாளில் உருவெடுத்தது.

இதை ஏற்றுக்கொண்ட பலரும் தமது நிலத்தின் ஒரு பகுதியைத் தானம் செய்ய முன்வரவே, இது ஒரு பெரிய இயக்கமாகப் பின்னாளில் உருவானது. வினோபா பாவே இந்தியாவெங்கும் பயணம் செய்து நிலக்கொடை இயக்கத்துக்காக பிரச்சாரம் செய்தார். அவருடைய "சர்வோதய ஆச்சிரமம்" இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியக்கத்தை ஒருங்கிணைத்து நடத்தியது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இவ்வியக்கத்தால் நன்கொடையாக சேகரிக்கப் பட்டன. பூமிதான இயக்கம் செயற்படத் தொடங்கிய இந்நாள் இன்றும் பூமிதான நாளாகக் கொண்டாடப்படுகிறது. பூமிதான நாள் என்பது ஒவ்வோர் ஆண்டிலும் வரும் ஏப்ரல் 18 ஆம் நாள். வினோபா பாவே 13 ஆண்டுகள் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நடைப்பயணமாகவே பயணித்து 2,95,054 ஏக்கர் நிலத்தைத் இயக்கத்திற்காகத் தானமாகப் பெற்றார். வினோபா பாவேயின் மிகச்சிறந்த தேசிய சேவைகளை பாராட்டி அவரது மறைவுக்கு பின் 1983ல் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.

திருநா அண்ணர் புங்குடுதீவில் வீதிகளை அகலிக்கும் பணியை இளவயதில் மேற்கொண்டபோது விநோபா பாவேயின் நிலக்கொடைத் திட்டத்தையே தமக்கேற்ற வகையில் பயன்படுத்திப் பிரச்சாரம் செய்து வந்தார். இதன்வழியாகப் பல காணித் துண்டுகளைப் பெற்று புங்குடுதீவின் குச்சொழுங்கைகளை அகலிக்க இவரால் முடிந்துள்ளது. மேலும் 1974ஆம் ஆண்டு வினோபாஜி அடிகளின் பூமிதான இயக்கத்தில் இணைந்து இந்திய-இலங்கை பாத யாத்திரையை வடபகுதிக்குள் திருநா அண்ணர் தலைமை தாங்கி நடாத்தியதையும் இங்கு வரலாற்றுத் தேவைக்காகப் பதிவுசெய்யவேண்டியுள்ளது.


வினோபா பாவே, மகாத்மா காந்தி அடிகள், அவர்களது சர்வோதயச் சிந்தனைகள் என்பன திருநா அண்ணரை வெகுவாகக் கவர்ந்து அவரது சிந்தனையை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டன. அதே வேளையில் அவருடன் தொடர்பிலிருந்த தீவகத்தின் சமூகப் பெரியார்களும் 1958 முதல் தென்னிலங்கையில் ஏ.ரீ. ஆரியரத்தினா என்ற பாடசாலை ஆசிரியரால் தொடக்கப்பட்டு துரித கெதியில் ஒரு தொண்டு நிறுவனமாக வளர்ச்சிபெற்று பலரதும் கவனத்தை ஈர்த்து வந்திருந்த இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தைப் பற்றியும் சில செய்திகளை அவரிடம் தெரிவித்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் 1972ஆம் ஆண்டுக் காலப்பதியில் ஒரு நாள், சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்தினா அவர்கள் தனது பிரச்சாரப் பணிகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருப் பதாகவும் மறுநாள் மாலை ஒரு பொதுக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருப் பதாகவும் அவருக்கு ஒரு செய்தி கிட்டியிருந்தது.

அவர்கள் என்னதான் செய்கிறார்கள் என்று பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் திருநா அண்ணர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று அந்தப் பொதுக்கூட்டத்தில் பார்வையாளராகப் பங்கேற்றிருந்தார்.

இவ்விடத்தில் தலைவர் ஏ.ரீ.ஆரியரத்தினா பற்றிய சிறு அறிமுகமும் தேவைப்படுகின்றது.



சர்வோதய தலைவர் கலாநிதி ஏ.ரீ.
ஆரியரத்தினாவுடன் நூலாசிரியர்

தீவிர பௌத்த குடும்பமொன்றிலிருந்து அஹங்கமகே டியூடர் ஆரியரத்தினா 5.11.1931இல் காலி மாவட்டத்தில் உணவத்துன என்ற கிராமத்தில் பிறந்தவர். காலி மஹிந்தா கல்லூரியில் படித்து, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சிக்காகச் சேர்ந்தவர். கொழும்பு நாலந்தா கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு 1972வரை ஆசிரியராகப் பணியாற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் நகரச் சூழலில் கல்வி கற்று வந்த மாணவர்கள் சிலரை சிங்களக் குக்கிராமமொன்றுக்கு அழைத்துச் சென்று கிராம வாழ்க்கை பற்றியும், அவர்களின் கூட்டுமுயற்சியிலான வாழ்வு முறைகளையும் உணரச் செய்தவர். அதன்மூலம் காந்திஜியின் கிராம சுயராச்சியத்தைப் பற்றிய சித்தாந்தங்களை நகர்ப்புற மாணவர்களுக்குப் புகட்டியவர். அவர்களின் உடல் உழைப்பினை தானமாகப் பெற்று கிராமங்களுக்கு வழங்கியவர். சிரமதான சேவையின் வலிமையை இளையோரிடம் விதைத்து, அவர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்தியவர். 1958 ஆம் ஆண்டு சர்வோதய இயக்கத்தை தனது மாணவர்களின் உதவியுடன் உருவாக்கியவர். தனது அனுபவங்களை “தெல்கஹ யட்ட விப்லவயக்” (Revolution under the breadfruit tree- ஈரப்பலா மரத்தின் கீழ் உருவாகிய புரட்சி) என்ற தலைப்பில் தனது வாழ்க்கை வரலாறாக எழுதியவர். அவரது புதிய கிராமோதய தலைமைத்துவ சித்தாந்தங்களை கௌரவித்து 1969ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ராமொன் மக்சேசே யின் சமூகத் தலைமைத்துவ விருது (Ramon Magsaysay Award-1969) வழங்கப்பட்டது. பின்னாளில் 1972இல் அவர் தனது ஆசிரியத் தொழிலைக் கைவிட்டு முழுநேர சர்வோதய இயக்கத்தை இலங்கைத் தீவு முழுவதும் விரிவாக்கம் செய்ய முடிவுசெய்திருந்த நிலையில் அப்போதுதான் ஆரம்ப



சர்வோதய தலைவர் ஏ.ரீ.ஆரியரத்தினாவை 1972களில்
மொரட்டுவையில் சந்தித்து உரையாற்றும் தொண்டர் திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப் பிரச்சாரங்களை தொடங்கியிருந்தார். அதன் ஒரு கட்டமாகவே யாழ்ப்பாணத்திற்கும் ஆரியரத்தினா வந்திருந்தார்.

அன்றைய தினம் கிராம எழுச்சி பற்றி சர்வோதயத் தலைவர் ஏ.ரீ.ஆரியரத்தினா அவர்கள் ஆற்றிய உரை திருநா அண்ணரை வெகுவாகக் கவர்ந்திழுத்திருந்தது. தான் அறியாமல் இளவயது முதல் மேற்கொண்டுவரும் சிரமதானப் பணிகளுக்கு ஆரியரத்தினா ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருந்ததை அவரால் உணரமுடிந்தது. சிரமதானத்தின் மூலமான மக்கள் எழுச்சியின் மூலமே கிராம வளர்ச்சியை வெற்றிகரமாக அடையமுடியும் என்ற கருத்தினையே சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினாவும் அங்கு வெளிப்படுத்தி யிருந்தார்.

தன் கிராமத்தின் சமூகப்பணிகளை தொடர்ந்து மேற்கொள் வதற்கு, தேசியரீதியில் கட்டமைக்கப்பட்ட இத்தகைய சமூக நல நிறுவனங்களின் துணையை நாடுவது மேலும் வசதியாக இருக்கும் என்று திருநா அண்ணர் நம்பிக்கைகொண்டார். அன்றைய உரை நிகழ்ச்சி முடிந்ததும், திருநா அண்ணர் தலைவர் ஆரியரத்தினாவை அணுகித் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். முதல் சந்திப் பிலேயே சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினாவின் கவனத்தைக் கவர்ந்துவிட்ட திருநா அண்ணர் அவரது அழைப்பின் பேரில் பிறிதொரு நாளில் மொரட்டுவைக்குப் பயணமானார். அங்கு தலைவர் ஆரியரத்தினாவையும், அவரது இலங்கைச் சர்வோதய சிரமதானச் சங்கத்தின் துறைத் தலைவர்களையும் சந்தித்து உரையாடினார். அதைத் தொடர்ந்து சில காலங்களில் இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் இணைப்பாளராகத் திருநா அண்ணர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருநா அண்ணர் 1972ஆம் ஆண்டு ஆடி மாதம் 23ஆம் நாள் இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் வட வடமாகாண இணைப்பாளரான வேளையில் அவருக்கு வயது 33. வடமாகாண இணைப்பாளரான கையோடு, புங்குடுதீவில் தனது அலுவலகத்தைக் கட்டமைத்துக்கொண்டார். சர்வோதயத்தில் இணைந்து தத்தம் கிராமங்களில் சமூக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க விரும்பும் கிராமோதய ஊழியர்களை சந்தித்தார். வட மாகாணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOhA JPL

கிராமங்கள் தோறும் சர்வோதயக் கொள்கைகளை அறிமுகப்படுத்தி, பல தொண்டர்களை கிராமங்கள் தோறும் திரட்டத் திட்டமிட்டார். அதற்காக மீண்டும் கிராமங்கள் தோறும் கூட்டங்களை ஒழுங்கு செய்தார்.

முன்னர் அரசியல் தொண்டனாகக் கிராமங்களை வலம்வந்த திருநா அண்ணர் இப்போது சர்வோதயத் தொண்டனாக/சமூகத் தொண்டனாக அதே கிராமங்களுக்குள் மீண்டும் நுழைந்தார். இதனால் ஏழை மக்கள் பலர் சர்வோதய உதவித் திட்டங்களுள் உள்வாங்கப்பட்டனர். பல தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கிராம மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களைப் பெற்றுப் பெரிதும் நன்மையடைந்தனர். சர்வோதய அமைப்பினூடாக தனது நற் பணிகளை வடபகுதி மக்களுக்கும் திருநா அண்ணர் இலகுவாகவே விரிவாக்கம் செய்தார். அதற்கு வசதியாக ஏற்கெனவே கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள் வியாபித்திருந்தன. பல செயற்கரிய திட்டங்களைத் தீட்டி கிராமங்கள் தோறும் சமூகப் பணிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் சிரமதானப்



கேரதீவு சர்வோதய மாதிரிக் கிராமத்தில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி உப்புநீரை நன்னீராக்கும் பரீட்சார்த்த வேலைத்திட்டம். நிற்பவர் தொண்டர் திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளையும் அவர்களின் உதவியுடன் மேற்கொண்டார். கிராம மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கும் நலன்களுக்கும் ஏற்புடைய வகையில்அரிய பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வெற்றிகண்டார்.

“அகில இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்தினாவின் தொடர்பு திருவின் பணிகளுக்குப் பெரிதும் கைகொடுத்தது. அகில இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் உபதலைவராகத் திரு தெரிவானார். பலமுறை தலைவர் ஆரியரத்தினாவை வட பகுதிக்கு அழைத்து, ஏழை மக்களின் வாழ்வையும், அபிவிருத்தி செய்யவேண்டிய பகுதி களையும், அதன் அவசியத்தையும் அரசின் புறக்கணிப்பையும் அவருக்குத் தெளிவுபடுத்தினார். வெளிநாடுகளிலிருந்து அபிவிருத்திப் பணிக்கென ஆரியரத்தினா பெற்றுக்கொள்ளும் பணத்தில் வடபகுதிக்கென வருடம் தோறும் இலட்சக்கணக்கான ரூபாய்களை உரிமையோடு வாதிட்டுப் பெற்று வடக்கின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தினார்.” (வி.ரி.இளங்கோவன், மண் மறவா மனிதர்கள், 2011).

திருநா அண்ணர் நீண்டகாலமாகவே தமது பொதுப் பணிகளுக்குத் தன்னை மட்டும் முழுமையாக அர்ப்பணிக்காது தனது தாயார் க.பார்வதிப்பிள்ளை, குடும்பத்தினரான சகோதரி க.புஷ்பமணி, பெறாமகள் சகோதரி பொ.ஜமுனாதேவி ஆகியோரையும் இப்பணியில் முழுமையாகத் தம்மை அர்ப்பணிக்க ஊக்குவித்தார். இறுதியில் அவர்களை சர்வோதய ஜீவதானி களாக்கிப் பெருமைப்படவும் வைத்தார். அவர்களின் அன்போடும் ஆதரவோடும் பொறுப்போடும் இயங்கிய அவர் வேறும் பல குடும்ப உறவுகளையும், துறைசார் அனுபவம் கொண்ட வெளியார் களையும் சர்வோதய வளாகத்தில் இணைத்துச் சர்வோதய இலட்சியங்களை வென்றெடுக்க முனைந்தார்.

புங்குடுதீவின் பெருங்காட்டில் இருந்த சர்வோதய வளாகம் படிப்படியாக சர்வோதய தாய்ச் சங்கத்தின் நிதி உதவியுடன் அயல் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டது. புங்குடுதீவு வளாகத்தில் காலக்கிரமத்தில் படிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்கும்பான் மேற்கு கிராமோதய நிலையத்தில் நூலகத் திறப்பு விழாவில் தொண்டர் திருநாவுக்கரசு உரையாற்றுகிறார். அருகில் அமர்ந்திருப்பவர் இந்நூலாசிரியர்)

படியாக பிரார்த்தனை மண்டபம், ஒன்றுகூடல் மண்டபம், சிறுவர் நூலகப்பிரிவொன்றினை உள்ளடக்கிய சர்வோதய மத்திய நூலகம், வரவேற்பு மண்டபம், ஓய்வு மண்டபம், தங்குமிட விடுதி மண்டபம், சிறு உற்பத்திப் பொருட்கள் பகுதி, விற்பனைப் பகுதி, கால்நடைகள் பராமரிப்புப் பகுதி, சிறு பயிர்கள் உற்பத்திப் பகுதி, களஞ்சியப் பகுதி, குசினிப் பகுதி, அலுவலகம், அணையா விளக்கு மண்டபம், சர்வோதய மலிவு விலைக்கடை எனப் பல பிரிவுகள் கட்டமைக்கப்பட்டு, வடமாகாண மத்திய நிலையமாக விரிவாக்கப்பட்டது. அந்த வளாகம் முழுவதும் தூய்மையும், இயற்கை அழகும் புனிதமும் நிரம்பியதாகத் திரும்பிய பக்க மெல்லாம் ஆன்மீக அமைதி குடிகொண்டதொரு புனித நிலையமாக திருநா அண்ணரின் வழிகாட்டுதலுடன், அவரது அன்புக்குரிய சர்வோதயத் தொண்டர்களால் படிப்படியாக விரிவாக்கப்பட்டது.

தலைவர் ஆரியரத்தினாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விருந்த திருநா அண்ணர், தலைவர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் பொழுதெல்லாம், அவரது பயணக் குழுவில் பெரும்பாலும் ஒவ்வொரு தடவையும் இணைக்கப்பட்டிருந்தார். 1982இல் சர்வதேச அபிவிருத்திக்கான பெல்ஜியம் மன்னர் விருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(King Boudouin Award for International Development, Belgium) கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்தினாவுக்கு வழங்கப்பட்டது. அவ்விருதினைப் பெற்றுக் கொள்ள சர்வோதயத் தலைவருடன் சிறப்பு விருந்தினராக திருநா அண்ணரும் சென்றிருந்தார். அரச மரபிற்காகத் தனது தனித்துவத்தை இழக்க மறுத்து தனது தேசிய உடையில், பாட்டா செருப்புடன் மேடையேறி பெல்ஜியம் மன்னரிடம் அந்த விருதைப் பெற்றுக்கொண்டவர் ஆரியரத்தினா என்று திருநா அண்ணர் கூறக் கேட்டிருக்கிறேன்.

1978 முதல் 1983 வரையிலான காலகட்டத்தில் திருநா அண்ணர் இந்தியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், ரஷ்யா ஆகிய நாடுகளுக்குப் பயணங் களை மேற்கொண்டிருந்தார். ஒவ்வொரு நாட்டுக்கும் போய் வரும்போதும், மாலை நேர சர்வோதய குடும்ப சந்திப்புகளில் தனது பிரயாண அனுபவங்களை சுவாரஸ்யமாக சர்வோதய ஊழியர்களுடன் பகிர்ந்துகொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அவரது வெளிநாட்டுப் பிரயாணங்களின்போது, தான் அவதானித்தவற்றை தனது கருத்துக்களுடன் அவர் வெளிப் படுத்தும்போது, பிரயாணக் கட்டுரையொன்றை வாசிக்கும் உணர்வே எனக்கு ஏற்படுவதுண்டு. வெளிநாட்டவரின் ஊக்கம், உழைப்பு, வளர்ச்சி என்பவற்றைக் கவனித்துவந்து சர்வோதயத் தொண்டர்களுக்கு அவர் எடுத்துரைத்தார். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வேலைசெய்யும் எமது ஊர் மக்கள், தாம் அங்கு வெளிப்படுத்தி வரும் கடின உழைப்பை எம் தாய்நாட்டில் வழங்கியிருந்தால் நாம் சொந்தக் காலில் என்றோ எழுந்து நின்றிருக்கமுடியும் என்று அவர் ஆதங்கப்படுவதையும் பல தடவைகள் கேட்டிருக்கின்றேன்.

வேலணைப் பிரதேசத்தின் முன்னாள் உதவி அரசாங்க அதிபராகவிருந்த திரு. கா.ஆ.தியாகராஜா அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிடும்போது, ஆரியரத்தினா அவர்களின் பார்வையில் திருநா அண்ணர் எவ்வாறு பார்க்கப்பட்டார் என்று தன் கருத்தை தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1986ஆம் வருடம் கதிர்காமத்தில் சமாதானப் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை அகில இலங்கை சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்தினா அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பல அமைப்புக்களைச் சார்ந்த பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள் வந்து கலந்துகொண்ட கூட்டம் அது. வவுனியா ஸ்ரீ சத்தியசாயி சமித்தியின் தலைவர் என்ற முறையில் நானும் மற்றும் பல அமைப்புகளைச் சேர்ந்தவர்களுமாக மொத்தம் ஐம்பது பேர் கலந்துகொண்டோம். ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமேயும் அங்கு வந்திருந்தார். கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்தினா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தனது பேச்சை தமிழில் மொழிபெயர்க்கும்படி கலாநிதி ஆரியரத்தினா என்னைக் கேட்டுக்கொண்டார். அன்றைய கூட்டத்தின் நோக்கம் பற்றியும் சர்வோதயத்தின் ஆக்கபூர்வமான பணிகளையும் கூறிவிட்டு, தமிழ்ப் பிரதேசங்களில் தமது செயற்பாடுகளைக் கூறும்போது, வவுனியாவில் ஒரு கதிரமலை, யாழ்ப்பாணத்தில் ஒரு திருநாவுக்கரசு இந்த இருவரும் ஆற்றும் சேவைக்கு நிகரே இல்லை என்றார். "இன்றைய சூழ்நிலையில் நாங்கள் வவுனியா வரையில் சென்று எமது சேவைகளைக் கவனிக்கமுடிகின்றது. ஆனால் யாழ்ப்பாணம் சென்றுவர பலவிதமான தடங்கல்கள் எமக்கு இருந்தபோதிலும் எவ்வித குறைபாடுகளும் இல்லாமல், எல்லோரும் வாயாரப் புகழ்ந்து பேசும்படியாகவும் மேலும் மேலும் அச்சேவை வளரவேண்டும் என்று வாழ்த்தும்படியாகவும் சேவையாற்றி வருகின்றார் ஒரு தமிழர். அவர்தான் புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் திருநாவுக்கரசு அவர்கள். அவரின் ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் அவருக்கு நிகராக எவரும் இல்லை என்றுதான் கூறுவேன்" என்றார். (கா.ஆ.தியாகராஜா, திருமலர் 2001).

திருநா அண்ணர் இலங்கைச் சர்வோதய சிரமதான இயக்கத்தில் இணைந்து பணியாற்றிய வேளைகளில் தாய்மண்ணின் அபிவிருத்திக்காக பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தார். அவர் தன் வாழ்நாள் முழுவதும் சமூகசேவைக்கெனத் தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டுமொத்தமாக அர்ப்பணித்துக்கொண்ட ஒரு தூய தொண்டர். அது அவரது சிந்தனை, வாக்கு, கருமம் அனைத்திலும் நிறைந்திருந்தது. அவரது சேவைகளை காலவாரியாகப் பிரித்து அரசியல் காலகட்டம், கிராமசபைக் காலகட்டம், சர்வோதய காலகட்டம், சர்வோதயத்தின் பின்னரான காலகட்டம் என்று வகுத்து அவற்றை தனித்தனியாக விளக்க முடியாதபடி அவரது பணிகள் ஒன்றுக்குள் ஒன்றாக இரண்டறக் கலந்து நின்றுள்ளன. இனி வரும் அத்தியாயங்களில், அவர் கிராம மட்டத்தில் சுகாதார சேவைக்கு ஆற்றிய பணிகள், தாய் மண்ணின் விவசாய சேவைக்கு ஆற்றிய பணிகள், கலை கலாச்சார வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள், கிராம நூலக சேவைக்கு ஆற்றிய பணிகள், சைவ சமயத்துத்துக்கும் ஆன்மீகத் துறைக்கும் அவர் ஆற்றிய பணிகள் என்ற வகையிலேயே தனித்தனியாக விளக்க முயன்றுள்ளேன். இருப்பினும் இவ்வியலில் அவர் இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்துடன் இணைந்திருந்த காலங்களில் ஆற்றிய பணிகளைச் சற்று விரிவாகப் பதிவு செய்திருக்கிறேன்.

**சர்வோதய கிராமோதய நிலையங்கள் அமைத்தல்**

புங்குடுதீவின் கல்வி வளர்ச்சி விடயத்தில் ஒவ்வொரு பாட சாலைக்கும் தரமான ஆசிரியர்களைப் பெறுவதற்கு திருநா அண்ணர் தான் சர்வோதய இயக்கத்தில் இணையும் முன்பிருந்தே தீவிரமாகச் செயற்பட்டு வந்திருந்தார். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் எதுவுமே இல்லாதிருக்கும் வகையில், தேவைப்படும் ஆசிரியர்களை தீவகத்திற்கு அனுப்பிவைக்கும் பொருட்டு, வடமாகாண கல்வித் திணைக்களத்தை அடிக்கடி வற்புறுத்தி வந்தார். ஆசிரியப்பணி புனிதமானதாகக் கருதப்பட்டாலும், பயிற்சியும் அனுபவமும் மிக்க சில தமிழ் ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலும் அதனை அண்டிய பெரிய நகர்ப்புறப் பாடசாலைகளிலும் வேலைசெய்வதையே தங்கள் வசதி கருதியும் தங்கள் பிள்ளைகளின் வசதிகருதியும் விரும்பியிருந்தார்கள். கஷ்டப் பிரதேசங்களில் அவர்கள் சிலகாலம் வேலைசெய்தே ஆகவேண்டும் என்ற அரசின் கட்டாயப்படுத்தலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரிலேயே அத்தகைய கஷ்டப் பிரதேசங்களில் அவர்கள் பணியாற்றிவந்தனர். புங்குடுதீவை கஷ்டப் பிரதேசமாகக் கருதி அங்குள்ள பாடசாலைகளுக்கு மாற்றம்பெற்று வருவதை பிற மாவட்ட ஆசிரியர்கள் தவிர்த்து வருவதையும் அறியநேரும் போதெல்லாம் திருநா அண்ணர் மனம் குமுறுவார். அதனால், கல்வி அறிவை தமது மண்ணில் அபிவிருத்திசெய்யச் சிறிதளவு முயலும் ஆசிரியர்களையாவது கண்டறிந்து அவர்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளை வழங்க எப்பொழுதும் தயார் நிலையிலேயே இருந்துவந்தார். தீவகப் பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களை அவர்களின் சொந்த இடத்தில் பணியாற்ற ஊக்கு விப்பதையும் தனது பணியாகக் கருதிச் செயற்பட்டு வந்திருந்தார்.

சர்வோதய வேலைத் திட்டங்களில் பாலர் பாடசாலைகள் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. இலங்கையில் சர்வோதயப் பணிகளை கிராமங்களுக்குள் கொண்டுசெல்ல அடிப்படைத் தளமாக தலைவர் ஆரியரத்தினா அவர்கள் பாலர் கல்வியையே வாகனமாகக் கொண்டிருந்தார். பாலர்களின் மனதில் சர்வோதயச் சிந்தனைகளை எளிதில் புகுத்தி, நல்லதொரு சமுதாயத்தை இலங்கையில் உருவாக்கலாம் என்று அவர் நம்பினார். அத்துடன், ஒரு பாலர் பாடசாலையை கிராமமொன்றில் உருவாக்கி அதில் கற்க வரும் பிள்ளைகளின் மூலம் அவர்களின் பெற்றோரையும் கவர்ந்திழுத்து அவர்களின் மூலமும் கிராம சுயராஜ்ஜியத் திட்டங்களை ஆரியரத்தினா கிராமங்களுக்குள் வெற்றிகரமாகக் கொண்டு சென்றிருந்தார். அதே கொள்கையை விரும்பி ஏற்ற திருநா அண்ணரும், புங்குடுதீவில் வட்டாரம் தோறும் சிறுவர் பாடசாலைகளை அமைத்து சிறுவர் கல்வி பெறவும், போசாக்கு உணவை கிராமத்துச் சிறுவர்கள் பெறவும் வழிவகுத்தார். சுகாதார சேவை நிலையங்களை அமைத்து குழந்தைகள் தடுப்பூசி பெறவும், சத்துணவுத்திட்டத்தின் மூலம் போஷாக்கான மா உணவு வகைகள் வழங்கவும், தாய்-சேய் சுகாதார நலன் நிலையங்களை அமைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், அவர்களது குழந்தைகளுக்கும் நிறையுணவு வழங்கிப் பராமரிக்கும் பணியையும் கிராமோதய ஊழியர்களின் மூலம் நடைமுறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினார். சர்வோதய நிதி உதவியுடன் வேலணை, மண்கும்பான், கேரதீவு உள்ளிட்ட பல இடங்களில் கிராமோதய நிலையங்களை நிரந்தரக் கட்டிடங்களில் கட்டி வழங்கினார். அவற்றில் பாலர் பள்ளியுடன் சுகாதார வேலைத் திட்டங்களையும், சமூக நலத்திட்டங் களையும் செயற்படுத்தினார். அவற்றில் சிறுவர் நூலகங்களையும் அமைத்து பாலர்களுக்குச் சிறுவயதிலேயே புத்தகங்களுடனான உறவை வளர்த்தெடுத்தார். இவ்வாறாக கிராமோதய நிலையங்களினூடாக பல தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகக் காரணமாகவும் இருந்தவர் திருநா அண்ணராவார்.

**கேரதீவு மாதிரிக் கிராமம்**



கேரதீவு மாதிரிக் கிராமத்தை நோக்கி

"புங்குடுதீவின் வடக்கே கேரதீவு என்பது வனாந்தரப் பகுதியாக இருந்தது. கவனிப்பாரற்றிருந்த இவ்விடத்தில் நல்ல மணலும் நன்னீரும் காணப்பட்டன. அக்காலத்தில் அக் கேரதீவுக் காட்டில் இருந்தே அப்பிரதேச மக்களும் அயல் பிரதேசத்தவர்களும் கட்டிடத் தேவைக்காக மணல் அகழ்வில் ஈடுபட்டனர். இந்த சமூக விரோதச் செயற்பாடுகளினால் கேரதீவுக் காட்டுப்பிரதேசம் படிப்படியாக அழிக்கப்பட்டது. இதனைத் தடுக்கவேண்டும் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணர் திரு அவர்கள் உணர்ந்து உடனே அதனை ஒரு குடியேற்றத்திட்டமாக மாற்றவேண்டும் எனத் திட்டமிட்டார். யாழ்ப்பாண அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர், உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அக்காணியை வீடற்றிருந்த 117 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கச் செய்தார். இதனால் கேரதீவு என்னும் பிரதேசத்தை சர்வோதய கிராமமாக மாற்றினார் என்று புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் ஒரு பதிவில் குறிப்பிட்டுள்ளார். (எஸ்.கே. சண்முகலிங்கம், திருமலர் 2001).

சர்வோதய மாதிரிக் கிராமம் உருவாக்கப்பட்ட வேளை அங்கு மக்களைக் குடியேற்றி செழிப்புமிக்க ஒரு கிராமமாக மாற்ற திருநா அண்ணரும் அவரது முழுமையான சர்வோதயக் குடும்பத்தினரும் தமது பங்களிப்பை வழங்கிவந்தனர். அத்துடன் கேரதீவில் நீண்டகாலமாக இருந்து வந்த ஐயனார் கோவிலைப் புனரமைத்து திருநா அண்ணரின் இளைய சகோதரர் விநாயக மூர்த்தி, க.மகாலிங்கம், செல்வி பொ.ஜமுனாதேவி, செல்வி க.புஷ்பமணி அவர்களுடன் க.ஜெயவீரசிங்கம், க.ஜெயக்குமார், நா.சேனாதிராசா போன்றோரின் பொறுப்பில் அதன் பராமரிப்பினை ஒப்படைத்திருந்தார்.

அந்த மண்ணில் மன்னார் பிரதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட வீரியம்கொண்ட பனைவிதைகளையும், விவசாயத் திணைக்களத் திலிருந்து பெற்ற பழ மரங்களையும் நட்டுவைத்து, கேரதீவுப் பிரதேசத்தை வளம் கொழிக்கும் புதுக் கிராமமாகப் பொலிவுபெறச் செய்தார்.

பின்னாளில் 1983இல் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு மலையகத்திலிருந்து நிர்க்கதியாக வந்திருந்த அகதிகளையும் கேரதீவு மாதிரிக் கிராமத்தில் தற்காலிகமாகக் குடியமர்த்தி பின்னாளில் ஜெயபுரம், திருக்கேதீச்சரம் போன்ற இடங்களில் மாதிரிக் கிராமங்களை உருவாக்கி அங்கும் அவர்களை மீள்குடியேற்றம் செய்ய அரசினருக்கு உதவியாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கேரதீவு ஐயனார் மடம்

**தேசிய சேமிப்பு வங்கியும் சேமிப்புப்பழக்கமும்**

திருநா அண்ணர், பல்வேறு சர்வோதயக் கிராமங்களிலும் வாழ்ந்துவந்த சிறுவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஊக்கவிக்கும் நோக்கில், நகரிலிருந்த இலங்கை தேசிய சேமிப்பு வங்கி, ஹட்டன் நேஷனல் வங்கி ஆகியவற்றின் முகாமையாளர் களுடன் தொடர்புகொண்டு, அவர்களைக் கிராமத்துக்கு வரவழைத்து சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குகளை தொடக்கி வைத்திருந்தார். ஏறத்தாழ 1000 சிறுவர்களுக்கு இவ்வாறாகச் சேமிப்புப் புத்தகங்களைத் திறந்துகொடுத்து, சேமிப்புப் பழக்கத்தை இளவயதிலேயே அவர்களிடம் புகுத்தினார். அன்று அவரின் தூண்டுதலால் சேமிப்புப் பழக்கத்துக்கு உள்ளாகிய பல சிறுவர்கள் இன்று புலம்பெயர்ந்து, லண்டன் கனடா உள்ளிட்ட புகலிட நாடுகளில் பெரும் வர்த்தகப் பிரமுகர்களாக இருக்கின்றனர் என்பதை அறியமுடிகின்றது. சிறுவயதில் அவர்கள் சர்வோதயத் தினால் உள்வாங்கிய சேமிப்புக் கலாச்சாரமே தங்களை வாழ்வில் உயர்த்தியது என்று அவர்கள் என்னிடமே சொல்லியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வோதய சாந்திசேனை தலைமைத்துவப் பயிற்சியாளர்கள்
புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில்

**சர்வோதய மலிவு விலைக் கடைகள்**

பின்தங்கிய கிராமங்களில் ஆங்காங்கே சிறு பெட்டிக் கடைகளில் அன்றாடப் பொருட்களை கொள்வனவு செய்யும் கிராமத்தவர்களுக்கு, தரமான பொருட்களும், சுகாதார நோக்கில் பராமரிக்கப் பட்ட தின்பண்டங்களும், மரக்கறி வகைகளும், மலிவு விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பும் கிடைப்பதில் பெருஞ் சிக்கல்கள் காணப்பட்டன. சில பிரதேசங்களில் பொருட்களின் விலைகள் மிக அதிகமாகவும், வர்த்தகர்களிடையே காணப்படும் நேர்மையற்ற விலை நிர்ணயங்களும் திருநா அண்ணரை சர்வோதய மலிவு விற்பனைக் கடைகளை உருவாக்கும் முடிவுக்குத் தூண்டியிருந்தன. அனைத்துக் கிளைகளுக்குமான ஓரிடப்படுத்தப்பட்ட மொத்தக் கொள்வனவின் காரணமாக குறைந்த விலையில் பொருட்களை வாங்கி, விநியோகிக்க முடிந்தது. அதன் பயனாக குறைந்த விலையில் தரமான பொருட்களை சர்வோதயக் கடைகளால் வழங்கவும் முடிந்தது.


இது கிராம மக்களை அதிக அளவில் சர்வோதயக் கடைகளைத் தேடிச் சென்று வாடிக்கையாளர்களாகி, தமது அன்றாடக் கொள்வனவுகளை மேற்கொள்ளும் வாய்ப்பினை வழங்கியது. படிப்படியாக, புங்குடுதீவில் வட்டாரம் தோறும் சர்வோதய மலிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைக் கடைகளை உருவாக்கி மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை மலிவு விலையில் வழங்கினார். இதற்கு வசதியாக, பூங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராகப் பணியாற்றியவரும் மட்டுவில், பண்டிதமணி அமரர் கணபதிப்பிள்ளை அவர்களின் பரம்பரையில் வழிவந்த வருமான கந்தர்மடத்தைச் சேர்ந்த திரு சுவாமிநாதன் அவர்களை சர்வோதய இயக்கத்தின் கணக்காளராக நியமித்து, அவரையே சர்வோதயக் கடைகளின் விரிவாக்கத்துக்கும் பொறுப்பாளராக திருநா அண்ணர் நியமித்தார். பின்னாளில் சர்வோதய இயக்கம் வேரூன்றிய பிற கிராமங்களிலும் சர்வோதயக் கடைகள் விரிவடையலாயின.

**தொல்புரத்தில் சர்வோதயப் பணி**

1979ஆம்ஆண்டு புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் சர்வோதய தலைமைத்துவப் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது. தமிழ்ப்பிரதேசங்கள் பலவற்றிலுமிருந்து சமூக சேவையில் நாட்டம் கொண்ட இளைஞர்களும் யுவதிகளும் பங்கேற்றிருந்த பாரிய பயிற்சித்திட்டம் அதுவாகும். சமூகநல அமைப்புகளின் அனுசரணை யுடன் தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள நூற்றுக்கும் அதிகமான பயிற்சியாளர்கள் இந்த முழுநேர



தொல்புரம் சர்வோதய நிலையத் திறப்புவிழாவின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமாதத் தலைமைத்துவப் பயிற்சி முகாமில் இணைந்து பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார்கள். பயிற்சிகளை வழங்க வென, சர்வோதய மத்திய நிலையத்திலிருந்து பல்வேறு பிரிவுத் தலைவர்களும், வடமாகாண அரச திணைக்களங்களில் இருந்து துறைசார் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தார்கள். சர்வோதய கிராம நூலகசேவைத்திட்டம் தொடர்பான பயிற்சிகளை வழங்கும் பொறுப்பினை திருநா அண்ணர் நம்பிக்கையுடன் என்னிடம் ஒப்படைத்திருந்தார். அப்பயிற்சி நெறியின் அனுபவங்களைப் பின்னணியாகக் கொண்டே 1989இல் "கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்" என்ற நூலை நான் வெளியிட்டிருந்தேன்.

அந்தப் பயிற்சிநெறியில் கலந்துகொள்ளவென தொல்புரம் மத்திய சனசமூக நிலைய நிர்வாக சபையின் அனுசரணையுடன் சனசமூக நிலையத் தலைவர் திரு. கா.சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளவென அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். அவர் வெற்றிகரமாகப் பெற்றுக்கொண்ட சர்வோதய தலைமைத்துவப் பயிற்சியின் பின்னர் தொல்புரம் பகுதிக்கான சர்வோதய கிராமோதய ஊழியராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவரது தலைமையில் தொல்புரம் கிராமத்தின் பொதுப்பணிகளும், சிரமதானச் செயற் பாடுகளும் வீறுடன் முன்னெடுக்கப்பட்டன.

"எமது சமூகப் பணிகளால் நன்கு கவரப்பட்ட அறங்காவலர் (க.திருநாவுக்கரசு) அவர்கள் எமது கிராமத்தில் தீவிர அக்கறை செலுத்தி பல வழிகளிலும் ஊக்குவிப்புகளை வழங்கிவந்தார். அங்கு சர்வோதயப் பணிகளுக்காக ஒரு காணியை முன்னின்று பெற்றுக்கொடுத்து அங்கே ஒரு சேவை நிலையம், நன்னீர்க் கிணறு, வரவேற்பு மண்டபம் பொதுக் குசினி என்பவற்றை அமைத்துத் தந்துதவியதுடன் இந்நிலையத்தினை வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான சர்வோதயத் தலைமை நிலையமாகவும் செயற்பட வழிவகுத்தார். 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழலினால் (கட்டடத் தொழிலாளர்கள் அதிகம் வாழ்ந்த எமது பிரதேசத்தில்) சீமெந்து தொடக்கம் சகல கட்டடப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதனால் தொழில் வசதியற்று பலரும் தவித்திருந்த வேளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு வயதுப் பிள்ளைகளின் போ'ாக்கு நிலைமை பற்றிக் கருணையுடன் விசாரித்து அவர்களின் போ'ாக்கு வளர்ச்சிக்கு உதவும் வகையில் காலை நேரத்தில் சத்துணவுக் கஞ்சி வழங்கவேண்டும் என்று தானே விருப்பம் தெரிவித்து, எம்மையெல்லாம் நேரில் அழைத்து அத்திட்டத்திற்கு வேண்டிய மூல உணவுப் பொருள்களையும் சமையல் உபகரணங்களையும் வழங்கி உதவினார். முதலில் 30 நாட்களுக்கென திட்டமிடப்பட்ட இப்பணி அறங்காவலர் க.திருநாவுக்கரசு அவர்களின் தூய நோக்கத்திற்கு அமைவாக புனிதமாகச் செயற்படுத்தப் பட்டிருந்தமையை நேரில் அவதானித்து மகிழ்ந்தமையால், அவர் மேலும் 30 நாட்களுக்கு அவ்வுதவியை நீடிக்கச் செய்தார். நாளாந்தம் 200இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் பசியாறி, வயிறு நிறைந்து சென்ற காட்சி எம்மால் என்றும் மறக்க முடியாதது." (கி.நடராசா, வட்டுக்கோட்டை, திருமலர் 2001).

**தலை மன்னார் பியர் வேலைத்திட்டம்**

இலங்கையைப் பிரித்தானியர் ஆண்ட காலத்தில், 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் 1820 ஆம் ஆண்டுக்கும் 1840 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், இலட்சக் கணக்கான இந்தியத் தமிழர் தமிழ் நாட்டிலிருந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாக இலங்கைக்குக் கூட்டிவரப்பட்டு இலங்கையின் மலையகப் பகுதிகளில் தொடங்கப்பட்ட கோப்பி, தேயிலை, இறப்பர்த் தோட்டங்களில் பணி புரிவதற்காக அமர்த்தப்பட்டனர். கடுமையான சுவாத்தியச் சூழ்நிலைகளில் வேலை வாங்கப்பட்ட இவர்களின் உழைப்பினால் உருவான பெருந்தோட்டங்கள் இலங்கையின் வெளிநாட்டு வருமானத்தின் பெரும்பகுதியை ஈட்டிக்கொடுத்தன. ஆனால் அவர்களின் சமூக பொருளாதார சூழ்நிலை கேள்விக்குறியாகவே இருந்தது. டொனமூர் அரசியலமைப்பு தோட்டத் தொழிலாளர்கள் வாக்குரிமை பெறு வதற்கு வழிவகுத்தது. ஆனால் தகுதிபெற்ற மூன்று லட்சம் தொழிலாளர்களில் 1,00,574 பேர் மட்டுமே வாக்குரிமை பெற்றனர். 1931 இலங்கை அரசாங்க சபைத் தேர்தலில் பங்கெடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களிடையே இடதுசாரி கட்சிகளின் செல்வாக்கை மட்டுப் படுத்தவும், பிரதிநிதிகளைக் குறைக்கவும் இவர்களது வாக்குரிமையை பறிக்கும் முயற்சியாக இது பார்க்கப்பட்டது.

பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறிய போது, சிங்களத் தேசியவாதிகள், மலையகத் தமிழர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இவர்களது நெருக்குதல்களினால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் 1948 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதி இலங்கைக் குடியுரிமைச் சட்டம் இல. 18 நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தின் படி 1948 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன் இலங்கையில் பிறந்திருப்பதுடன் அவருடைய இரண்டு தலைமுறையினரும் இலங்கையில் பிறந்திருந்தால் மட்டுமே இலங்கைக் குடியுரிமைக்கு ஒருவர் உரித்துடையவர் என்று வரையறுக்கப்பட்டது. இது மலையகத் தமிழ் மக்களுக்குப் பாதகமாக அமைந்தது. இவர்களில் பலர் தமக்கு முன் இரண்டு தலைமுறையினர் இலங்கையில் பிறந்திருந்தாலும் கூட அதை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் அவர்களிடம் இருக்கவில்லை. இதன் காரணமாகச் சுமார் 7 இலட்சம் மலையகத் தமிழர் நாடற்றவர் என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டதுடன், 1949 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் இல. 48 இன் மூலம் அவர்களது வாக்குரிமையும் பறிக்கப்பட்டது.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் என்பது இலங்கையில் நாடற்றவர்களாக இருந்த 975,000 இந்திய வம்சாவளித் தமிழர்களின் எதிர்காலம் தொடர்பாக, அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும், இந்தியப் பிரதமரான லால் பகதூர் சாஸ்திரிக்கும் இடையில் 1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 இல் கையெழுத்தான ஒப்பந்தத்தைக் குறிக்கும். இந்த ஒப்பந்தத்தின்படி மேற் குறிப்பிட்டவர்களில் 525,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதெனவும், 300,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதெனவும் முடிவானது. மீதி 150,000 பேர் விடுபட்டுப் போயினர். 1967 முதல் அமுலாக்கப்படத் தொடங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஒப்பந்தம் அம்மக்களை இந்தியக் குடியுரிமை பெறுவோர், இலங்கை குடியுரிமை பெறுவோர், நாடற்றவர்கள் என மூன்று கூறாகப் பிரித்தது.

நாடற்றவர்கள் பிரச்சினை தொடர்பாக 1949 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இந்திய, பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டமும், 1954 ஆம் ஆண்டில் கையெழுத்தான நேரு - கொத்தலாவலை ஒப்பந்தமும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அதிகம் பயன்படவில்லை. இலங்கைக் குடியுரிமைக்குத் தகுதியற்றவர்கள் எல்லோரையும் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியக் குடியுரிமை கோருபவர்களை மட்டுமே ஏற்றுக்கொள்ள இந்தியா சம்மதித்தது. நாடற்றவர்களில் பெரும்பாலானோர் இலங்கையிலேயே வாழ விரும்பியதால் இப் பிரச்சினை தீராமலேயே இருந்தது. இந்தப் பின்னணியிலேயே சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையில் கொண்டுவரப்பட்ட சட்டத்தினால் மலையகத்தில் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவந்த இலங்கை அரசாங்கம் இவர்களைத் தலைமன்னார் துறை முகத்தினூடாகவே இராமேஸ்வரத்துக்கு அனுப்பிவந்தது. புகையிரதம் மூலம் தலைமன்னார் வரை செல்லும் இந்த மக்கள் கப்பல் வரும்வரையில் மூன்று நாட்கள் வரை எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி, உற்றார் உறவினர்கள் இன்றி, தெருக்களிலும், மர நிழல்களிலும், துறைமுக வாயில்களிலும் அடுத்த கப்பலுக்காகக் காத்திருக்கவேண்டியிருந்தது. இவர்களை வெளியேற்றிய அரசின் தோட்டத் தொழில்துறை அமைச்சோ, சந்தா என்ற பெயரில் அவர்களின் சிறு வருமானத்தில் ஒருபங்கை உறிஞ்சி வாழ்ந்திருந்த தோட்டங்களின் தொழிற்சங்கங்களோ, அவர்களது உழைப்பை உறிஞ்சிய தோட்ட முதலாளிகளோ அவர்களது தலைமன்னார் அவல வாழ்வைக் கண்டு ஏதும் வசதிசெய்துதர இதயசுத்தியுடன் தயாராகவும் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகம் திரும்பும் இந்தியத் தொழிலாளர்களின் இந்த நிலையை நேரில் அவதானித்து வந்திருந்த திருநா அண்ணர், அந்த அப்பாவி மக்களுக்காக வெறுமனே வருத்தப்பட்டுக் கொண்டிருக்கவோ, அது தமது வேலையில்லை எனக் கண்டும் காணாதிருக்கவோ முயலவில்லை. எமது நாட்டின் பொருளா தாரத்தைக் கட்டியெழுப்பத் தமது இரத்தத்தை வியர்வையாகச் சிந்திய இம்மக்களின் பசிப்பிணியை அவர்கள் விடைபெறும் போதாவது போக்கவேண்டும் எனத் துணிந்து உணவு வழங்கும் பணியைத் தொடங்க முடிவுசெய்தார். சர்வோதய இயக்கத்தின் தலைமையுடன் தொடர்புகொண்டு, அவர்களது வரையறுக்கப்பட்ட நிதியுதவியுடன், முறையாகத் திட்டமிட்டு ஒரு உதவித் திட்டத்தை செயற்படுத்தினார். இதற்காகப் பல லட்சம் ரூபா செலவில் தலைமன்னார்த் துறையில் ஒரு தற்காலிக இடைத்தங்கல் நிலையமும் உருவாக்கப்பட்டிருந்தது. இந்த இந்திய வம்சாவளியினர் தமிழகத்திற்குத் திரும்பிச் செல்லும் போது அவர்களை தலைமன்னார் கப்பல் துறைமுகத்தில் உணவு, உறைவிடம் கொடுத்து மாளிகைத்திடல் என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்த இடைத்தங்கல் முகாமில் அவர்களுக்குத் தங்குமிட வசதிகள் செய்துகொடுத்தார். இதனால் ஏதிலிகளாக தலைமன்னாரில் மலையகத் தமிழர் நிழலுக்கும் மழைக்கும் ஒதுங்க இடமின்றியும், தாகம் தீர்க்க தண்ணீர் இன்றியும், உண்ண உணவின்றியும் அலையும் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

### 1983 கலவர காலத்தில் உதவி

கறுப்பு யூலை (ஆடிக் கலவரம்) என்பது ஜுலை 23, 1983 தொடக்கம் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள், இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்ததுமான ஒரு அவல நிகழ்வாகும். இது தமிழீழ விடுதலைப் புலிகள் 13 இலங்கை படையினரை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் பலாலி வீதியில் படுகொலை செய்ததின் தூண்டுதல் விளைவு எனப்பட்டபோதிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறையானது ஏற்கெனவே திட்டமிடப்பட்டு பொருத்தமான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து அரங்கேறியதொரு செயற்பாடாகவே நம்பப்படுகிறது.

கறுப்பு யூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினையானது பின்னாளில் நீண்டகால ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமான தென்பது வரலாறு. தென்னிலங்கையின் 1983 ஜூலை வன்கொடுமை யால் பாதிக்கப்பட்டு கப்பலில் காங்கேசன்துறைக்கு வந்துசேர்ந்த எமது தமிழ் உறவுகளின் நலன்பேணி அவர்களுக்கு தேனீர், உணவு வழங்கி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கும் பணியை சர்வோதய இயக்கத்தின் பிரதிநிதியாக இருந்து, திருநா அண்ணர், நடேஸ்வரா கல்லூரியில் முகாம் அமைத்துச் செயற்பட்டார். மாலை நேர ஊரடங்கு பிறப்பித்திருந்த அந்நாட்களில், காலை முழுதும் துறைமுகத்திலிருந்து பஸ் வண்டிகளில் வந்திறங்கும் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களை வரவேற்று, அவர்களுக்கு மன ஆறுதல் வழங்கி, உண்ண உணவு, அருந்தத் தேனீர் என வழங்கியதுடன் எங்குபோவதென்று அறியாதிருந்த பல குடும்பங் களை பாதுகாப்பாக அவரவர்களின் உறவினர்களைத் தேடி ஒப்படைப்பதும், பிரிந்து வந்த குடும்ப உறுப்பினர்களைத் தேடி ஒன்றுசேர்ப்பதும் சர்வோதய தொண்டர்களின் மனிதாபிமானப் பணிகளாகவிருந்தன. இரவு ஊரடங்கு வேளையில் பயணம் செய்வதற்கு எங்கள் வாகனத்தில் பொருத்திக் கொள்வதற்கு விஷேட அனுமதி அட்டையொன்றும் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. காங்கேசன்துறையிலிருந்து பணிமுடிந்த பின்னர் இரவு வேளையில் ஆனைக்கோட்டையிலிருந்த எனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் தன்னந் தனியனாக ஊரடங்கு வேளையில் வீடுதிரும்பிய திகில் அனுபவங்கள் இன்னும் என் மனதை விட்டு நீங்காதுள்ளது.

திருநா அண்ணர் தன் சமூக சேவைத்திட்டங்களை முன் னெடுக்கும்போது, தான் முன்னெடுக்கும் பணிகள் தொடர்பான ஏராளமான விஷயங்களை முன்னதாகவே அறிந்துகொண்ட பின்னரே தொடங்கியிருக்கிறார். தன் பணிக்கு அத்துறை தொடர் பான அனுபவசாலிகளையும், தேர்ச்சி பெற்றவர்களையும் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த எதிர் அணியில் இருந்தாலும் வலிந்துசென்று தொடர்புகொண்டு தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முயல்வார்.

நமசிவாயம் கருணாகர குருமூர்த்தி அவர்கள் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளராகப் பணியாற்றியவர். அவர் ஒரு முறை திருநா அண்ணர் பற்றிக் குறிப்பிடும்போது பின்வருமாறு பதிவுசெய்திருந்தார்.

"ஒருமுறை அவர் (திருநாவுக்கரசு ஐயா) ஏற்பாடு செய்து நடாத்திய ஆத்திசூடி முற்றோதல் விழாவுக்கு என்னையும் விருந் தினராக அழைத்திருந்தார். அங்கே அவர் உரையாற்றும்போது தானும் நானும் எதிரும் புதிருமான கட்சி அரசியலில் இருந்தமையை (அதாவது திருநாவுக்கரசு ஐயா அவர்கள் தான் முதலில் தமிழரசுக் கட்சியில் இருந்ததைக்) குறிப்பிட்டு, ஆனாலும் நாங்கள் எல்லோரும் பிரதேசத்தின் வளர்ச்சிக்காக, சுபீட்சத்துக்காக சேவை செய்பவர்கள். ஒன்றிணைந்து செயல் ஆற்றுபவர்கள் நண்பர்களாகி விட்டோம் என்றார்." (நமசிவாயம் கருணாகர குருமூர்த்தி, திருமலர் 2001)

போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகளின் இடைத்தங்கல் தரிப்பிட மாகவும் புங்குடுதீவு ஒரு காலத்தில் பெயர்பெற்றிருந்தது. போக்கு வரத்து சீர்குலைந்திருந்த போர்க் காலத்தில் திடீர் திடீரென ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படும் காலம் அது. நெடுந்தீவு மக்கள் படகுச் சேவையின்றி அந்தரித்து நின்ற காலங்களில் அவர்களை அன்புடன் அரவணைத்து உணவும் உறையுளும் வழங்குவதில் திருநா அண்ணரும் அவரது சர்வோதய குடும்பத் தினரும் காட்டிய விருந்தோம்பும் பண்புகள் அவர்களுக்கே உரிய சிறப்பியல்புகளாகும்.

1985ஆம் ஆண்டு குமுதினிப் படுகொலை நிகழ்வுகளின்போது பலருடன் இணைந்து திருநா அண்ணர் ஆற்றிய மனிதநேயப் பணிகளை தீவக மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகளின் அறுவடை

சர்வோதய வேலைத் திட்டங்கள் அனைத்தும், வவுனியாவுக்கு அப்பால் வடமாகாணம் முழுவதும் 1972இன் தொடக்க கால கட்டத்தில் திருநா அண்ணரின் வழிகாட்டலின்கீழ் இடம்பெற்றிருந்தது. பரந்ததொரு நிர்வாகப் பிரதேசமாக அது இருந்தமையால், சில காலங்களின் பின் வவுனியாவின் நிர்வாகத்தை பொறுப்பாக நடத்தும் வகையில் திருநா அண்ணருக்கு உதவியாக நிலையப் பொறுப்பினை தென்னிலங்கையைச் சேர்ந்த கதிரமலை என்பவரிடம் இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத் தலைவர் ஆரியரத்தினா ஒப்படைத்திருந்தார். சில காலங்களின் பின்னர், திரு. கதிரமலையின் பொறுப்புக்களை படிப்படியாக அதிகரித்து, அவரை வவுனியா மாவட்ட இணைப்பாளர் என்ற பதவியில் திருநா அண்ணருக்கு இணையான நிலையில் பதவி உயர்வுகளை ஆரியரத்தினா தன்னிச்சையாக வழங்கியிருந்தார். இதனால் படிப் படியாக, வவுனியா மாவட்டச் செயற்பாடுகள் திருநா அண்ணரிடம் இருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டு, கதிரமலையின் கைகளில் ஒப்படைக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட இணைப்பாளராகிய கதிரமலையின் செயற்பாடுகளுக்கு வழங்கப்படும் நிதிவசதி, மற்றும் மூலதனச் செலவினங்கள் படிப்படியாக தலைவர் ஆரியரத்தினாவால் அதிகரிக்கப்பட்டன. இதன் காரணமாக திருநா அண்ணரின் வேலைத்திட்டங்களுக்கான நிதி உதவிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. ஒருகட்டத்தில் அதிகம் போராடியே மத்திய நிலையத்திலிருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையில் திருநா அண்ணர் இருந்தார். இவை உண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்துக்கென, குறிப்பாகத் தமிழ்ப் பிரதேச மக்களுக்கெனச் சர்வதேச தொண்டர் நிறுவனங்களினால் வழங்கப்பட்டவை என்பதை திருநா அண்ணர் ஒரு கட்டத்தில் கண்டுகொண்டார்.

தமிழ் -சிங்கள மக்கள் பரவலாக வாழ்ந்துவந்த எல்லைப்புற மாவட்டமான வவுனியாவின் தமிழ்ப் பிரதேசங்களுக்குச் செலவிடப்பட்ட நிதி படிப்படியாகக் குறைக்கப்பட்டு, வவுனியா மாவட்டத்தின் சிங்களப் பிரதேசங்களுக்கும் பௌத்த விகாரைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் கைங்கரியங்களை பொறுப்பாளர் கதிரமலையின் ஊடாக தலைவர் ஆரியரத்தினா அவர்கள் மேற்கொண்டு வந்ததை அறிய நேர்ந்தபொழுது, காலனித்துவகால பிரித்தானியரின் பிரித்தாழும் தந்திரத்தை தலைவர் ஆரியரத்தினாவும் கையிலெடுத்துக் கொண்டாரே என்று திருநா அண்ணர் மனம் வெதும்பினார். இதனைப் பற்றி வவுனியா இணைப்பாளர் கதிரமலையிடம் தனிப்பட்டமுறையில் பேசியும் இருந்தார். ஒற்றுமையின் வலிமை பற்றிய அவரது கருத்துக்கள் கதிரமலையிடம் அவ்வளவாக எடுபடவில்லை. மாறாக அவர் மேலும்மேலும் தன்னிடமிருந்து ஒதுங்கிச் செல்வதையும் திருநா அண்ணரால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

வவுனியா மாவட்ட அமைப்பாளரின் பெரும்பான்மைச் சிங்களச் சார்புநிலையானது, அவரை ஒரு சூழ்நிலைக் கைதியாக மாற்றி, சிங்கள மக்களின் ஆதரவையும், இலங்கை பொலிஸ், இராணுவத்தினருடனான உறவையும் அதிகளவில் பேண வைத்தது. ஒருவகையில் திரு. கதிரமலையின் அன்றாட வேலைத் திட்டங்களை வவுனியா மாவட்டத்தில் சுமுகமாக முன்னெடுத்துச் செல்ல இவ்வுறவைப் பேணியே ஆகவேண்டும் என்ற களநிலையும் அங்கு காணப்பட்டது. இலங்கையில் அக்காலகட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டச் சூழல் படிப்படியாக விரிவாக்கம் பெற்றுவந்திருந்தது. அக்கால கட்டத்தில், போராளிகளின் பயிற்சி முகாம்கள் பல வவுனியா மாவட்டக் காடுகளிலும், விவசாயப் பண்ணைகளிலும் இரகசியமாக இயங்கிவந்தன. டேவிட் ஐயா, டொக்டர் இராஜசுந்தரம் ஆகியோரால் இயக்கப்பட்ட காந்தீயம் பண்ணையும் சர்வோதய வேலைத்திட்டங்கள் போன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளிகள் உருவாக்குதல், அதற்கான ஆசிரியர்களை கிராமமட்டத்தில் தெரிவுசெய்து அவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சியை வழங்கல், கூட்டு உழைப்பு முறையிலான விவசாயப் பண்ணை, கிராம மக்களுக்கான மலிவு விலைக் கடைகள், என்பவற்றை உருவாக்கி வளர்த்துச்செல்லல் என்று வவுனியாப் பிரதேசத்தில் வெற்றிகரமாக இயங்கிவந்தது. நீறுபூத்த நெருப்பாக, வவுனியா பிரதேசத்தில் இயங்கிய சர்வோதய இயக்கத்திற்கும் இவ்வமைப்புகளுக்கும், விவசாயப் பண்ணைகளுக்கும் இடையே சில முரண்பாடுகள் கிராமமட்டத்தில் அவ்வப்போது இடம்பெற்றும் வந்தன.

இத்தகையதொரு சூழ்நிலையில் மிகவும் அவதானமாக இருந்திருக்கவேண்டிய சர்வோதய வவுனியா மாவட்ட இணைப் பாளர், சர்வோதயத் தலைவரின் ஆதரவின் பின்புலத்தில், அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகத் தன்னை நிலைநிறுத்தப் பாடுபட்டாரேயொழிய, வவுனியாப் பிரதேசத் தமிழ் மக்களின் மன உணர்வுகளையிட்டு போதிய கரிசனை காட்டாதிருந்தார் என்ற குற்றச்சாட்டும் அங்கிருந்துவந்தது. இவை பற்றிய செய்திகள் திருநா அண்ணரை வந்தடையும் வேளைகளில் திருநா அண்ணரின் நட்புரீதியான ஆலோசனைகளை வவுனியா பிரதேச சர்வோதய இணைப்பாளர் உதறித் தள்ளியதுடன், திருநா அண்ணருக்கு எதிரான நிலைப்பாட்டை சர்வோதய நிர்வாகசபைக் கூட்டங்களில் எடுத்து வந்திருந்தார். இந்த விரிசல் காரணமாக திருநா அண்ணர் வவுனியா மாவட்ட சர்வோதய நிலையத்தின்பாலிருந்த அக்கறையை நிறுத்திக்கொள்ள முடிவுசெய்தார்.

இதனால் சில காலம் திருநா அண்ணர் மனமொடிந்த நிலையில் காணப்பட்டார். ஒரு தமிழரான கதிரமலையின் நெருப்புடன் விளையாடும் சில ஆபத்தான அரசியல்சார்ந்த நிலைப்பாடுகள் ஒரு கட்டத்தில் அவரது உயிருக்கும் ஆபத்தாக முடியலாம் என்று கள நிலைமையை உணர்ந்தே அவர் கலங்கினார். அதே வேளையில் திரு. கதிரமலை இராணுவப் புலனாய்வுத்துறையுடனான தொடர்புகளை பேணிவருவதாகவும் அவருக்குக் கிட்டியிருந்த செய்திகள், பின்னாளில் தமிழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் உள்ள தனது பிரதேசத்தின் சர்வோதய ஊழியர்களையும் தமிழ் மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் ஒரு துர்அதிர்ஷ்டவசமான நிலைமைக்கு இட்டுச்செல்லலாம் என்றும் கருதியிருந்தார்.

இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் திடீர் திடீரென தமிழரின் விவசாயப் பண்ணைகள் இராணுவத்தால் சுற்றிவளைக்கப் பட்டன. பல இளைஞர்கள், பண்ணை நிர்வாகிகள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படலானார்கள். இந்நிலையில் ஏற்கெனவே வவுனியா சர்வோதய இணைப்பாளர்மீது போராளிகள் கொண்டிருந்த சந்தேகம் வலுவடைந்தது. திடீரென ஒருநாள் திரு.கதிரமலை இனம்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டார். சிலநாட்களின் பின்னர் ஒரு வெள்ளை வானில் கொண்டுவரப்பட்ட கதிரமலையின் உடல் யாழ்ப்பாணத்துத் தெருவொன்றில் வீசியெறியப்பட்டிருந்ததை செய்திகள் தெரிவித்தன. கதிரமலையின் அநாவசியமான மரணமும் திருநா அண்ணரை மிகவும் பாதித்திருந்தது.

1983ஆம்ஆண்டு நாட்டில் நிகழ்ந்த இனக்கலவரத்தின் பின்னர், சர்வோதய தலைமைப்பீடத்தின் நடவடிக்கைகள் படிப்படியாக தமிழ்ப் பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்படலாயிற்று. உலகளாவிய ரீதியில் பேசப்பட்ட கறுப்பு ஜூலை கலவரத்தையடுத்து, சர்வதேச நாடுகளிலிருந்து இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஏராளமான நிதியுதவிகள் மொரட்டுவை சர்வோதயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. கலவரத்தால் அதிகமாகப் பாதிக்கப் பட்டவர்கள் தமிழர்களேயாயினும் சர்வோதயத்திற்குக் கிடைத்த நிதியுதவிகள் பெரும்பாலும் தென்னிலங்கையின் சிங்களப் பிரதேச மக்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்கே வழங்கப்பட்டமை திருநா அண்ணர், தனது தலைவர் ஆரியரத்தினாமீது வைத்திருந்த நன்மதிப்பினை சுக்குநூறாக்கியது.

இனக்கலவரத்தையடுத்து நாட்டில் நிலவிய அவசரகால நிலை, போக்குவரத்துத் தடை, இரவுநேர ஊரடங்கு உத்தரவு முதலியவற்றின் காரணமாக வடபகுதி விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைத் தென்னிலங்கைக்கு அனுப்புவதில் பாரிய தடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டிருந்தது. ஏனெனில், ஏ 9 பாதையில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் முதலாளிகளுக்கு உரிமையான பல லொறிகள் கலவரகாலத்தில் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. இதனால் போக்கு வரத்தும் முற்றாகச் சீர்குலைந்திருந்தது. வடபகுதிக் கடலில் பிடிக்கப்பட்ட கடலுணவு வகைகள் தென்னிலங்கைக்கு வழமை போன்று ஏற்றுமதி செய்யமுடியாமல், கேட்ட விலைக்கு யாழ்ப் பாணச் சந்தையில் விற்கப்பட்டு தொழிலாளர்களை ஏழ்மையின் அடிமட்டத்திற்குத் தள்ளியது. யாழ்ப்பாண மண்ணில் விளைந்த வெண்காயம், தக்காளி, கத்தரிக்காய் மற்றும் மரக்கறி வகைகள் மிதமிஞ்சிச் சேர்ந்து பயன்பாட்டுக்கு மேலதிகமானவை அழுகிய வண்ணமிருந்தன. வட பகுதியின் பொருளாதாரம் சீர்குலைந்திருந்தது.

இந்நிலையிலேயே சர்வோதயத் தலைவர் திருநா அண்ணருடன் திடீரெனத் தொடர்புகொண்டார். சர்வோதய அமைப்பு, கலவரத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு நல்லெண்ண உதவியாக ஒரு கப்பலில் அத்தியாவசிய உணவுப்பொருட்களை அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், அதனைப் பொறுப் பேற்று விநியோகிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் தெரிவித்தார். திருநா அண்ணர் மகிழ்ச்சியடைந்தார். அடுத்து வந்த செய்தி அவரை அதிர்ச்சி அடைய வைத்தது. அவர்கள் கொழும்பிலிருந்து அனுப்பவிருப்பவை, டின்மீன், பருப்பு, கருவாடு, அரிசி, பம்பாய் வெண்காயம் போன்றவை என்ற செய்தியைக் கேட்டதும் திருநா அண்ணர் கொதித்தெழுந்தார். யாழ்ப்பாணத்து பொருளாதார நிலைமையை அவருக்கு தெளிவாக எடுத்துரைத்தார். ஒரு சாதாரண மனிதனால்கூட புரிந்துகொள்ளக்கூடியதாகவிருந்த முட்டாள்தனமான தனது தீர்மானத்தில் ஆரியரத்தினா விடாப் பிடியாகவே இருந்தார்.

“கப்பலில் அங்கிருந்து மீன் டின்களையும் பதப்படுத்திய உணவுவகைகளையும், மரக்கறி வகைகளையும் அனுப்பாமல் அதற்கான பணத்தை அனுப்பிவைத்தால், யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கைக்கு தமது விளைபொருட்களை அனுப்ப முடியாமல் நொடிந்துபோயிருக்கும் விவசாயிகளையும், மீனவர் களையும் ஆதரிக்கும் வகையில் அவர்களிடமே உணவுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை கொள்வனவுசெய்து எமது மக்களுக்கு நாமே அவற்றை விநியோகிக்கலாம். சமைத்த உணவாகக்கூட அவற்றை அவர்களுக்கு விநியோகிக்கலாம். அதற்கான தொண்டர் பலம் எங்களிடம் உள்ளது" என்று கூறிப் புரியவைக்க முயன்றார். அவை எதுவும் தலைவர் ஆரியரத்தினாவின் செவிகளில் ஏறவில்லை. அவருக்கு சிங்கள உற்பத்தியாளர்களிடம் பொருட் களைக் கொள்வனவுசெய்து கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி அதன்மூலம் சிங்களக் கிராம விவசாயிகளையும், வர்த்தகர்களையும் திருப்திப்படுத்துவதிலும், அதே வேளை வடபகுதித் தமிழர்களுக்கு தென்னிலங்கை மக்கள் சர்வோதயத்தின் வாயிலாக மனிதாபிமான உதவிகளைச் செய்கிறார்கள் என்று விளம்பரம் பெறுவதிலுமே குறியாக இருந்ததை திருநா அண்ணர் மாத்திரமல்ல அவருடன் உடனிருந்து இவை அனைத்தையும் அவதானித்துக் கொண்டிருந்த நம் அனைவருக்கும் புரிந்திருந்தது. தலைவர் ஏ.ரீ.ஆரியரத்தினாவின் பிடிவாதமான தீர்மானத்தின்படியே கப்பலும் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்தது.

இலங்கைச் சர்வோதய இயக்கத்தின் தலைமைத்துவத்தின் அதிகரித்துவரும் இன மேலாதிக்க உணர்வினைச் சகித்துக்கொள்ள இயலாத திருநா அண்ணர் தொடர்ந்து கழிந்த பல நீண்ட நாட்களை நிம்மதியின்றியும் தூக்கமின்றியும் கழித்தார். இனிச் செய்வதென்ன என்ற கேள்வி அவரைக் குடைந்துகொண்டிருந்தது. வடமாகாணத்தில் பெருவிருட்சமாகத் தான் வளர்த்துவிட்டிருந்த சர்வோதய விருட்சத்தின் எதிர்காலம் பற்றிய கவலை அவரை ஆட்கொண்டிருந்தது.

1983இன் இனக்கலவரத்தால் தென்னலங்கையில் பாதிக்கப்பட்ட பல குடும்பத்தலைவர்கள் புங்குடுதீவைச் சேர்ந்த வர்த்தகர்களாகவும் இருந்தனர். புங்குடுதீவு மக்கள் காலம் காலமாக வர்த்தகத்தையே தமது தொழிலாகக் கொணடிருந்தவர்கள். இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இலங்கையின் சகல பாகங்களிலும் தமது வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்திருந்தவர்கள். முன்னதாக 1958இன் இனக்கலவரத்தின் போது வர்த்தகத்தையும், சொத்துக்களையும் இழந்து ஊர் திரும்பியிருந்தவர்களில் பலர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் மீண்டும் அங்கு சென்று, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். 1983இல் அவர்களது வர்த்தக நிறுவனங்கள் முன்னைய கலவரத்தைவிட அதிகமான பாதிப்புக்கு அவர்களை உள்ளாக்கியிருந்தது. தமது உறவுகளையும், கடைகளையும், சொத்துக்களையும் இழந்த பலர் நிர்க்கதியாகத் தீவகத்தை நாடி வந்திருந்தனர். அக்காலகட்டத்தில் தீவகம் எங்கும் சோகமயமாக இருந்தது. தீவகத்தின் உறவுகளுக்கு அதிக மன உளைச்சலைக் கொடுத்த ஒரு காலகட்டமாக அது இருந்தது. திருநா அண்ணரும் அந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார்.

இக்காலகட்டத்தில் தான், தன் இனத்துக்காகத் தன்னையே ஜீவதானியாக்கித் தொண்டாற்றிவந்திருந்த தனக்கும், தனது இனத்தின் தன்மானத்திற்கும் சுயகௌரவத்திற்கும் சிறிதளவேனும் களங்கம் ஏற்படுவதை வெறுமனே பார்வையாளனாகப் பார்த்திருக்க முடியாது என்று தீர்மானித்தார். குழம்பிய மனநிலையில் சரியான தீர்வினைத் தன்னால் எட்ட முடியாது என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

பொருத்தமான நல்லதொரு முடிவுக்குத் தான் வருவதற்கு முன்னர் தனது மனதை ஆன்மீக வழியில் ஒருவழிப்படுத்த திருநா அண்ணர் விரும்பினார். இதனைக் கருத்திற்கொண்டு நீண்டகால மௌனவிரதமொன்றினைத் தான் அனுஷ்டிக்கப் போவதாகத் திடீரென அறிவித்தார். தான் சொன்னவாறே மௌன விரதத்தினை அனுஷ்டிக்கத் தொடங்கியும்விட்டார்.

அவர் நாளாந்தம் தியானத்தைத் தொடர்ந்து அனுஷ்டித்து மனதை ஒருவழிப்படுத்தினார். அவர் மௌனவிரதம் அனுஷ்டித்த நாட்களில் மரதன் முறையில் சர்வோதய சேவையாளர்களும், மாதர் சங்க உறுப்பினர்களும் இடைக்கிடையே தாமாக முன்வந்து அவருடன் துணையாக அமர்ந்து மௌனவிரதம் அனுஷ்டித்து திருநா அண்ணருக்குத் தமது தார்மீக ஆதரவினை வழங்கினர். அவர் மௌன விரதம் இருந்த ஒவ்வொரு நாளும் பகல் பொழுதுகளில் நீராகாரம் மாத்திரமே அருந்திவந்தார். இரவில் மாத்திரம் ஒருவேளை உணவை உட்கொண்டுவந்தார். 40 நாட்கள் விரதமிருப்பதாக ஆரம்பத்தில் அவர் தெரிவித்தபோதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பதாவது நாளில் அவரால் தியானத்திலிருந்து வெளிவந்து விரதத்தைக் கலைக்க முடியவில்லை. மேலும் மூன்று நாட்கள் கழிந்த நிலையில் 43ஆவது நாள் அண்ணரவர்கள் தன் மௌன விரதத்தைக் கலைத்துக்கொண்டார்.

மௌனவிரதத்தின் இறுதியில் நன்கு சிந்தித்து இலங்கைத் தேசிய சர்வோதய சிரமதான சங்கத்திலிருந்து தான் பிரிந்து தனித்து இயங்குவதற்கு முடிவுசெய்திருப்பதை எமக்குத் தெரிவித்தார். திருநா அண்ணர் எடுத்திருந்த மிகவும் கடினமான முடிவு அது. சர்வோதய இயக்கத் தலைமை தமது பிராந்திய நலன்களைத் தக்கவாறு கவனிக்காததால், எமது பிராந்திய நலன்களை நாங்களே முன்னெடுத்துச் செல்வதற்காகத் தனியான ஒரு நிறுவனத்தை இவர் ஆரம்பிக்கவேண்டியது தவிர்க்கமுடியாத தாயிற்று.

1984இல் தனது முடிவினை சர்வோதய இயக்கத் தலைமைப் பீடத்திற்கு விரிவான கடிதம் ஒன்றின் மூலம் தெரியப்படுத்தினார். தலைமையகத்தின் எதிர்வினை திருநா அண்ணர் எதிர்பார்த்தபடியே நிகழ்ந்தது. வட இலங்கை சர்வோதயத்துக்காக வழங்கப்பட்டிருந்த அன்றாட நிர்வாகத்துக்கான நிதி உள்ளிட்ட முழு நிதியும் அவர்களால் நிறுத்தப்பட்டன. அதுவரை நடத்திவந்த வேலைத் திட்டங்களுக்கான நிதியும் நிறுத்தப்பட்டது.

இக்காலகட்டத்தில் புங்குடுதீவு மத்திய அலுவலகத்திலிருந்து கிராமமட்ட தொண்டர்கள் வரை 400இற்கும் மேற்பட்ட சர்வோதய சேவையாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்குரிய மாதாந்த வேதனங்கள் படிப்படியாக நிறுத்தப்பட்டன. குடும்பஸ்தர்களான அலுவலர்கள் தமது குடும்பத்தின் பொருளாதாரத்தைத் தேடி வேறு தொழில்களை நாடிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. புங்குடுதீவின் மத்திய நிலையத்தில் முழுநேரத் தொண்டர்களாகப் பணி யாற்றியவர்கள் தொழில்ரீதியாக சர்வோதயப் பணிகளுக்கான செலவினத்தைக் குறைத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். புதிய நிதிமூலங்களைக் கண்டறிந்து, சர்வோதய இயக்கத்துக்கான நிதிவசதியைத் தேடிப் பெறும் வரையில் அத்தியாவசியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகள் மாத்திரம் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டன. ஆரம்பத்தில் நிதி வசதி கிட்டாமையால், தொடர்ந்துவந்த நான்கு மாதங்கள் வரை எவ்வித ஊதியமுமின்றிப் பணியாற்றிய சர்வோதயத் தொண்டர்களும் அங்கே இருந்தார்கள். சர்வோதயத் துடனேயே தம் வாழ்நாளை இணைத்துக்கொண்ட பலர் தொழில் வாய்ப்பைப் பெற்றுச் சென்றார்கள். அவர்களில் சிலர் பகுதிநேரப் பணியாளர்களாகவும் சர்வோதய சக்திதானிகளாகவும் தம்மை மாற்றிக்கொண்டிருந்தார்கள்.

திருநா அண்ணரின் வாழ்வின் இந்தப் புதிய திருப்புமுனை அவரது 45ஆவது வயதில், அதாவது 1984இல் ஏற்பட்டது. "வட இலங்கைச் சர்வோதயம்" என்ற பெயரில் அவர் சுதந்திரமாகச் செயற்பட ஆரம்பித்தார்.

1984 காலகட்டத்தில் சர்வோதய இயக்கத்தின் சுயமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும், வேதனமற்ற தொண்டர் களின் உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்கான செலவினங்களை ஈடுசெய்யவும், சிறுசிறு கைத்தொழில்கள் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டன. மிளகாய்த்தூள், கோப்பித் தூள், சீயாக்காய்ப் பவுடர், எள்ளுருண்டை, மோர் மிளகாய், கச்சான் கடலை, கடலைப் பருப்பு, பொரித்த கடலை போன்றவை பைக்கற்றுகளில் அடைத்தும் விற்பனை செய்து சிறிதளவு வருவாய்க்கான வழியினைக் கண்டறிந்தனர். சுத்தமான நல்லெண்ணெய் விநியோகம், என்வலப்புகள் தயாரிப்பு, வெற்றுப் போத்தல்கள் சேகரித்தல் ஆகியவற்றின் வழியாகவும் நிதி திரட்டப்பட்டது. அத்துடன் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை மூலமும் வருமானம் பெற்று இயக்கத்தை வளர்த்துச் செல்வதற்கு உறுதுணையாகவும் சர்வோதய நிலையம் இருந்தது. மேலும் கிராமங்கள் தோறும் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த நியாயவிலைக் கடைகள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டதுடன் சிறப்புச் சந்தைத் திட்டம் ஒன்றும் புதிதாக உருவாக்கப்பட்டது. சாட்டிக் கிராமத்தில் கிணறுவெட்டி அங்கிருந்து பௌசர் மூலம் குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்றது.

நடந்து முடிந்த சம்பவங்களை அனுபவமாகக் கொண்டு திருநா அண்ணர் புதியதொரு திட்டத்தையும் அமுலாக்கவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இருந்தார். சர்வதேச அமைப்புகளை மாத்திரம் தமது நிதிவருவாய்க்காக நம்பியிருப்பதை அவர் வெறுத்தார். கிராம மட்டத்திலான அமைப்புகளைத் தோற்றுவித்து, தொடர்ந்து அவற்றை வழிநடத்த கிராமங்களில் மக்களுக்குப் பயிற்சி அளித்து மக்களைக் கொண்டே கிராமங்ளைக் கட்டியெழுப்பும், நிர்வாகம் செய்யும் திட்டங்களை அறிமுகப்படுத்தத் தொடங்கினார்.

ஆரம்பகாலத்தில் தன் இளவயதுக் கனவாகவிருந்த கிராம சுயராச்சிய இலட்சியத்துக்காக மக்களைத் தயார் படுத்தவேண்டும் என்று திருநா அண்ணர் தீர்மானித்தார். இதனை நோக்காகக் கொண்டு 1985ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு கிராமங்களிலும் குடும்பங்களை இணைத்துக் குடும்போதய இலட்சியத்துக்காகக் குடும்ப நிதியங்களை உருவாக்கினார். இதில் வட இலங்கையில் 350இற்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து கிட்டத்தட்ட 25,000 அங்கத்தவர்கள் சிறுவர் தொடக்கம் முதியோர் வரை இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். கிராமங்கள்தோறும் இளைஞர்களுக்குப் பயிற்சியும் அளித்தார்கள். பல இலட்சக்கணக்கான ரூபா நிதிகளைக் கிராமங்களிவிருந்து பெற்றுப் பல்வேறு திட்டங் களினூடாகவும் பல லட்சம் ரூபாய்களைக் கிராமங்களுக்கே மீளவும் வழங்கியுதவினார்கள். இதனால் பயனடைந்த குடும்பங்கள் பல நூற்றுக்கணக்கானவையாகும். இவ்வாறு பயிற்றப்பட்ட அங்கத்தினரிடமிருந்து தொண்டுப் பணமாக பத்து ரூபாய் மட்டும் பெற்றுக்கொண்டு கிராமங்கள் தோறும் சிரமதானங்கள் தொடக்கம் அன்னதானங்கள் வரை பல்வேறு வேலைத்திட்டங்களை திருநா அண்ணர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் சர்வோதய ஊழியர்கள் முன்னெடுத்தனர்.

திருநாஅண்ணரின் பிரிவின்போது, ஏ.ரீ.ஆரியரத்தினா அவர்கள் வழங்கிய அஞ்சலி உரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

'Unfortunately, after 1983 he never visited the South as he took almost exclusively to spiritual work in his disturbed environment which gradually became more and more violent. However, whenever I visited Jaffna I never failed to visit him and pay my respects to him. We continued our work with brother Kadiramalai (who was assassinated) and others."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துர்அதிர்ஷ்டவசமாக, 1983இற்குப் பின்னர் திருநாவுக்கரசு அவர்கள் தென்பகுதிக்கே வருவதை நிறுத்திக்கொண்டார். படிப் படியாக வன்முறைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு குழம்பிப் போயிருந்த அவரது பிராந்தியத்தில் முழுமையான ஆன்மீகப் பாதையொன்றை அவர் தேர்வுசெய்துகொண்டிருந்தார். இருந் தாலும், வடபகுதிக்கு நான் மேற்கொள்ளும் விஜயங்களின் போது அவரைச் சந்தித்து எனது மரியாதையைச் செலுத்தத் தவறவில்லை. அதே வேளை நாங்கள் எமது சர்வோதய இயக்கப் பணிகளை வடபுலத்தில் சகோதரர் (பின்னாளில் கொலை செய்யப்பட்ட) கதிரைமலையுடனும் வேறும் பிறருடனும் இணைந்து தொடர்ந்து மேற்கொண்டோம்".

திருநா அண்ணரின் இறுதிக்காலம் பற்றிய தனது குறிப்பொன்றில் வி.ரி. இளங்கோவன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"வெளிநாடுகளிலிருந்து அபிவிருத்திக்கெனப் பெறப்பட்ட பணத்தில் வடபகுதிக்குரிய தொகையை தொடர்ந்து வழங்க மறுத்தமை, திருக்கோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங் களுக்குச் சர்வோதயம் வழங்கும் உதவி, திருவினாலேயே அறிமுகப்படுத்தப்பட்ட சிலரின் காட்டிக்கொடுப்பும் நம்பிக்கைத் துரோகமும், ஆரியரெத்தினாவின் கண்ணோட்டம் என்பன போன்ற பல பிரச்சினைகளால் திருவுக்கும் ஆரியரத்தினாவுக்கும் இருந்த தொடர்பு தடைப்பட்டது. முறிந்தே போயிற்று. சர்வோதயம் என்ற பெயரில் தனித்துவமாகத் தொடர்ந்து இயங்கினார். வெளிநாடு களிலிருந்து பல்வேறு உதவி பெற்று பணிகளைத் தொடர வாய்ப்பிருந்தது. ஆனால் ஸ்ரீலங்கா அரசின்தொடர் ராணுவ நடவடிக்கைகளினால் அவை சாத்தியமற்றுப் போயின. தீவுப் பகுதிக்குள் ஆக்கிரமிப்பு இராணுவம் புகுந்ததும் அவரின் பணிகள் முடங்கின. யாழ். சிவதொண்டன் நிலையம், கொழும்புத் துறை யோகர் சுவாமிகள் ஆச்சிரமம் ஆகியவற்றோடு இணைந்து யாழ்ப்பாணத்தில் திருவின் பணிகள் தொடர்ந்தன" (வி.ரி.இளங்கோவன், மண் மறவா மனிதர்கள், 2011)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 9

# திருநா அண்ணரின் விவசாயப் பணிகள்

புங்குடுதீவில் மாத்திரமல்லாது, பிற தமிழ்ப் பிரதேசங்களின் விவசாயத்தை அபிவிருத்திசெய்வதற்காகவும் திருநா அண்ணர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல பணிகளை ஆற்றியிருக்கிறார்.

நன்னீர் வளம் குறைந்த புங்குடுதீவு மண்ணில் பயன்தரு மரங்களை வளர்ப்பதெப்படி என்ற அறிவை மக்களுக்குப் புகட்டும் வகையில், பெருங்காட்டில் அமைந்திருந்த சர்வோதய வளாகத்தில் வகைமாதிரிகளை உருவாக்கிக் காட்டினார். அங்கே நல்லின தென்னம்பிள்ளைகளை நட்டு, அதனருகில் மூடியுடன் கூடிய பெரிய மண்பானைகளைக் கழுத்தளவு மண்ணில் புதைத்துவைத்து,



மரநடுகைக்கு சிறுவர் குழுவை ஊக்குவிக்கும் செயற்திட்டம்-சர்வோதய புங்குடுதீவு வளாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பானைகளுள் நன்னீரை இட்டு நிரப்பி தென்னம்பிள்ளைகளின் வேர்கள் சிறிது சிறிதாக பானையில் கசியும் ஈரலிப்பான நீரை உறிஞ்சி வளர 1970களிலேயே வசதி செய்து கொடுத்தார். தென்னாபிரிக்காவின் வரண்ட பிரதேசங்களில் இத்தகைய நீர்ப்பாசனத்திட்டம் கிராமிய தொழில்நுட்பமாக அக்காலத்தில் அமைந்திருந்ததை அவர் அறிந்திருந்தார். நாளாந்தம் பானைகளில் இருந்து இழக்கப்படும் நீரை மீள நிரப்பி தொடர்ச்சியான நீர்வளத்தை சிக்கனமான முறையில் அம்மரங்கள் பெற்றுக்கொள்ள வழிசெய்திருந்தார். அன்று அவர் நட்டுவைத்த நல்லினத் தென்னை களும் கனிதரு மரங்களும் இன்று சர்வோதய வளாகத்தினை சோலையாக்கி வைத்திருப்பதை அங்கு செல்லும் விருந்தினர் தாமே கண்டறியலாம். இதே திட்டத்தினை அவர் கேரதீவு உள்ளிட்ட பிற கிராமங்களிலும் அறிமுகப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மரங்களின் பராமரிப்பு**

புங்குடுதீவில் ஒரு காலகட்டத்தில் கனிதரு மாமரங்கள் ஒருவித நோயினால் பாதிக்கப்படத் தொடங்கின. மரங்கள் நோயினால் பாதிப்பட்டவேளையில், விவசாயத் திணைக்களத்தை நாடிச் சென்று, அங்கு பணியாற்றும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தரின் உதவியுடன் நோயைக் கண்டறிந்து, அந்நோய்த் தடுப்புக்கான மருந்துகளையும் புங்குடுதீவுக்குப் பெற்றுவந்தார். அவ்வேளையில் மருந்தடிக்கும் தொழிலாளர்களை வழங்கும் நிலையில் விவசாயத் திணைக்களம் இருக்கவில்லை. அதனால் தாமதியாமல், தானே உரிய மருந்துகளையும் அதனை விசிறும் உபகரணங்களையும் பெற்றுவந்து, செயலில் இறங்கினார். அவரது முயற்சியின் காரணமாக ஊரிலுள்ள மாமரங்களை பாரிய தொற்றுநோய் பரவாமல் உரிய காலத்தில் அதிக சேதமின்றிக் காப்பாற்றியவர் திருநா அண்ணராவார்.

புங்குடுதீவில் சமகாலத்தில் தென்னை மரங்களுக்கும் ஒருவகை நோய் பரவியிருந்தது. அவ்வேளையிலும் தென்னை அபிவிருத்திச் சபையிடம் அதுபற்றி அறிவித்து, அவர்களிடமிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான மருந்துகளைத் தானே எடுத்துவந்து தெளித்து, தென்னைகளை அழிவிலிருந்து காப்பாற்றியவர் அவர்.

தீவகத்தில் பல்வேறு மரம்நடுகை இயக்கங்களை முன்நின்று நடத்தியதில் திருநா அண்ணரின் பணி சிறப்பானதாகும். தீவகத்தின் வெளிகளில் பனம் விதைகளை நட்டு பனைவளத்தைப் பெருக்க ஊக்கவித்தவர் திருநா அண்ணர். இவ்வேலைத் திட்டத்தில் திருநா அண்ணருக்குத் தோள் கொடுத்த மற்றொரு பெருமகனார் பற்றியும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

**மில்க்வைற் தொழிலதிபரின் தொடர்பு**

நாடெங்கும் "லிவர் பிரதர்ஸ்" என்ற பாரிய பன்னாட்டு நிறுவனத்தின் சவர்க்கார இராச்சியம் கோலோச்சியிருந்த வேளையில் ஈழத்தின் வடபுலத்தில் 1927களிலிருந்தே சவர்க்காரத் தயாரிப்பினைக் குடிசைக் கைத்தொழிலாகத் துணிச்சலுடன் முன்னெடுத்தவொரு பரம்பரையின் வழிவந்தவர் சிவநெறிப் புலவர் அமரர் வீ.மு.கந்தையாபிள்ளை கனகராசா அவர்களாவார். "மில்க்வைற்" கனகராசா (02.11.1927-22.07.1998) என்றால் தெரியாதவர் எவருமில்லை என்ற நிலைக்குத் தன் சவர்க்கார உற்பத்தியின் மூலமும், தனித்துவமான அதன் விநியோக வலையமைப்பின் மூலமும், தொழிலுடன் சார்ந்த பல்வேறு சமூக சேவைகளின் மூலமும் உயர்ந்து, வாழ்ந்து மறைந்தவர் அவர். வடபுலத்தில் உருவாகிய விரல்விட்டெண்ணக்கூடிய கைத்தொழில் நிறுவனங்களுள் நீண்டகாலம் நிலைத்து நின்றதொரு தொழிற்சாலை இவருடையது. இன்று உலகளாவிய ரீதியில் வர்த்தக நிறுவனங்கள் மேற்கொள்ளும் விளம்பர உத்திகளை அந்நாட்களிலேயே முன்னோடியாகவிருந்து தமிழ்ப் பிரதேசங்களில் பரீட்சித்து அறிமுகப்படுத்தியவர்.

கல்வித்துறையின் வாசிப்பு விருத்திக்கும், சமயப் பணிக்கும் இவர் ஆற்றிய பங்களிப்பு விளம்பர நோக்கம் கொண்டவை என்று ஒரு காலகட்டத்தில் கருதியவர்கள் பலர் இருந்தனர். இன்று உலகமயமாதலில் மூழ்கியிருக்கும் எமது புதிய தலைமுறையினருக்கு இவரது அந்நாளைய விளம்பர நோக்கங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நன்மையையும் முன்னெடுத்துச் செல்லும் உத்திகளைக் கொண்டிருந்ததென்பதை ஒப்பீட்டறிய அதிக சிந்தனை தேவைப் படாது. அமரர் கனகராசாவின் வர்த்தக விளம்பர உத்திகள் தனியான ஆய்வுக்குரியன.

"மில்க்வைற் செய்திகள்" என்ற பெயரில் அறிவியல் மற்றும் குறுஞ்செய்திகளுடன் 70களில் ஒரு சிறுசஞ்சிகையை இலவசமாக வெளியிட்டவர் "மில்க்வைற்" கனகராசா அவர்கள். அதன் ஆசிரியராக அமரர் க.சி.குலரத்தினம் அவர்கள் பணியாற்றினார். பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், நூலகங்கள், வாசிக சாலைகள் என்று அனைத்து அறிவுசார் சமூக நிறுவனங்களுக்கும் மில்க்வைற் செய்தி விநியோகிக்கப்பட்டது. திருநா அண்ணரும் திரு. கனகராசாவின் பிரசுர விநியோகப் பணிகளுக்கு முழுமையான ஆதரவினை வழங்கி வந்திருந்தார். சர்வோதய ஊழியர்கள் மில்க்வைற் பிரசுரங்களை கிராமங்கள் தோறும் விநியோகித்தார்கள். ஆன்மீகம், சமயம், நீதிநூல்கள் என்பவற்றுடன் விவசாயப் பிரசுரங்கள் பலவும் மில்க்வைற் கனகராசா அவர்களின் உதவியால் பெறப்பட்டு சர்வோதயத்தினால் விநியோகிக்கப்பட்டன. பனை ஓலை ஏடுகளில் அச்சிடப்பெற்ற அரிச்சுவடிகள், மில்க்வைற் சவர்க்கார விளம்பரத்தின் மறுபுறத்தில் அச்சிடப்பட்ட பெருக்கல் வாய்ப்பாட்டு மட்டை என கல்வியைத் தன் விளம்பரத்துடன் இணைத்துப் புகுத்தியவர் அவர்.

தனது நீலநிற வாகனத்தில் பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் என திக்விஜயம் செய்து, சிறு நூல்களையும் பொன்மொழிகள் தாங்கிய மில்க்வைற் விளம்பர அட்டைகளையும் மரக்கன்றுகளையும் இலவசமாக விநியோகித்தவர் கனகராசா அவர்கள். மாணவர் களுக்குரிய வாசிப்புப் பழக்கத்தை சிறுவயதிலேயே வளர்த் தெடுக்கும் கனவைக் கொண்டிருந்தவர். நீதிநூல்கள், அறிவியல் செய்திகளை கையடக்கப் புத்தகங்களாக இலங்கை முழுவதும் இலவசமாகவே விநியோகித்து வந்தார். யோகாசனத்திலும், பாரம்பரிய உணவுப் பழக்கத்திலும் தன்னை ஈடுபடுத்தி, வாழும் சாட்சியமாகத் திகழ்ந்தவர். இவரது மேற்படி பழக்கவழக்கங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநா அண்ணரின் பழக்கவழக்கங்களும் ஒத்துப் போனதால், இருவரது நட்பும் நிரந்தரமானது.

நான் சர்வோதய இயக்கத்தின் வடபிராந்திய நூலகராகப் பணியாற்றிய காலத்தில் எமது கிளை நூலகங்களுக்கு வழங்க வென இவர் நூல்களையும் தளபாடங்களையும் அவ்வப்போது கொண்டுவந்து தருவதுண்டு. அவ்வேளைகளில் திருநா அண்ணருடன் அவர் அதிக நேரத்தை விவசாயப் பயிர்ச்செய்கை, மர நடுகை இயக்கம், பனைவிதைகள் விநியோகிப்பு, பழமரக் கன்றுகளை வீடுகளுக்கு வழங்கல், சூழலை மாசுபடாது பாது காத்தல் என பல விடயங்களை நூலக அலுவலகத்தில் வைத்து கலந்தாலோசிப்பார்கள். அக்காலகட்டத்திலேயே அமரர் கனகராசா அவர்களுடன் எனக்கும் தொடர்பு ஏற்பட்டது. பின்னர் எம்மூவருக்கு மிடையேயான நெருங்கிய பிணைப்பாக அது மாறியது. திருநா அண்ணர் போலவே, திரு. கனகராசா அவர்களும் நூலகர்களை சமூகத்தின் கண்களாக மதித்தமையே என்னுடனான இப்பிணைப்பை நிரந்தரமாக்கியது எனலாம்.

விந்தையான இம்மனிதரின் செயல்களும் அந்நாட்களில் எனக்கு வியப்பாக இருந்ததுண்டு. கிராமப்புறப் பாடசாலைகளுக்குச் சென்று அங்கு கற்கும் சிறார்களிடம் பொழுது போக்காக பனம் விதைகளைச் சேகரித்துத் தரும்படி வேண்டுவார். அவ்வாறு சேகரித்துப் பெறப்படும் பனம்விதைகளுக்கேற்ப சவர்க்காரமோ, புத்தகங்களோ அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கும். அதனைத் தான் விநியோகத்திற்காகச் செல்லும் வெளி இட மெங்கும் தெருவோரத்தில் தன்னிச்சையாக விதைத்துச் செல்வார். சர்வோதயத்துக்கு விஜயம் செய்யும் வேளைகளிலெல்லாம், நல்லினப் பனைவிதைகளையும், பழமரக் கன்றுகளையும், வேப்பங் கன்றுகளையும் விநியோகத்திற்காக எம்மிடம் தந்து செல்வார். இன்று யாழ்ப்பாணத்துக்கு அப்பால் கொழும்பு, வன்னி நோக்கிய தரைப் பாதையோரங்களிலெல்லாம் எறிகணைகளுக்குச் சிக்காமல் ஓங்கி வளர்ந்து நிற்கும் பனைமரங்கள் இவரின் சமூகப் பணிகளை எமக்கு அடிக்கடி நினைவூட்டுகின்றன. அவரது இல்லத்தில் பனம் விதைகளுடன் தென்னை, வேம்பு, நெல்லி போன்ற பல பயன்தரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JPL

மரக்கன்றுகளும் இலவச விநியோகத்துக்கு ஆயத்தமாக எப்போதுமே காணப்படும்.

இணுவில் அண்ணா தொழிலகத்தின் உரிமையாளர் பொன்னையா நடராசா அவர்கள், யாழ்ப்பாண மண்ணில் உருவாகி வளர்ந்த தனது கைத்தொழில் நிறுவனமான அண்ணா கோப்பி தொழிலகத்தின் உருவாக்கத்தின் பின்புலமாக அமரர் கனகராசா அவர்களே இருந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்ணாமலைப் பரிகாரியாரின் ஞாபகமாக அண்ணாமலை ஆயுர்வேத பற்பொடியின் உற்பத்தியுடன் ஆரம்பமாகி, அண்ணா என்ற பெயர் நிலைத்து, கைத்தொழில் அதிபர் மில்க்வைற் கனகராசாவின் ஆதரவுடன் தளைத்து வளர்ந்து பல்வேறு கிளை நிறுவனங்களையும் சர்வதேச வர்த்தகத்தினையும் முன்னெடுத்துச் சென்றவர் பொ.நடராசா என்பவராவார்.

ஒரு தடவை உயிர் இரசாயனத்துறையில் ஈடுபாடுகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புத்திஜீவியான பேராசிரியர் பொன் நவரட்ணம் அவர்கள் தினகரன் பத்திரிகையின் நேர்காணலின்போது (3.10.2010 இல் வெளிவந்தது) மில்க்வைற் சோப் உரிமையாளர் கனகராசா அவர்களின் உந்துதலினாலேயே தான் பனம்பழங்களை ஆராய்ச்சிக்கு முதலில் உட்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். யாழ். மண்ணில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் பனம்பழங்களில் உள்ள நுண்ணங்கிகளின் நொதியச் செயற்பாட்டினால் தோன்றும் துர்நாற்றம் வளியையும் நொதிப்புப் படிமுறை செயற்பாட்டால் உருவாகும் பலவகை சேதன அமிலங்கள் மண்ணையும் மழைகாலங்களில் நீருடன் கலந்து நீர்நிலைகளையும் மாசடையச் செய்கின்றதெனக் கூறும் இப்பேராசிரியர், இம்மாசடைதலைத் தடுக்க பனம்பழங்களில் உள்ள வெல்லத்தை நீர்க் கரைசலாகப் பிரிக்கும் முறையைப் பின்னாளில் அறிமுகப்படுத்தியவர். திண்ம மீதியை உலரவைத்து தூளாக்கி வில்லைகளாகவோ கூட்டு வில்லைகளாகவோ நோயாளிகளுக்கு வழங்குவதன் மூலம் அதிலுள்ள கரையும் நார்களினால் குருதியில் உள்ள கொழுப்பு, வெல்லம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம் என்ற உயர்தொழில் நுட்ப முறையை விஞ்ஞான உலகிற்குத் தொட்டுக்காட்டியதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலாஸ் விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் கலாநிதி W.L. சுமதிபால அவர்களால் தேசிய உயர்விருது வழங்கப்பட்டு பேராசிரியர் பொன் நவரட்ணம் அவர்கள் கௌரவிக்கப்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று நம் தீவக வெளிகளில் காணப்படும் பனைகளின் இருப்புக்கு திருநா அண்ணரின் பங்களிப்பு எவ்வளவு முக்கிய மானதோ அமரர் கனகராசாவின் பங்களிப்பும் அதேயளவு முக்கியமானதாகும்.

திருநா அண்ணர் பனை வடலிகளை வெட்டிப் பராமரிப்பதுடன், தான்தோன்றியாக வளரும் பனை வடலிகளை வெட்டிச் சீராக்கி அவற்றை நேராகவும், செறிவற்றும் வளர்வதற்கான வழிவகைகளைச் செய்வதைத் தன் பொதுப்பணிகளில் ஒன்றாகக் கண்டவர். அவ்வாறு வெட்டப்படும் கழிவு இலைகளை வீசி எறியாமல் அவற்றை அநாதரவாகத் திரியும் கால்நடைகளுக்கு உணவாக்கி வழங்கியும் வந்துள்ளார். 1983ஆம் ஆண்டில் தனது 44 ஆவது வயதில் மில்க்வைற் பனை அபிவிருத்தி இயக்கத்தினரால் "பனைவளம் பெருக்கிய பண்பாளர்" என்னும் பட்டம் திருநா அண்ணருக்குச் சூட்டப்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவரது வழியொட்டியே, அவரது தடத்தில் பயணிக்கும் சர்வோதய அமைப்பினர் புங்குடுதீவு பிரதான வீதியில் மூன்று மைல் தூரத்திற்கு புளியமரக்கன்றுகளை நட்டு, வேலியிட்டு, அன்றாடம் நீருற்றிப் பராமரித்து வருகின்றனர். இதற்கான உதவிகளை வடபிராந்திய விவசாயத் திணைக்களம் வழங்கி வருகின்றது.

வடமாகாண சபையின் விவசாய அமைச்சிடமிருந்து நிழல்தரு மர நாற்றுக்கள் பெறப்பட்டு, ஊரவர்களின் பிறந்தநாள் பரிசுப் பொருளாகவும், மறைந்த ஊர்ப் பிரமுகர்களின் ஆத்ம சாந்தி நினைவு தினங்களின்போதும் வழங்கப்பட்டு வருகின்றன. மறைந்த ஊர்ப் பெரியோரை காலம்காலமாக நினைவுகூரும் வகையில் அவரவர்களின் நினைவாக அக்கன்றுகளை நட்டுப் பராமரிக்கும் வகையிலும் வழங்கப்பட்டு வருகின்றன. வீதிகளின் இருமருங்கு களிலும் நாட்டப்பெறும் இம்மரக்கன்றுகள் அக்குடும்பங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுடன் தொடர்ந்து பராமரிக்கப்பட்டும் வருகின்றன. மரங்கள் போதிய அளவு வளரும்வேளையில் குறித்த பிரமுகர்களின் பெயரை நினைவூட்டுவதுடன் பொன்மொழிகளையும் தாங்கிய பதாதைகளை விதியோரத்தில் அம்மரங்களின் கீழ் நிறுவியும் நினைவுகூர வைப்பதற்கான திட்டம் ஒன்றும் சர்வோதயப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**யோகசுவாமிகள் ஞாபகார்த்த விவசாயப் பயிற்சிப் பண்ணை**

கிளிநொச்சியில் திருவையாறு கனகாம்பிகைக்குளம் சேவிஸ் ரோட்டில் அமைந்துள்ள இப்பண்ணையானது பத்தொன்பது ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. இப்பண்ணை யோக சுவாமிகள் ஞாபகார்த்த பயிற்சிப் பண்ணை என்ற பெயரில் 1970ஆம் ஆண்டு திருநா அண்ணர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. படித்த வாலிபர் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இக்கூட்டுறவுப் பண்ணையானது, புங்குடுதீவு கிராமத்தின் திருநா அண்ணர் உள்ளிட்ட 10 இளைஞர்களைக் கொண்ட குழுவினரால் காடு வெட்டிக் களனியாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. யானைக் காடுகளாகவிருந்த அப்பிரதேசத்தில் தங்கியிருந்து காட்டு யானைகளுடன் போராடி அந்தப் பயிற்சிப் பண்ணையை திருநா அண்ணர் வளர்த்தெடுத்துவந்தார்.

1972களின் பின்னர் சர்வோதய இயக்கத்துடன் இணைந்த பின்னர், அவர் சர்வோதய-ஹெல்விற்றாஸ் (சுவிட்சர்லாந்து) நிறுவன விவசாயக் கூட்டுத் திட்டங்களினூடாக பல விவசாயச் செயற்றிட்டங்களையும் மாதிரிப்பண்ணை வசதிகளையும் அங்கு படிப்படியாக உருவாக்கியிருந்தார்.

ஹெல்விற்றாஸ் நிறுவனம் சுவிட்சர்லாந்தை தாயகமாகக் கொண்ட ஒரு அமைப்பாகும். இதன் பிரதிநிதியான தோமஸ் சிம்மர்மான் என்பவரை கிளிநொச்சிப் பண்ணைக்கு வரவழைத்து, அவரின் வரண்டவலய நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்திறனை திருநா அண்ணர் திறம்படப் பயன்படுத்தித் தீவக இளைஞர்களுக்கு அவர் மூலமாக செயன்முறைப் பயிற்சிகளைப் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். தன் பிரதேச மக்களுக்கு பாரம்பரியமும், நவீனமும் கலந்த பல விவசாயப் பயிற்சித் திட்டங்களை இப்பண்ணையில் பெற்றுக்கொடுத்தார்.



கிளிநொச்சி யோகர்சுவாமி ஞாபகார்த்த விவசாயப் பண்ணையில் ஏர்பூட்டி உழுத தொண்டர் திருநாவுக்கரசு

கிளிநொச்சிப் பண்ணையில் மாட்டுப் பண்ணை, நாற்றுப் பண்ணை, நெல் வயல், பெருந்தோட்டப் பயிர், பழமரச் செய்கை, தென்னைச் செய்கை, வாழை உற்பத்தி, காற்றாடி நீரிறைக்கும் இயந்திரம், சூத்திரக் கிணறு, பயிற்சியாளர் விடுதி, பண்ணை முகாமையாளர் விடுதி, பண்ணை அலுவலகம், பொதுச் சமையலறை, உற்பத்திப் பொருள் விற்பனை நிலையம், ஆயுர் வேத வைத்தியசாலை போன்ற பல்வேறு நிர்மாணத் திட்டங் களுக்காக சுமார் 45 இலட்சம் ரூபா வரை முதலீடுகள் செய்யப் பட்டன. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட இத்திட்டங்களினூடாக அப்பிரதேச விவசாயிகளின் நன்மைக்கும், சர்வோதய இயக்கத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் திருநா அண்ணர் வழி அமைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமாக நீண்டகாலம் இயங்கிவந்த இப்பண்ணையை துர்அதிர்ஷ்டவசமாக தமிழீழ விடுதலைப்புலிகள் 1980களின் நடுப்பகுதியில் தமது தேவைகளுக்காகக் கையகப்படுத்திக் கொண்டார்கள். அதனையடுத்து இடம்பெற்ற போர் மற்றும் வன்செயல்களின் பயனாக பண்ணை முற்றாக அழித்து ஒழிக்கப் பட்டது. வடஇலங்கை சர்வோதயத்தின் பொருளாதாரத்தில் பெரும்பாதிப்பினையும் இவ்விழப்பு ஏற்படுத்தியிருந்தது.

சிலகால புகலிட வாழ்வின் பின்னர் ஊர் திரும்பிய திருநா அண்ணர், 1997ஆம் ஆண்டிலிருந்து விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக புங்குடுதீவில் கவனிப்பாரற்றிருந்த நெற்காணிகளைப் பயன்படுத்தி 200 பரப்புக் காணியில் நெல் சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தார். வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் வகையில் காணிவசதியுள்ள மக்களுக்கு விசேட பயிற்சி வகுப்புகள் ஒழுங்குசெய்து நடத்திய தோடு தாவர விதைகளையும் கன்றுகளையும் இலவசமாக வழங்கி கிராமியமட்ட உணவுற்பத்திக்கு தன்னாலான பங்களிப்பினை வழங்கினார். அத்தோடு கேரதீவுக் கிராமத்திலே பானை நீர்ப்பாசன முறைமையிலான தென்னை நடுகையையும் அவர் ஊக்குவித்தார். தலைமன்னார் பகுதிகளில் இருந்து எடுத்துவரப்பட்ட வீரியம் கொண்ட பனை விதைகளையும் நாட்டி கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பணிகளை கேரதீவில் முன்னெடுத்தார்.

விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் 2000இற்கும் மேற்பட்ட தென்னை, பலநூறு நிழல்தரு மரங்கள், வாழை, கொய்யா, மாதுளை போன்ற பயன்தரு மரங்கள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. சாவகச்சேரிப் பகுதியிலிருந்து 3000 இலாந்தா இன முருங்கைகள், பப்பாசி போன்றவற்றை புங்குடுதீவுப் பிரதேசத்திற்குப் பெற்றுக்கொடுத்து அம்மக்களின் பயிர்ச் செய்கையினையும் ஊக்கப்படுத்தி பெரும் நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தார்.

திருநா அண்ணர் விவசாயத்துறையின்பால் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக, 2000ஆம் ஆண்டு தனது 61ஆவது வயதில், புங்குடுதீவு கமநல கேந்திர நிலையத் தலைவரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே ஆண்டு புங்குடுதீவு பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனம் அமைக்கப்பட்டபோது அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் தலைவராகப் பணியாற்றிய காலகட்டத்தில் புங்குடுதீவு விவசாயத்தினை குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியுறச் செய்தார். அத்தோடு விவசாயப் போதனாசிரியரின் ஒத்துழைப்புடன் புங்குடுதீவுவாழ் விவசாயப் பெருமக்களுக்கு விவசாயப் பயிற்சிகளையும் பெற்றுக்கொடுத்தார்.

அடுத்த ஆண்டு 2001இல் யாழ். மாவட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினரானார்.

பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத்தின் செயலாளரான நா.கருணானந்தசிவம் அவர்கள் தனது குறிப்பொன்றில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளதை இங்கு பதிவுசெய்வது பொருத்தமாகும்.

"மதிப்புக்குரிய திருநாவுக்கரசு அவர்களுடன் 1962ஆம் ஆண்டு முதல் அவர் இறையடி சேரும்வரை மிக நெருங்கிய உறவுடன் பழகி வந்தேன். புங்குடுதீவு மண்ணில் மட்டுமல்லாது பல பிரதேசங்களிலும் சிரமதானப் பணிகளையும் பல அபிவிருத்தித் திட்டங்களையும் அவரது சொந்த முயற்சியினால் செய்துவந்தோம். 2000ஆம் ஆண்டு பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனம் அமைக்கப்பட்ட போது அதன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அதன் தலைவராக இருந்து புங்குடுதீவு விவசாயத்தினை வளர்ச்சி யுறச் செய்தார். அத்தோடு விவசாயப் போதனாசிரியரின் ஒத்துழைப்புடன் புங்குடுதீவு வாழ் விவசாயப் பெருமக்களுக்கு விவசாயப் பயிற்சிகளையும் பெற்றுக்கொடுத்தார். அத்தோடு கால்நடைகளுக்கான தடுப்பூசி, பழ மரங்களுக்கும் தென்னை மரங்களுக்குமான கிருமி நாசினிகளையும் அத்திணைக்களங்களிடம் இருந்து பெற்று அவற்றைத் தாமே விசிறி அம்மரங்களை நோயினின்றும் தடுத்த பெருமையும் அவரையே சாரும்." (நா. கருணானந்தசிவம், திருமலர், 2001).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 10

# திருநா அண்ணரின் சுகாதாரப் பணிகள்

திருநா அண்ணர் புங்குடுதீவு கிராமசபையின் வட்டாரப் பிரதிநிதியாகச் செயற்பட்ட காலத்தில் அவரது முக்கியமான சுகாதாரப் பணியாக இருந்தது புங்குடுதீவில் வீட்டுக்கொரு கழிவறை கட்டும் பணியாகும். வீடுகளில் கழிவறை வசதியின்றி பெண்கள் குழந்தைகள் பட்ட அவலங்களை அவர் நிறையவே அறிந்திருந்தார். புங்குடுதீவு இளைஞர்களைத் திரட்டித் தனது வேலைத்திட்டத்தினை கலந்துரையாடி விவாதித்துவந்தார்.



சிரமதானப்பணி மூலம் புங்குடுதீவில் வீட்டுக்கொரு கழிவறை அமைக்கும் திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கொரு கழிவறை கட்டும் பணி

அவர் கிராமசபை வட்டாரப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட வேளையில், அத்திட்டத்துக்கு முழுவடிவம் கொடுக்க முன்வந்தார். அதன் பயனாக, 1965களில் வீட்டுக்கொரு கழிவறை கட்டிக் கொடுக்கும் திட்டத்தை தனது தலைமையில் புங்குடுதீவு இளைஞர் களின் உதவியுடன் தொடங்கியிருந்தார். வி.எஸ்.நல்லையா, கணேசு மகாலிங்கம், வி.எஸ்.சிவலிங்கம், சேனாதி சண்முகராசா, க.ஜெயவீரசிங்கம், இ.கோ.அரியரட்ணம், கெ.ஜெயக்குமார், சி.மு.நாகரத்தினம், சோமு சச்சிதானந்தன், அமரர் துரைசிங்கம், நாக. பத்மநாதன் ஆகியோர் உள்ளிட்ட பலர் இப்பணியில் ஏற்கெனவே ஈடுபட்டிருந்தனர். இத்திட்டத்திற்கு அரச நிதியை ஒதுக்கித் தருவதில் தனது கிராம சபைக்கு அதிக அழுத்தம் கொடுத்துவந்தார். அதில் வெற்றியும் கண்டார்.

## வைத்தியசாலை மேற்பார்வையாளர்

1973ஆம் ஆண்டு தொடக்கம் 1982ஆம் ஆண்டு வரை புங்குடுதீவு அரசினர் மாவட்ட வைத்தியசாலையின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக திருநா அண்ணர் நியமிக்கப்பட்டிருந்தார். அரச நியமனம் பெற்று வைத்தியசாலையில் குறைபாடுகள், புதிதாக அமுல்படுத்தக் காத்திருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிச் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்திய திருநா அண்ணர் அவர்கள், வைத்தியசாலையில் அடிப்படை வசதிகளற்ற நிலையிலிருந்த மகப்பேற்று விடுதியை விசாலமாகக் கட்டி, சுகாதார அமைச்சின் பிரதிநிதிகளுடனும், தனது நட்பு வட்டத்திற்குள் இருந்த அரசியல்வாதிகளுடனும் தொடர்பாடலை மேற்கொண்டு அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களையும் புங்குடுதீவு வைத்தியசாலைக்குத் தருவித்துக்கொண்டார். தாய்மார்களின் உளநலனுக்காக பிரசவ விடுதிச் சுவர்களில் அழகான மழலைகளின் ஓவியங்களை தரமான ஓவியர்களைக்கொண்டு வரைவித்தார். அதன்மூலம் பிரசவத்திற்காக அங்குவரும் தாய்மார்களின் உளவியல் அழுத்தங்களைக் குறைத்து மனோரம்மியமான சூழலை ஆஸ்பத்திரி விடுதிகளில் ஏற்படுத்த வழிசெய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுகாதார சேவை நிலையங்கள்**

புங்குடுதீவில் குறிகாட்டுவான், இறுப்பிட்டி, வல்லன், ஊரதீவு ஆகிய இடங்களில் சர்வோதய இயக்கத்தினால் நிரந்தர சுகாதார சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டு, சுகாதார ஊழியர்களாக அவ்வூர் மக்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து, போதிய பயிற்சிகளை வழங்கி அவர்களின் துணையுடன், பல்வேறு சுகாதார சேவைகள் புங்குடுதீவில் வழங்கப் பெரும்பாடு பட்டார்.

*1978-1981* காலகட்டத்தில் ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரியாகவிருந்த வைத்திய கலாநிதி என்.சிவராஜா அவர் களுக்கும் திருநா அண்ணருக்கும் இடையிலான சமுகநலன் சார்ந்த தொடர்பு பற்றியும் இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்த மாகும். வைத்திய கலாநிதி சிவராஜா அவர்கள் ஊர்காவற்றுறை எம்.ஓ.எச் அதிகாரியாகப் பதவியை ஏற்ற சிறிது காலத்திலேயே மருத்துவ அறிக்கைகளின் வழியாக புங்குடுதீவில் அதிகளவில் தொழுநோயாளர் இருப்பதைக் கண்டறிந்திருந்தார். இவர்களுக்கான சிகிச்சைகளை சுகாதார ஊழியர்கள் எவரும் முன்னர் குறிப்பிடும் படியாக முன்னெடுத்திருக்கவில்லை என்பதையும் அலுவலக கோவைகளிலிருந்து கண்டுகொண்டார். ஒருவகையில் புங்குடுதீவிலிருந்த தொழுநோயாளர்கள் சமூகத்தினரால் ஒதுக்கப் பட்டவர்களாகவும், மறக்கப்பட்டவர்களாகவும், வறுமைக்கோட்டின் கீழ் அங்கு வாழ்ந்து வந்தனர். தொழுநோய் பற்றிய புரிதலின்றி சுகாதார ஊழியர்களினால் அவர்களுக்கான பொருளாதார வசதிகளும் செய்துதரப்படவில்லை. அவர்களது குழந்தைகளுக்கான கல்வி வசதிகளும் ஏற்பாடு செய்து தரப்பட்டிருக்கவில்லை.

தனது மருத்துவக் குழுவுடன் வைத்தியர் சிவராஜா புங்குடுதீவுக்குச் சென்று மேற்கொண்ட ஆரம்பகட்ட களஆய்வின் போது, அங்கு 78 தொழுநோயாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டறிந்து அதிர்ச்சியடைந்தார். இவ்வெண்ணிக்கை ஒரு குறிப் பிட்ட சிறு பரப்பளவினுள் மாத்திரம் செறிவாகக் காணப்பட்டது. அதில் மூவர் மட்டுமே அதுவரை சிகிச்சைபெற முன்வந்திருந்தமையும் அவரை தீவிரமாகச் சிந்திக்க வைத்திருக்கிறது. ஆராய்ந்து பார்த்ததில் சுகாதாரத் துறை ஊழியர்கள், தமக்கும் தொழுநோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்றக்கூடும் என்ற அறியாமையினால் தொழுநோயாளர்களுடன் நேரடித் தொடர்பினை ஏற்படுத்தத் தயங்கி வந்துள்ளமையும் தெரியவந்தது. தொழுநோய் பற்றிய தவறான வதந்திகளும் மூடநம்பிக்கைகளும் மக்களிடையே மலிந்திருந்ததை அவரால் கண்டறியமுடிந்தது.

இந்நிலையில் தொழுநோயாளர்களுக்கான விழிப்புணர்வினை ஊட்டவும், அவர்களுக்கான தீவிர சிகிச்சையில் உதவுவதற்கும் பொருத்தமான தொண்டர்களை அக்கிராமத்திலிருந்தே தேர்வு செய்வதற்காக புங்குடுதீவில் நிறுவன ரீதியாகச் செயற்படும் அமைப்புகளைப் பற்றிய தேடலில் இவர் ஈடுபட்டிருந்தார். அவ்வேளையில் அவருக்கு வட இலங்கை சர்வோதய அமைப்பு பற்றியும் அதன் அமைப்பாளர் க.திருநாவுக்கரசு பற்றியும் அவருக்குத் துணையாக நிற்கும் அவரது உடன்பிறப்புகள் மற்றும் உறவினர்கள் பற்றியும் தகவல் வழங்கப்பட்டது.

திருநா அண்ணரும் அவரது சர்வோதய குடும்பத்தினரும் தாம் பிறந்த மண்ணின் மைந்தர்களாக நின்று ஆற்றும் சிரமதானப் பணிகளின்பால் ஈர்க்கப்பட்ட மாவட்ட வைத்திய அதிகாரி




ஊர்காவற்றுறை லயன்ஸ் கழக ஏற்பாட்டில் நடைபெற்ற புங்குடுதீவு மருத்துவ முகாம் ஆரம்பநாள் நிகழ்வின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராஜா அவர்கள் திருநா அண்ணருடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டார். முதல் சந்திப்பிலேயே திருநா அண்ணரிடம் காணப்பட்ட தேசப்பற்று, மண்பற்று, சுகாதார நிலையில் புங்குடுதீவை மேலெழச்செய்யவேண்டும் என்ற கரிசனை என்பவை அவரிடம் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

திருநா அண்ணர் முன்வந்து வழங்கிய தொண்டர்களின் உதவியுடன் தொழுநோயாளர்களுக்கான சிகிச்சையினை புங்குடு தீவில் தொடங்கினார். அத்தொடர்பின் காரணமாக, அன்றுவரை சுகாதார சேவையினருடன் சுமுகமான தொடர்பினைப் பேணியிராத ஒட்டுமொத்த புங்குடுதீவு மக்களையும் கிராமத்தின் சுகாதாரப் பணிகளில் முழுமனதுடன் ஈடுபட வைக்கவும் அவரால் முடிந் திருந்தது. அவர்கள் பின்னாளில், தொழுநோயாளர் பராமரிப்புடன் மாத்திரம் நின்றுவிடாது, சர்வோதய அமைப்பினருக்கு ஆரம்ப சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சிகளையும் அளித்து, ஆரம்ப சுகாதார மையங்களை நிறுவ ஆலோசனைகளும், உதவிகளும் வழங்கினார்.

ஆரம்ப சுகாதார மையங்களினூடாக அங்குள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கான திரிபோஷா போஷாக்கு உணவு வழங்கல் (பின்னாளில் உள்ளூர் உற்பத்தியான சத்துணவுத் திட்டங்களும் சர்வோதயத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்டது), கர்ப்பிணித் தாய்மாருக்கான இலவச அரச உதவிகள், குழந்தை நலம்பேணல், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் என சுகாதாரத் திணைக்களத்தின் பல்வேறு செயற்திட்டங்களையும் புங்குடுதீவுக் கிராமத்துக்கு திருநா அண்ணர் முழுமையாகக் கிடைக்கச்செய்தார். அக்காலத்தில் புங்குடுதீவின் கிராமிய சுகாதார மருத்துவசேவை பெரும்பாலும் சுகாதார சேவை அதிகாரிகளின் வழிகாட்டலின் பேரில், சர்வோதய ஊழியர்களாலேயே முன்னெடுத்துச் செல்லப்பட்டு, முன்னர் சுகாதாரத் திணைக்களத்திற்கும் அம்மக்களுக்கும் இடையே இருந்த பாரிய இடைவெளி முற்றாக இல்லாதொழிக்கப்பட்டது. தொழுநோய், காசசோய் தொடர்பான நோயாளர்களைப் பரா மரிக்கும் பயிற்சிகள் இந்தியாவில் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஐந்து சர்வோதய தொண்டர்களுக்கு வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வோதய இயக்கத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட புரட்சி கரமான திட்டங்களின் காரணமாக கவலையுற்ற சில சுயநலமிகளான "போலிச் சமூக சேவகர்களால்" தவறான கருத்துக்கள் பரவ விடப்பட்டு, சுகாதார அமைச்சுக்கும் வைத்திய கலாநிதி ந.சிவராஜா அவர்களுக்கும் இடையில் அமைச்சின் விதிமுறை களுக்கு அப்பால் செயற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு அதனால் சில கருத்துவேறுபாடுகளும் ஏற்பட்டிருந்தமையும் அவை அனைத்தையும் தன் நேர்மையான, தூய்மையான, சுயநலமற்ற, சமூக நோக்கம் கொண்ட செயற்பாட்டின் காரணமாக வைத்திய கலாநிதி சிவராஜா அவர்கள் வெற்றிகரமாகக் கடந்துசென்றார் என்பதையும் ஊர்காவற்றுறையிலிருந்து மாற்றலாகிச் சென்ற பின்னரும் கூட அவரது பணிகள் சர்வோதய இயக்கத்துக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டுவந்தன என்பதையும் இங்கு பதிவுசெய்ய வேண்டும்.

புங்குடுதீவுக் கிராமத்தில் திருநா அண்ணரதும் அவரது சுகாதாரத் தொண்டர்களினதும் தூய்மையான பணிகளின் காரண மாக 45 தொழுநோயாளர்கள் முழுமையான சிகிச்சையைப் பெற்றுத் தேறினார்கள் என்பது வரலாறு.

இவ்வேளையில் திருநா அண்ணர் எதிர்கொண்ட ஒரு சுவாரஸ்யமான சம்பவமும் இங்கே குறிப்பிடத்தக்கது. சர்வோதய அமைப்பினரின் ஒழுங்கமைப்பில் முதலில் தொழுநோயாளர்களை இனம்காணும் பொருட்டு ஒரு கூட்டத்துக்கு தொழுநோயாளிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட அனைவரும் சர்வோதய நிலையத்தினரால் அழைக்கப்பட்டிருந்தனர். சுகாதார வைத்திய அதிகாரி, அவர் களுக்கு முதலில் தொழுநோய் என்றால் என்ன? அதனை எவ்வாறு ஆரம்பநிலையில் கண்டறிந்து சிகிச்சை வழங்கிக் குணமாக்கலாம் என்றும் சிகிச்சையின்றேல் ஏற்படும் தீவிரமான பாதிப்புகள் என்ன? என்பது பற்றியும் தெளிவாக விளக்கவுரை யாற்றினார். தொழுநோயாளிகளாகச் சந்தேகிக்கப்பட்டோரிடையே ஒரு கூட்டுறவுப் பரிசோதகரும் அவரது மனைவியாரும் இருந்தனர். அவர்கள் இருவரும் தாம் தொழுநோயாளர்களா என்பதைக் கண்டறியும் ஆரம்பகட்ட பரிசோதனைக்குத் தம்மை உட்படுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கு பிடிவாதமாக மறுத்திருந்தனர். வைத்திய கலாநிதியின் உரையின் பின்னர் அந்தப் பெண் எழுந்து, தான் இதுவரை தொழுநோய் ஒரு பாலியல் நோய் என்று அறிந்திருந் ததாகவும், தானும் தன் கணவரும் தம்மைத் தவிர்ந்த வேறெவருடனும் பாலியல் தொடர்பு வைத்திராததால் தமக்குத் தொழுநோய் பீடித்திருப்பதென்பது தவறான மதிப்பீடு எனவும் கூறி அதனால் தாம் சிகிச்சைக்குச் சம்மதிக்கவில்லை என்றார். கிராமங்களில் தொழுநோயாளர்களை பாலியல்நோயாளர்கள் போன்று வகைப்படுத்தும் அறியாமையைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதேபோன்று மற்றொரு சம்பவமும் அக் கிராமத்திலே நடந்தது. அது ஒரு பாடசாலையில் நிகழ்ந்த சம்பவம். சர்வோதய அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த மற்றுமொரு தொழுநோய் விழிப்புணர்வுக் கூட்டம் புங்குடுதீவு பிரதேச பாட சாலை ஒன்றில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. தொழுநோய் பற்றிய தெளிவுரையின் பின்னர் அப்பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்களிடையே தொழுநோய் உள்ளதா என்று கண்டறியப் பரிசோதனையினை மேறகொள்ள பயிற்சிபெற்ற சர்வோதய சுகாதார ஊழியர்களாலும், சுகாதாரத் திணைக்கள ஊழியர்களாலும் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவ் வேளையில் பாடசாலை அதிபர் தலையிட்டு, பரிசோதனைகளை ஆசிரியர்களுடன் மட்டும் நிறுத்திக்கொள்ளுமாறு சுகாதார ஊழியர்களிடையே வலியுறுத்தி வந்தார். அதனை அறிந்த வைத்திய கலாநிதி ந.சிவராஜா அவர்கள், அவரை அணுகி அதற்கான காரணத்தைத் தெரிவிக்கு மாறு கேட்டபோது, அது ஒரு இடைநிலைப் பாடசாலை ஆகையால் மாணவர்களிடையே பாலியல் தொடர்பு இருந்திராது. அதனால் அவர்களை பரிசோதிப்பது வீண் நேர விரயம் என்றிருக்கிறார். தொழுநோய் பற்றிய தவறான அபிப்பிராயங்கள் படிப்பறிவற்ற கிராமவாசிகளிடம் மாத்திரமல்ல சமூகத்தில் உயர்நிலையிலிருக்கும் அறிவுஜீவிகளிடையேயும் காணப்பட்டமையானது பரிசோதனை நிகழ்ச்சியை ஒழுங்குசெய்திருந்த திருநா அண்ணருக்கும் அங்கு பரிசோதனைக்குச் சென்றிருந்த சுகாதார சேவையாளர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியப்பை ஏற்படுத்தியிருந்தது. (என்.செல்வராஜா, எனக்காக அழவேண்டாம்: வைத்தியர் ந.சிவராஜா நினைவு மலர், 2019).

இத்தகைய சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளில் திருநா அண்ணர் நேரடியாகப் பங்குபற்றி ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும், பயனாளிகளுக்கும் தேவையான செளகரியங்களையும் ஆதரவினையும் வழங்கிவந்தார். அவரது தொடர் பங்களிப்பின் காரணமாக புங்குடுதீவின் சுகாதார சேவைகள் முன்னெப்போதுமில்லாத வகையில் விரிவாக்கப்பட்டன. இதற்குக் காரணம், சுகாதார திணைக்களத்துடன் தனது மக்களை இணைப்பதற்கு அவர் ஒரு உறவுப்பாலமாக நின்று செயற்பட்டமையேயாகும்.

### கைவைத்தியக் கல்வி

கிராமங்களில் மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்பார்கள். இவை கை வைத்தியம், இயற்கை வைத்தியம், நாட்டு வைத்தியம், மூலிகை மருத்துவம், வீட்டு வைத்தியம், பச்சிலை வைத்தியம் என்றெல்லாம் எம்மிடையே அறியப்பட்டுவந்துள்ளன. மிகப் பழமையான மருத்துவமுறைகளில் ஒன்றாக ஆயுர்வேத மருத்துவ முறையைக் குறிப்பிடுவர்.

திருநா அண்ணர் நவீன மருத்துவத்துறையில் எவ்வாறு நம்பிக்கை கொண்டிருந்தாரோ அவ்வாறே இயற்கை வைத்தியத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தவர். யோகாசனம் மூலமும் இயற்கை வைத்தியம் மூலமும் நோயணுகா நெறிமுறைகளைக் கண்டறிந்து தனது சுகாதாரத்தைப் பேணி வந்தவர் என்பதை அவரது அணுக்கத் தொண்டர்கள் பலரும் அறிவர்.

சுக்கு, மிளகு, இஞ்சி, மஞ்சள் போன்ற வீட்டுப் புழக்கத்திற்கான பொருள்களை நோய்களைத் தீர்க்கும் மருத்துவ குணம் பெற்றவையாக அறிந்து தனது அன்றாட உணவுகளில் அவற்றைப் பிரயோகிப்பது பற்றி அக்கறையுடன் வாழ்ந்தவர். பிறருக்கும் அதன் வலிமைகளை சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் கூறிவந்தவர். புங்குடுதீவில் ஒரு மூலிகைத்தோட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற அவரது கனவும் இறுதிவரை நனவாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு சர்வோதயப் பொதுக் குசினியின் சுகாதாரம் பற்றி அவர் அடிக்கடி குடும்ப சந்திப்புகளில் சர்வோதய ஊழியர்களுக்கு எடுத்துரைப்பதை அதிகம் கண்டுவந்திருக்கிறேன். மனித வாழ்வில் சமையலறையும், கழிவறையும் மிகவும் சுத்தமான இடங்களாகப் பேணப்படவேண்டும் என்பதை அவர் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சர்வோதய வளாகத்தில் வலியுறுத்தி வந்துள்ளார். இவ்விடத்தில் சர்வோதய மத்திய நிலையத்தின் சமையலறைப் பணியாளர்களின் தொண்டுள்ளம் பற்றியும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.



கேரதீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குசினி/சமையலறை

திருநா அண்ணரின் பொதுக் குசினி பற்றிய சுகாதாரக் கொள்கைகளின் வழிநின்று அவரால் செதுக்கப்பட்ட ஒரு தொண்டுள்ளம் கொண்டவராகவே புங்குடுதீவு சர்வோதய குசினியின் பொறுப்பாளர் சின்னையா விமலாதேவியை காண முடிகின்றது. 1978ஆம் ஆண்டில் சர்வோதயத்தில் இணைந்துகொண்ட "விமலா" சமையலை ஒரு பணியாக மாத்திரம் கருத்தில் கொண்டவரல்ல என்பதை அவர் பணியில் இணைந்த சில காலங்களிலேயே வெளிப்படுத்தியவர். தனது அறுசுவை உணவுத் தயாரிப்பின் மூலமும், அன்பான, கனிவான உபசரிப்பின் மூலமும் அதனை வெளிக்காட்டி எம் அனைவரின் இதயங்களிலும் இடம்பிடித்துக்கொண்ட சகோதரி அவர். சர்வோதயத்துக்கு வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

விருந்தினர்களுக்கு எவ்வேளையிலும் உணவோ, சிற்றுண்டியோ வழங்கக்கூடிய வகையில் அவர் தனது சமையலறை நிர்வாகத்தை ஒழுங்கமைத்து வைத்திருந்தார். அவருக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும் அவரது துணையாளர் படையும் இதற்குக் காரணமாவர். அங்கு நான் பணியாற்றிய வேளையில் அன்றாடம் உணவருந்த அழைக்கும் வகையில் நேரம் தவறாது ஒலிக்கும் நல்லூர் கோவில் மணிபோன்று அவரது சமையலறை மணியொலியும் எம்மை பிரமிக்கவைப்பதுண்டு.

பின்னாளில் திருமணம்செய்து குடும்பவாழ்வில் இணைந்து, தன் குழந்தைகளை நன்றாக வளர்த்தெடுத்து, அவர்களுக்குக் கல்வியறிவூட்டி, பேரப்பிள்ளைகளையும் கண்டுவிட்ட பின்புகூட சர்வோதய வாழ்வியலின் மீதும் திருநா அண்ணரின் வழிகாட்டல் களின்மீதும் அவர்கொண்டிருந்த பற்றுறுதி இன்றுவரை சர்வோதய அமைப்பில் அவரை இயங்கவைத்திருக்கின்றது. அண்மைக் காலத்தில் நான் அங்கு விஜயம் செய்திருந்த வேளையில்கூட கடந்துபோன நாற்பதாண்டுக் காலத்தில் நான் கண்ட அவரது உபசரிப்பில் கடுகளவுகூட சலிப்பையோ, களைப்பையோ என்னால் உணர முடியவில்லை. சகோதரி விமலா போன்றே இன்னும் பலருக்கு திருநா அண்ணர் வழிகாட்டியாக இருந்துள்ளார் என்பதை அவர்களின் வாழ்க்கையில் அவர்கள் கண்டடைந்த வெற்றிகளும், மனத் திருப்திகளும் சாட்சியங்களாக நிற்கின்றன.

திருநா அண்ணர் கைவைத்தியத்தின் மேல் கொண்ட நம்பிக்கைக்கு வாழும் உதாரணமாக யாழ்ப்பாணம் நியூ கல்யாணி நகையகத்தின் உரிமையாளர் லயன் சு.நித்தியானந்தன் அவர்களின் அனுபவ வரிகள் அமைகின்றன.

“1989ஆம் ஆண்டு நான் யாழ். நகரில் உள்ள எனது நகைக்கடைக்கு வந்துவிட்டேன். அப்பொழுது எனது வீட்டில் எனது 8 வயது மகளுக்குப் பாம்பு கடித்து விட்டது. அந்த நேரத்தில் எனது மனைவி பிள்ளைகள் எல்லோரும் ஓலமிட்டு அழுதுகொண்டு இருக்கும் பொழுது “திரு அண்ணா” அதை அறிந்து ஓடிச்சென்று, எனது மகளைத் தோளில் சுமந்து சர்வோதய அலுவலகத்துக்குக் கொண்டுபோய் உடன் சிகிச்சை அளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

தன் இருப்பிலிருந்த ஒரு விஷக்கல்லை பாம்பு கடித்த இடத்தில் வைத்து விஷத்தை எடுத்துவிட்டார். எனது மகளைக் காப்பாற்றி எங்களின் துயரத்தைப் போக்கி, சந்தோஷமாக எங்களை வாழவைத்த பெருமகன் அவர்." (லயன் சு.நித்தியானந்தன், திரு மலர், 2001)

திருநா அண்ணர் 1984-1988 காலகட்டத்தில் கிராமசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்தில் பல வருடங்களாக தனது வட்டாரத்தில் இயங்கிய நிலையில், பின்னாளில் நிதிவசதியின்றி மூடப்பட்டிருந்த கிராமசபையின் ஆயுள்வேத வைத்தியசாலைக் கிளையை நீண்டபோராட்டத்தின்பின் போதிய நிதி உதவிபெற்று மீண்டும் திறக்க வழிசெய்திருந்தார். இந்த வைத்தியசாலைக்கு அரசினர் வழங்கிவந்த மானியத்தை தொடர் போராட்டங்களின் வாயிலாக படிப்படியாகக் கூட்டி தமது கிராம மக்கள் இலவச வைத்திய உதவியைப் பெற்றுக்கொள்ள வசதிசெய்து தந்தார்.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கேரதீவு ஐயனார் மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 11

# திருநா அண்ணரின் கலை கலாச்சாரப் பணிகள்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

இது மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடிய தனது தேசிய கீதங்கள் கவிதைகளில் சில வரிகளாகும். திருநா அண்ணருக்கு விருப்பமான கவிதைகளுள் இதுவும் ஒன்று. தீவிரமானதொரு சமூகத்தொண்டனின் வாழ்வில் கலையுணர்வும் கூடவே ஊற்றெடுத்து இருந்திருக்கின்றது என்பதை இவ்வத்தியாயத்தில் விபரித்திருக்கின்றேன். அதற்குக் காரணமாக இருந்த புங்குடுதீவுப் பிரமுகர்களையும், அவர்களை ஒருதளத்தில் கொண்டுவந்து சேர்த்துவைத்த அமைப்பையும் பற்றிய சிறு தகவல்களைப் பரிமாற விரும்புகின்றேன்.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் வே.க.சோமசுந்தரம், தமிழறிஞர் கு.வி.செல்லத்துரை, வைத்திய கலாநிதி பசுபதிராஜா ஆகிய மூவரும் திருநா அண்ணரின் சமூக வாழ்வின் வளத்திற்குக் காரணமாக இருந்தவர்கள். தமிழறிஞர் கு.வி.செல்லத்துரை அவர்கள், புங்குடுதீவில் கௌரவமான சமூக சேவையாளர்களுள் ஒருவர். அவர் புங்குடுதீவு மக்கள் சேவா சங்கத்தின் தலைவராகவும், புங்குடுதீவு மேற்கு பலநோக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் இருந்தவர். புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்களாக விருந்த திருநா அண்ணர் உள்ளிட்ட பத்தொன்பது தொண்டர்களுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாலை மறியல் போராட்டங்களில் கலந்துகொள்ளத் தலைமைதாங்கிச் சென்றவர். இவர் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம், புங்குடுதீவு மகா வித்தியாலயம் ஆகிய கல் லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றியதோடு அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவராகவும் சேவையாற்றினார். பல அரிய பாடநூல்களை எழுதியதோடு, ஞானசுரபி புத்தகக் கம்பனியை நிறுவி அநேக நூல்களை அந்த நிறுவனத்தினூடாக வெளியிட்டிருந்தார்.

புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை 1960ஆம் ஆண்டு தொடக்கம் அமரர் வே.க.சோமசுந்தரம் அவர்கள் ஏற்றிருந்தார். அதன் பின்னர் புங்குடுதீவு இளைஞர் கழகம் பல்வேறு பணிகளில் வீறுடன் செயற்படத் தொடங்கியிருந்தது. மலேசியாவிலிருந்து நாடு திரும்பியிருந்த நாட்டுப்பற்றுமிக்க நல்லதொரு சமூக சேவையாளராக இனம்காணப்பட்டிருந்த வே.க.சோமசுந்தரம் நற்பணிகள் பலவற்றுக்கும் உதவி வழங்கி, ஊக்கமளித்தார்.

புனரமைக்கப்பெற்று, புதிய இரத்தம் பாய்ச்சப்பெற்றிருந்த புங்குடுதீவு இளைஞர் கழகத்தில் வே.க.சோமசுந்தரம் அவர்களது முயற்சியால் திருநா அண்ணரும் மேலும் பல இளைஞர்களும் ஆர்வத்துடன் அங்கத்தவர்களாக இணைந்துகொண்டனர். அரசியல், சமூகம், கலை, கலாச்சாரம், கிராம நிர்மாணம் ஆகிய சகல துறைகளிலும் இளைஞர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி வழங்கி அவர்களை அளப்பரிய சேவையாற்ற வைத்த பெருமை வே.க.சோமசுந்தரம் அவர்களது தலைமைத்துவத்துக்கே உரியதாகும்.

புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் மற்றொரு ஆரம்பகால உறுப்பினராகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர் வித்துவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் அ.கனகசபை ஆசிரியர். இவர் ஒரு எழுத்தாளர், சிறந்த பேச்சாளர்.

புங்குடுதீவு இளைஞர் கழகத்தில் செயலாளராக திருநா அண்ணர் 1958 முதல் சேவையாற்றி வந்திருந்தார். சமூக சேவைகளுடன் புங்குடுதீவு இளைஞர் கழகத்தினர் கலை நிகழ்ச்சி களையும் நடத்துவதில் ஈடுபாடு காட்டிவந்தனர்.

சி.காராளபிள்ளை ஆசிரியர் அவர்கள் இளைஞர்களை ஒன்றிணைக்க உந்துசக்தியாக விளங்கினார். இதன் செயலாளராகச் செயற்பட்டவர், கவிஞர், நல்ல கலைஞன் எனப் பகழ்பெற்ற ஆசிரியர் ஐயாத்துரை சிவசாமி அவர்களாவார். சிவசாமி அவர்கள் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓர் எழுத்தாளர், ஆசிரியர். இவர் கதை, கட்டுரை, நாடகம் எழுதிப் புகழ் பெற்றதோடு இரங்கற்பா இயற்றுவதிலும் சமர்த்தராகத் திகழ்ந்தார். சிவசாமி அவர்களின் கதை வசனம், இயக்கத்தில் பிணம் பேசுகிறது, சட்டம்பி சரவணர், வாழ்வுப்பலி என்று பல நாடகங்கள் உருவாக்கப்பட்டு புங்குடுதீவு இளைஞர் கழகத்தினரால் மேடையேற்றப்பட்டன. இவை அனைத் திலும் திருநா அண்ணர் உள்ளிட்ட பலரும் நடித்திருந்தார்கள். இந்நாடகங்களின் ஆஸ்தான கதை வசனகர்த்தாவாகத் திகழ்ந்தவர் ஐ.சிவசாமி அவர்களாவார்.

"வாழ்வுப்பலி" என்ற பெயரில் ஒரு நாடகம் அன்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை நாடகப் போட்டியில் பல்வேறு பகழ்பெற்ற நாடகாசிரியர்களின் நாடகங் களுடன் போட்டியிட்டு முதற்பரிசைப் பெற்றுக்கொண்டது. "வாழ்வுப் பலி" என்ற அந்த நாடகத்தில் பிரதம வில்லன் பாத் திரத்தில் சிறப்பாக நடித்து மக்கள் மனங்களில் இடம்பிடித்திருந்தவர் திருநா அண்ணர் அவர்கள். அந்நாடகத்தின் கதாநாயகனாகச் சிறப்பாக நடித்து ஈழத்துச் சிவாஜி என அன்று பலராலும் புகழப்பட்டவர் தமிழும் சைவமும் கண்களெனக் கொண்டு இன்று கனடாவில் வாழும் புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலை கலாச்சார சமூகப்பணி**

திருநா அண்ணர் போர்க்காலச் சூழலில் சிலகாலம் புங்குடுதீவி லிருந்து வெளியேறி யாழ்ப்பாணத்திற்குச் சென்று, அங்கு கொழும்புத்துறையில் அமைந்திருந்த யோகர் சுவாமி மகளிர் ஆச்சிரமத்தில் தனது சர்வோதய அமைப்பில் நிரந்தர தொண்டர் களாக இணைந்திருந்த தொண்டர்களுக்கான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்ததுடன், தன் சமூகப் பணிகளையும் அங்கிருந்தே ஆற்றிவந்தார். சமூகப் பணிகளுக்கிடையில் கலை இலக்கிய நூலக வாசிப்புப் பயிற்சிகளையும் அங்கு ஒழுங்கு செய்திருந்தார்.

அக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த கலை, கலாச்சார, சமய, சமூகப்பணி மன்றங்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களுக்கும் ஆலோகசராகவும் வழிகாட்டியாகவும் சிலகாலம் தனது சேவைகளை மறைமுகமாக ஆற்றி மக்கள் மனதில் உயர்ந்த ஒரு மனிதராகப் பரிணமித்திருந்தார்.

தீவுப் பகுதியிலிருந்து பெருமளவு மக்கள், தீவகத்தில் நிலவிய இராணுவத் தாக்குதல், மற்றும் போராளிகளின் பல்வேறு நெருக்குதல்களுக்கும் முகம்கொடுக்க முடியாமல் புலம்பெயர்ந்து யாழ்ப்பாணப் பெருநிலப் பரப்பிற்கு வெளியேறியதனால் தீவகத்தில் கலை, கலாச்சார, கல்வித் துறைகளில் பெரும் வரட்சிநிலை தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இத்தகைய கலை இலக்கிய கல்வியியல் வரட்சிநிலைமையின் காரணமாக, கலை, கலாசாரப் பின்னடைவுகளை அச்சமூகம் கண்டிருந்தது. அந்நிலை கண்டு மனம் துவண்ட திருநா அண்ணர், பாடசாலை விடுமுறை நாட்களில் தீவகத்தில் இருந்த மாணவர்களை கொழும்புத்துறைக்கு அழைத்து வந்து அவர்களுக்குக் கலை கலாசாரப் பண்பாடுகளைப் போதிக்கும் அரும்பணியையும் புரிந்துவந்தார். இதன்மூலம், உளவியல்ரீதியாக அவர்களை ஆற்றுப்படுத்திவைக்க அவரால் முடிந்திருந்தது.

போர்க்காலச் சூழலில் புங்குடுதீவை இராணுவம் கைப்பற்றிய பின் யாழ்ப்பாணம்-சிவதொண்டன், வட்டக்கச்சி, இராமநாதபுரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத்துறை போன்ற பல்வேறு இடங்களுக்கும் சென்று, கலை கலாசார சமய சமூகப் பணிகளை திருநா அண்ணர் ஆற்றிவந்தார்.

இக்காலகட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாக் காலங்களில் தாகசாந்தி, அன்னதானம் ஆகியவற்றையும் ஒழுங்கு செய்து தந்தவகையில், நல்லூரானின் பக்தர்களின் மனதிலும் அவர் படிப்படியாக இடம் பிடித்துக்கொண்டார்.



2009 வைகாசியில் வன்னியின் இறுதித்தாக்குதல் நடவடிக்கையின்போது மரணித்த கிளிநொச்சி மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திருமதி வே.தவமணி அவர்கள்

நாட்டில் சமாதானம் நிலவவேண்டியும், விளைநிலங்களில் பயிர்கள் செழித்து வளரவேண்டியும், இரணைமடுக் குளம் உள்ளிட்ட எமது பிரதேசத்தின் குளங்கள் நிரம்பப் போதியளவு மழை வேண்டியும், திருநா அண்ணர் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்திலும் அன்னதானம் செய்துவந்தார். அதன் ஓரங்கமாக பௌர்ணமி தினத்தில் இரணைமடுக் குளக் கரையில் நீர் எடுத்து அதன் கரையிலே பக்தி சிரத்தையுடன் கங்கைப் பொங்கல் படைத்து படையலிட்டு கற்பூர தீபங்களுடன் ஆகுதி செய்யப்பட்டது. பௌர்ணமிப் பொங்கலுக்கான அரிசித் தேவை யானது யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பிரதேசங்களில் உள்ள 180 கிராமங்களிலும் வாழ்ந்த மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பிடியரிசியின் வாயிலாகவே பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1978ஆம் ஆண்டிலிருந்து 2008ஆம் ஆண்டுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வோதய இணைப்பாளராக இருந்தவரும் குடும்ப நிதியத் திட்டப் பணிகளில் தீவிர ஈடுபாடு காட்டியவருமான வேலாயுதம் தவமணி அவர்களும் இவ்விடத்தில் நினைவுகூரப்பட வேண்டியவராவார். இரணைமடுக்குளக் கரைப் பொங்கல், பௌர்ணமி அன்னதானம் போன்றவற்றிற்கு கிளிநொச்சிப் பிராந்தியக் கிராமங்களிலிருந்து பிடியரசி சேகரிப்பதற்கு இவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய பங்களிப்பினை வழங்கியிருந்தார். அது மாத்திரமன்றி அபாயகரமான போர்ச்சூழலால் தமிழ் மண் பாதிக்கப்பட்டிருந்த வேளையில்கூட, கிளாலிக் கடல்மார்க்கமாக வள்ளத்தில் பயணம் செய்து பிடியரிசிச் சேகரங்களை திருநா அண்ணரிடம் கொண்டுவந்து சேர்ப்பித்து அன்னதானத்திற்குத் தடங்கல் ஏதும் ஏற்படாமல் காத்து மகிழ்ந்த துணிச்சல் மிக்க பெண்மணி இவர்.




வட இலங்கை சர்வோதயம் நடாத்திய சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமைதாங்கிய செயலாளர் திருமதி வே.தவமணி

சர்வோதயத்தின் சார்பில் கிராமவிழா, மாதர் சங்கம் என்பவற்றை நடாத்தி 1800 அங்கத்தவர்கள் வரை இணைத்துக் கொண்டு, அவர்களுக்கான அறக்கொடை, மரண சகாயம், மாணவர் கோட்ட நிதியம், சிறுவர் கோட்ட நிதியம், நிதிக் கொடுப்பனவு, பிரயாணி நிதியம், துவிச்சக்கர வண்டிகள் போன்ற வற்றை அவர்களுக்குப் பெற்றுக்கொடுத்திருந்தார். விவசாயப் பண்ணைகளை ஊக்குவித்தும் ஆதரித்தும் வந்தவர். அத்துடன் 2002ஆம் ஆண்டில் வட இலங்கை சர்வோதயத்தின் இயக்குநர் சபையில் இணைந்து அதன் செயலாளராகப் பணியாற்றி இறுதிவரை திருநா அண்ணருடனும் நிலையப் பொறுப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பமணி அக்காவுடனும், அறங்காவலர் ஜமுனாதேவி அவர்களுடனும் துணையாக நின்று பணியாற்றியவர். திருநா அண்ணர் இடம்பெயர்ந்திருந்த வேளையில், தன்னுடைய சொந்தக் காணியில் கொட்டில் ஒன்றினை அமைத்து, ஒன்றரை ஆண்டுகளாக அந்த நிலையத்தில் தங்கியிருந்து சர்வோதயப் பணிகளை முன்னெடுத்ததுடன் யோகர் சுவாமிகளின் நினைவாக மேற்கொண்ட பாதயாத்திரையை வழிநடத்துவதற்கு முன்நின்று உழைத்தவர் வேலாயுதம் தவமணி அவர்கள் என்பதையும் இவ்வேளையில் நினைவுகூர்வது பொருத்தமாகும்.




வட இலங்கை சர்வோதயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் தேசிய சேமிப்பு ஊக்குவிப்பு நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 12

# திருநா அண்ணருடனான எனது ஊடக/நூலக அனுபவம்



: சர்வோதய மத்திய நூலகராகப் பணியாற்றிய நூலாசிரியர

“வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்” என்ற பொன் மொழியின் நிதர்சன சாட்சியமாக வாழ்ந்து மறைந்தவர் திருநா அண்ணர். எதிர்காலச் சந்ததிக்கென ஆகக் குறைந்தது 25ஆயிரம் நூல்களையாவது சேகரித்து புங்குடுதீவில் அறிவாலயம் ஒன்றினை அமைத்துத் தரவேண்டும் என்ற கனவுடன் வாழ்ந்தவர்.

திருநா அண்ணரின் நூல்களின் மீதான காதல் பற்றி இந்நூ லில் ஏற்கெனவே சில இடங்களில் குறிப்பிட்டுள்ளோம். கலாநிதி வே.இ.பாக்கியநாதன் என்ற நல்ல நூலகரின் நட்பும், தீவகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தமிழறிஞர் குழாமின் சகவாசமும் வழிநடத்தலும் இளவயது முதல் அவரை நல்ல நூல்களுடனேயே எப்பொழுதும் வைத்திருந் தமையானது இறைவன் கொடுத்த வரம் என்றே நம்புகின்றேன்.

சர்வோதய மத்திய நூலகத்தில் எனது பணிக்காலம், திருநா அண்ணரிடம் தேங்கிக் கிடந்த நூல்கள், நூலகங்கள் பற்றிய அவரது புரிதல்களைப் பற்றி பல செய்திகளை உள்வீட்டுப் பிள்ளையாக இருந்து போதிய அளவு அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அவர் வாசிப்பின் மூலமும், கேள்விஞானத்தின் மூலமும், அனுபவத்தின் வழியாகவும் பெற்ற அறிவைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் 1971களில் அவர் ஆசிரியராக இருந்து வெளியிட்டுவந்த "தீவகம்" பத்திரிகையின் வரவு அமைந்திருந்தது. அப்பத்திரிகையின் தமிழ் திருத்துநராகவும், கணக்கு எழுதுநராகவும் நெடுந்தீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காளராகவும், பதில் முகாமையாளராகவும் பின்னாளில் பணியாற்றியிருந்த க.கோபாலபிள்ளை அவர்கள் இருந்து உதவியுள்ளார். "தீவகம்" சிலகாலமே வெளிவந்திருந்தாலும், அதனை மீண்டும் தொடர வேண்டும் என்ற ஆசை அவரிடம் நீறுபூத்த நெருப்பாகவே இருந்துவந்தது. பெருஞ்சுமையான சமூகப்பணிகளை அவர் தோள்களில் தாங்கியிருந்த நிலையில் அவரால் இறுதிவரை தன் பத்திரிகை வெளியிடும் ஆசையை பூர்த்திசெய்துகொள்ள முடியவில்லை. தீவக மக்களின் குறை நிறைகளை உலகத்திற்கு எடுத்துச் சொல்லும் பொறுப்புள்ள அறிஞர்கள் புலம்பெயர்ந்து போனதும், தேசிய, பிராந்திய நாளிதழ்களுள் இரண்டறக் கலந்துவிட்டமையையும் அவர் அறிந்திருந்ததார்.

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்

என்பது மகாகவி பாரதியின் வாசகங்கள். அறிவில் ஏழ்மையுடன் இருக்கும் எவருக்கும் நல்ல நூல்களின் தொடர்பினை ஏற்படுத்தித் தந்து அறிவுச் சுரங்கத்தை அவருக்குக் காட்டி அவரை சுடர்மிகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாளியாக்குவதே நல்ல நூலகரின் பணி என்பதை திருநா அண்ணரின் கருத்துக்களின் வாயிலாகவே நான் பெற்றேன்.

நூலகத்துறையில் கல்விகற்ற வேளைகளில் பெரும்பாலும் நூலகத் தொழில்நுட்பங்களையே முக்கியத்துவமானவையாக எமக்குப் போதித்தார்கள். பகுப்பாக்கம், பட்டியலாக்கம், கணனித் தொழில்நுட்பம், நூலக கட்டிட வசதி, நூலக முகாமைத்துவம் என்று விரியும் நூலகவியல் பாடங்களுக்குள், ஒரு மனிதனை நல்ல வாசகனாக்குவது எப்படி என்று போதிக்கத் தவறிவிட்டார்கள் என்றே நான் இன்றும் வருந்துகின்றேன். சமூகத்தின் கல்வியறிவு தரம் குறையும்வேளை, வாசிப்பை நேசிக்கும் சமூக அக்கறை குறையும் வேளை, தமிழ் வெளியீட்டுத்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் வேளை சமூகத்தின் முக்கிய பொறுப் பாளியாகிய நூலகர்கள் தூக்கமின்றித் தவிப்பதை என்னால் காணமுடிவதில்லை. தானுண்டு தன் வேலையுண்டு என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே எமது சமூகமும் அவர்களை கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. கட்டுடைத்து வெளிவரவேண்டிய அறிவியல் சமூகத்தின் முக்கிய பங்காளிகளாக அவர்களை மதிப்பதில்லை. இத்தகைய சமூகச் சூழலில் நூலகங்களை கோவிலாகவும், நூலகர்களை அந்தணர்களாகவும் கருதி மதிப்பளித்து வந்தவர் திருநா அண்ணராவார்.

இராமாயணத்தில் ஒரு சம்பவத்தை திருநா அண்ணர் அடிக்கடி எனக்கு நினைவூட்டி வந்திருக்கிறார். இலங்காபுரியில் இராவண மன்னனால் சிறைப்பிடிக்கப்பட்ட சீதாதேவியை சிறைமீட்க இராமர் வானரப் படையினருடன் கடலின் இக்கரையில் இருக்கின்றார். கடலைக் கடக்க வேண்டும். அவ்வேளையில் அனுமார் அங்கு மிங்குமாக ஓடித்திரிகிறார். எப்படிக் கடலைக் கடப்பது என்று அவருக்குத் தெரியவில்லை. அப்போது இராமர் அவரை அழைத்து அவரின் வாலில் உள்ள சக்தியை விளக்கி, ஒரே பாய்ச்சலில் இலங்கைக்குப் பாயப் பணிக்கிறார். அனுமாருக்கு அப்போதுதான் தனக்கு அந்தச் சக்தி இருக்கின்றது எனத் தெரியவருகின்றது. இக்கதையைக் கூறி, “செல்வாண்ணர், உங்களுக்குள் மிகப்பெரும் சக்தியொன்று ஒளித்துக்கொண்டுள்ளது. நீங்கள் அதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துங்கள். நீங்கள் செய்வது நல்ல காரியமானால் துணிந்து உடனேயே செயலில் இறங்குங்கள். இறைவன் உங்கள் பணிக்கு வேண்டிய ஆன்மபலத்தையும், நிதிவசதியையும் எப்படி யாவது அனுப்பிவைப்பான்" என்று கூறி முடிப்பார். இராமனாக நின்று அவர் அன்று எனக்குரைத்த வேதமே என்னை இன்று சமூகத்தில் உயர்ந்த நிலையில் வைத்திருக்கின்றது என்று அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.



மண்கும்பான் மேற்கு சர்வோதய கிளை நூலகம் திறப்புவிழாவின் போது

இந்நிலையில் ஒருநாள், திருநா அண்ணரின் விருப்பத்துக்குரிய நூலகரும், எனது விருப்பத்துக்குரிய நூலகவியல் ஆசானுமாகிய வே.இ.பாக்கியநாதன் அவர்கள் பற்றிய ஒரு சம்பவத்தை திருநா அண்ணருடன் பகிர்ந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிட்டியது. நான் முதலாம் ஆண்டு மாணவனாகப் பயின்றுவந்த வேளையில் ஒருநாள், திரு.வே.இ.பாக்கியநாதன் அவர்கள் ஒரு விரிவுரையின் போது, "ஒவ்வொரு நூலகத்துறை மாணவனும் தன் வாழ்நாளில் ஒரு நல்ல வாசகனை உருவாக்கிவிட்டேன் என்ற திருப்தியை அடையும் நாளே முழு நூலகனாக உருவாகும் தகுதியைப் பெறுகின்றான்" என்று கூறி, அதனை முதலில் எமது குடும்பத்தி லிருந்தே தொடங்கவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கருத்து என்னை தீவிரமாகச் சிந்திக்கவைத்திருந்தது. எனது அன்னையார் 1918ஆம் ஆண்டில் பிறந்தவர். தென்னிலங்கையில், நீர்கொழும்பில் வாழ்ந்திருந்த நாங்கள், எமது தந்தையார் இறந்தபின்னர் குடும்பத்தினருடன் 1972ம் ஆண்டுவாக்கில் யாழ்ப்பாணத்துக்கு வந்து, அன்னையாரின் பூர்வீக மண்ணில், ஆனைக்கோட்டையில் வாழத் தொடங்கியிருந்தோம். 1977-78 காலப்பகுதியில் நான் நூலகத்துறையில் முதலாம் ஆண்டு பரீட்சையைப் பூர்த்திசெய்திருந்த வேளையில் அவருக்கு வயது 60. எனது மூத்த சகோதரர்கள் எல்லோரும் தத்தம் பணிநிமித்தம் வீட்டிலிருந்து படிப்படியாக வெளியேற, அம்மாவும் நானும்தான் அந்த வீட்டில் சிலகாலமாக வாழ்ந்து வந்தோம். எனது அன்னையார் அன்றாடம் தேவாரப் பாடல்களை அவ்வப்போது மனப் பாடமாகச் சொல்லி வழிபடுவதைக் கண்டிருந்தபோதிலும், அவர் நூல்களை வாசித்து ஒருபோதும் நான் கண்டதில்லை. சிறுவயதில் பாடப் புத்தகத்தை வாசிக்காமல் குமுதம் சஞ்சிகையை வாசித்தேன் என்பதற்காக அந்தச் சஞ்சிகையை அடுப்புத் தீயில் சுட்டெரித்தவர் அவர். பாடப் புத்தகங்களைத் தவிர மற்றைய எதுவுமே வாசிப்பது ஆகாது என்ற தவறான கருத்தியலை அவர் இறுக்கமாகப் பின்பற்றிவந்தவர். எனவே எனது நூலகவியல் ஆசானின் வேண்டுகோளை முதலில் எனது அன்னையிடம் தொடங்குவதே பொருத்தமானதெனத் தீர்மானித்தேன்.

அந்நாட்களில் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஆர்.ஆர். பூபாலசிங்கமும் அவரது மைந்தர்களில் ஸ்ரீதர்சிங், ராஜன் ஆகிய இருவரும் எனக்கு நன்கு பரிச்சயமானவர்களாக-நண்பர்களாக இருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் பூபாலசிங்கம் புத்தகக் கடைக்குச் செல்லும் வேளைகளில் அவர்களிடம் இரவலாகப் புத்தகங்களை வாங்கிவந்து உறையிட்டு, பத்திரமாகப் படித்துவிட்டு திரும்பக் கொண்டுபோய் அவர்களிடம் கொடுத்துவிடுவேன். அவர்களிடம் அம்மாவுக்கென நான் விலைகொடுத்து வாங்கிச்சென்ற முதலாவது நூல் “திருவிளையாடல் புராணம்”. அதனை அம்மாவுக்காகத் தேர்வுசெய்ததில் ஒரு வாசிப்பு தொடர்பான அறிவியல் தத்துவமும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரிந்ததிலிருந்தே ஒருவன் தெரியாததைக் கற்கத் தொடங்குகின்றான்" என்பார்கள். அம்மாவுக்கு அதிகம் தெரிந்திருந்தவை திருவிளையாடற் புராணக் கதைகளே என்பதை நான் ஏற்கெனவே அறிந்திருந்தேன். அதனை அவர் சிறுபராயத்தில் தான் மூன்றாவது வகுப்பு வரை கற்ற சமயக் கல்வியிலிருந்தோ, பின்னர் செவிவழிக் கதைகளாகவோ அறிந்திருக்கக் கூடும். அவர் கேள்வி ஞானத்தின் மூலம் திருவிளையாடல் புராணக் கதைகளை நிறையவே அறிந்திருந்தார். சிறுவயதில் தூங்கும் வேளையிலும் எமக்குக் கூறியதும் இத்தகைய பக்திக் கதைகளே.




வசந்தபுரம் கிராமத்தில் சர்வோதய பரிசிழுப்புத்திட்ட நிகழ்வொன்று

எனவே பூபாலசிங்கம் - ராஜனிடம் வாங்கிவந்த திருவிளையாடற் புராண நூலை அவர் கைகளில் ஒப்படைத்து அவரது ஓய்வு நேரங்களில் அந்த நூலைப் படிக்கும் படி கூறி வந்தேன். முதலில் அன்னையார் வாசிப்பில் அக்கறை காட்டாதபோதிலும், பின்னாளில் சிறிதுசிறிதாக வாசிக்கத் தொடங்கினார். புத்தகத்தினை வாசித்து முடித்ததும் மீண்டும் அதனை தொடக்கத்திலிருந்து வாசிக்கத் தொடங்கிவிடுவார். ராஜனிடம் இரவல் பெற்ற அந்த நூலை மீளக்கையளிக்க முடியாதுபோனது. அதற்குரிய பணத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் கொடுத்து அதனை அம்மாவின் உடைமையாக்குவதைத் தவிர வேறு வழி எனக்கு இருக்கவில்லை.

தொலைக்காட்சியின் ஆட்சி வீட்டின் முதன்மை அறையை ஆக்கிரமித்திராத அந்தக் காலத்தில் முதுமையின் தனிமையைப் போக்க அம்மாவுக்கு ஒரு பொழுதுபோக்குத் தேவைப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். எனது ஆக்கினை தாங்காமல் திருவிளையாடற் புராணத்தை வாசித்து, மீள வாசித்து அது பற்றிய தகவல்களை அதுவரை "அரட்டையடிப்பதற்கென்றே" எமது இல்லத்தில் கூடும் அவரது அயல்வீட்டுத் தோழியருக்கும் கதை-கதையாகக் கூறத் தொடங்கினார். படிப்படியாக அவருக்கு மகாபாரதம், இராமாயணம், குசேலர் கதை, திரௌபதை கதை, கிருபானந்தவாரியாரின் நூல்கள் என்று சமயம், சமய இலக்கியம் தொடர்பான நூல்களை ராஜனிடம் பெற்று வழங்கினேன். அவற்றுள் பல இரவலாகப் பெற்றுத்திரும்பியவையே. படிப்படியாக நூல்களுக்குள் நுழைந்த எனது அன்னையால் அவரது இறுதிக் காலம் வரையில் வாசிப்பிலிருந்து வெளியே வரமுடியவேயில்லை என்பது நான் அடைந்த பெருவெற்றியாகும். இதுவே நூலகவியல் துறையில் எனக்குக் கிட்டிய முதல் வெற்றியாகவும் இன்று கருதுகின்றேன்.

1979இல் சர்வோதயத்தில் நூலகராகப் பணியை ஏற்றுக் கொண்டதன் பின்னர் திருநா அண்ணருடன் சாவதானமாகக் கதைக்கும் ஒரு பொழுதில் ஒருநாள் பாக்கியநாதன் ஆசிரியரின் அறிவுறுத்தலையும், அதைச் செயற்படுத்தும் வகையில் அம்மாவிடம் நூல்வாசிப்பை ஊக்குவிக்கும் பணியைத் தொடர்வதையிட்டும், அவரது முன்னேற்றம் பற்றியும் இடைக் கிடையே குறிப்பிட்டு வருவேன். திருநா அண்ணர் அதனைச் சர்வோதய இயக்கத்தின் ஊழியர்களிலும் பரீட்சிக்கத் தொடங்கினார். அன்றாடம் மாலைவேளைகளில் சர்வோதயத்தில் இடம்பெறும் குடும்ப சந்திப்புகளின்போது அந்த வாரத்தில் வாசித்த நூல்கள் பற்றியும், அதன் உள்ளடக்கம் பற்றியும் சிலநேரங்களில் கேட்டு சர்வோதய சகோதரிகளின் வயிற்றில் புளியைக் கரைக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினார். தான் முன்னர் வாசித்த நல்ல நூல்களைப்பற்றிக் கூறி அவற்றை என்னிடம் கேட்டுப்பெற்று வாசிக்கும்படி கூறுவார்.

நூலகத்தில் அவர் வாசித்த நூல்கள் எவையென்பது எனக்குத் தனித்துவமாகத் தெரியும். எப்படியெனில் சில வசனங்களை அடிக்கோடிட்டிருப்பார். பக்கங்களின் இடையே குறிப்புகள் மற்றும் சந்தேகங்களை கேள்விக்குறியுடன் தாள்களில் எழுதி வைத்திருப்பார். எனக்கு இந்த குடும்பசந்திப்பு நடைமுறை சுவாரஸ்யமாகத் தெரிந்தது. சகோதரிகள் ஜமுனா, புஷ்பா அக்கா, நந்தினி போன்றோரிடம் காலம் கடந்திடினும், இன்றும் அந்த நினைவுகள் மனதில் மலரும் நினைவுகளாகத் தேங்கிக் கிடக்கும் என்றே நம்புகின்றேன்.

1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருநா அண்ணரின் தனிப்பட்ட சேகரிப்புக்களாக இருந்த சுமார் 500 தமிழ்-ஆங்கில நூல்களை என்னிடம் வழங்கித் தனது நூலகக் கனவை என்னிடம் கூறி என்னை சுதந்திரமாகச் செயற்படவிட்டார். சர்வோதய மத்திய நூலகம் என்ற பெயரில் அதனை சர்வோதய வளாகத்திலுள்ள புதிய கட்டிடத்தில் கொண்டுவந்து சேர்த்து, அவற்றை பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்து ஒரு உசாத்துணை நூலகமாக மாற்றத் தொடங்கினேன். இந்த ஐந்நூறு நூல்களுமே சர்வோதய மத்திய நூலகத்தின் ஆரம்ப முதலீடாகும்.

சர்வவோதய ஊழியர்களது பாவனையின் பொருட்டு மட்டும் பயன்பட்டு வந்த இந்நூலகம் தன் சேவைகளைப் படிப்படியாக புதிய வேலைத் திட்டங்களின் மூலம் விரிவுபடுத்திக் கிராம நூலக சேவையிலும் ஈடுபடலாயிற்று. இன்று, சுமார் 4000 நூல்களுடன் சர்வோதய மத்திய நூலகமாக இது இயங்குகிறது. தமிழரின் விடுதலைப் போராட்டம் வலுவடையும் முன்னர், இந் நூலகம் ஒன்பது கிளைகளைத் தீவகத்தின் பல்வேறு கிராமங்களிலும் நிறுவி, கிராம நூலக சேவையை விரிவாக ஆற்றிவந்தது. போர்க்காலச் சூழலில் இவை படிப்படியாக இயங்காதுபோனமை வேதனைக்குரியதாகும்.

அன்றைய காலகட்டத்தில் மத்திய நூலகத்தினால் சுமார் 15 உள்ளூர், வெளியூர் சஞ்சிகைகளுக்கு சந்தா செலுத்தப்பட்டுவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகத்தின் சேகரிப்புக்களில் காந்தீய நூல்கள், சர்வோதய வெளியீடுகள் உட்பட்ட சமூகவியல் நூல்கள் முக்கிய இடம்பெற்றிருந்தன. நாவல்களும் சிறுவர் இலக்கியங்களும் இரண்டாம் இடத்தை வகித்தன. தீவுப்பகுதிகள், சர்வோதய இயக்கம் ஆகிய இரு பிரிவு தொடர்பான பத்திரிகை, சஞ்சிகைச் செய்திகள் (பத்திரிகை வெட்டுத்துண்டுகள்) இங்கு பாதுகாப்பாகச் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

புங்குடுதீவில் சர்வோதய சுகாதார நிலையத்தில் இயங்கிய கிளை நூலகம், சர்வோதய மத்திய நூலகத்தின் முதலாவது கிளை நூலகமாகச் செயற்பட்டது. இச் சுகாதார நூலகம், உடல் நலவியல், மருத்துவ நூல்களையும் ஆரம்ப சுகாதாரம் தொடர்பான சஞ்சிகைகளையும் கொண்டிருந்தது.

1980களில் யுனெஸ்கோ சர்வதேச அமைப்பு உலக வாசிப்பு தினத்தையொட்டி மொரட்டுவை சர்வோதய தலைமையகத் தினூடாக சர்வோதய பிராந்திய நூலகங்கள் ஒவ்வொன்றிற்கும் 15000ரூபா வழங்க முன்வந்த நல்ல செய்தியினை ஒருநாள் திருநா அண்ணர் என்னிடம் கொண்டுவந்து சேர்த்தார். அது அக்காலத்தில் கணிசமானதொரு பெரிய தொகையாகும். புங்குடுதீவு சர்வோதய மத்திய நூலகத்தின் வளத்தை அதன்மூலம் பெருக்குவதா அல்லது புதிய கிளை நூலகமொன்றினை உருவாக்க அதனைச் செலவிடுவதா என்ற கலந்துரையாடலின் போது, அந்தப்பணத்தில் ஏழு சிறுவர் நூலகங்களை கிளைநூலகங்களாக உருவாக்குவோம் என்ற கருத்தினை நான் அவரிடம் முன்வைத்திருந்தேன். அவர் முகம் மலர்ந்து, “முடியுமா?” என்றார். “முயன்று பார்ப்போம்” என்றேன்.

அதன் பின்னர் நிரந்தர கிராமோதய நிலையங்களைக் கொண்ட மானாவெள்ளை, மண்காடு, உயரப்புலம், நயினாதீவு, வேலணை, மண்கும்பான் மேற்கு, மண்கும்பான் கிழக்கு ஆகிய கிராமங்களில் சிறுவர் நூலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டோம். தமது கிராமத்துக்கு சிறுவர் நூலகம் ஒன்று வருகின்றது என்ற பூரிப்பில் கிராமோதய ஊழியர்கள் வேகமாகச் செயற்பட்டார்கள். தமது கிராமத்தவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுடன் சிரமதான முறையில் தளபாடங்களை உருவாக்கியும், அன்பளிப்பாகப் பெற்றும் நூலக அறையை ஒழுங்கு படுத்தியிருந்தார்கள். யுனெஸ்கோ வழங்கிய பணத்தில் பெரும் பான்மையை சிறுவர்களுக்கும் இளையோருக்குமான தமிழ் நூல்களைக் கொள்வனவு செய்வதில் செலவிட்டோம். அதனை முறையாக மட்டைகட்டிப் பெற்று நூலகங்களுக்கு விநியோகித்தோம். ஒவ்வொரு ஊரிலும் திறப்பு விழாக்களைச் செய்தாம். பொதுவாக சபையில் பேசுவதென்றாலே நா வரண்டு, கைகால்கள் உதற லெடுக்கும் எனது மேடைப் பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்ள சர்வோதய மேடைகளே களம் அமைத்துத் தந்தன. அதற்கு எனது வழிகாட்டிகளாக அன்றிருந்தவர் திருநா அண்ணர் மாத்திர மல்ல. சகோதரி புஷ்பமணியும் சகோதரி ஜமுனாதேவியும் எனது மானசீக வழிகாட்டிகளாக அன்றிருந்தார்கள். இவ்விருவரது பிசிறில்லாத அழுத்தம் திருத்தமான உரைகளை கூட்டங்களின்போது பெருமூச்சுடனும் ஏக்கத்துடனும் கேட்டுக்கொண்டிருப்பேன். இப்படியெல்லாம் என்னால் தெளிந்த சிந்தனையுடன் கால்கள் உதறல் எடுக்காமல், பயத்தில் நாவரண்டு போகாமல் என்றாவது பேசமுடியுமா என்று கவலை கொண்ட நாட்கள் அதிகம்.

நிரந்தர நூலகக் கட்டிடங்களைக் கொண்டதும் மத்திய நிலையத்தினால் பயிற்சியளிக்கப்பட்ட நூலகர்களின் பொறுப்பில் இயங்குவதுமான சர்வோதய கிளை நூலகங்கள் சராசரி 250 நூல்களை தம்மகத்தே கொண்டிருந்தன. மானாவெள்ளை, மண்காடு, உயரப்புலம், நயினாதீவு, வேலணை, மண்கும்பான் மேற்கு, மண்கும்பான் கிழக்கு ஆகிய கிராமங்களில் அமைக்கப் பட்டிருந்த சர்வோதய கிராமோதய நிலையங்களில் இச் சிறுவர் நூலகங்கள் இயங்கி வந்தன.

கிளை நூலகங்களில் ஒன்று தீவுப் பகுதிகளுக்கு வெளியே கிளிநொச்சியிலும் இயங்கியது. இக்கிளை கிளிநொச்சியில் உள்ள சர்வோதய விவசாயப் பயிற்சி நிலையத்தில் இயங்கிவந்தது. இக்கிளை இந்நிலையத்தில் விவசாயப் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மட்டும் தன்சேவையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுப்படுத்தியிருந்தது. இங்கிருந்த நூல்களில் பெரும்பான்மை யானவை விவசாயத்துடன் தொடர்புடையனவாகும்.

யுனெஸ்கோவின் நிதியுதவியுடன் ஒன்றல்ல ஏழு நூலகங்கள் அமைய வழிசெய்யப்பட்ட செய்தியை திருநா அண்ணர் பெருமை யுடன் தலைமைச் செயலகத்தில் நிர்வாகசபைக் கூட்டத்தில் வெளிப்படுத்தியிருந்தார். இதனை என் காதுபடப் பெருமையாகச் சொல்லித் தெம்பூட்டியதுடன், எனது துறையில் தொடர்ந்தும் உறுதியுடன் ஈடுபட நம்பிக்கையூட்டினார்.

நூலகங்கள் தொடர்பான எனது புதிய திட்டங்களை அறிமுகப் படுத்த முனையும் வேளைகளில் ஆர்வத்துடன் அவர் எனக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கினார். சில வேளைகளில் என் திட்டமொன்றுக்கு ஒதுக்கப்படவேண்டிய நிதிபற்றி நான் கவலைப் படும் பொழுதெல்லாம் “செல்வாண்ணர், எமது சமூகத்துக்கு நன்மை பயக்கும் என்று நீங்கள் நம்பினால் எந்த விசயத்தையும் துணிந்து செய்யுங்கள். கடவுள் எப்படியாவது அதற்கான காசை அனுப்பிவைப்பார்” என்பார். அவர் அன்று கூறிய அந்த வேதம் இன்றும் என்னை “நூல்தேட்டம்” தொகுதிகளின் வெளியீடு போன்ற பல பாரிய வேலைத்திட்டங்களில் துணிச்சலுடன் தனி மனிதனாக நின்று இருபதாண்டுகளாகச் செயற்பட வைத்துக் கொண்டிருக்கின்றது.

சர்வோதய மத்திய நூலகத்தில் இரவல் வழங்கும் சேவை, வாசகர் வட்டம் என்ற சேவைத் திட்டத்தினூடாக மட்டுமே வழங்கப்பட்டது. நிதிப்பற்றாக்குறை, நூல்களின் பாதுகாப்பு போன்ற பல காரணங்களால் மத்திய நூலகத்தின் முழுச் சேகரிப்பும் இரவல் வழங்கும் பிரிவில் இடம்பெறவில்லை. நாவல்கள் சிறுவர் நூல்கள் போன்ற ஜனரஞ்சக நூல்களும் அறிவியல் நூல்களும் வாசகர் வட்டத்தினூடாக அங்கத்தவர்களுக்கு குறுகிய காலத்துக்கு (இரண்டு வாரங்கள்) இரவல் வழங்கப்பட்டன. கிளை நூலகங்களும் இதே முறையில் வாசகர் வட்ட சேவை யினூடாக இரவல் வழங்குவதை ஊக்குவித்தோம். சர்வோதய கிளை நூலகங்களின் இருப்பிலிருந்த நூல்கள், எண்ணிக்கையில் குறைவாக இருந்ததினால் அங்கு காலத்துக்குக் காலம் கிராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் நூல்சேகரிப்புப் பணியில் கிளை நூலகர்கள் ஈடுபடவேண்டியிருந்தனர். கிராமத்தவரின் உதவியுடன் தம் நூல் சேர்க்கையை அதிகரிப்பதில் பல கிளைகள் வெற்றி கண்டுமிருந்தன. இதில் வேலணை நூலகத்தினைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஒரு கிராமத்தில், தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை நூல்களை மட்டுமே ஒரு நூலகம் வழங்குவதில் உள்ள சிக்கலைத் தீர்க்கும் பொருட்டு, காலத்துக்குக் காலம் கிளை நூலகங்களுக்கிடையே நூல் பரிமாற்றம் (Inter Library Loan) மேற்கொள்ளப்பட்டும் வந்தன. மத்திய நூலகத்தின் அனுமதியுடன் கிளை நூலகங்கள் தமக்கிடையே நூல்களை பரிமாறிக் கொள்வதன் மூலம் தம் கிராமத்தவர்களுக்கு புதிய நூல்களைக் காலத்துக்குக் காலம் வழங்கக்கூடியதாக இருந்தது. கிராமத்துப் பிள்ளைகளின் பிறந்த நாட்களை நினைவூட்டி தமது பிறந்தநாள் நினைவாக நூலகத்திற்கு நூல்களை வாங்கித்தருமாறு ஊக்குவிக்கப்பட்டனர்.

கிளை நூலகங்களினூடாக மத்திய நூலகம் மேற்கொண்ட சில முயற்சிகளில் குடும்ப நூலகத் திட்டமும் ஒன்றாகும். 23.1.1978 அன்று ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் கிராமத்தில் தனிப்பட்டவர்கள் தம் இல்லங்களில் குடும்ப நூலகங்களை அமைப்பதற்கு ஆலோசனைகள் வழங்கியும், சில நூல்களை ஆரம்ப இருப்பாக அன்பளித்தும் ஊக்குவிக்கப்பட்டனர். ஒரு கிளை நூலகத்தின் கண்காணிப்பில் பத்து குடும்ப நூலகங்கள் வரையில் இயங்கிவந்தன. இதற்கு மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தினர் நூல்களைச் சேகரித்தும் தம் பங்களிப்பினை வழங்கியதை மறக்கமுடியாது. போதிய நிதி வசதியின்மையால் இத்திட்டத்தை திருப்திகரமாக நீண்டகாலத்துக்குத் தொடர்ந்து மேற்கொள்ள எம்மால் முடியவில்லை என்பது பெருங்குறையாகும்.

குடும்ப நூலகத் திட்டத்துக்கு அடுத்தபடியாக அறிமுகப்படுத்தப் பட்டது நடமாடும் நூலக சேவையாகும். கிளை நூலகங்கள் அமைக்கப்படாத கிராமங்களில் நூலக சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் இத்திட்டம் சர்வோதய ஊழியர்களினூடாக நடை முறைப்படுத்தப்பட்டிருந்தது. இத்திட்டப்படி, சர்வோதய கிராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்கள் நடமாடும் நூலகர்களாக இயங்கினர். அவர்களது பொறுப்பில் 25 நூல்களுக்குக் கூடாத எண்ணிக்கையான நூல்கள் கிராமங்களுக்கு வழங்கப்பட்டன. மாதமொருமுறை இந்த நூல்களை ஊழியர்கள், தமது மாதாந்தக் கிராமோதய ஊழியர் கூட்டத்தில் பங்குபற்ற புங்குடுதீவு மத்திய நிலையத்துக்கு வரும்வேளைகளில் மாற்றிப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை மேற்கொண்டிருந்தோம். பல இடங்களில் கிராமோதய ஊழியர்களது இல்லங்களே நூலகங்களாகச் செயற் பட்டுவந்தன. கிராமோதய ஊழியர்கள் பலரும் இதனால் நல்ல வாசகர்களாகத் தம்மை மாற்றிக்கொண்டதை பின்னாளில் என்னால் அவதானிக்கமுடிந்தது. பின்னாளில் சர்வோதய மத்திய நூலகத்திலும், கிளை நூலகங்களிலும் இயங்கும் வாசகர் வட்டம், நடமாடும் நூலகம் போன்றவை நூல் இரவல் பெறும் அங்கத்தவர்களிடமிருந்து சிறிய தொகைப் பணத்தை சேர்வுப் பணமாகப் பெற்றுக் கொண்டன. இத்தொகை, புதிய நூல்களைக் கொள்வனவு செய்யும் செலவின் கணிசமானதொரு பகுதியை ஈடு செய்திருந்தன.

மிகச் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் திருநா அண்ணரின் வழிகாட்டலுடனும் ஆதரவுடனும் வளர்ந்துசென்ற சர்வோதய



நூலாசிரியரால் சர்வோதய சிறுவர் நூலகத்திற்கு 06.10.2018 அன்று வழங்கப்பட்ட சிறுவர் நூல்களின் கண்காட்சியின் ஒரு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகசேவை, 1983இன் பின்னர் நாட்டு நிலைமைகளால் மிகவும் சுருக்கப்பட்டு இன்று சர்வோதய மத்திய நிலைய உள்ளக நூலகமாக உறங்குநிலையில் நீண்டகாலமாக இருந்துவருகின்றது.

இந்நிலையை மாற்றி மீண்டும் எழுச்சிபெறச்செய்யும் வகையில் சிறுவர் நூலகப் பகுதியை மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு படிமுறை வளர்ச்சி யாக, சர்வோதய மத்திய நூலகத்தின் நூலகப் பொறுப்பாளர் ஒருவரை ஜேர்மனி, தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி மன்றத்தினரின் உதவியுடன் நியமித்துள்ளனர். பிரித்தானியாவிலுள்ள Books Abroad என்ற சர்வதேச அறக்கட்டளையுடன் புங்குடுதீவு சர்வோதயத்தையும் இணைத்துள்ளோம். அதன் பயனாக, கடந்த 2018இல் சிறுவர்களுக்கும் இளையோருக்குமான 1288 ஆங்கில நூல்கள் Books Abroad நிறுவனத்தின் உதவியால் அனுப்பிவைக்கப் பட்டிருந்தது. அத்துடன் எனது தனிப்பட்ட நிதி உதவியுடன் 20,000 ரூபா பெறுமதியான 138 சிறுவர் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2018இல் சர்வோதய நூலகத்திற்கு வழங்கப் பட்டிருந்தன. விரைவில் திருநா அண்ணரின் கனவான 25000 நூல்களுடனான நூலகமொன்றினை புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் கட்டிவளர்க்கும் பணியில் தற்போது ஆர்வத்துடன் அனைவரும் ஈடுபட்டுவருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 13

# திருநா அண்ணரின் ஆன்மீக ஈடுபாடு

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் போன்ற அற நூல்களின் கருத்துக்களைத் தான் கற்றறிந்ததுடன் நில்லாதது மட்டுமன்றி, மற்றையோரையும் கற்கத் தூண்டிவந்தவர் திருநா அண்ணர். தான் கற்றுத் தெளிந்தவற்றைத் தன் சிந்தையில் இருத்திவைப்பதுடன், யோகர் சுவாமிகள் போன்றோரின் ஆத்மீக நற்சிந்தனைகளான அருள்மொழிகளில் திளைத்துமிருந்தார். இதனால் பின்னாளில் ஆத்மீகம் இவரை வெகுவாகக் கவர்ந்தது.

இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் வட மாகாண அலுவலகம் புங்குடுதீவில் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் 1972களிலிருந்து திருநா அண்ணர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்களை பல பதிப்புகள் வெளியிட்டு இலவசமாக விநியோகித்து, மாணவர்களின் ஆன்மீகக் கல்வி அறிவினை விருத்திசெய்யும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். திருஞானசம்பந்த நாயனார் காட்டிய வழியில் தாளத்தோடும் பண்ணோடும் சிறுவர் களைப் பக்திப் பாடல்களைப் பாடவைக்க பண்ணிசை வகுப்புகளை ஒழுங்கமைத்ததுடன் மட்டும் நின்றுவிடாது, அவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளையும் செய்துகொடுத்துவந்தார்.

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்றென அவர்களைத் தெய்வமாக மதிக்கும் அமரர் திருநாவுக்கரசு அவர்கள் புங்குடுதீவுச் சிறுவர்கள் வளரும்போது, இளவயதிலேயே சிறந்த பண்பாளர் களாகவும் நல்லொழுக்க சீலர்களாகவும் அறிவாற்றல் உடையவர் களாகவும் அவர்கள் வளர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டவர். அதேவேளையில் தீவுப்பகுதிகளில் அருகிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்திசூடி முற்றோதல் நிகழ்வு



வட இலங்கை சர்வோதய முன்றலில்



கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் மகளிர் ஆச்சிரமத்தில்



புங்குடுதீவு நிகழ்வில் கொடியேற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் பண்பாட்டுக் கலை, கலாசாரத்தையும் தமிழர் மரபுகளையும் சிறுவர்கள், இளையோரிடையே எடுத்துக்கூறி, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவர்களை ஆற்றுப்படுத்திவந்தார். சிறுவர்களின் மேலதிக ஆன்மீக வளர்ச்சிக்காக, சர்வோதய வளாகத்திற்கு முன்பாகவுள்ள புங்குடுதீவு சிவன் தேவஸ்தானத்தில் வெள்ளிக்கிழமைகள் தோறும் கூட்டுப்பிரார்த்தனை வழிபாட்டினை நடாத்த ஆலயக் குருவான சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் மூலம் ஏற்பாடு செய்தும் தந்திருந்தார்.

பின்னாளில் இம்மாணவர்களின் பங்களிப்புடன், புங்குடுதீவில் கோவில் திருவிழா காலங்களிலே பண்ணிசைகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும் நடைபெறுவதை ஆதரித்தும், முடிந்தவரை ஊக்குவித்தும் வந்துள்ளார்.

*13.01.2001*இல் இருந்து ஐந்து நாள் நிகழ்வாக ஆத்திசூடி முற்றோதல் விழாவொன்றினை புங்குடுதீவில் நடாத்தியதன்மூலம் அப்பிரதேச மாணவர்களின் சமயக் கல்வி வளர்ச்சிக்கு திருநா அண்ணர் உரமூட்டிவந்தார். வன்முறைகளையே வாழ்க்கைமுறை களாகக் கண்டு அதனை நியாயப்படுத்தி வாழும் ஒரு தலைமுறைச் சமூகத்தை தவிர்த்து, எமது அடுத்த தலைமுறையாவது அதிலிருந்து விடுபட்டு அறநெறி வழியிலே நின்று வாழவேண்டும் என்றால் சமூகத்தில் அதற்கான வாய்ப்புக்களை நாம்தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்தவர் திருநா அண்ணர். அதனை அடைவதற்கு ஒரு வழியாகவே இத்தகு விழாக்களைக் கொண்டாடி அவற்றில் சிறுவர்களை பயிற்றுவித்து மேடையேற்றி அவர்களின் திறமையைத் தானும் கண்டு களித்து, பெற்றோர் உற்றோரையும் மகிழ்வித்து உற்சாகப் படுத்தி வந்தார். ஆத்திசூடியை முற்றாகப் பிழையின்றி ஓதி முடித்த மாணவருக்கு பணப்பரிசுகளையும் அற நூல்களையும் வழங்கி கௌரவித்து ஊக்குவித்தார்.

### சர்வோதய வளாகத்தின் அணையா விளக்கு

*1978* இல் திருநா அண்ணர் இந்த நாட்டின் அமைதிக்கும் சுபீட் சத்துக்குமான பிரார்த்தனையோடு ஏற்றிவைத்த உயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளக்கு ஒன்று இன்றுவரை அணையா விளக்காக சர்வோதய வளாகத்தில் ஒளிவீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. கிராமங்களின் வளர்ச்சியையும், அதனைச் சாத்தியமாக்குவதாக அமையும் ஆன்மீக, கல்வி, பொருளாதார, சமூக அபிவிருத்திகளையும், அனைத்து மக்களினதும் வாழ்க்கையில் நற்கீர்த்தியையும் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில் இந்த அணையாவிளக்கு ஒளியேற்றப்பட்டு, இன்றுவரை 41ஆண்டுகளாக சர்வோதயத் தொண்டர்களால் அணையாது பாதுகாக்கப்பட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. சர்வோதய வளாகத்தில் அந்த விளக்கு அமைந்திருக்கும் புனித அறையானது, நம்பிக்கையின் ஊற்றாகவும், அமைதியின் உறைவிடமாகவும் அமைந்ததொரு ஆன்மீகச் சூழலில் சர்வோதய வளாகத்துக்கு முழுமையாக ஆத்மஞானப் பிரகாசத்தையும், ஞான ஒளியையும் வழங்கி வருகின்றது. அந்தத் திருவிளக்கு மேலும் பல்லாண்டுகள் பிரகாசத்தோடு ஒளிபரப்ப வேண்டுமென்ற வேண்டுதலே அப்புனிதமான அறையினுள் பக்தி சிரத்தையுடன் நுழைந்து வெளியேறும் ஒவ்வொருவரின் மனதிலும் நிலைத்திருக்கின்றது.

1991இல் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வுக் காலகட்டத்திலும் கூட இவ்விளக்கை அணையாது காப்பாற்றவென சர்வோதய நிலையப் பொறுப்பாளரும், ஜீவதானியுமான செல்வி க.புஷ்பமணி அவர்கள் தான் இடம்பெயராது ஆன்ம வலிமையுடன் அவ்வலிமை வழங்கிய துணிச்சலுடன் புங்குடுதீவிலேயே தங்கியிருந்து அந்த அணையாத விளக்கையும், நிலையத்திலிருந்த யோகர் சுவாமிகளின் தீபத்தையும், நிலையத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்பட்டுவந்த சிவலிங்கப் பெருமானின் தீபத்தையும் அணையாது பாதுகாத்து வந்திருந்தார். வளாகத்தில் அமைந்திருந்த ஆலயங்களுக்கான பூசைகள்கூட குழப்பகரமான இடப்பெயர்வுக் காலங்களில் தடைப்படவில்லை என்பது புங்குடுதீவு மண்ணுக்கேயுரிய பெருமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள்**

யாழ்ப்பாணத்திலே சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த பெரிய சமய ஞானியாகிய யோகர் சுவாமிகளின் போதனைகளில் ஈடுபாடு கொண்டிருந்த திருநா அண்ணர், தன் வாழ்வின் இறுதி வரை சுவாமி இராமகிருஷ்ணரையும், மார்க்கண்டு சுவாமிகளையும், யோகர் சுவாமிகளையும் தமது ஞானகுருவாகவும் தெய்வமாகவும் கருதிவழிபட்டு வந்தார்.

வேலுப்பிள்ளை அம்பலவாணர் கந்தையா (V. A. கந்தையா, 3.9.1891 - 4.6.1963) வேலணை, வங்களாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞராகக் கொழும்பில் பணியாற்றினார். வே.ஆ.கந்தையா அவர்கள் 1953-54 காலப் பகுதியில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் பணி யாற்றியவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து 1956 ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஊர்காவற்துறை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார். மார்ச் 1960, ஜுலை 1960 தேர்தல்களிலும் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் இவர். 1954 ஏப்ரலில் புங்குடுதீவில் புங்குடுதீவு மகாசன சபையின் ஆதரவுடன்



*சர்வோதய வளாகத்தில் அமைந்துள்ள சிவயோக சுவாமிகள் நற்சிந்தனை மடாலயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகார விழா ஒன்றை நடத்தியவர் இவர். புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில் தமிழகத்தில் இருந்து ம.பொ. சிவஞானம், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் உட்பட தமிழறிஞர்கள் பலரும் சிறப்புப் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். தீவகத்தில் V. A. கந்தையா, அவர்களின் பணிகளுக்கு உதவியாக விருந்த திருநா அண்ணர், அவரது விருப்பத்துக்குரிய இளைஞனாகவிருந்தார். அப்பெரியாரே அந்நாட்களில் திருநா அண்ணரை கொழும்புத் துறையில் அக்காலகட்டத்தில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்திருந்த யாழ்ப்பாணத்து சிவயோகர் சுவாமி களிடமும் அழைத்துச் சென்று யோகர் சுவாமிகளிடம் திருநா அண்ணர் ஆசீர்வாதம் பெற வழியமைத்துத் தந்தவராவார். தன்னை அங்கு அவர் அழைத்துச் சென்றதையும், சுவாமிகளின் கைகளால் தான் பிரசாதம் பெறும் பாக்கியத்தைப் பெற்றதையும் திருநா அண்ணர் அடிக்கடி எம்மிடம் நினைவூட்டி மகிழ்ந்து கொண்டதுண்டு.

1978ஆம் ஆண்டு மாணிக்கவாசகர் காட்டிய ஞான நிலையில் நின்ற யோகசுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள் போன்ற மகான்களுக்கு திருநா அண்ணர் நினைவாலயங்களை அமைத்து வழிபாடு செய்வதை ஊக்குவித்து வந்தார். சர்வோதய வளாகத்தில் யோகர் சுவாமிகளின் அஸ்தியை வைத்து ஒரு ஆலயத்தை விரிவாகக் கட்டினார். அக்கோவிலில் ஒவ்வொரு மாதமும் யோகர் சுவாமிகளின் நட்சத்திரமான ஆயிலிய நட்சத்திர நன்னாளில் பூசை வழிபாடுகள், கூட்டுப் பிரார்த்தனை, நற்சிந்தனை சொற் பொழிவுகள் என்பன நடாத்தப்பட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் நிலையத்திலுள்ளோருக்கும் ஏனையோருக்கும் மதிய போசனம் வழங்கப்பட்டுவந்தமை சிறப்பானதொரு செயற் பாடாகும். இதுபோலவே ஏனைய கோயில்களிலும் திருநா அண்ணரின் தலைமையில் முன்னர் நடந்தது போன்று அவரின் மறைவுக்குப் பின்னரான இன்றும் யோகர் சுவாமிகளின் அந்த நினைவாலயத்திலே அன்னதான நிகழ்வுகள், பூசை வழிபாடுகள் கூட்டுப் பிரார்த்தனைகள், நற்சிந்தனைகள் என்பன உரிய காலங் களில் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்றாகும். இதனைத் தொடரும் வகையில் திருநா அண்ணரின் மானசீக வழிகாட்டலின்பேரில் புஷ்பமணி அக்கா அவர்கள் தீர்க்கதரிசனத்துடன் பல செயற்பாடுகளை தற்போது மேற் கொண்டுள்ளார். இந்த நற்காரியங்கள் இடைநடுவில் கைவிடப் படாமல் இருப்பதற்காகவும் யோகர் சுவாமிகளின் கோவிலையும், சிவன் கோவிலையும், கேரதீவு ஐயனார் கோவிலையும் எதிர்காலத்தில் தடையின்றிப் பராமரிப்பதற்கெனத் தேவையான நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், நிரந்தர வைப்பு முதலீடுகளையும் தனது வசதிக்கெட்டிய முறைகளில் சிறிது சிறிதாகச் சேகரித்து அதற்கெனவோர் அறக்கட்டளை அமைத்து வங்கி வைப்பிலிட்டு வருகின்றமையையும் குறிப்பிடவேண்டும்.

**தண்ணீர்ப்பந்தல்கள், அன்னதானங்கள்**

நல்லைப் பெருமானின் அடியார்களுக்கு அமுதூட்டிய பண்பாளர் என்று பலராலும் போற்றப்பட்டவர் திருநா அண்ணர். நல்லூர்த் திருவிழாக் காலங்களில் அடியார்களின் தேவை கருதி தாகசாந்தி நிலையம், அன்னதான மடம் என்பனவற்றை அவர் தன் தொண்டர்களுடன் இணைந்து நீண்ட பல காலங்களாக அமைத்துச் சேவைசெய்துவந்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் மாத்திரமல்லாது, நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவில், வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில், மட்டுவில் நுணாவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம் உள்ளிட்ட ஏனைய ஆலயங்களிலும் இத்தகைய அன்னதான நிகழ்வுகள்,சிரமதானப் பணிகள் என்பன திருநா அண்ணரின் வழிகாட்டலின்பேரில் சிறப் பாக நடைபெற்றுவந்தன. ஒவ்வொரு மாதமும் ஆயிலிய நட்சத்திர நன்னாளிலே அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் நிலையத்திலுள்ளோருக்கும் ஏனைய ஊரவர்க்கும் நிலையத்திற்கு வருகைதருவோருக்கும் மதியபோசனம் வழங்கி வருவது மற்றுமொரு சிறப்பான செயலாகும்.

சர்வோதய மத்திய நிலையத்திற்கு நாம் செல்லும் வேளை களிலெல்லாம் அங்கு உணவருந்தாமல் வீடுதிரும்ப முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை ஒரு எழுதாச் சட்டமாகவே திருநா அண்ணரும் பின் னாளில் அவரது வழியில் பயணித்துவரும் சர்வோதய நிலையப் பொறுப்பாளர்களான சகோதரி புஷ்பமணி அவர்களும், சகோதரி ஜமுனாதேவி அவர்களும் பின்பற்றிவருவதை சர்வோதயத்துடன் தொடர்புடைய அனைவரும் அறிவார்கள்.

1991ஆம் ஆண்டு தீவக இடப்பெயர்வுகளால் வட மாகாண சர்வோதய அமைப்பும் சார்ந்திருந்த பிற வேலைத்திட்டங்களும் பொருளாதார தளர்ச்சியைக் கண்டிருந்த வேளையில் கூட, மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் பொங்கல் உற்சவ காலத்தில் பந்தல்களை அமைத்து அங்கு சமைக்கப்படும் அமுது களை எல்லாம் ஏற்றுச் சமமாகப் பங்கிட்டு எழை எளியவர்களின் வயிறார அரும்பணிகள் பல புரிந்து வந்தமையை சம்பந்தப்பட்ட எவரும் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். அவர் அவ்வப்போது புனித யாத்திரைகளையும், நற்சிந்தனை முற்றோதல் நிகழ்வு களையும், வருடம்தோறும் ஒழுங்குசெய்துவந்திருந்தார். கடினமான காலகட்டங்களில்கூட தன்னைப்பற்றியோ தனது உடலாரோக்கியம் பற்றியோ கவலையேதுமின்றி, பக்தர்களுக்கான பணியாக நல்லூர் வழிபாட்டாளர் நலன் சேவைப் பந்தல், மாதம் தோறும் மறவன்புலவு செல்வமுத்துமாரியம்மன் கோமாதா பூசை, சாவகச்சேரி வாரிவளவு ஈஸ்வரர் ஆலய சிரமதானம், கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் கங்கைப் பொங்கல் என்பனவற்றை முன்நின்று சுறுசுறுப்பாக நடத்திவந்தார். வட புலத்தில் நிகழ்ந்த அந்தப் பெருமெடுப்பிலான வலிகாமம் இடம்பெயர்வுக் காலத்திலும் கூட, பொதுமக்களின் நன்மையை மட்டுமே முன்நிறுத்திப் பல சமூகசேவைகளை திட்டமிட்டு நடத்தி முடித்தார். இதன்மூலம் சர்வோதய கிராமோதய ஊழியர்களிடையே நம்பிக்கை என்னும் தூய ஒளியை அணைந்துவிடாமல் வளர்த்து வந்தார்.

### சர்வோதயத்தில் அமைந்த சிவாலயம்

1987இல் சர்வோதயத்தில் சிவாலயம் ஒன்றும் அமைக்கப்பட்டது. திருநா அண்ணருடன் நட்பைப் பேணிவந்த பெரியார் பண்டிதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.சரவணனார், பண்டிதர் அப்பா, பண்டிதர் ஐயா என்று அன்புடன் சர்வோதயக் குடும்பத்தினரால் அழைக்கப்பட்டு வந்தவர். 1908ஆம் ஆண்டு வேலணையில் பிறந்த பண்டிதர் சி.சரவணனார், புங்குடுதீவில் மணம்முடித்தவர். தீவிர சைவசமயப் பற்றாளரான அவர், யோகர் சுவாமிகள், தாளையான் பாபா ஆகியோரைக் குருவாக ஏற்றுக் கொண்டவர். மிக எளிமையான வாழ்வினை கடைப்பிடித்துவந்த இவர் தன் இறுதிக் காலத்தில் புங்குடுதீவு சர்வோதய நிலையத்தையே தனது ஆச்சிரமமாக வரித்துக் கொண்டவர்.

காந்தியவாதியான இவர் தன் சர்வோதய சிந்தனைகளை சர்வோதய அமைப்பாளர் திருநா அண்ணருக்கும், அவரது உடன்பிறப்புகளுக்கும், சர்வோதய ஊழியர்களுக்கும் அன்றாடம் மாலை வேளைகளில் போதித்து வந்தார். பெரியார் பண்டிதர் சி.சரவணனார் சர்வோதய வளாகத்தில் வாழ்ந்திருந்த வேளையில் உருவாக்கிச் சென்ற சிவலிங்க பூசை வழிபாடுகள், தடையின்றித் தொடரப்பட்டு இன்றளவிலும் நீண்டகாலப்பாரம்பரியத்துடன் சர்வோதய நிலையப் பொறுப்பாளரான புஷ்பமணி அக்கா அவர் களால், "குஞ்சுக்கிளி" என்று சர்வோதய நிலையத்தினரால் அன்புடன் அழைக்கப்படும் செல்வி. கணபதிப்பிள்ளை காமாட்சி அவர்களின் தளராத பங்களிப்புடன் முன்னெடுத்துச் செல்லப் படுகின்றன. "பண்டிதர் ஐயா" நாற்பதாண்டுகளாகப் பூசித்துவந்த சிவலிங்கமும் மீனாட்சியம்மையும், இன்று சர்வோதய வளாகத்தில் நிரந்தரமாகக் கோவில்கொண்டெழுந்தருளியுள்ளனர். போர்க் காலத்தில் நிகழ்ந்த பாரிய இடப்பெயர்வின்போது ஊரே திரண்டு புங்குடுதீவிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற வேளையிலும் கூட நிலையப் பொறுப்பாளரான புஷ்பமணி அக்கா அவர்கள், எஞ்சி யிருந்த சில ஊரவர்களுடன் சர்வோதய வளாகத்தில் வாசம் செய்து, சிவன்கோவிலின் பூசை வழிபாடுகளிலும் யோகர் சுவாமி கள் சமாதியிலும் ஆராதனை செய்துவந்தார். அக்காலகட்டத்திலே சர்வோதயத்தின் அணையாத அகல்விளக்கு அவரால் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடத்துவெளி வழிவிடு பிள்ளையார்

"1991ஆம் ஆண்டளவில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடப்பெயர்வு ஏற்பட்டது. புங்குடு தீவிலிருந்து மக்களும் ஊரை விட்டு வெளியேறிப் போனார்கள். இதனால் 1985ஆம் ஆண்டு புங்குடுதீவு மண்ணுக்கு ஒளிகொடுக்க வந்த எம்பிரான் 30 ஆண்டுகளுக்கும் மேலாக கேரதீவு ஐயனார் ஆலய அறையினுள்ளே குடியமர்ந்திருந்தார். இதனால் திருவின் நீண்டகாலக் கனவு மழை இடைத்தங்கி நின்றது. ஜீவன் உள்ளவரை மனதிலே கொண்டிருந்த எண்ணக் கனவினை திருவுருவமாக்கி ஸ்தாபிப்பதற்கு எல்லா வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு வழிசமைத்தவர்கள் வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி பொ.ஜமுனாதேவி மற்றும் வட இலங்கை சர்வோதய நிலையப்




மடத்துவெளி அரசமர நிழலில்
வழிவிடு பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாளர் செல்வி க.புஷ்பமணி ஆகியோராவர். அத்துடன் நீண்ட காலமாக கேரதீவிலே வைக்கப்பட்டிருந்த பிள்ளையாரை மடத்துவெளி வீதியிலே சிறிய ஆலயம் ஒன்றினை அமைத்து அங்கு குடியேற்றி, மக்களுக்கு நல்வழியைக் காட்டும் முகமாக "வழிவிடு பிள்ளையார்" என நாமமும் சூட்டினார்கள். அங்கு பூசை அபிஷேகங்கள் நடைபெற்று வருகின்றதோடு அடியவர்களும் வந்து வழிபட்டுச் செல்கின்றார்கள். திருவின் நீண்டகாலக் கனவு இவ்வழியாக நிறைவேறியுள்ளது." (கணேசு. மகாலிங்கம், திருமலர், 2001).

**கேரதீவு ஐயனார் கோவில்**

கேரதீவில் அமைந்திருக்கிற ஐயனார் ஆலயத்தைப் புதுப்பித்து சுற்றுவேலி அமைத்து அந்த இடத்தைப் புனிதப் பிரதேசமாக்கிய பெருமையும் திருநா அண்ணரையே சாரும். கேரதீவு கோவிலுக்கான வேலிகள் 2013ஆம் ஆண்டு சுற்று மதில்களாகக் கட்டிப் பேணப்படுகின்றன.



கேரதீவு ஐயனார் கோவில் முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநா அண்ணரும் சர்வோதய நிலையத்தினரும் 1993ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் கேரதீவு ஐயனார் ஆலயத்தில் பூஜைகளை நடத்தி அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி வழிபட்டுவந்தார்கள். அச் சிறப்புத் தினத்தில் சமுத்திர பூஜையும் சிறப்பு வழிபாடுகளும் மாதம் தவறாமல் இடம்பெற்றிருந்தன. இக்கட்டான அக்காலகட்டத்தில் திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணையென நம்பிவந்த தீவகத்து மக்களின் இறை நம்பிக்கைக்குரிய ஆலயமாக அக்கோயில் வளர்ந்து வந்தது.

காலப்போக்கில் அக்கோவிலில் வழிபாடு செய்வதற்கென அனலைதீவு, பல்லதீவு, மெலிஞ்சிமுனை, பருத்தியடைப்பு போன்ற பிரதேசங்களில் இருந்தும் வள்ளங்களில் மக்கள் பெருமளவில் திரண்டு கேரதீவுக்கு வந்து பௌர்ணமி விழாக்களில் பக்தி சிரத்தையுடன் பங்குகொண்டதுடன், அன்னதானம் பெற்று நிம்மதியுடன் வீடுதிரும்பியும் வந்தனர்.

காலக்கிரமத்தில் பௌர்ணமி தினங்களில் புங்குடுதீவு, குறிப்பாக கேரதீவு களைகட்டத் தொடங்கிவிட்டது. அக்காலகட்டத்தில் திருநா அண்ணர் மிகுந்த ஆன்மீக ஈடுபாட்டில் தன்னை ஈடுபடுத்தி கோவில் பணிகளில் நாட்டம்கொண்டு முழுமையான ஆன்மீகத் தொண்டராக ஆட்கொள்ளப்பட்டுவந்தார். மக்கள் அவரிடம் ஏதோ அமானுஷ்ய சக்தி குடிகொண்டுள்ளதென நம்பினர். அவரை புங்குடுதீவுப் புனிதமண் தந்த ஆன்மீகவாதியாக நம்பிக்கைகொண்டு மரியாதை செலுத்தத் தொடங்கிவந்தனர். அவரை ஒரு நவீன சித்தராகவே சிலர் உருவகப்படுத்தத் தொடங்கியிருந்தனர்.

1993, 1994, என மாதம் தோறும் களைகட்டிய கேரதீவு ஐயனார் ஆலய பௌர்ணமி தின பூஜையும் அன்னதானமும், அக்காலகட்டத்தில் அப்பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த தமிழீழ விடுதலை இயக்கப் போராளிகளினால் அச்சுறுத்தலாகப் பார்க்கப்பட்டமை வேதனைக்குரிய நிகழ்வாயிற்று. பௌர்ணமி தின பூஜை தொடங்கப்பெற்று 33 மாதங்களின் பின்னர் 1995 செப்டெம்பர் மாதத்துடன் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற காரணங்களுக்காக பூஜை நிகழ்வுகள் விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை இயக்கத்தினரால் தடைசெய்யப்பட்டன. திருநா அண்ணர் எவ்வளவோ வழிகளில் எடுத்துச் சொல்லியும் செவிடன் காதுகளில் ஊதிய சங்காகவே அனைத்தும் வீணாகின.

அதிகமான மக்கள் கோவிலடியில் ஒன்றுகூடியிருப்பதை விடுதலை இயக்கத்தினரின் நிர்வாகம் கடுகளவும் விரும்பியிருக்க வில்லை. மேலும் அங்கு வழங்கப்பட்ட அன்னதானம் பலாத்காரமாக அவர்களால் நிறுத்தப்பட்டதையிட்டு திருநா அண்ணர் மிகவும் மனம் நொந்துபோயிருந்தார். அதே காலகட்டத்தில் சர்வோதய இயக்கம் மக்களுக்கு வழங்கிவந்த குடிநீர் விநியோகமும் தடுக்கப்பட்டு, விடுதலைப் புலிகள் அமைப்பினால் பலாத்காரமாகப் பொறுப்பேற்கப்பட்டது. சர்வோதய இயக்கத்தினரால் பராமரிக்கப் பட்டுவந்த அவர்களது உடைமையான சாட்டிக் கிணற்றுத் தொகுதியை அவர்கள் கையகப்படுத்திக்கொண்டனர்.

தனது மக்களுக்காக எவ்வித சுயநலநோக்குமின்றித் தான் வழங்கிய அன்னதானச் சோறு மறுக்கப்பட்டு, தனது மக்களுக்கான நன்னீர் வழங்கல் தடுக்கப்பட்டு இடையூறு விளைவிப்பதில் தன்னிச்சையாக ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் பிராந்திய நிர்வாகத்தினரின் செவிகளுக்குத் தனது எதிர்ப்பினை கொண்டு செல்லும் நோக்கில், உணவு, நீராகாரம் ஆகியவற்றைத் தவிர்த்து சாத்வீக வழியில் திருநா அண்ணர் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கத் தொடங்கினார்.

விடுதலைப் புலிகளின் போராளியாக இருந்தும் இந்திய ராணுவத்தினரை எதிர்த்து உண்ணாவிரதம் அனுஷ்டித்து மரணித் தவர் திலீபன் என்ற போராளி. 1987 செப்டெம்பர் 15ஆம் திகதி இந்திய இராணுவத்திடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்த திலீபன், 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி மரணம் எய்தினார். அவர் மேற்கொண்ட உயிர்க்கொடையின் முக்கியத்துவத்தினை விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் நன்கு அறிந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் திருநா அண்ணருக்கிருந்தது. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக அவரது நம்பிக்கை தவறாகிப் போனது. திருநா அண்ணரின் உண்ணாவிரதம் தொடர் பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகள் அமைப்பினரிடம் மனமாற்றம் எதையும் காணவே முடியவில்லை. மாறாக அவரது நேர்மை, தூய சிந்தனை, சமூக உணர்வு பற்றி நன்கறிந்திருந்த ஊர்ப்பிரமுகர்களே திருநா அண்ணரிடம் மன்றாடினார்கள். அவர் பத்து நாட்கள் வரை தீவிரமாகக் கடைப்பிடித்த உண்ணாவிரதம், ஊர்ப் பிரமுகர்களின் வேண்டுகோளின் பேரில் இறுதியில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இருப்பினும் அன்றைய தினத்திலிருந்து சாகும்வரை தான் சோறே உண்பதில்லை என உறுதிபூண்டார். அன்று முதல் அவர் மரணிக்கும் வரை தமிழர் வாழ்வின் பிரதான உணவுப்பொருளாகிய சோற்றை அவர் உண்ணவேயில்லை.

**பல்கலைக்கழகத்தில் உரையாற்றல்**

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சர்வமத மகாசபைப் பிரசங்கம் 11.09.1893இல் இடம்பெற்றதை நாம் அறிவோம். இந்நிகழ்வின் நூற்றாண்டு விழாவை 1994ஆம் ஆண்டு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலை அரங்கில் ஒரு பெரும் மகாநாடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் முன்னெடுத்திருந்தனர். அந்நிகழ்வில் திருநா அண்ணர் ஒரு பேச்சாளராகக் கலந்து சிறப்பித்தார். "ஆத்மீகமும் விவேகானந்தரும்" என்ற தலைப்பில் கற்றவர் சபையில் மேற்கொள்ளப்பட்ட அவரது உரை தெளிவாக அமைந்திருந்தது.

கடுங்கோடை வெய்யில் யாழ்ப்பாணத்தைச் சுட்டெரித்த காலகட்டத்தில் இடம்பெற்ற அந்நிகழ்வினையொட்டி ஒரு ஊர் வலமும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்வில் ஒரு பிரதி நிதியாக மாத்திரம் கலந்துகொண்டு தனது கடமை முடிந்து விட்டதென்று ஒரு ஓரத்தில் ஓய்வாக அமர்ந்து விட அவரால் இயலவில்லை. எந்த நிகழ்ச்சியானாலும் அந்நிகழ்வில் வித்தியாச மாகச் சிந்தித்து ஒரு விடயத்தைச் செய்து மற்றவர்களிலிருந்து அவர் தனித்துத் தெரிவார்.

இந்த நூற்றாண்டு விழாவிலும் அவர் அதனையே செய்தார். ஊர்வலத்தில் கடும் வெய்யிலில் கலந்துகொண்ட அனைவருக்கும் இளநீர் வழங்கி தாகசாந்தி செய்வித்துத் தன் தனித்துவப் பண்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் புரிந்துகொள்ளவைத்திருந்தார். அன்றைய நிகழ்வின் போது அவரின் சமயோசிதமான தொண்டினையும், அதனைச் செய்யத்தூண்டிய அவரது பெருமனதையும் அன்று போற்றாதவர்கள் எவரும் இல்லை எனலாம்.

புங்குடுதீவுக் கிராமத்தில் சுவாமி விவேகானந்தருக்கு அழகிய மணிமண்டபம் ஒன்றினைக் கட்டி அதன்மூலம், சுவாமி விவேகானந்தரின் அருமை பெருமைகள் அடுத்த தலைமுறையினருக்கும் காவிச்செல்லப்படவேண்டும் எனவும் அம் மணிமண்டபத்தில் சுவாமி விவேகானந்தரின் சிலை நிறுவப்படவேண்டும் எனவும் அவர் விரும்பியிருந்தார். தமிழகத்தில் சென்னை மெரீனா சாலையில் உள்ள வெண்கட்டிடமான சுவாமி விவேகானந்தரின் "ஐஸ் ஹவுஸ்" நினைவாலயத்தைப் போன்று அம்மண்டபத்தில் சுவாமி விவேகானந்தர் பற்றிய வரலாற்று ஆவணங்கள், புகைப் படங்கள் என்பன காட்சிப்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் நீண்டகாலமாக விரும்பியிருந்தார். தமிழகத்தின் இராமகிருஷ்ண மிஷன் வெளியீடுகளை எடுப்பித்து சிறப்பு நூலகமாகக் காட்சிப் படுத்தவும், விற்பனை நிலையமொன்றினை அக்கட்டடத்தில் நிரந்தரமாக நிறுவி, மலிவு விலையில் அந்நூல்கள் இளையோரிடையே விற்கப்பட வேண்டும் என்றெல்லாம் அவரது எதிர்பார்ப்புகள் விரிவடைந்திருந்தன. இதுபற்றி இராமகிருஷ்ண மிஷன் தலைவருக்கும், யாழ்ப்பாணம், திருநெல்வேலியிலுள்ள இராமகிருஷ்ணாலயத்தின் இயக்குநர் திரு. இ.இராஜமகேந்திரசிங்கம் அவர்களுக்கும் விரிவான கடிதங்களும் எழுதியிருந்தார். அவரது கனவுகள் நிஜமாகாமல் போனது வருத்தத்துக்குரியது. எதிர் காலத்தில் அவரது கனவுகள் நிஜமாகவேண்டும்.

**புங்குடுதீவு ஆலயங்கள் பற்றிய வரலாற்று அறிவு**

புங்குடுதீவு பற்றிய புவியியல், வரலாற்றுத் தகவல்கள், புள்ளிவிபரங்கள் என்பவற்றை திருநா அண்ணர் விரல் நுனியில் வைத்திருந்தார். புங்குடுதீவில் அமைந்துள்ள கோயில்கள், கேணிகள், தலவிருட்சங்கள், கோயில்களுக்குரிய பிரதான மூர்த்தி, உற்சவமூர்த்திகள் பற்றிய செய்திகள் என்பவை பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமல்லாது, அக்கோயிலின் பழம்பெருமை, பழைய, புதிய நிர்வாக சபையினரின் பெயர் விபரம் எனப் பல்வேறு தகவல் களையும் அவர் தனது நினைவுப் பெட்டகத்தில் தேக்கி வைத்திருந்தார்.

சர்வோதயம் சார்பாக அவர் புங்குடுதீவிலும் பிற இடங்களிலும் மேற்கொண்ட சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் அந்தந்த இடங்களை மேம்படுத்தும் நோக்குடன் திட்டமிட்டுச் செய்யப்பட்டன. புங்குடுதீவின் எந்தவொரு காணி பற்றியும், குளங்கள் பற்றியும், அவற்றின் கொள்ளளவு பற்றியும் அவர் சொல்லும் செய்திகளின் நுண்மை எம்மை ஆச்சரியப்பட வைத்திருக்கின்றன. விவசாயம், மருத்துவம், கால்நடை ஆகியவை சம்பந்தமான அரச திணைக்களங்கள் கிராமத்துக்குள் ஏதாவது காரணமாக நுழைய வேண்டியிருப்பின் விஷயம் தெரிந்த அதிகாரிகள், திருநா அண்ணரிடம், முதலில் வந்து உரையாடிய பின்னர் தமது பணியை ஆற்றத் தொடங்கும் நிகழ்வினை அடிக்கடி கண்டிருக்கின்றேன். திருநா அண்ணரும் தாம் ஏதும் புதிய வேலைத்திட்டத்தில் இறங்கும் முன்னர், அவ்வத் துறைசார்ந்த நிபுணர்களின் அறிவுரைகளையும் கேட்டுத் தன் தகவல் பெட்டகத்தை இற்றைப்படுத்திக்கொண்ட பின்னரே களத்தில் இறங்குவதுண்டு. ஒரு திட்டமின்றி எதையுமே மேம்போக்காக அவர் செய்ததில்லை. அதே வேளை தான் சரியானதெனத் தீர்மானித்த ஒரு நடவடிக்கையை திட்டமிட்டு மேற்கொள்ளத் துணிந்த பின்னர் எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் அதனை வெற்றி கொண்டு தான் எடுத்த கருமத்தை முடித்துக்காட்டிய செயல்வீரன் அவர்.

கிராமத்தின் கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதிலும், குளங்களை ஆழப்படுத்தவதிலும் அவர் ஈடுபட்டிருந்த காலங்களில், புங்குடு தீவின் முதியோர்களின் அனுபவபூர்வமான தகவல்களை ஆர்வத் துடன் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தார். அவ்வழியாக, ஏராளன மான பிரதேசப் புவியியல்சார் தகவல்களை அறிந்திருந்தார். புங்குடுதீவின் ஒவ்வொரு சதுர அடி நிலத்தினது புவியியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம், வரலாறு, பண்பாடு, பூர்வீகம் பற்றி அவர் அறிந்திருந்ததை யிட்டுப் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

பேராசிரியர் சிவசாமி 1933 செப்டம்பர் 16 இல் புங்குடுதீவில் இறுப்பிட்டி என்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையார் வினாசித்தம்பி, கீழைத்தேய வைத்தியத்திலும், சோதிடக் கலையிலும் ஈடுபட்டவர். பேராசிரியர் சிவசாமி தனது ஆரம்பக் கல்வியை புங்குடுதீவிலும், பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி கற்று 1955 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சமக்கிருதம், தமிழ், வரலாறு ஆகிய துறைகளில் பட்டம் பெற்றார். 1961 இல் இலண்டன் பல்கலைக்கழகத்தில் பாளி, இந்திய வரலாறு ஆகியவற்றுடன், சமஸ்கிருதத்தில் சிறப்புப் பட்டமும் பெற்றார். யாழ்ப்பாணக் கல்லூரியில் 1958 முதல் 1974 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். இடையில் 1962 முதல் 1965 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 இல் ஆரம்பிக்கப்பட்ட போது, பேராசிரியர் சிவசாமி அதன் ஆரம்பகால விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் சமஸ்கிருதத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

பேராசிரியர் சிவசாமி யாழ்ப்பாணத் தொல்லியல் கழகத்தின் நிறுவன செயலாளராக 1971 இல் இருந்து பணியாற்றினார். அத்துடன் பூர்வகலா என்ற இதழையும் வெளியிட்டுவந்தார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த முதலாவது தொல்லியல் ஆய்விதழ் இதுவாகும்.

இத்தகைய பெருமைமிக கல்விமானான பேராசிரியர் சிவசாமி அவர்கள் திருநா அண்ணர் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்.

“திருநாவுக்கரசு புங்குடுதீவின் வரலாற்றிலும் மிக்க ஈடுபாடுள்ளவர். சென்ற நூற்றாண்டின் எண்பதுகளிலே யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும், இந்து நாகரிக விரிவுரையாளர் திரு.மா. வேதநாதனும், யானும் இவ்விடத்திலுள்ள சில தொல்லியல் தடயங்களைப் பார்க்க வந்தபொழுது, அனைவரையும் உபசரித்து தமது வாகனத்திலே எங்களைப் பல இடங்களுக்கும் கூட்டிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று ஆர்வத்துடன் காண்பித்தார். சிலவற்றினைப் பற்றித் தானும் தானறிந்த வரலாற்றுத் தரவுகளைக் கூறினார். எங்களிடமும் வினாவினார். இந்த மேலாய்வின் போது, ஊரதீவு ஐயனார் ஆலயத்திற்கு வடக்கேயுள்ள கடற்கரையிலே வட்டக்கற்களால் ஆன இரு கிணறுகள் தென்பட்ட செய்தியொன்று கூறப்பட்டது. இவை சுமார் இரண்டாயிரம் ஆண்டளவைச் சேர்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்கு உரியவை எனக் கூறியபொழுது அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அப்போது மழைக்காலமாகையால் அவ்விடத்தை ஆராய முடியவில்லை. இவ்வாறு அவர் ஒரு பெரிய தகவல் களஞ்சியமாகவும் விளங்கினார்." (பேராசிரியர் வி.சிவசாமி, திருமலர், 2001)



சுவிட்சர்லாந்திலுள்ள புங்குடுதீவு மக்கள் நலன்புரிச் சங்கத்தின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட குடிநீர் பௌசர் கையளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 14

# கனவுகளைக் கலைத்த இடப்பெயர்வுகள்

புங்குடுதீவு மக்களின் சுமுகமான இயல்பு வாழ்க்கை 1990களின் முற்பகுதியிலிருந்து நாட்டைச் சூழ்ந்துகொண்ட போர்மேகங்களால், பாதுகாப்பற்ற போர்ச்சூழலில் சீர்குலையத் தொடங்கியது. தீவகத்திலிருந்து இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காலம்காலமாக அங்கு வாழ்ந்திருந்த மக்களுக்கு ஏற்பட்டது. அவர்களது உயிருக்கு உத்தரவாதமளித்து புங்குடுதீவில் இருந்து மக்களை புலம்பெயராமல் தத்தமது இருப்பிடங்களிலேயே தங்கியிருக்கும்படி ஊக்குவிப்பதற்கான எவ்விதமான ஆதார வசதிகளும் அங்கிருக்கவில்லை. எனவே இடம்பெயர்ந்து போனவர் போக அங்கு எஞ்சி வாழ்ந்த ஏறத்தாழ 3000 மக்களின் சமூக பொருளாதார பண்பாட்டு வளர்ச்சிக்காகத் தன்னாலியன்ற வரையில் பாடுபட்டுழைக்க திருநா அண்ணர் முடிவுசெய்திருந்தார். ஒரு கட்டத்தில் தானும் தான் தாயைப்போன்று நேசித்திருந்த புங்குடுதீவு மண்ணை விட்டு வெளியேறி வாழவேண்டிய சூழல் உருவாகும் என்று அவர் அப்போது கடுகளவும் எதிர்பார்த்திருக்க வில்லை.

அக்காலகட்டத்திலேயே அவருக்கு முதலாவது இதயவலி 1990இல் ஏற்பட்டது. அவரது வாழ்வில் அதுவே அவரது உடலாரோக்கியத்தின் சோதனைமிக்கதொரு காலமுமாகியது. அப்போது அவருக்கு வயது 51 மட்டுமே. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் 1991ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் மக்கள் புலம்பெயர்ந்து புங்குடுதீவுக்கு ஏதிலிகளாகச் சென்றபோது, தனது உடல் நோயையும் பொருட்படுத்தாது, அம்மக்களுக்குத் தன்னாலான உதவிகளைப் புரிந்துவந்தார். ஊர்காவற்றுறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைதீவு, வேலணை ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து சர்வோதயத்தை நாடி வந்த அந்த மக்களுக்காக உணவு, உடை, உறையுள் என்பவற்றைத் தேடிக் கொடுத்து ஆதரித்து தன்னாலான பங்களிப்பினை அவர்களுக்கு வழங்கினார்.

கிராம நலன்புரிக் கழகங்கள், சிரமதான சேனை, தமிழ்ச் சங்கம், குடும்பக் கழகம் போன்றவற்றை ஒவ்வொரு கிராமத்திலும் அம்மண்ணின் மக்களிடையே உருவாக்கி அவற்றினூடாக அந்தந்தப் பிரதேசங்களில் மக்களுக்கான சேவைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கில் 1992ஆம் ஆண்டை சர்வோதய அமைப்பினரின் திட்ட ஆண்டாகவும் அவர் இயக்கத்தினரிடையே பிரகடனப்படுத்தியிருந்தார். அதற்கான பல வேலைத்திட்டங்களையும் முன்வைத்து கிராமோதய ஊழியர் களுடன் கலந்துரையாடியும் வந்திருந்தார்.

சிக்கலானதும் இக்கட்டானதுமான அவ்வேளையிலும், நல்லூர் முருகன் வழிபாட்டாளர் நலன் கருதி சேவைப் பந்தல் பணிகளை தொடர்ந்தும் மேற்கொண்டார்.

பின்னர் 1995அம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது அவரும் சர்வோதய ஊழியர் களும் புங்குடுதீவை விட்டுப் புலம்பெயர்ந்து செல்லவேண்டியிருந்தது. நிலையப் பொறுப்பாளரான சகோதரி புஷ்பமணி நிலையத்திலேயே தங்கியிருந்து, யோகர் சுவாமிகளினதும், சிவன் கோவிலினதும் திருப்பணிகளைத் தொடரவும், சர்வோதய வளாகத்தில் 1978 முதல் அவர்களால் பராமரிக்கப்பட்டுவந்த அணையாவிளக்கை தொடர்ந்தும் பராமரிக்கும் திடசிந்தையுடனும் சர்வோதய வளாகத்திலேயே காவலராகத் தங்கிவிட்டார்.

புங்குடுதீவில் புலம்பெயராமல் எஞ்சியிருந்த சில வயோதிபர் களையும், பராமரிக்க வேண்டியிருந்த, புலம்பெயர இயலாது அநாதரவாக விடப்பட்டிருந்த சில வலுவிழந்தோரையும், மாற்றுத் திறனாளிகளையும் தன்னுடன் கூடவே சர்வோதய நிலையத்தில் வைத்திருந்து பராமரிப்பதில் அவர் ஆற்றிய ஜீவகாருண்யப் பணி, திருநா அண்ணரின் வாழ்வுப் பணிகளுக்கு எவ்விதத்திலும் சளைத்தவை அல்ல என்பதை உலகறியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவை விட்டு வெளியேறிய திருநா அண்ணர், மற்றும் அவரது சர்வோதய தொண்டர்கள், பின்னாளில் யாழ்ப்பாணம்-சிவதொண்டன் நிலையம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், கொழும்புத் துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் தங்கியிருந்து தொடர்ந்தும் திருநா அண்ணரின் வழிகாட்டலின்கீழ் மக்கள் சேவையாற்றினர்.

13.3.1997 அன்று இராணுவக் கெடுபிடிகள் சிறிது தளர்த்தப் பட்ட நிலையில், திருநா அண்ணர், சகோதரி ஜமுனாவுடனும் பிற உறவுகளுடனும் புங்குடுதீவுக்குத் திரும்பினார். அங்கு புலம்பெயராது தங்கியிருந்து சர்வோதய நிலையத்தைக் காத்துப் பராமரித்து வைத்திருந்த சகோதரி புஷ்பமணி, தாயார் க.பார்வதிப்பிள்ளை ஆகியோருடன் மீண்டும் இணைந்துகொண்டார். "பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ" என்ற கம்பனின் இராமாயண வரிகளே அன்று காட்சிகளாயின.

பெருங்காடு தெற்கு கிராமமட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுத் தலைவர் எஸ்.பி.விநாயகமூர்த்தி அவர்கள் திருநா அண்ணரின் ஊர் திரும்பல் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

"1997 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 13ஆம் நாள் வன்னியிலிருந்து மீண்டும் புங்குடுதீவின் தலைமைக் காரியால யத்துக்கு திருநாவுக்கரசு அண்ணர் வந்து சேர்ந்தார். சர்வோதய நிலைய நிர்வாக உத்தியோகத்தர் செல்வி பொ.ஜமுனாதேவி அவர்களும் அவருடன் கூடவே வந்திருந்தார். ஏற்கெனவே தலைமையகத்தை நிர்வகித்தும் பராமரித்தும் வந்த அன்னாரது சகோதரி செல்வி க.புஷ்பமணி, தாயார் க.பார்வதிப்பிள்ளை அவர்களுடன் இணைந்து முன்பு போன்றே மண்ணுக்கும் மக்களுக்கும் சேவையாற்றத் தொடங்கினார்.

"புங்குடுதீவு சூனியப் பிரதேசமாகக் காட்சியளிப்பதையும் இங்கிருக்கும் மக்கள் அடிப்படை வசதிகளே இல்லாமல் நடைப்பிணங்களாக வாழ்வதையும் எண்ணி மனம் மிக வருந்தினார். நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் ஊர் நிலைமையையும் மக்கள் படும் அவலங்களையும் கஷ்டங்களையும் இவற்றிற்கு எவ்வாறு உதவலாமெனவும் என்னுடன் கதைத்துக் கவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார். இந்நிலையில் சமகாலத்தில் தன்னாலான பணிகளைக் கிராமத்துக்கு ஆற்றத் தொடங்கினார்." (எஸ்.பி.விநாயகமூர்த்தி, திரு மலர், 2001).

திருநா அண்ணர் ஊர் திரும்பியதும் அவரது கவனத்தை ஈர்த்த விடயங்களில் முக்கியமான ஒன்று அதுவரை தீவகத்தின் அரணாகக் கிடந்த கிராமக் கட்டமைப்பானது போரின் பின்னர் சிதறுண்டு போயிருந்தமையேயாகும். யுத்தத்தின் வடுக்களாகிச் சின்னாபின்னமாகி பராமரிப்பின்றிக் கைவிடப்பட்டிருந்த புங்குடுதீவுக் கிராமத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அதன் அடிப்படை நிர்வாகக் கட்டமைப்பை உடனடியாக மீளப் புனரமைக்கவேண்டும் என்று தீர்மானித்தார். அதற்காக அங்கிருந்த ஊரவர்களுடன் தொடர் கூட்டங்களைத் துரிதமாகக் கூட்டிக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளலானார்.

தன் இளமைக்கால சிரமதானங்கள் பற்றிய மலரும் நினைவுகளுடன் மீண்டும் தன் தாயக மண்ணை முன்னைய அதே வேகத்துடன் சிரமதானப்பணிகளின் மூலம் துப்பரவு செய்யத் தொடங்கினார். புங்குடுதீவின் பிரதான வீதிகளையும் துணை வீதிகளையும் தடைகளை நீக்கித் துப்பரவு செய்தார்.




பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க திறப்புவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தில் (பெருங்காடு தெற்கு) பல பொது அமைப்புகளை புனரமைப்பதற்கும், மீளுருவாக்குவதற்கு எஞ்சியிருந்த முன்னாள் உறுப்பினர்களினதும் பொது மக்களினதும் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டார். அவ்வேளையில் மீளமைக்கப்பட்ட பெரும்பான்மையான பொது அமைப்புகளுக்கும் ஏகமனதாக திருநா அண்ணரையே தலைமைப் பொறுப்பை வகிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

திருநா அண்ணர் புதிதாகக் கட்டமைக்கப்பட்ட அமைப்புகளை மிகச் சிறப்பாக வழிநடத்தி அவ்வமைப்புக்கள் மூலமாகத் தனது சொந்தப் பணத்தையும் செலவிட்டு, மக்களுக்கும் கிராமத்துக்கும் அரும்பெரும் தொண்டாற்றினார். குறிப்பாக, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு விவசாய மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அதுவரை இயங்காமல் இருந்த புங்குடுதீவு கமநல கேந்திர நிலையத்தை மீண்டும் இயங்குவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து அந்நிலையத்தை தற்காலிக கட்டிடத்தில் இயங்கச்செய்வதற்கான அனுமதியைப் பெற்றார்.

மூன்று தீவுகளினதும் விவசாயப் பெருமக்களையும் அழைத்து திறப்பு விழாவை ஒழுங்குசெய்ததுடன் சர்வோதய வளாகத்திலிருந்த தனது தளபாடங்களை நிலையத்துக்குத் தற்காலிகமாக வழங்கியும், கமநல கேந்திர நிலையத்தை அங்கு உருவாக்கினார். பின்னாளில் புங்குடுதீவில் ஐந்து விவசாய சம்மேளனங்களை அமைப்பதற்கும் அவரே காரணகர்த்தாவாக விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1997இல் பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவராகத் திருநா அண்ணர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

1991ஆம் ஆண்டு தீவகத்தில் ஏற்பட்ட முதலாவது இடப்பெயர்வில் இருந்து அடுத்தடுத்து ஏற்பட்ட பல இடப்பெயர்வு களினால் புங்குடுதீவு உள்ளிட்ட பல கிராமங்களில் அவரால் கட்டியெழுப்பப்பட்டிருந்த சர்வோதய நிர்மாணப் பணிகள் தொடக்கம் கிராமக் கடைகள், குடிநீர் விநியோகச் சேவை, போக்குவரத்து வாகனங்களின் சேவை, சிறப்புச் சந்தைத் திட்டச் சேவைகள் என அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்கள், போராட்டக் குழுக்களால் பறித்துச் செல்லப் பட்டிருந்தன. கட்டட மூலப்பொருட்கள் கேட்டுக்கேள்வியின்றி அறியப்படாத தீவிரவாதக் குழுக்களால் அபகரித்துச் செல்லப்பட்டிருந்தன.

திருநா அண்ணர் கட்டியெழுப்பியிருந்த குடும்பநிதிய சேவைத் திட்டங்கள் கிராமங்கள் இல்லாமையால் கட்டம் கட்டமாகச் செயலிழந்து போயின. இப்படியாக சர்வோதய இயக்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள், முதலீடுகள் அழிக்கப்பட்டமையாலும், போர்க்காலச் சூழ்நிலைகளால் தொடர்ந்தும் பாதிப்படைந்து மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் திருநா அண்ணரின் இருகண் களாகப் போற்றி வளர்த்திருந்த சர்வோதய அமைப்பு இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய இழப்புகளையும் இன்னல்களையும் சந்தித்தபொழுதும் திருநா அண்ணர் நிலை குலைந்துபோய்விடவில்லை. அவர் தானும் நம்பிக்கையுடனிருந்து, தன்னை நம்பியிருந்த தொண்டுள்ளங்களையும் தன்னம்பிக்கையைத் தளரவிடாது காத்து, மீண்டும் கிராமங்களைக் கட்டியெழுப்பும் பணியை படிப்படியாக ஆரம்பித்தார்.

கிராமங்களில் பரவலாக மக்கள் நீராடும் கிணறுகள், குடிநீர்க் கிணறுகள், என்பனவற்றை சேறு எடுத்தும் (தூர்வாரி) இறைத்தும் துப்பரவு செய்ய நடவடிக்கை எடுத்தார். குடியிருப்பில் போதிய அளவு மக்களே இல்லாத அந்தப் பிரதேசத்தில் அவரது சிரமதானப் பணிகளுக்கு வேண்டிய மனித சக்தி போதிய அளவில் கிடைக்காத நிலை காணப்பட்டது. இருப்பினும் அத்தடைகளையெல்லாம் தாண்டி, ஆட்களைச் சேர்த்துப் பணிபுரியவேண்டி இருந்தது. இதனை அவ்வூரில் தலைமைத்துவப் பண்பினை காலம்காலமாக வளர்த்திருந்த திருநா அண்ணரால் மாத்திரமே கச்சிதமாகச் செய்யமுடிந்திருந்தது.

ஆடு, மாடு, கோழி, நாய், போன்ற கால்நடைகளுக்கு காலத்துக்குக் காலம் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வந்தது. போர்க்காலச் சூழலில் அதற்கான வாய்ப்பு வசதிகள் குறைவாகவே இருந்திருந்தன. புலப்பெயர்வால் உரிமையாளரால் கைவிடப்பட்ட நாய்கள் கவனிப்பாரற்று வீதிகளில் அலைந்தன. அவற்றிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசர்நாய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வீ.) வழங்கி மக்களையும், நாய்களையும் காப்பாற்றவேண்டியிருந்தது. அதற்கான வேண்டு கோள்களை உரிய சுகாதாரத் திணைக்களப் பிரிவினரிடம் சர்வோதய அமைப்பின் சார்பில் விடுத்து தடுப்பூசி வழங்க ஆவன செய்தார்.

விவசாயத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், கமநல கேந்திர நிலையம் ஆகியவற்றின் உதவியுடனும் ஆதரவுடனும் கிராமங்கள் தோறும் உள்ள இளைஞர்கள், இளஞ் சகோதரிகள், தாய்மார்களுக்குப் பயிற்சி வகுப்புகளும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமான விழிப்புணர்வுத் திரைப்படக் காட்சிகளும் செயல்முறைப் பயிற்சிகளும் வழங்க வழிசெய்தார்.

போர்க்காலச் சூழலில் தீவக மக்களின் கடற் பிரயாணங்கள் அனைத்தும் குறிகாட்டுவான் ஊடாகவே நடந்துகொண்டிருந்த காலகட்டத்தில் திடீர் திடீரென படகுச் சேவைகள் தடைப்படும் துர்ப்பாக்கிய நிலைமையும் காணப்பட்டிருந்தது. அக்காலகட்டங்களில் பலநூறு பிரயாணிகள் நாட்கணக்காக புங்குடுதீவில் இடைத்தங்கல் வசதிகளற்று அநாதரவாக விடப்பட்ட நேரங்களும் இருந்தன. அக்காலங்களில் சிறிதும் மனம் சலிக்காது அத்தனை பேருக்கும்



மாணவர் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் புலமைப்பரிசில்பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குமிட வசதியும் உணவும் வழங்கி அடைக்கலம் கொடுத்த சிறந்த மனிதராகத் திருநா அண்ணர் போற்றப்பட்டார்.

1996 யாழ்ப்பாண இடப்பெயர்வும் 1996 தென்மராட்சி இடப்பெயர்வும் சர்வோதய இயக்கத்தின் பணிகளை மேற்கொள்ளத் தடைகளாக அமைந்திருந்த போதிலும், தளராது அத்தடைக் கற்களைப் படிக்கல்லாக்கி 1997ஆம் ஆண்டு மீண்டும் புதிய வடிவத்தில் அவர்கள் பணிசெய்யத் தவறவில்லை.

1998ஆம் ஆண்டு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் முயற்சிகளுக்கும் கைகொடுக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு, உரிய நிறுவனங்களுடன் இணைந்து, சைக்கிள் கடன் திட்டம், நகைத் திட்டம், சிறுவர் சேமிப்புச் சேவைத் திட்டம், சாதாரண சேமிப்புத்திட்டம், பசுவுக்குத் தீனி வழங்கும் திட்டம், புனரமைப்பு புனர் நிர்மாணத்திட்டம் என்று ஏராளமான செயற்திட்டங்களையும் பணிகளையும் எண்ணியெண்ணி இரவு பகலாக கிராமோதய ஊழியர்களிடையே எடுத்துச் சொல்வார். சொன்னபடி செய்வார்.

விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக, புங்குடுதீவில் பராமரிப்பற்றிருந்த நெற்காணிகளைப் பயன்படுத்தி, சுமார் 200 பரப்புக் காணியில் நெல் சாகுபடி செய்ய விவசாய சம்மேளனத்தின் வாயிலாக மக்களை ஊக்குவித்தார். புங்குடுதீவில் ஏறத்தாழ 110 வீடுகளில் மாதிரி வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதற்கு வசதியாக ஊர் மக்களுக்கு விசேட பயிற்சி வகுப்புகளை நடாத்தியதோடு, தேவையான மர விதைகளை திணைக்களங்களிலும் விவசாய அமைப்புகளிலும் இருந்து பெற்று இலவசமாக மக்களுக்கு விநியோகித்து வீட்டுத்தோட்டத் திட்டம் முழுமையாகப் பயனளிக்கக்கூடிய முறையில் தன்னாலான பங்களிப்பை வழங்கிவந்தார். கிராமங்களில் தென்னை மரங்களில் உண்டான மைற்ஸ் நோய்த் தாக்கத்திற்கும் மாமரங்களின் பூக்களில் ஏற்படும் பூச்சித் தாக்கத்திற்கும் மருந்துகள் விசிறப்பட்டன. கடும் வறட்சியினால் புல்,பச்சிலை உணவின்றி வாடிய கோமாதாக்களுக்கு ஆயிரம் பனைகளிலிருந்து ஓலைகள் வெட்டித் தீன்தானமாக வழங்கப்பட்டது. இரண்டு ஏக்கர் விஸ்தீரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட அடைகாத்த குளத்தில் சேறு எடுக்கப்பட்டு கால்நடைகளின் குடிநீருக்கு வழிசெய்யப்பட்டது.

திருநா அண்ணர், போரின் வடுக்களைத் தாங்கியபடியும் வாழத்துடித்திருந்த புங்குடுதீவு மக்களின் வாழ்வில் உளவியல்ரீதியாக புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் அவ்வப்போது, கிராமப் பொது நிகழ்ச்சிகளை முன்நின்று ஒழுங்குபடுத்திவந்தார். அவ்வகையில் 13.01.2001இல் இருந்து தொடங்கி, ஐந்து நாள் நிகழ்வாக அத்திசூடி முற்றோதல் விழா நடத்தி மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் உற்சாகம் ஊட்டி, வாழ்வில் நம்பிக்கைபெறச் செய்தார்.



கிராமவிழாவில் முதியோர் கௌரவிப்பு

புங்குடுதீவு 3ம் வட்டார, பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா 11.4.2001இல் கிராம எழுச்சியை நோக்கமாகக் கொண்டு கொண்டாடப்பட்டது. அதனையொட்டி கிராம சிரமதானம், கிராமப் பெரியார் பாத பூசை, கிராம முதியோர் கௌரவிப்பு விருது, தேசிய சேமிப்பு வங்கிச் சேவை, ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்புச் சேவையினரின் விழிப்புணர்வு முகாம், அரச திணைக்களங்கள் மாநாடு, தீவக லயன்ஸ் வைத்திய முகாம் போன்ற நிகழ்வுகளை உள்ளடக்கி இரண்டு வார நிகழ்வாக விழாக்கோலம் பூண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பெருவிழாவாக நடைபெற்றது. மேலும் கிராம அபிவிருத்திக்கான திட்டங்கள் பலவற்றைத் தொகுத்து, அங்கு நடந்தேறிய அரச திணைக்கள மாநாட்டின்போது அங்கு பிரசன்னமாகியிருந்த உரிய உயர் அதிகாரிகளிடம் அறிக்கைகளும் திருநா அண்ணரினால் சமர்ப்பிக்கப்பட்டன.

ஏற்கெனவே 1990ஆம் ஆண்டில் அவருக்கு ஏற்ட்ட நெஞ்சுவலி பதினொரு ஆண்டுகளின் பின்னர் இருதய நோயாக மாறியது. வைத்திய முறையை ஒழுங்காகக் கடைப்பிடித்ததன் காரணமாகவே 11 வருடங்கள் அவரால் மேலதிகமாக வாழ முடிந்திருக்கின்றது என்று நினைக்கின்றேன். இறுதியில் 03.10.2001 அன்று கொடுங்காலன் அவரைக் கைப்பற்றினான் என்ற செய்தி எம் அனைவரையும் சோகத்திற்குள்ளாக்கிவிட்டது.

புங்குடுதீவிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காகக் கொழும்புக்கு வருகை தந்திருந்த வேளையிலும் பல்வேறு அனர்த்தங்களுக்கும் முகம்கொடுத்து வந்த புங்குடுதீவு மக்களின் வாழ்வாதாரத்தையும்




*30.09.2001 அன்று கொட்டாஞ்சேனையில் நடைபெற்ற "கொழும்பு-புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகம்" அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சி.சிவராஜா அவர்கள் திருநா அண்ணருக்கு மலர்மாலை அணிவிக்கின்றார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மண்ணை மீளக்கட்டியெழுப்பும் நோக்கத்தையுமே மனதில் சுமந்து சென்றிருக்கின்றார் என்ற தகவல் ஒவ்வொரு தீவகத் தமிழ் மகனது நெஞ்சையும் விம்மியெழ வைக்கும் செய்தியாகவே இருக்கும்.

திரு நா அண்ணர் 30.09.2001 அன்று இது தொடர்பான ஒரு ஆலோசனைக் கூட்டத்தை கொழும்பில் நடத்தியிருந்தார். கொழும்பு, கொட்டாஞ்சேனை தேசிய சேமிப்பு வங்கியின் மண்டபத்தில் கொழும்புவாழ் புங்குடுதீவுப் பிரமுகர்கள் கலந்துகொண்ட அக்கலந்துரையாடலில் புங்குடுதீவின் எதிர்காலம் பற்றி விவாதித்துப் பல அபிவிருத்தித் திட்டங்களை அடையாளம் காட்டியிருந்தார்.

தீவக அபிவிருத்திக்காக வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளுடன் தொடர்புகொண்டு தீவக மண்ணை அபிவிருத்தி செய்யவேண்டி அதற்கான பொதுச்சபையினைக் கூட்டி, சபையின் தலைவராக புங்குடுதீவு மைந்தனும், சட்டக் கல்லூரிப் பேராசிரியரும் சட்டத்தரணியுமான திரு.வி.ரி.தமிழ்மாறன் அவர்களைத் தலைவராகவும், திரு. ச. இராமலிங்கத்தை செயலாளராகவும் கொண்ட ஒரு நிர்வாக சபையைத் தெரிவுசெய்து அதன் பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைத்தார்.

தனது அரசியல்வாழ்வின் போதிலிருந்து திருநா அண்ணரை நன்கு அறிந்திருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியரும் துறைத்தலைவருமாகவிருந்த பேரா. சி.க.சிற்றம்பலம் அவர்கள் குறிப்பிடும் போது கீழ்வருமாறு பதிவு செய்துள்ளார்.

“ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து நடத்துவது என்பது சுலபமான காரியமன்று. வாய்ச்சொல் வீரர்கள் மலிந்த இக்காலகட்டத்தில் தமது ஆளுமையால் தம்மை மட்டுமன்றித் தமது குடும்பத்தினரையும் இப்பெரும் தொண்டிற்குள் இணைத்தபெருமை இவருக்குண்டு. தியாகம், தொண்டு, அர்ப்பணம் போன்ற பதங்கள் நம்மத்தியில் மிகமிக அந்நியமான பதங்களாகக் கருதப்படும் இச்சூழலில் ஒரு தொண்டன் இவ்வாறுதான் வாழவேண்டும் என்று சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர். அதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போர்க்காலச் சூழலில் நம்மவர் பலர் அநாதைகளாய், நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் தமது வாழ்க்கையையே இத்தொண்டுக்காக அர்ப்பணித்த அமரர் திருநாவுக்கரசு ஒரு மாமனிதன் ஆவார். தாமும் செய்யாது மற்றவர்களையும் செய்யவிடாது அவர்களின் பணிகளில் குறைகளை மட்டுமே கண்டுபிடிக்கும் பெரியோர்கள் பலர் உலாவரும் இக்கால கட்டத்தில் எவற்றுக்கும் சளைக்காது மனவுறுதியுடன், அப்பழுக்கற்ற தியாகத்துடன் மக்கள் நலன்புரிச் சேவைகள் பலவற்றை மிகவும் சுறுசுறுப்பாகவும் கண்ணியத்துடனும் மனஞ்சளைக்காது முன்னெடுத்துச் சென்றவர்." (பேரா. சி.க.சிற்றம்பலம், திருமலர் 2001).

பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பூ.ஸ்ரீகாந்தன் அவர்கள் தெரிவிக்கும்போது,

"தலைமை வகிப்பதிலும் திட்டங்களை அமைத்துச் செயற்படுத்துவதிலும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பேணுவதிலும் அவருக்கு நிகர் எவருமில்லை என்றுதான் கூறமுடியும். கிராம அபிவிருத்திச் சங்கத்திற்குப் புதிய கட்டிடம் அமைப்பதற்குத் தேவையான காணி ஒன்றைப்பெற்றுக்கொள்ள ஒழுங்குசெய்து, அதனை நன்கொடையாகப் பெற்று கட்டிடம் அமைப்பதற்கு பெரும்பாடு பட்டிருந்தார். அதற்காக அரசாங்க நிதிஉதவியையும் கோரியிருந்தார். இரண்டு லட்சம் ரூபாய் பெறும் தறுவாயில் அவரின் திடீர் மறைவு எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் மன வேதனையையும் தருகின்றது" என்கிறார். (பூ.ஸ்ரீகாந்தன், பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், திருமலர் 2001).

புங்குடுதீவு ஐந்தாம் வட்டாரத்தில் அமைந்துள்ள பெரியபுலம் சனசமூக நிலையத்தின் தலைவரான க.தேவதாஸ் திருநா அண்ணர் கொழும்பில் நின்ற தருணங்களில் அவ்வப்போது உடன் இருந்தவர். அவரது பார்வையில் கொழும்பில் திருநா அண்ணரின் இறுதிநாட்கள் இவ்வாறு தான் அமைந்திருந்தன என்பதை உணரமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடைசியாகப் புங்குடுதீவு மக்களின் அபிவிருத்திக்காக உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளினதும், சமூகநல ஸ்தாபனங்களினதும் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் சர்வோதய வேலைத் திட்டங்களுக்கு வேண்டிய நிதி உதவிகளைப் பெற்று வழங்கப் பலம்மிக்கதும் அதிகாரபூர்வமானதுமான அமைப்பொன்று தேவையெனக் கருதி, அத்தகைய அமைப்பை உருவாக்கி, கொழும்பிலிருந்து அதனை இயங்கச் செய்யும் நோக்கில் "கொழும்பு-புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகம்" என்னும் ஸ்தாபனத்தை அண்ணர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். அன்று தான் அவரை நாம் கடைசியாகத் தரிசித்த நாள். அன்று அவர் நோயினால் பட்ட அவஸ்தையைப் பார்த்த மக்கள் எல்லோரும் கண்கலங்கினார்கள். அந்த அமைப்பை உருவாக்க அவர் எடுத்த முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. சுகவீனத்துடன் கூட்ட அழைப்பிதழ்களை எடுத்துக்கொண்டு கொழும்பில் உரியவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும்போது பல மாடிகளில் அவர் ஏறி இறங்க வேண்டியிருந்தது. அப்போது அவர் சில மாடி வீடுகளில் இருந்து இறங்கக்கூட கஷ்டப்பட்டார்". (க.தேவதாஸ், திரு மலர், 2001).

திருநா அண்ணர் பற்றி அவருடன் நெருங்கிப்பழகிய சிலர் அவர் பற்றி எழுதிய ஓரிரு கட்டுரைகளையும், மறைவின் பின்னர் வெளிவந்த திருமலர் என்ற அஞ்சலி மலரையும் வாசிக்கக் கிடைத்த எனக்கு, திருநா அண்ணர் அவர்களைப் பற்றி அவரின் மறைவின் பின்னரான பதினெட்டு ஆண்டுகளில் அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய விரிவான நூலொன்று இதுவரை எழுதப்பட்டிராதமையை அறிந்தபோது எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது. அவர் ஆற்றிய பணிகள் பற்றிய செய்திகள், சாதாரணமாக எம்மால் கடந்துசெல்ல முடியாதவை. புங்குடுதீவுக்கு மாத்திரமல்லாமல், தீவகத்தைத் தாண்டித் தமிழ் இனத்தின் மேன்மைக்காகவும் அவர் சேவையாற்றியிருந்தார்.

அவருடன் பழகும் வாய்ப்பினைப் பலரும் பெற்றிருந்தபோதிலும், அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பினை சிலரே பெற்றிருந்ததும், அவர் பற்றிய விரிவான நூலொன்று வெளிவராதிருந்தமைக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இருந்திருக்கலாம். 1991இல் லண்டனுக்குப் புலம் பெயர்ந்தபின்னர் அவருடன் தொடர்புகொள்வது எளிதாக இருக்க வில்லை. கால ஓட்டத்தில் எங்கள் புலம்பெயர்வாழ்வுச் சூழலில் படிப்படியாக திருநா அண்ணர் பற்றிய எண்ணங்கள், நீறுபூத்த நெருப்பாகிவிட்டன. இந்நிலையில் 2015இல் ஜேர்மனியில் ஒரு பொது நிகழ்வொன்றுக்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தேன். அங்கு சர்வோதய இயக்கத்தில் பணியாற்றிய திருநா அண்ணரின் மருமகளான நந்தினியையும், அவரது குடும்பத்தினரையும் சந்தித்து உரையாட நேர்ந்தது. அப்பொழுது, ஜேர்மனியில் "புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம்" என்ற அமைப்பினை நிறுவியதுடன் அவ்வமைப்பின் உதவியுடன் புங்குடுதீவு சர்வோதயத்திற்குப் பல்வேறு வழிகளிலும் உதவிவரும் அவ்வமைப்பின் அமைப்பாளர் கணேசு மகாலிங்கம் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது.

அதன் பின்னர் 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் அவ்வமைப்பின் ஆண்டுவிழாக்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. திருநா அண்ணர் பற்றிய வாழ்க்கை வரலாற்றினை சர்வோதயத்தின் இளம் உறுப்பினர்களும், புலம்பெயர்ந்து வாழும் தீவகத்தைச் சேர்ந்த பலரும் முழுமையாக அறிந்துகொள்ளாத நிலைமையை எனது உள்ளுணர்வு எனக்கு வெளிக்காட்டியது. "யானையைப் பார்த்த குருடரைப் போலவே" எம்மில் பலர் திருநா அண்ணரின் ஒரு பக்கத்தை மாத்திரம் அறிந்துகொள்ள வாய்ப்பிருந்தது. அவரை முழுமையாக அறிந்துகொள்ள விரும்புவோருக்கு இந் நூல் ஒரு ஆரம்ப வாசிப்புக்குரிய நூலாக அமையலாம். என்னைவிடவும் நீண்டகாலமும், நெருக்கமாகவும் அவருடன் தொடர்புபட்ட பலரும் இனிவரும் காலத்தில் இதைவிட விரிவான தகவல்களுடன் தமது மனப்பதிவுகளை பதிவுசெய்வார்கள் என்ற எதிர்பார்ப்பு என்னிடம் நிறையவே உள்ளது.

திருநா அண்ணரின் வாழ்க்கையை நான் தரிசித்த நேரடிப் பார்வையிலிருந்தும், அவர் பற்றி பலராலும் எழுதப்பட்டு கைவசம் உள்ள ஓரிரு ஆவணப்பதிவுகளில் நான் வாசித்தறிந்த தகவல்களி லிருந்தும், அவருடன் உடனிருந்து அவரது கைகளால் பாசத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப்பட்ட அவரது பிள்ளைகளின் வாய்மூல உரையாடல் களிலிருந்தும் உள்வாங்கி எழுதப்பட்ட இந்த வாழ்வும் பணிகளும் பற்றிய நூலின் இறுதிப் பகுதியில் நின்று இதனை எழுதுகின்றேன். தீவகத்தைச் சேர்ந்தவனாக நான் இருந்திருந்தால் இன்னும் தெளிவாக இந்நூலை எழுதியிருக்கலாமோ என்ற குறையும் எனக்குள்ளது. இருப்பினும், திருநா அண்ணர் பற்றி இதுதான் முற்றுமுழுதான நூல் என்று சொல்வதற்கில்லை என்பதால், இன்னொரு பார்வையில் அவர்பற்றிப் பலரும் இனி எழுதி நூலாக்கி ஆவணப்படுத்தும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அவரைச்சுற்றி இருந்தவர்களின் நினைவுகள் மங்கிவிடும் முன்னர் இதனை ஆவணப்படுத்திவிட வேண்டும் என்பதே எனது முயற்சிக்குத் தூண்டுகோலாக இருந்தது.

"செய் அல்லது செத்துமடி" என்ற வாசகத்தைத் தன் தர்மாவேசப் பதாதையாக எம்முன் வைத்து ஈழத்தின் தமிழ்ப் பிரதேசமெங்கும் தலைமைத்துவப் பண்புகொண்ட சிறந்த தொண்டர்களை உருவாக்கியவர் திருநா அண்ணர். அவரிடம் 1978-79களில் தலைமைத்துவப் பயிற்சிபெற்றுச் சென்ற பலர் பின்னாளில் விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு அமைப்பு களினாலும் எளிதாக உள்வாங்கப்பட்டிருந்தனர். அவர்களில் சிலரை 1980களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சுற்றாடலில் சந்திக்கும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியிருந்தது. அப்படி வடமாநிலத்திலிருந்து இம்மாமனிதரின் கைகளால் வளர்க்கப்பட்டோர், இன்று வடக்கில் மாத்திரமல்லாது உலக நாடுகளிலெல்லாம் புலம்பெயர்ந்து சென்றவர்களாகவும் அவரது நினைவைச் சுமந்தபடியும் வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பாக சர்வோதய மத்திய நூலகத்தின் சிறுவர் பிரிவில் தமது ஆரம்பகால வாசிப்பை வளர்த்துக்கொண்ட இளைஞர் ஒருவர் பின்னாளில் என்னுடன் தொலைபேசியில் உரையாடித் தன்னை இனம்காட்டியிருந்தார். (அவர் அப்போலோ என்ற சிறுவனுடன் நூலகத்திற்கு வந்து என்னிடம் புததகங்கள் வாங்கி வாசித்ததாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப்பந்தின் ஏதோவொரு மூலையில் சமூக சிந்தனையுடன் தனித்துவமாகத் தம்மை இனங்காண வைத்துவரும் இவர்கள் ஒவ்வொருவரின் பின்னாலும் திருநா அண்ணரின் சமூக உணர்வின் சாயல் படிந்தே இருக்கின்றது. திருநா அண்ணரின் சிறப்பியல்புகள் என்ன என்று என்னால் கண்டுணரக்கூடியவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1. திருநா அண்ணரிடம் மற்றவர்களை மதிக்கின்ற பண்பும் அவர்களிடத்தில் காணக்கூடிய அறிவினையும் செயற்றிறனையும் பெற்றுத் தன் சமூகம் சார்ந்த வேலைத்திட்டங்களுக்கு எவ்வகையிலேனும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற ஆசையும் ஆர்வமும் எப்போதும் ஒட்டிக்கொண்டிருக்கும். அதனை அடைவதற்கு அவர் எத்துணை காத தூரமும் செல்லத் தயாராக இருந்துவந்தார்.

2. ஒரு திட்டத்தை வரைந்தால் அதனைச் செய்து முடிக்கும் செயல்வீரனாகி விடுவார். திட்டத்தை தீட்டியபின் தொண்டனாக மாறி அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உடல் பொருள் ஆவி என அனைத்தையும் வழங்கத் தயாராகிவிடுவார்.

3. குடும்பத்தின் சூழலுக்குள் மாத்திரம் தன்னை முடக்கிக் கொள்ளாமல் தான் பிறந்த நாட்டுக்கும் அந்த மண்ணுக்கும் தாய் மொழியின் வளர்ச்சிக்கும் தன்னை சமூகத்திற்காக அர்ப்பணித்துக்கொண்ட ஒரு தியாகியை இங்கு காண்கிறோம். தன் குடும்ப உறவுகளைக்கூட ஒருபுறம் தள்ளிவைத்துத் தன் இருபது வயது முதல் இறக்கும்வரை மக்கள் சேவையை பெரிதென எண்ணிச் செயற்பட்ட கர்மவீரர் அவர்.

4. சர்வோதயம் சார்பாக அவர் புங்குடுதீவிலும் பிற இடங்களிலும் மேற்கொண்ட சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் அந்தந்த இடங்களை மேம்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப் பட்டவை. தாம் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை அவற்றுக்குரிய துறை சார்ந்த நிபுணர்களின் அறிவுரைகளைக் கேட்ட பின்னரே அவர் செயல்முறைக்குக் கொண்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு திட்டமின்றி ஒன்றையும் செய்திலர். அதேவேளையில் தான் சரியான நடவடிக்கையைத் திட்டமிட்டு மேற்கொள்ளும் போது எவர் எதிர்த்தாலும், சேறுபூசித் தரம் தாழ்த்த முனைந்தாலும், எளிதில் களைக்கவோ, சலிக்கவோ, விட்டுக் கொடுக்கவோ மாட்டார். முன்பிலும் வீரியமாகச் செயற்பட்டு எதிரிகளையும் மிரளவைப்பார்.

5. தமது ஆளுமைத்திறன், அறிவுத்திறன், செயற்றிறன் முதலியனவற்றால் தான் சரியென நன்கு உணர்ந்தவற்றை சரியான முறையில் திறம்படச் செயற்படுத்தியவர். எத்தகைய எதிர்ப்பையும் மனத்துணிவுடன் சாத்வீக முறையிலே சமாளித்து விடுவார். கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டிக்கத் தயங்க மாட்டார். அவரிடத்தில் ஒரு புறத்திலே அஞ்சா நெஞ்சமும் வீரமும், மறுபுறத்திலே பேரன்பும், பரிவும், காருண்யமும் காணப்பட்டன.

ஒரு தடவை, யாழ்ப்பாணத்திலிருந்து சர்வோதய இயக்கத்திற்கு சொந்தமான வெள்ளை வாகனம் மாலை வேளையில் புங்குடுதீவை நோக்கி வந்து கொண்டிருந்தது. இடைநடுவில் வாகனச்சாரதியான திருநா அண்ணரின் உறவினர், வாகனத்தை நிறுத்திவிட்டு, அருகில் நின்ற ஒருவருடன் தள்ளிநின்று உரையாடிக் கொண்டிருந்துள்ளார். அவ்வழியால் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்வண்டியில் வந்து கொண்டிருந்த பெருங்காட்டைச் சேர்ந்த ஒருவர் திருநா அண்ணரை சந்தித்து, "அவரது சாரதி சர்வோதய வாகனத்தை கள்ளுத் தவறணையில் விட்டு கள்ளருந்துகிறார்" என்று போட்டுக் கொடுத்துவிட்டார். வாகனம் சர்வோதய வளாகத்துக்குத் திரும்பி யதும் அந்தச் சாரதியான அண்ணரது உறவினருக்கு நேர்ந்த உபசரிப்பை அவர் வாழ்நாளில் மறந்திருக்க மாட்டார். எல்லாம் முடிந்து வளாகம் அமைதியான பின்னர் வழமைபோல நூலகத்திற்கு அண்ணர் வந்தார். பொதுவாக மாலைவேளைகளில் அவரது மனம்திறந்த உரையாடல்கள், கருத்தாடல்களை நூலகத்தில் என்னிடம் மேற்கொள்வதில் அவர் ஆறுதல் அடைவதுண்டு. அன்றும் மேற்படி சம்பவத்தையிட்டு தனது ஆத்திரமடைதலுக்கு காரணமாக அவர் தெரிவித்த கருத்து:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவர் கள்ளுக்குடிக்க அவ்விடத்தில் வாகனத்தை நிறுத்தாமல் விட்டிருக்கலாம். ஆனால் சர்வோதய இலச்சினை பொருத்தப்பட்ட வாகனத்தில் ஏறியதும்அவர் சர்வோதயத்தின் பெயருக்கு கடுகளவும் மாசு கற்பிக்காமல் இருந்திருக்க வேண்டும். வாகனத்தை கொண்டுவந்து சேர்த்தபின்னர், சைக்கிளில் போய் அவரது அரட்டையை அடித்திருக்கலாம். குறைந்தபட்சம் தவறணைக்கு அப்பால் சற்று தூரத்தில் நிறுத்தியாவது பொதுசனத்தின் சந்தேகப் பார்வையைத் தவிர்த்திருக்கலாம். இவை இரண்டையும் பொறுப்பற்ற விதத்தில் இவர் செய்ததால் தான் நான் கோபிக்க நேர்ந்தது. பனைமரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் பார்ப்பவர் கள்ளுக்குடித்ததாகவே கருதுவார். இது எமது சமூகத்தின் பார்வை. அதனை நாம் புரிந்து கொண்டல்லவா சமூகசேவையில் இறங்கவேண்டும்” அவரது கருத்து எனக்குச் சரியெனப்பட்டது.

தன்னைத் தான் நம்பிய கொள்கைக்கு ஜீவதானியாக்கிக்கொண்ட அவர் தனது குடும்ப உறவுகளையும் தன்வழியை எவ்வித அழுத்தமும் இன்றி விருப்புடன் பின்தொடர வைத்தவர். தனது தாயைக்கூட ஒரு ஜீவதானியாக்கியவர். அந்தத் தாய் பற்றிய திருநா அண்ணரின் உணர்வு பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும்.

திருநா அண்ணர் எனது அன்னையாரை அதிகம் மதிப்பவர். சமூகத்துக்கு நல்ல பிள்ளைகள் இருவரை வளர்த்துத் தந்த பெருமைமிக்க அன்புத்தாயவர் என்று என்னையும், எனது அண்ணரான வைத்திய கலாநிதி ந.சிவராஜா அவர்களையும் முன்நிறுத்தி பெருமைப்படுபவர். அவர் தீவகத்திலிருந்து வெளியேறி கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் மகளிர் நிலையத்தில் இருந்து சேவையாற்றிய போது, அங்குள்ள சகோதரிகளுக்கு நூலகப்பயிற்சியை வழங்க திருநா அண்ணரின் வேண்டுகோளின் பேரில் நான் சென்று வருவதுண்டு. அவரும் இடைக்கிடையே தான் வீட்டுத் தோட்டத்தில் பயிரிட்டு வளர்த்த கீரை, மரக்கறி வகைகளுடன் நான் பணியாற்றிய/குடும்பத்துடன் தங்கியிருந்த ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன வளாகத்தில் இருந்த எனது தங்கும் இல்ல விடுதிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அவற்றை என் அம்மாவின் கைகளில் ஒப்படைத்து அளவளாவிச் செல்வதுண்டு. முன்னர் நான் சர்வோதயத்தில் பணியாற்றிய காலத்தில் ஒருநாள் மாலைக் கருக்கல் பொழுதில் நூலகத்தில் வெளி வாங்கில் அமர்ந்து நானும் திருநா அண்ணரும் உரையாடிக்கொண்டிருந்தோம். அப்பொழுது எனது பார்வை அந்த இருள் கவிந்த வேளையில், திருநா அண்ணரின் தாயார் தலை நிறைந்த கடகத்துடன் மாட்டுச் சாணத்தை பொறுக்கிக் கொண்டு வந்து அன்றைய காலத்தில் இருந்த குசினிப் பகுதிக்கு அருகில் இருந்த மணல் தரையில் வைத்து விட்டு அப்பால் நகர்ந்துசென்று குந்தொன்றில் அமர்வதை நிழலாகக் கண்டு கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். என் பார்வை சென்ற திசையையும், என் முகத்தில் என்னையறியாமல் தோன்றிய கவலையின் ரேகைகளையும் அண்ணர் அவதானித் திருக்கவேண்டும். அவரால் மற்றவரின் ஆழ்மனதின் சிந்தனை ஓட்டத்தை அவர்களது முகத்தைப் பார்த்தே அளவிடும் கூரிய சக்தியொன்று குடிகொண்டிருந்ததை பல சந்தர்ப்பங்களில் கண்டும் கேட்டும் வந்துள்ளேன்.

திடீரென அவர் அதுவரை கதைத்த விடயத்தை நிறுத்தி "எனக்கும் உங்களைப்போல எனது அம்மாவை நோகாமல் வைத்துப் பார்க்கவேண்டும் என்ற தலைமகனின் அபிலாசைகள் இல்லாமல் இல்லை செல்வாண்ணர்" என்று கூறி பெருமூச்செறிந்தார். "அவரது கடைசிக்காலத்தில் அம்மாவை ஓய்வாக வைத்து நோய் நொடியில்லாமல் காக்கவேண்டும் என்ற ஆசை எனக்கும் இல்லாமல் இல்லை" என்றார் முருவலுடன். அந்த முருவலின் பின்னால் ஒரு மகனின் வேதனை அக்கணத்தில் எனக்குத் துல்லியமாகத் தெரிந்தன. "சர்வோதயம் தான் எங்களுக்குச் சோறு போடுகின்றது அண்ணர். நாம் ஒவ்வொருவரும் அன்றைய உணவுக்காக ஏதாவது உழைத்துக் கொடுத்தே ஆகவேண்டும். மற்றவரின் உழைப்பில் சர்வோதயம் எனக்குச் சோறு போடும், குடியிருக்க நிழல் தரும் என்று நான் நினைப்பது தர்மமல்ல. அதனையே எனது தாயாருக்கும் அறிவுறுத்தியிருக்கிறேன். தாயானாலும் தனையனானாலும் சகோதரியானாலும் விதிவிலக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இல்லை. அம்மா, தன்னாலான வழிகளில் சர்வோதயப் பணிகளை செய்கிறார். எனது உறவுகளும் அப்படியே செய்கிறார்கள். என்னைப் போல அவர்களது உடல் பொருள் ஆவி அனைத்தையும் சர்வோதயத்துக்கு வழங்கியவர்கள். அவர்களை வாழவைக்கவேண்டியது சர்வோதய தர்மத்தின் கடமை. தனது கடமையாகத் தன்னாலான வழிகளில் தனது உடல் உழைப்பை அவர் வழங்குகின்றார். எனக்கும் வருத்தம் தான். ஆனால் என்னால் அதனைத் தடுக்க முடியாதல்லவா?" என்ற அவரது வார்த்தைகள் சத்தியத்தின் வேதங்களாக என் காதின் வழியாக மனதில் பதிந்தன.

இது நடந்து சில பத்தாண்டுகள் கழிந்துபோயின. திருநா அண்ணர் மறைந்துவிட்டார். அதன் பின் இலங்கைக்குச் சென்றிருந்த வேளை ஒருநாள் புங்குடுதீவில் சர்வோதயத்திற்கும் சென்றிருந்தேன். அங்கே திருநா அண்ணரின் அன்னையார் குசினி வாசலில் அமர்ந்திருந்ததைக் கண்டேன். அருகில் சென்று அவரது இரு கரங்களையும் பற்றினேன். என்னைக் கண்டதும் அவரது விழிகள் ஆச்சர்யத்தில் ஒளிர்ந்தன. தன் மகனின் நினைவு அவருக்கு வந்திருக்கவேண்டும். முதுமையின் சாட்சியமாக சுருங்கி வரண்டிருந்த அவரது கண்களிலிருந்து கண்ணீர் சுரந்து வழிந்தன. எனக்கும் தான். சற்றுநேர மௌனத்தினிடையிலான சிறு உரையாடலின் பின்னர் பிரியவேண்டிய வேளை வந்தது. அவரிடம் இலங்கையில் மற்றைய முதியவர்களிடம் நான் செய்வது போல சில ஆயிரம் ரூபாய்களை மடித்து அவரது கைகளில் திணித்துவிட்டு ஏதும் செலவுக்கு வைத்திருங்கள் அம்மா என்றேன். அதனை மறுப்பேதுமின்றி வாங்கிக்கொண்டார். சற்றும் தாமதியாமல், என் முன்னிலையிலேயே அந்தப் பகுதியால் ஏதோ அலுவலாகச் சென்ற ஒரு சிறுமியை அழைத்து, தன் கைகளில் நான் ஒப்படைத்த பணத்தை விரித்துக்கூடப் பார்க்காமல் அப்படியே அச்சிறுமியிடம் கொடுத்து, "கணக்குப் பகுதியில் கொடுத்துவிடு பிள்ளை" என்றார். பல ஆண்டுகளுக்கு முன்னர் அதே வளாகத்தில் திருநா அண்ணர் கூறியிருந்த அந்த வார்த்தைகள் என் மனதில் அவ்வேளை மீண்டும் ஒலித்தன. "என்னைப் போல ஆசாபாசங்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்து, அவர்களது உடல் பொருள் ஆவி அனைத்தும் சர்வோதயத்துக்கு வழங்கியவர்கள். அவர்களை வாழவைக்க வேண்டியது சர்வோதய தர்மத்தின் கடமை. தனது கடமையாகத் தன்னாலான வழிகளில் தனது உடல் உழைப்பை அவர் வழங்குகின்றார்."

திருநா அண்ணரின் மூச்சுக்காற்றால் இன்றும் நிறைந்திருக்கும் அந்த வளாகத்தில் அவரது எண்ணங்கள் அங்குள்ள ஒவ்வொரு ஜீவதானிகளின் ஊடாகவும் நீண்டகாலம் நிச்சயமாக வாழும்.

இவ்வியலை சர்வோதயத் தலைவர் ஏ.ரீ.ஆரியரத்தினா அவர்களின் சில வரிகளுடன் நிறைவுசெய்கிறேன்.

"Thiru was the most spiritually motivated, disciplined social leader in the North I came across. he led the life of a mendicant. The immense love he had for his people cannot be described in words. The Passion he had for the peace and unity in our country was admirable. Sri Lanka lost a great son at this hour of her need. May 'Thiru Malli' attain the supreme bless of Moksha and Nirvana"



புங்குடுதீவு சர்வோதய வளாகத்தின் முன்னுள்ள பெருங்காடு கந்தசுவாமி கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநா அண்ணரின் இறுதிப்பயணம்

*05.09.2001* அன்று புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் திருநா அண்ணர் வழமை போன்று அதிகாலையிலேயே எழுந்து தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, வழமையாக அன்றைய தினத்தில் மேற்கொள்ளவென ஒழுங்கமைக்கப்பட்ட கடமை களுக்காகத் தன்னைத் தயார் படுத்திக்கொண்டார். அவரது வாழ்க்கை எப்பொழுதும் இயங்குநிலையிலேயே இருக்கும். காலை எழுவது முதல் இரவு துயில்வது வரையில் அவரை ஓய்வுநிலையில் காண்பது இயலாது. ஒவ்வொரு நாளும் பொழுது புலரும் வேளையில் அவரது மனத்தட்டில் அன்றைய நாளின் பணிகள் பட்டியலிடப்பட்டிருக்கும்.



*இறுதி யாத்திரைக்குத் தயாராகும் தொண்டர் திருநாவுக்கரசுவின் பூவுடல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டியலின் முதல் வரி தான் அன்போடு வளர்த்த ஆவினங்களுக்கு ஆகாரம் அளிப்பதாகவே இருக்கும். சைவசமயப் பண்பாட்டில் "மாதா" என்று அழைக்கப்படக்கூடியவை பெற்ற தாய், பெண் தெய்வங்கள், பசுமாடு ஆகிய மூன்றும் மட்டுமேயாகும் என்பதை திருநா அண்ணர் அறிந்துவைத்திருந்தார். புங்குடுதீவின் நீர்ப்பஞ்சம் ஏற்பட்ட இளமைக் காலங்களில் அவரது பிரதான சமூகப்பணியாக இருந்தவை ஆதரவற்று அலைந்து திரிந்த ஆவினங்களுக்கு தண்ணீர்த் தொட்டிகளில் நீரூற்றுவதும் பனை ஓலையை உணவுக்காக வெட்டிக் கொடுப்பதுமாக இருந்ததை முன்னரும் குறிப்பிட்டிருந்தேன். அக்கடமையை அவர் தன் வாழ்வின் இறுதிக்கட்டம் வரையில் செவ்வனே செய்துவந்தார். சர்வோதய வளாகத்திலேயே ஒரு சிறு மாட்டுப்பண்ணை இருந்தது.

தனக்குப் பாலூட்டும் கோமாதாக்களுக்கு காலை எழுந்ததும் முதற் பணியாகத் தீன்தானம் வழங்கிய பின்னரே, புங்குடுதீவில் நிலையப் பணிகளை ஒழுங்குபடுத்தத் தொடங்குவார்.

அன்றைய தினமும் அவ்வாறே அவரது பொழுதும் விடிந்தது. தான் கொழும்பு நோக்கிய நீண்ட பயணமொன்றினை மேற்கொள்ள விருந்ததால், அவசரமாகவும், முக்கியமாகவும் செய்யப்படவேண்டிய நிலையப் பணிகளை ஒழுங்குபடுத்தி, உரிய அறிவுறுத்தல்களை அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்கி விட்டு, நண்பகல் அளவில் யாழ்ப்பாணப் பணிமனைக்குப் புறப்பட்டார். அவருடன் சர்வோதய ஒருங்கிணைப்பாளர் ஜமுனாவும், தான் தந்தையெனப் போற்றும் அண்ணரின் கையுதவிக்காக அவருடன் பயணிக்க ஆயத்தமானார்.

சகோதரி ஜமுனாவின் சகோதரியொருவரின் மகனின் திருமணம் கொழும்பில் இடம்பெறவிருந்தது. அதற்காக கனடாவிலிருந்து அவரது சகோதரியும் கொழும்புக்கு வந்திருந்தார். திருநா அண்ணருடன் கொழும்புக்குச் செல்லும் வேளையில் தனது சகோதரியின் மகனின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதும், புலம்பெயர்ந்து சென்றிருந்தமையால் நீண்டகாலம் காணாதிருந்த சகோதரியைக் கண்டு உறவாடுவதும் சகோதரி ஜமுனாவின் நோக்கமாக இருந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



: கொழும்பு ஜெயரத்தின மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம் சென்றதும் தனது வைத்திய பரிசோதனையை கொழும்பில் மேற்கொள்வதற்கு வசதியாகச் சில முன்னேற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் திருநா அண்ணர் கவனிக்கவேண்டியிருந்தது. இன்றுபோல யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாகக் கொழும்புக்குச் செல்லும் வசதி 2001களில் இருக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டை பிற மாவட்டங்களுடன் தொடுக்கும் பிரதான பாதையாக ஏ9 (கண்டி-யாழ்ப்பாண வீதி) இருந்து வருகின்றது. போர்க்காலச் சூழலில் இப்பாதை முற்றாக மூடப்பட்டு, கைவிடப்பட்டிருந்தது. புகையிரதப் பாதைகள் இன்றி புகையிரதப் பயணமும் கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு அப்பால் வடபகுதிக்கு இல்லாதிருந்தது. பலாலி விமான நிலையத்தினூடான விமானச் சேவையும் இராணுவமயப்படுத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து தலைநகர் கொழும்புக்குச் செல்வதற்கு பொதுமக்கள் அனைவருக்கும் இருந்த ஒரே வழி, யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வழியான கப்பல் மார்க்கமாகவே அமைந்திருந்தது. அதுவும் முதலில் திருக்கோணமலைக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து புகையிரத மார்க்கமாக கொழும்புக்குச் செல்லவேண்டும். இடையில் ஏகப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

சோதனைச்சாவடிகள். நோயாளிகளுக்கும், மருத்துவ உதவி களுக்காகச் செல்பவர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. பொதுமக்கள் பிரயாணத்திற்காகப் பதிவுசெய்து கொண்ட பின்னர் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது. இத்தகையதொரு பின்புலத்திலேயே திருநா அண்ணரின் அன்றைய கொழும்புப் பயணமும் அமைந்திருந்தது.

திருநா அண்ணர், சகோதரி ஜமுனாவுடன், 06.09.2001அன்று காலை திருக்கோணமலைக்கான கப்பல் பயணச்சீட்டுக்கு ஏற்கெனவே பதிவு செய்திருந்தார். அதனை மீண்டும் உறுதி செய்து, தனது பயண நிலைமையை அறிந்துகொள்ளும் பொருட்டு அதிகாலை 6.30 மணிக்கே கப்பல் பயண முகவரின் அலுவலகத் துக்குச் சென்றுவிட்டார். காலை 7:20 மணியளவில் அவரது பயண ஒழுங்குகள் உறுதிசெய்யப்பட்டன. அன்று மாலையே திருக்கோணமலையை நோக்கித் தமது பயணத்தைத் தொடங்கிய அவர்கள், மறுநாள் 07ஆம் திகதி திருக்கோணமலையைச் சென்றடைந்தார்கள். அங்கிருந்து அன்றிரவு புகையிரதத்தில்



புங்குடுதீவு-கேரதீவு இந்து மயானத்தில்
அமரரின் இறுதிக் கிரியைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக்குப் புறப்பட்டார்கள். மறுநாள் 08ஆம் திகதி காலை கொழும்புக் கோட்டைக்கு புகைவண்டி சென்றடைந்தது.

அங்கிருந்து அவர்கள் இருவரும் ஒரு முச்சக்கரவண்டியில் அளுத்மாவத்தையிலுள்ள திருநா அண்ணரின் சகோதரர் சி.மு.நாகரத்தினம் அவர்களது இல்லத்தைச் சென்றடைந்தனர். அங்கிருந்தே இருநாள் பயணச்சோர்வையும் பொருட்படுத்தாமல், காலைக்கடன்களை முடித்த கையோடு அவருடன் கூடச்சென்ற சகோதரி ஜமுனாவை வெள்ளவத்தையில் இருந்த அவரது சகோதரியின் வீட்டில் தங்கவைத்தார்.

13.09.2001 அன்று திருநா அண்ணரின் வைத்திய பரி சோதனைக்கு நாள் குறிக்கப்பட்டிருந்தது. எனினும் அன்றைய தினம் உரிய வைத்தியர் வராமையால் வைத்திய பரிசோதனை திட்டமிட்டபடி அன்றைய தினம் இடம்பெறவில்லை. மீண்டும் 15.09.2001 அன்று வெள்ளவத்தை, டெல்மன் மருத்துவமனையில் வைத்திய கலாநிதி சாந்திராஜ் என்ற இருதய சிகிச்சை நிபுணர் மூலம் வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 27.09.2001 வரை மூன்று தடவைகள் அந்த வைத்தியரைச் சந்தித்து வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. வைத்திய பரிசோதனைகளின் பின்னர், திருநா அண்ணரின் இதயத் துடிப்பு மிகவும் குறைவாக இருப்பதாகவும், அவருக்குச் சத்திரசிகிச்சை வழங்கும் நிலையில் அவரது உடல்நலம் சீராக இல்லாமல், இருதயம் வீங்கியிருப்பதாகவும் வைத்தியர் தெளிவுபடுத்தினார்.

இவ்வளவையும் கேட்ட பின்னரும் திருநா அண்ணர் ஓய்வெடுக்கும் மனநிலையில் கலக்கமுற்று இருக்கவில்லை. தனது இறுதி மூச்சு வரை பணிசெய்யத் தனது இதயம் இடம் தந்தால் போதும் என்ற மனநிலையிலேயே அவர் இருந்தார். தன் வாழ்வில் எஞ்சியுள்ள ஒரு நிமிடத்தைத் தன்னும் வீணாக்க அவர் விரும்பவில்லை.

கொழும்பில் மருத்துவத் தேவைக்காகச் சென்ற அவ்வேளை யிலும் அவர் சர்வோதயப் பணிகளை விடுவதாக இல்லை. திக்கெட்டும் சிதறிக்கிடக்கும் கொழும்புவாழ் புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடையேயான இணைப்பொன்றை உருவாக்கி அவர்களின் இணைந்த கரங்களின் வலிமையுடன் தீவகத்தின் பணிகளுக்குப் பலமாக்கிக் கொள்ளவேண்டும் என்பதை அவர் நீண்டகால கனவாகக் கொண்டிருந்தார். அக்கனவை நனவாக்கும் ஒரு சந்தர்ப்பத்தையே இந்தக் கொழும்புப் பயணம் தனக்கு வழங்கி யிருப்பதாக அவர் நம்பினார். தனக்குள்ள இறுதிச் சந்தர்ப்பமும் அதுவே என்றும் அவரது உள்ளுணர்வு கூறியிருக்கக்கூடும்.



நயினை நாகபூஷணி அம்பாளின் திருப்பார்வை சாற்றிய ஏழாற்றுப்பிரிவு கலக்கும் குறிகாட்டுவான் கடற்கரையில் தொண்டரின் அஸ்தி கரைக்கப்படுகின்றது

அந்த நம்பிக்கையுடன் தான் அங்கு சந்தித்த உறவுகளின் கரங்களைப் பற்றி அளவளாவினார். தம் புங்குடுதீவு மண்ணின் மக்களுக்காகத் தொண்டாற்ற தான் அங்கே சந்தித்த புங்குடுதீவில் வேர்கொண்டிருந்த ஒவ்வொரு உறவையும் தேடிச்சென்று கேட்டுக் கொண்டார். தாய்மண்மேல் கொண்ட தன் பாசத்தை அவர்கள் அனைவரும் உணரச்செய்தார். 30.09.2001 அன்று தான் கொட்டாஞ் சேனையில் ஒழுங்குசெய்திருந்த புங்குடுதீவுப் பெருமக்களுக்கான பொதுக்கூட்டத்துக்கு வருகைதருமாறு தான் சந்தித்தவர்களை அழைத்தபடியே இருந்தார். தான் வந்த முக்கிய நோக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மருத்துவ வசதிபெறும் தேவையை, அதற்காகத் தன் உடம்புக்கு வழங்கியிருக்கவேண்டிய ஓய்வை அவர் கருத்தில் கொள்ளவில்லை.

30.09.2001 அன்று கொட்டாஞ்சேனை, தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. சி.சிவராசா அவர்களின் ஒத்துழைப்புடன் திரு.வி.ரி.தமிழ்மாறன் அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. அன்றைய கூட்டத்தில் திருநா அண்ணர் அவர்கள் உரையாற்றும்போது, புங்குடுதீவின் அப் போதைய கவலைக்குரிய நிலைமைகளையும், அங்கு செய்யப்பட வேண்டியுள்ள அவசரமான பொதுப் பணிகளையும் அங்கு வருகைதந்தோருக்கு மிகவும் சுருக்கமாகத் தெரிவித்திருந்தார். மேலும், அவர் தனது உரையில் இக்கூட்டத்தின் நோக்கம் பணம் திரட்டுவதற்காக அல்லவென்றும், புங்குடுதீவுத் தாய் தான் இழந்த மக்கள் சக்தியை மீண்டும் அங்கு உருவாக்குவதற்காகவே என்றும் தெளிவுபடுத்தினார். புங்குடுதீவிலிருந்து புலம்பெயர்ந்து பிற மாவட்டங்களை நோக்கி வெளியேறிய சனங்களால் வெறிச்சோடிப் போயிருந்த தாயக மண்ணை அங்கிருந்த அனை வரின் மனக்கண்களிலும் தன் பேச்சுத்திறமையால் காட்சிப் படுத்தினார். அம்மக்கள் ஊர்திரும்புவதற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்துவது மண்ணின் மைந்தர்களின் கடமை என்பதை இடித் துரைத்தார். பொதுவாகவே கூட்டங்களில் பேசும்போது உணர்ச்சி வசப்படும் திருநா அண்ணர், இக்கூட்டத்தில் உரையாற்றும் வேளையில் சற்று அதிகமாகவே உணர்ச்சிவசப் பட்டிருக்கவேண்டும் என்று கருதமுடிகின்றது.

அந்தவேளையில் தான் சுகவீனமாயுள்ளதாகக் கூறி பேச்சை விரைவில் முடித்துக்கொண்டார். அன்றைய கூட்டத்தில் கொழும்பு-புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கூட்டம் நிறைவடைந்ததும், பொறுப்புவாய்ந்த ஒரு அமைப்பை உருவாக்கி பொறுப்புமிக்கவர்களின் கைகளில் ஒப்டைத்துவிட்டதாகக் கூறி மனநிறைவுடன் காணப்பட்டார். அன்று திரு. மா.இராமசாமி குடும்பத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த மதியபோசன விருந்தில் கலந்துவிட்டுத் தான் தங்கியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளுத்மாவத்தையிலுள்ள சகோதரர் சி.மு.நாகரத்தினம் அவர்களின் இல்லத்திற்குத் திரும்பினார்.

மறுநாள் 01.10.2001 அன்றும் அதற்கு மறுநாளும் வத்தளையிலுள்ள சிவதொண்டன் நிலையத்தைச் சார்ந்த எஸ். சிவலோகம் குடும்பத்தினரின் வீட்டில் தங்கியிருந்து, கனடா வாழ் புங்குடுதீவு மக்களுக்காகப் புங்குடுதீவில் முன்னெடுக்கப்பட வேண்டிய பல முக்கிய பணிகள் பற்றிய திட்ட அறிக்கை ஒன்றினைத் தயாரித்துள்ளார். (கடித உருவிலான இவ்வறிக்கை இந்நூலின் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது).

வழமைபோல 03.10.2001 அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்த கையோடு, முன்னையநாள் தான் எழுதிவைத்த அறிக்கையினை வாசித்து இறுதிநேரத் திருத்தங்களை மேற்கொண்டார். அறிக்கையின் நிறைவுரையாக, “கடைசி” என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டு,



வட இலங்கை சர்வோதயத்தின் அனுசரணையுடன் புங்குடுதீவில் மரம் நடுகை இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பல இன்னல்களைக் கடந்து கனடாவில் தஞ்சமடைந்து அகதிநிலை வாழ்க்கையில் இருந்தபோதும் உங்கள் தாயகத்தை மறவாது அந்த மண்ணுக்கும் மண்ணில் வாழும் மக்களுக்கும் சேவையாற்ற வேண்டுமென எழுச்சிகொண்டு பணிபுரியத் துடிக்கும் கனடாவாழ் புங்குடுதீவு மக்களினதும் இளைஞர் யுவதிகளினதும் தேசப்பற்றுக்குத் தலைவணங்கி வாழ்த்துகின்றோம்.

மண்ணின் பிறப்புரிமையையும் மக்களின் உறவையும் கிராமத்தின் சொந்தங்களையும் இழந்துவிடாமல் காக்க பூங் குடிமக்கள் எழட்டும்! உலகமக்களின் உறவுகளையும் அன்பையும் பெற்று "புதியதோர் உலகம் செய்வோம்"!

**நன்றும் தீதும் பிறர்தர வாரா!!**

**செய் அல்லது செத்து மடி!**

கனடாவின் பனிமலைக்கும் அரசுக்கும் வாழியுலகின் வாழ்த்துக்கள்!

அன்புடன்

க.திருநாவுக்கரசு

என்று எழுதிக் கையொப்பமிட்டுவைத்தார். "நிறைவுரையை" "கடைசி" என்று திருநா அண்ணர் ஏன் குறிப்பிட்டார் என்று புரியவில்லை. அப்படிக் குறிப்பிட்டு எழுதிய வரிகளே அவர் தன் வாழ்வில் கைப்பட எழுதிய "கடைசி" வரிகளாக இருக்கப் போவதை அவர் அன்று அறிந்திருந்தாரோ தெரியவில்லை. 03.10.2001 அன்று காலையிலேயே வத்தளையில் எஸ்.சிவலோகம் குடும்பத்தினரின் வீட்டில் இருந்து புறப்பட்டு திருநா அண்ணர், அளுத்மாவத்தையிலிருந்த தனது சகோதரரின் வீட்டுக்குச் சென்றடைந்தார்.

அன்றையதினம் தனது உடல்நிலை சீர்கெடுவதை உணர்ந்த அவர் வீட்டிலுள்ளோரின் ஆலோசனைக்கமைய மருத்துவமனையில் தங்கிநின்று சிகிச்சை செய்ய உடன்பட்டார். நவலோக வைத்திய சாலையில் வைத்தியர் ஒருவர் அவரைப் பார்வையிடுவதற்காக, ஏற்கெனவே மாலை 6.30 மணிக்கு நேரம் ஒதுக்கித் தரப்பட்டிருந்தது. அன்று பகல் முழுவதும் களைப்புற்றிருந்த அவர் மாலை 6.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் திருமதி வே.தவமணிதேவி அவர்கள் உரையாற்றுகிறார்

மணியளவில் தனக்கு என்ன செய்கின்றதென்று எதுவுமே கூறாமல் வாடகைக்கு அமர்த்தியிருந்த முச்சக்கர வண்டியில் ஏறி, சகோதரி ஜமுனாவினதும் தொல்புரம் சர்வோதய இணைப்பாளர் திரு. கி.நடராசா அவர்களினதும் துணையுடன் நவலோக்க வைத்திய சாலைக்குச் சென்றடைந்தார்.


மருத்துவமனை வாசலை அடைந்ததும் அவரால் பேசமுடியாமல் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அவசர அவசரமாக மருத்துவ ஊழியர்கள் அவரை உள்ளே அழைத்துச் சென்றனர். ஒருசில நிமிடங்களுக்குள் அவசர சிகிச்சைப் பிரிவில் திருநா அண்ணர் அனுமதிக்கப்பட்டார். சுமார் 45 நிமிடங்கள் வரை அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை நடந்தது. சிகிச்சைகள் எதுவும் பயனின்றி இரவு 8.20 மணிக்கு, ஓய்வின்றித் தன் தாய்த்திரு நாட்டிற்கென ஊன் உறக்கம் பாராமல் உழைத்த திருநாவென்னும் அந்தத் திருத்தொண்டனின் "இதயம்" நிரந்தரமாக ஓய்வெடுத்துக் கொண்டது. திருவென்னும் திருவிளக்கு அணைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்சசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபொழுது கொழும்புப் பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு தங்கள் துயரத்தை மௌனமாக கண்ணீருடனும், மேலும் சிலர் அஞ்சலி உரைகளின் வாயிலாகவும் பகிர்ந்துகொண்டார்கள். அங்கே இடம்பெற்ற இரங்கலுரைகளைச் செவிமடுத்த எவருக்கும் திருநா அண்ணரின் பெருமை விளங்கியிருக்கும். பின்னர் புங்குடுதீவில் அவரின் ஈமைக்கிரியைகள் நடைபெற்றபோது பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு புங்குடுதீவு மைந்தனுக்கு பிரியாவிடை வழங்கினர்.

"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாள் ஆகும்"

- பாரதிதாசன்.



அமரர் க. திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணர் உருவாக்கிய பாதையில் தொடரும் பயணம்

இன்று திருநா அண்ணரின் பாதச்சுவடுகளைத் தொடர்ந்து வட இலங்கை சர்வோதய இயக்கத்தை புங்குடுதீவில் சிறப்புற வழிநடத்திச் செல்கின்றவர்கள் திருநா அண்ணரின் சகோதரியான செல்வி க.புஷ்பமணியும், பெறாமகளான செல்வி. பொ.ஜமுனா தேவியுமாவர். தாபக அமைப்பாளர் அமரர் க.திருநாவுக்கரசுவின் மறைவின் பின்னர் 2001 முதல் வட இலங்கை சர்வோதய அமைப்பின் அறங்காவலர் பொறுப்பினை மிகவும் சிக்கல் நிறைந்த போர்ச் சூழலில் ஏற்று சாதகமற்ற புறச்சூழ்நிலைகளின் போதும் துணிவுடனும் நேர்மையுடனும் பணியாற்றி வருகின்றார்கள்.

### செல்வி பொன்னம்பலம் ஜமுனாதேவி

ஆறு பெண் பிள்ளைகளையும், ஒரு ஆண் மகவையும் கொண்ட தொரு குடும்பத்தில் பொன்னம்பலம்-இராசம்மா தம்பதியினருக்கு 19.09.1958இல் மகளாகப் பிறந்தவர் பொன்னம்பலம் ஜமுனாதேவி. புங்குடுதீவு பெருங்காடு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றவர். இடைநிலைக் கல்வியை புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் பெற்றபின்னர், உயர் கல்வியைப் பெற யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இணைந்திருந்தார்.

ஆன்மீக சேவையின்பால் சிறு வயது முதலே ஈர்க்கப்பெற்ற செல்வி ஜமுனாதேவி அவர்கள், தனது கல்லூரி வாழ்வை முடித்துக்கொண்டு, வைகாசி 1976இல் தனது 17ஆவது அகவையில் சர்வோதயத்தில் இணைந்துகொண்டார். ஆரம்பத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வோதயத்தின் மாதர் சங்கத்தில் இணைந்து ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் சரியைத் தொண்டாற்றிய இவர், அக் கிராமத்தில் இயங்கிய மகாத்மாகாந்தி முன்பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றியிருந்தவர். 1977இல் சர்வோதயத்தின் நிதிப் பிரிவின் பொறுப்பை ஏற்று அனுபவங்களுக்கூடாக வளர்ந்து, இன்று சர்வோதய இயக்கத்தின் ஜீவதானியாகவும், இயக்குநர் சபையின் பொருளாளராகவும், 2003 முதல் தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவராக ஏழாண்டுகளும், யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் உறுப்பினராக ஏழாண்டுகளும் பதவி வகித்துள்ளார்.

2005இல் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இணைந்து பொருளாளர் பதவி வகித்த சகோதரி ஜமுனா, 2008இல் மீண்டும் இப்பதவிக்குத் தெரிவானவர். யாழ் மாவட்ட சமாதான நீதவானாகப் பணியாற்றும் இவர் வேலணைப் பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினருமாவார். இன்று இவர் சம்பந்தப்படாத அரச சார்பற்ற நிறுவனங்களே கிடையாது என்று கருதும் அளவுக்கு பரந்து விரிந்ததொரு ஆலமரமாகக் காட்சி தருகின்றார்.

தொண்டர் திருநாவுக்கரசின் பயிற்சிப் பாசறையில் வளர்ந்தவர் இவர். பதவிகள் எத்தனை வந்து சேர்ந்தபோதிலும் பணிவுடனும் கூடவே துணிவுடனும் செயலாற்றி நன்மதிப்பை பலரிடமும் பெற்று இயங்குபவர்.



சர்வோதய ஜீவதானிகள் பொ.ஜமுனாதேவியும் க.புஷ்பமணியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வி கந்தையா புஷ்பமணி**

புங்குடுதீவு சர்வோதய வளாகத்தின் ஆஸ்தான புலவராகச் சர்வோதயக் குடும்பத்துடன் 16 வருடங்களாக கூடிவாழ்ந்திருந்த பண்டிதர் சரவணனாரின் ஆன்மீகக் கருத்துக்கள் திருநா அண்ணரின் சகோதரியும், நிலையப் பொறுப்பாளருமான செல்வி க.புஷ்பமணி அவர்களையும் செல்வி பொ.ஜமுனாதேவியையும் பண்படுத்தி வழிநடத்தி வந்துள்ளன.

திருநா அண்ணர் அவர்களினதும் அவரது சகோதரியான செல்வி கந்தையா புஷ்பமணியினதும் அர்ப்பணிப்பு மிக்க சமூகசேவையும், வாய்மையும், நேர்மைத் தன்மையும், வெளிப் படைத்தன்மையும் கொண்ட சமூகச் செயற்பாடுகள் அவர்களை இன்றும் சர்வோதய வளாகத்தைத் திறம்பட நிர்வகிக்க வைத்திருக் கின்றன. தியாக சிந்தை, பற்றற்ற பிரம்மச்சரிய வாழ்க்கைமுறை, ஆகியவை திருநா அண்ணரைப் போன்றே சகோதரிகள் புஷ்பமணியையும், ஜமுனாதேவியையும் அவர்களது பிரம்மச்சரிய பாதையில் எவ்வித சுயநல நோக்கமும், ஆசாபாசங்களும் அற்ற ஆன்மீகத் துறவறத்தின்பால் ஈர்த்துச் சென்றுள்ளது என்றால் அது மிகையாகாது. சகோதரிகள் இருவரதும் ஒற்றுமையும், தாய்மை உணர்வும், களங்கமற்ற நட்பும், சர்வோதய இயக்கத்தை நேர்வழியில் உயிரும் உடலுமாக ஒன்றுபட்டு நின்று கட்டிக்காக்கும் வல்லமையை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

எமது பிராந்தியத்தில் தியாக சிந்தையுடன் இயங்கிய பல தொண்டு நிறுவனங்கள் அவற்றின் தாபகத் தலைவர் அமரத்துவமடைந்ததும் தாமும் படிப்படியாகச் செயலிழந்து, இறுதியில் மறைந்து விடுகின்றன. இதனையே முன்னர் மு.தளையசிங்கம் அவர்களினால் 1968இல் உருவாக்கப்பட்ட ‘பூரண சர்வோதய இயக்கம்’ மூலமாகப் புங்குடுதீவு மக்கள் கண்டனுபவித்தனர். அவ்வாறின்றி, அமரர் க.திருநாவுக்கரசு தொடக்கிவைத்த சர்வோதய அமைப்பினை அதன் தொண்டர்கள், தியாக சிந்தனையுடன் சுறுசுறுப்பாக தொய்வேதுமின்றி உயிர்ப்புடன் இயங்கவைப்பது பெருமைக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறாவதில்லை

வரலாறானவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை"

என்பது தமிழகத்தின் பெருமகன் காமராஜர் வழங்கிய வாழ்வின் பொன்மொழி.


திருநா அண்ணரின் மறைவின் பின்னரான நீண்டகாலத் தளரா நெடும்பயணத்தில் இன்றைய தரிப்பிடத்தில் நின்று அவர்கள் கடந்துவந்த பாதையைப் பின்நோக்கிப் பார்க்கும்போது, தமது தானைத்தலைவரின் மானசீக நல்லாசிகளுடன் அவரது தடத்தில் தொடர்ந்து பயணித்து இவர்கள் ஆற்றிவந்துள்ள சாதனைகள் பிரமிப்பை ஊட்டுகின்றன. இவ்வியலில் திருநா அண்ணரின் மறைவின் பின்னர் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் முழுமையான ஆதரவுடன் அவர்களது நம்பிக்கை நட்சத்திரமாக இருந்து தொடரும் பணிகள் பற்றி விளக்கமாகப் பார்க்க விருக்கிறோம்.

**ஆன்மீகப் பங்களிப்பு**

நாட்டில் அமைதியும் சமாதானமும், எழுச்சியும் கிராம சுயராச்சியமும் நிலைக்க வேண்டி 1978ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தின் திருக்கார்த்திகை திருநாளிலே தொண்டர் திருநாவுக்கரசு அவர்களினால் ஏற்றப்பட்ட அணையா விளக்கானது 13 வருடங்கள் தொடர்ச்சியாக அறங்காவலர் செல்வி. பொ.ஜமுனாதேவி அவர்களால் பராமரிக்கப்பட்டு இற்றைவரை கடந்த 40 ஆண்டுகளைத் தாண்டி ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. சிவயோக சுவாமிகளின் பூசைவிளக்கு, சிவலிங்க விளக்கு, அணையாவிளக்கு ஆகியவற்றை பாதுகாப்பதற்காக 1991ஆம் ஆண்டு இடப்பெயர்வு காலத்திலும் இடம்பெயராது இருந்து பாதுகாத்தவர் நிலையப் பொறுப்பாளர் செல்வி கந்தையா புஸ்பமணி அவர்கள் ஆவார்.

திருநா அண்ணர் அமரத்துவம் அடைவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே, புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் 09.02.1981அன்று சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு, தங்குதடையின்றி நாளாந்த நித்தியபூசை வழிபாடுகள் என்பன நிலையப்பொறுப்பாளர் செல்வி கந்தையா புஸ்பமணி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் அமைந்துள்ள சர்வோதய ஈஸ்வரன் கோவிலில்அன்றாட பூசையின்போது

இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலயத்தினரின் அனுசரணையுடனும் நிதியுதவியுடனும் புங்குடுதீவு 05ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள பட்டையக்கார அம்மன் ஆலயத்தில் 27.05.2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் அன்னதானம் வழங்குவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டு வந்துள்ளது. அன்றையதினம் சிறப்புக் கூட்டுப்பிரார்த்தனையும் வழிபாடும் நடைபெற்று வருகின்றன.

சிவயோகசுவாமிகளின் அஸ்தி பிரதிஷ்டை செய்யப்பட்டு 22.7.2011 அன்று கட்டப்பட்ட சிவயோக சுவாமிகள் நற்சிந்தனை மடாலயத்தில் நிலையப் பொறுப்பாளர் செல்வி.கந்தையா புஸ்பமணி அவர்களினால் மாதாந்த ஆயிலியப் பூசைகள், நற்சிந்தனை, வழிபாடுகள் என்பன தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

பழமையும் தொன்மையும் வாய்ந்த கேரதீவு ஐயனார் ஆலயக் கட்டிடம் சிதைவுற்று இருந்தமையால் 15.07.2012 அன்று அதே இடத்தில் புதிதாக ஐயனார் கோவில் ஒன்று மீள நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

நயினாதீவு செல்லும் பயணியர்களுக்கு இலவச குடிநீர் சேவை குறிகாட்டுவான் துறைமுகத்தில் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய அன்னதான சபையின் அனுசரணையுடன் 16.5.2015 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு மடத்துவெளி நுழைவாயிலில் அரசரமர நிழலில் 31.01.2018 அன்று வழிவிடுபிள்ளையார் ஆலயமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆலய நிர்மாணப் பணிகளுக்காக புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி புனிதவதி



புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் அமைந்துள்ள சிவயோக சுவாமிகள் மாதாந்த ஆயிலிய பூசையின்போது

குடும்பத்தினரால் 3,00,000 ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது. கட்டிடம் கட்டப்பெற்று கடந்த தைப்பூசத்தன்று கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது. மேற்படி ஆலயத்தின் நித்திய பூசைக்கும் பராமரிப்புச் செலவுகளை ஈடுசெய்வதற்குமாக மாதாந்தம் 40,000 ரூபாவினை புங்குடுதீவு சந்திரபாலன் இராஜேஸ்வரி அவர்கள் வழங்கிவருகின்றார்.

### ஜீவகாருண்ய சேவை

22.9.2013ஆம் திகதியன்று புங்குடுதீவின் 12 வட்டாரங்களிலும் அநாதரவான பசுக்களுக்கும் கால்நடைகளுக்கும் நீர் அருந்தும் 12 தொட்டிகள் அமைத்து நீர் நிரப்பப்பட்டு வருகின்றது.

கனடா புங்குடுதீவு நற்பணி மன்றத்தினரின் அனுசரணையுடனும் நிதியுதவியுடனும் ஆவினங்கள் நீர் அருந்தும் தொட்டியொன்று மடத்துவெளி முகப்பிலே அமைக்கப்பட்டு 22.9.2013 ஆம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வோதய வளாகத்தில் இடம்பெறும் கோமாதா பூஜை ஒன்றின்போது

தொடக்கம் 2014 ஆடி வரையும் அதற்கு சர்வோதயத்தின் சேவையாளர்கள் நீர் நிரப்பி வந்தார்கள்.

**குடிநீர் வழங்கல் சேவை**

வேலணை சாட்டிக் கிராமத்தில் குடிதண்ணீர் கிணற்றில் பௌசர் மூலம் நீர் எடுத்து செல்வதற்கு ஏதுவாகவும் மக்கள் பாவனைக்கு ஏற்றவகையிலும் வீதி அமைப்பதற்காக 21/2 பரப்புக்கு மேலான காணி 16.10.2003ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச சபை வீதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. சாட்டிக் கிராமத்தில் அமைந்துள்ள குடிநீர்க் கிணற்றுக்கு 8,00,000 ரூபா செலவில் சுற்றுமதில் அமைக்கப்பட்டு 30.05.2018ஆம் திகதியன்று வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

புங்குடுதீவு மக்களின் குடிநீர்ச் சேவைக்காக இலண்டன் புங்குடுதீவு நலன்புரிச்சங்க நலன் விரும்பிகள் பதினேழு பேரின் உதவியுடன் 26,00,000/- ரூபா பெறுமதியான குடிநீர் பௌசர் ஒன்று 01.03.2003 இல் பெறப்பட்டது. யாழ் மாவட்ட செயலகத்தின் ஊடாக 20.8.2004 இல் சுனாமி வேலைத்திட்டத்தின் கீழ் Tractor Bowser ஒன்றும் பெறப்பட்டுள்ளது. சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தினரால் ரூபா 36,00,000/-ரூபா பெறுமதியான குடிநீர் பௌசர் ஒன்றும் 30.7.2014 ஆம் ஆண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்பட்டது. இவற்றின் உதவியுடன் புங்குடுதீவு மக்களுக்கான குடிநீர் வழங்கல் சேவை தடங்கலின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் அனுசரணையுடன் புங்குடுதீவு மகா வித்தியாலயம் மற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய மகளீர் வித்தியாலயம் இரண்டிற்கும் தண்ணீர்த் தாங்கி அமைத்து, நீர் இறைக்கும் இயந்திரமும் பொருத்தப்பட்டு, பாடசாலையின் மலசலகூடங்களிற்கு குழாய் மூலம் நீர் வழங்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு கல்வித் தேவைகளுக்காக இரண்டு கணணிகளும் வழங்கப் பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ரூபா 5,00,000 நிதியுதவி பெற்று வழங்கியிருந்தனர். வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக 07.04.2005ஆம் ஆண்டில் இவ்வேலைத்திட்டம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.



மடத்துவெளி முகப்பில் ஆவினங்கள் நீரருந்தும் தொட்டி

திரு கு.வி.பஞ்சலிங்கதுரை அவர்களினால் புங்குடுதீவு ஆரம்ப பாடசாலை தவிர்ந்த ஏனைய 05 அரசினர் பாடசாலைகளான புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயம், புங்குடுதீவு மகா வித்தியாலயம், சுப்பிரமணிய மகளீர் வித்தியாலயம், ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவர்களின் குடிநீர்த்தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 1000 லீற்றர் கொள்ளளவுடைய குடிநீர்த்தாங்கிகள் அன்பளிப்பாக 2006ஆம் ஆண்டில் சர்வோதய நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.



லண்டனில் வாழும் கு.வி.பஞ்சலிங்கதுரை குடும்பத்தினர் ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்திற்கு குடிநீர் தாங்கி வழங்கிய நிகழ்வு

புங்குடுதீவிலுள்ள தூர்ந்து போன குடிநீர் நன்னீர்க் கிணறுகள் இனம்காணப்பட்டு, அக்கிணறுகள் தூர்வாரப்பட்டு, இறைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் வழங்கிய ரூபா 2,90,000 நிதியுதவியுடன், புங்குடுதீவிலுள்ள கைவிடப்பட்ட 26 நன்னீர்க்கிணறுகள் இத் திட்டத்தின் கீழ் தூர்வாரி இறைக்கப்பெற்று பொதுமக்களின் பாவனைக்கு மீள வழங்கும் பணி 12.5.2009 அன்று பூர்த்தி செய்யப்பட்டது.

இரணைமடுக்குளத்தில் இருந்து தீவகத்திற்கும் குடிநீர் வரவுள்ளதை வரவேற்று அத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 03 பரப்பு 10குழி அளவுள்ள காணியை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருக்கு 23.4.2010 அன்று வட இலங்கை சர்வோதயம் அன்பளிப்பாக வழங்கியது. அத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக பாரிய தண்ணீர்தாங்கி ஒன்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் புங்குடுதீவு நலன்விரும்பிகளினால் பதின்நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் 01.03.2003 அன்று அன்பளிப்பாகத் தரப்பட்டிருந்த TATA Gz 3003 ரக குடிநீர் பௌசர் 29.10.2017ஆம் திகதி அன்று திருத்த வேலைக்காக பொறியாளர்களிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இப் பாரிய திருத்த வேலைக்காக, 12,00,000 ரூபா சேகரித்து வழங்கப்பட்டது. இலண்டன் புங்குடுதீவு திரு கு.வி.பஞ்சலிங்கதுரை 1,00,000 ரூபாவும், இலண்டன் புங்குடுதீவு திரு சி.கிருபானந்தவேல் 1,00,000 ரூபாவும், இலண்டன் வாழ் புங்குடுதீவு திரு சி.பிறேம்றஜீந் 1,00,000 ரூபாவும், இலண்டன் புங்குடுதீவு திரு மு.சிவபாலன் (சுரேன்) 1,90,000 ரூபாவும், கொழும்பு புங்குடுதீவு திரு இ. வைத்திலிங்கம் 1,00,000 ரூபாவும் 22.1.2018அன்று நிதியுதவியாக வட இலங்கை சர்வோதயத்திற்கு வழங்கியிருந்தார்கள்.



தொண்டர் திருநாவுக்கரசுவின் ஞாபகார்த்தமாக இலங்கை அரசின் தீவகத்திற்கான குடிநீர் விநியோகத் திட்டத்தின்கீழ் பாரிய நீர்த்தாங்கி அமைப்பதற்காக, நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் எழுந்து நிற்கும் நீர்த்தாங்கி

பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தினர் வழங்கிய நிதியைப் பெற்று புங்குடுதீவு மக்களுடைய நீர்த்தேவையை பூர்த்திசெய்யும்பொருட்டு தண்ணீர்த் தாங்கியொன்று கட்டி கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளது. குறிகாட்டுவான் துறையின் அமைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸ் நிலையத்திற்கு 06.10.2017ஆம் திகதியிலிருந்து இலவசக் குடிநீர் வட இலங்கை சர்வோதயத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

**பாலர் முன்பள்ளிகள்**

குழந்தைகளிடம் திருநா அண்ணர் காட்டிவந்த அதீத பாசமும் ஆதரவும் தனித்துவமானவை. அதனை என்றென்றும் நினைவுகூரும் வகையில் திருநா அண்ணரின் பெயரில் முன்பள்ளி ஒன்று புங்குடுதீவில் ஸ்தாபிக்கப்பட்டது. 'தொண்டர் திருநாவுக்கரசு முன்பள்ளி' என்ற பெயரில் 01.10.2003 ஆம் திகதி தீவக கல்வி வலயத்தில் பதிவு செய்யப்பட்டு அதன் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதை விட மேலும் பல பாலர் முன்பள்ளிகள் இயங்கிவந்தன.

பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் நிதி உதவியுடன் இந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த உதவிப்பணம் 2.2. 2009 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டதுடன் 2.2.2013ஆம் திகதியன்று 15 ஆசிரியர்களுக்கு சேவைக்கால அடிப்படையில் ஊக்குவிப்பு நிதியாக தலா 10,000 ரூபா வீதமும் வழங்கப்பட்டுள்ளது.



சிவயோக சுவாமிகள் ஆலயத்தில் வருடாந்த ஏடுதொடக்கல் விழாவொன்றின் போது

தொண்டர் திருநாவுக்கரசு முன்பள்ளியின் வெளிக்கள விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக 30.3.2012 அன்று புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தனசிங்கநாதன் நிர்மலா குடும்பத்தினரால் ரூபா 1,00,000 அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

புங்குடுதீவில் உள்ள தேர்ந்த 13 முன்பள்ளிகளுக்கு உள்ளக விளையாட்டு உபகரணங்கள் Gas அடுப்புக்கள், அலுவலக அலுமாரி, பால் விநியோகக் கலன்கள், என்பன 6,82,250 ரூபா செலவில் இலண்டன் புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தினரால் வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக 21.11.2017 அன்று வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் ஆசிரியர் தினத்தில் 23 முன்பள்ளி, அறநெறி ஆசிரியர்களுக்கு சீருடைகளுடன், தலா 1,000 ரூபாவும் அன்பளிப்பாக வழங்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

பிரித்தானியா புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் முன்பள்ளிகளுக்கு ரூபா 10,00,000/- ரூபா செலவில் உள்ளக விளையாட்டு உபகரணங்கள், அறநெறி முன்பள்ளி ஆசிரியர் களுக்கான சீருடை என்பன பெற்றுக் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர். முன்பள்ளி ஆசிரியர் 15 பேருக்கு மாதாந்த ஊக்குவிப்பு நிதியாக தலா 2000 ரூபா, 2018 தை மாதம் முதல் இன்று வரை வழங்கப்பட்டு வருகின்றது.

**அறநெறிப் பாடசாலைகள்**

திருநா அண்ணரின் பெயரில் 'தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப்பாடசாலை' ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது. HA/07/56/14/93 எனும் பதிவிலக்கம் கொண்டு தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை என்ற பெயரில் இந்த அறநெறிப் பாடசாலை 12.2.2002ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 23.05.2002 பிரதேச செயலக இந்து கலாசார திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

HA/07/56/14/227 எனும் பதிவு இலக்கத்தைக் கொண்ட கலட்டி வரசித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை 02.01.2009ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 02.1.2014 ஆம் திகதியில் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் HA/07/56/14/213 எனும் பதிவு இலக்கத்தைக் கொண்ட மடத்துவெளி முருகன் அறநெறிப் பாடசாலை 03.02.2011ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் 02.05.2013ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது. HA/07/56/14/239 எனும் பதிவு இலக்கத்தைக் கொண்ட வேலணை சர்வசக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிப் பாடசாலை 01.04.2014ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு 18.06.2014 அன்று வேலணை பிரதேச இந்து கலாசார பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை,
புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வின்போது

இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலயத்தினரின் உதவியுடன் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான மதியஉணவு வழங்கும் சேவைத்திட்டமும் அறநெறி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு உதவி நிதியும் 2014 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகின்றார்கள்.

மடத்துவெளி முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு மதியஉணவு வழங்கும் திட்டத்திற்காக தலா 10,000 ரூபாவினை 28.1.2015 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரைக்கும் சிவா நறு மணப் பூங்கா தொழிலதிபர் திரு J. குருநாதசிவம் அவர்களினால் எமது நிறுவனத்தினூடாக வழங்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலய நிதியுதவியுடன் புங்குடுதீவு அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான மதியஉணவு வழங்கும் திட்டம் 28.08.2009 ஆம் திகதியிலிருந்தும், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்கும் திட்டம் 31.11.2015ஆம் திகதியிலிருந்தும் தொடங்கப்பட்டு, இன்றுவரை ஒழுங்காக நடைபெற்று வருகின்றது.

இறந்த ஆத்மாக்களின் திதி, திருமண - பிறந்தநாள் வைபவங்களை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் நிலையத்திலுள்ளோருக்கும் மதிய உணவு அளிக்கும் செயற்பாடு தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.



கலட்டி வரசித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் பரிசளிப்பு

பொதுசன நூலகம்
19 NOV 2019
மாநகர சபை
யாழ்ப்பாணம்

**கல்விச் செயற்பாடுகள்**

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த புங்குடுதீவு மாணவர்களை கௌரவப்படுத்திப் பல்வேறு உதவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களையும் பரிசுப்பொருட்களையும் சர்வோதய இயக்கம் வழங்கி வருகின்றது. அத்தோடு க.பொ.த. சாதாரண தரத்தில் சித்திபெற்று உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் மாணவர்களுக்கும் உள்ள கல்வித் தேவைகளை கண்டறிந்து, புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களின் உதவியுடன் வருடாந்தம் பூர்த்திசெய்து வருகின்றது.

இளையோர்களின் கல்வித் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில், மாலைநேர வகுப்பு, பிரத்தியேக செயற்பாடுகள் மற்றும் அறநெறிப் பாடசாலை என்பன நடத்தப்படுவதுடன், திருநா அண்ணரின் அன்னையாரின் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள 'அன்னை பார்வதி அமைப்பகம்' அம்மாணவர்களுக்கான கல்விச் செயற்பாட்டுதவிகளை வழங்கியும் வருகின்றது.

2003 ஆம் ஆண்டு புங்குடுதீவு பாடசாலை மாணவர் களுக்காகவும், பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர் களுக்காகவும் கணணிக் கல்வியை வழங்குவதற்காக 05 கணணிகள் இலண்டன் புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தினரால் வட இலங்கை சர்வோதயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. அதுமட்டுமன்றி முதன்முதலில் அடிப்படைக் கணணிக் கல்வியையும் கணணி பற்றிய அறிமுகத்தையும் மாணவர்களுக்கு வழங்கி புங்குடுதீவில் முதன்முதலில் கணணி வகுப்பினை தொடக்கி வைத்த பெருமை இலண்டன் புங்குடுதீவு நலன்புரிச்சங்கத்தையே சாரும். ஆரம்பத்தில் 15 மாணவர்களுடன் தொடங்கிய கற்றல் செயற்பாடானது 2013ஆம் ஆண்டுவரை நடைபெற்று பயிற்சியின் நிறைவின்போது மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இது சர்வோதய இயக்கத்தின் கல்விசார் செயற்பாடுகளில் வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு சிறந்த பணியாகப் போற்றப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இந்து நாகரிகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களில் அதிகூடிய புள்ளிகள் பெறும் மாணவருக்காக, பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின் போது "தொண்டர் திருநாவுக்கரசு ஞாபகார்த்த பணப் பரிசொன்றை" வழங்கும் பொருட்டு 1,00,000 ரூபா 01.03.2004 அன்று பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்புத் தொகையாக வழங்கப்பட்டது. பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் அம்முதலீட்டிலிருந்து பெறப்படும் வருடாந்த வட்டி பணப்பரிசிலாக ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாணவருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இது அவரது சமூக ஆன்மீகப் பணிகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்க நிதியுதவியுடன் புங்குடுதீவு அரசினர் பாடசாலை மாணவர்களுக்கு ஆதார உணவாக 27.9.2004இல் தொடங்கி 2006ஆம் ஆண்டுவரை பணிஸ் வழங்கப்பட்டது.



மடத்துவெளி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுடன் ஆசிரியர்கள்

கேரதீவு, ஊரதீவு கிராமங்களிலிருந்து நீண்ட தூரம் பாடசாலைக்கு செல்லும் 50 மாணவர்களுக்கு 16.1.2005ஆம் திகதி 50 துவிச்சக்கரவண்டிகள் கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரின் நிதி உதவியுடன் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

அறங்காவலர் செல்வி பொ.ஜமுனாதேவி அவர்களின் பொன்விழாவையும் மலர்வெளியீட்டையும் முன்னிட்டு நடாத்திய நிகழ்விலே அறங்காவலருக்கென அன்பர்களால் வழங்கப்பட்ட நிதியுதவியினை முதலீடாகக் கொண்டு புங்குடுதீவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் எதிர்காலக் கல்விக்காக 'ஜமுனாதேவி உதவி நிதியம்' என்ற பெயரில் 31.10.2008 ஆம் திகதியில் ஒரு வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. அறக்கொடை நிதியாக சேகரித்த ரூபா 10,00,000 அக்கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

அவ்வாறே, அன்னை பார்வதி அமைப்பகத்தின் அனுசரணையோடு கடந்த மாசி 2009ஆம் ஆண்டு தொடக்கம் மாலைநேர வகுப்புக்கள் மாணவர்களுக்கான கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் இவ்வமைப்பின் ஊடாக 282மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் 2,00,000 ரூபா செலவில் 10.11.2009 அன்று வழங்கப்பட்டது.

புங்குடுதீவு பாடசாலை மாணவர்களுக்கு பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தினரால் அளிக்கப்பட்ட நிதியுதவியைக் கொண்டு 800 மாணவர்களுக்கு 19.03.2009ஆம் திகதியிலே பாதணிகள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டன.

கனடா பழைய மாணவர் சங்கத்தினரின் நிதி உதவியுடன், A/L கல்வி பயிலும் மாணவர்கள், மற்றும் இடைநிலைப் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியுதவி அளிக்கப்பட்டது. பிரித்தானியா புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தினரின் நிதியுதவியுடன் புங்குடுதீவிலுள்ள 10 அரசினர் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் 7,00,000/- ரூபா செலவில் கற்றல் உபகரணங்கள் வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக வழங்கிவைக்கப்பட்டது.

பழைய மாணவர் சங்கத்தினரின் அனுசரணையுடனும் நிதியுதவியுடனும் A/L வகுப்பு மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் (மொத்தம் 52 பேருக்கு) தலா 2,000 ரூபா வீதம் கல்வி ஊக்குவிப்பு நிதியுதவி 21.11.2014 முதல் ஆவணி 2016 வரை வழங்கப்பட்டுள்ளது.

கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரின் அனுசரணையுடனும் நிதியுதவியுடனும் புங்குடுதீவு அரசினர் பாடசாலைகளுக்கு 2014 இலிருந்து 2017 ஆவணி வரை இலவசமாக குடிநீர் சேவையும் வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவைச் சேர்ந்த A/L வகுப்பு மாணவன் செல்வன் விநாயகமூர்த்தி வினோஜன் அவர்களின் கல்விக்காக, இலண்டனில் வசித்துவரும் கணேசமூர்த்தி விஜயலட்சுமி குடும்பத்தினரால் தை மாதம் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆவணிமாதம் வரை மாதம் 5,000/- ரூபா வீதம் நிதியுதவி வட இலங்கை சர்வோதயத்தினூடாக வழங்கப்பட்டது.

இலண்டன் புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தின் ஆதரவுடன் 12.1.2016 அன்று புங்குடுதீவிலுள்ள 09 அரசினர் பாடசாலை மாணவர்களுக்கும் 4,64,278 ரூபா செலவில் கற்றல் உபகரணங்கள் வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக வழங்கி முடிக்கப்பட்டது. 01.08.2018ஆம் ஆண்டிலிருந்து இச்சங்கமானது புங்குடுதீவில்



ஐக்கிய இராச்சியம்-புங்குடுதீவு நலன்புரிச்சங்கத்தினரும், வட இலங்கை சர்வோதயமும் இணைந்து நடத்திய கணனி வகுப்புகளின் இறுதியில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தின்போது

இயங்கும் 09 அரசினர் பாடசாலைகளுக்கும் பயன்படுத்தவென 27,000 லீற்றர் குடிநீரை இலவசமாக விநியோகம் செய்வதற்கான நிதியுதவியை வழங்கிவந்துள்ளது.

இலண்டன் புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தினரின் நிதியுதவியுடன் புங்குடுதீவு மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமாக மாலை நேர வகுப்புகளை நடாத்துவதற்கு வசதியாக 4,00,000 ரூபா செலவில் கட்டிடம் ஒன்றினை 06.05.2016ஆம் ஆண்டில் (கண்ணன் கல்வியகம்) புனரமைப்புச் செய்து வழங்கியதுடன், கல்விச் செயற்பாடுகளுக்குத் தேவையான தளபாடங்களையும் வழங்கியுள்ளனர். இக்கல்வியகத்தில் இன்றுவரை மாலை நேர வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனுடைய பொறுப்பாசிரியராக திரு.ந.கண்ணதாசன் ஆசிரியர் அவர்கள் இருந்து வருகின்றார்.

அமரர் திருநா அண்ணரின் 25,000 நூல்களுடனான ஒரு நூலகம் என்ற கனவை நனவாக்கும் பெருந்திட்டத்தின் கீழ், இலண்டனில் வாழும் நூலகவியலாளர் திரு என்.செல்வராஜா அவர்களினால் வட இலங்கை சர்வோதயத்திலே சிறுவர் நூலகம் ஒன்றினை மீளமைப்பதற்காக தமிழ்ப் புத்தகங்கள் 138 உம் ஆங்கிலப் புத்தகங்கள் 1288உம் தொண்டர் திருநாவுக்கரசு அவர்களின் 17வது நினைவுதினத்திலே 07.10.2018 அன்று வட இலங்கை சர்வோதய நூலகத்திற்கு கையளிக்கப்பட்டன. சிறுவர்களை வாசிப்பின்பால் ஊக்குவிக்கும் முகமாக சர்வோதய வளாகத்தில் சிறுவர் நூலகம் ஒன்று தற்பொழுது இயங்கிவருகின்றது.

பனைசார் கைப்பணி போதனாசிரியராக இருந்து 06.4.2019இல் அமரத்துவம் அடைந்த திருமதி சோபா வசீதரன் அவர்களின் மரணச் செலவிற்காக திரு த.குழந்தைவேல் அவர்களினால் உடன் உதவு நிதியாக 1,00,000 ரூபா சர்வோதய அமைப்பின் ஊடாக அவரது குடும்பத்திற்கு 06.4.2019இல் வழங்கப்பட்டது. அத்துடன் அன்னாரின் புதல்வன் செல்வன் மேதயன் அவர்களுக்கு திரு கோபாலப்பிள்ளை தீபன், முருகானந்தவேல் ஆதித்யா, மற்றும் ரெட்ணேஸ்வரன் வித்தியா ஆகியோரினால் உதவப்பட்ட 1,33,000 ரூபா நிதியானது செல்வன் மேதயன் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் 28.5.2019 அன்று வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கனடா வாழ் தீபன் கோபாலபிள்ளை குடும்பத்தினர், வசீதரன் மேதயன் அவர்களின் மேற்படிப்புவரை ஏற்படும் செலவீனங்களை பொறுப்பேற்று உதவுவதென உறுதியளித்தபடி தொடர்ந்து வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார். இந்நிலையில் வட இலங்கை சர்வோதயம் செல்வன் மேதயனைப் பொறுப்பேற்று இந்த நிதியுதவியினை மாதாந்தம் வழங்கி வருகின்றது.



தொண்டர் திருநாவுக்கரசுவின் 17ஆவது நினைவு தினத்தில் நூலாசிரியர் மங்கள விளக்கேற்றுகின்றார்

### கலை இலக்கிய மன்றம்

திருநா அண்ணரின் கலை இலக்கிய ஆர்வத்தினை நினைவுகூரும் நோக்கில் 'புங்குடுதீவு திருநாவுக்கரசு கலை இலக்கிய மன்றம்' என்ற அமைப்பினை 02.09.2014 ஆம் திகதியில் ஆரம்பித்து வைத்துள்ளார்கள். இதன்மூலம் தீவகத்தின் கலைஞர்களிடையே கலை இலக்கியப் பண்பாட்டைக் கட்டி எழுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வட மாகாண கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் இவ்வமைப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

### புங்குடுதீவு உணவு உற்பத்தியாளர் நிறுவனம்

புங்குடுதீவு சமூகக் கற்கை நிலையம் 25.04.2007ஆம் ஆண்டில் தீவக கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவில் பதிவு செய்யப்பட்டு "புங்குடுதீவு உணவு உற்பத்தியாளர்" என்ற வியாபாரப் பெயரில் வேலணை பிரதேச செயலகத்தில் 17.11.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் திகதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கான வாழ்வாதாரத் திட்டமாகவும், உள்ளூர் மூலப்பொருட்களை பெருமளவு பாவித்து கலப்படமற்ற தூய உணவுப்பொருட்களைத் தயாரித்து பாவனைக்கு வழங்கும் நோக்கத்துடனும் இயங்கிவருகின்றது. இதனுடைய வழிகாட்டலையும் நெறிப்படுத்தலையும் நிதியுதவியையும் UNDP நிறுவனம் சர்வோதய அமைப்பினருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. புங்குதீவு உணவு உற்பத்தியாளர் என்கின்ற உணவு பதனிடல் திட்டத்திற்கு, UNDP நிறுவனமானது தேவையான கட்டிடம், அரைக்கும் இயந்திரங்கள், சந்தைப்படுத்தல் வாகனம் என்பனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக 1,00,00,000/- ரூபா நிதியுதவியினை 09.06.2015ஆம் திகதியன்று சர்வோதய அமைப்பினருக்கு வழங்கியுதவியுள்ளது.

'புங்குடுதீவு உணவு உற்பத்தியாளர்' என்ற அமைப்பில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களிலிருந்து சர்வோதய இயக்கத்தினர் இருபது பெண்களைத் தெரிவு செய்து அவர்களின் உதவியுடன் உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தி



இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் தலைவரையும் துணைவியாரையும் 12.10.2018 அன்று மொரட்டுவையில் சந்தித்த வேளையில் புங்குடுதீவு உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் சிலவற்றை அறிமுகப்படுத்திய வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு பதனிட்டு விற்பனை செய்து வருகின்றனர். அரிசிமா, குறிஞ்சா மா, வடகம், புளுக்கொடியல், மோர் மிளகாய், ஒடியல்மா போன்ற உற்பத்திப் பொருட்கள் மக்கள் மத்தியிலே சிறந்த வரவேற்பைப் பெற்றவையாகும். உணவுப்பொருள் உற்பத்திகள் பதனிடப்பட்டு 'புங்குடுதீவு உணவு உற்பத்தியாளர்' என்ற வியாபாரப் பெயரிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இப்பொழுது சர்வதேச ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு, கனடா, பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கும், சர்வதேச தராதரத்திற்கு அமைவாகப் பொதிசெய்யப்பட்ட மேற்படி பதனிடப்பட்ட பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டும் வருகின்றன.

**பனைவளப் பயன்பாடு**

உள்ளூர் மூலப்பொருளான பனங்குருத்தைப் பயன்படுத்தி யாழ் பனைசார் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தி நிலையம் 2008 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு இளம் தாய்மார், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பும், சந்தைப்படுத்தலும் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் வளர்ச்சிக்கு UNDP நிறுவனம் பெரும் பங்காற்றியுள்ளது. புங்குடுதீவுக் கிராமத்தில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களான பனை வளத்தைப் பயன்படுத்தி, சுயதொழில் வேலைவாய்ப்புகளின் மூலம் வருமானத்தைப் பெற்றக்கொள்ள ஏதுவாக தீவகத்தின் பெண்களுக்கு UNDP நிறுவனத்தின் அனுசரணையுடன் பன்னவேலைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பனைசார் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள் தெல்லிப்பளை, வேலணைத்துறை, புங்குடுதீவு, காரைநகர், நாரந்தனை, மருதங்கேணி, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களிலும் வழங்கப்பட்டுள்ளன.

பனைசார் கைப்பணி உற்பத்தி தொடர்பான பயிற்சிகள் 2015, 2017ஆம் ஆண்டுகளில் தெல்லிப்பளை, கோப்பாய், சண்டிலிப்பாய், மருதங்கேணி, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, வேலணை, காரைநகர் ஆகிய 08 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள இளம் தாய்மார்களுக்காக வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலய நிதியுதவியுடன் வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கும் பனைசார் கைப்பணிப் பயிற்சிகள் மூன்று மாதங்கள் வரை வழங்கப்பட்டன. குறிப்பாக, ஆலயத்தினரின் நிதி உதவியுடன், தீவகத்தைச்சேர்ந்த 15 இளம் பெண்களுக்கு 03 மாதகால பனைசார் உற்பத்தி கைப்பணி பயிற்சியானது 19.02.2015ஆம் திகதிமுதல் வழங்கப்பட்டது. இதன்மூலம் பயிற்சியின் பின்னர் புதிய உற்பத்தியாளர்களின் முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் வாய்ப்பினையும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். இதில் 70 இற்கும் மேற்பட்டவர்கள் உற்பத்தியாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

**பால்வளப் பயன்பாடு**

புங்குடுதீவுப் பிரதேசத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கும் முகமாகவும், இறைச்சிக்காக பசுக்களைப் பயன்படுத்தும் அதர்மத்திலிருந்து பசுக்களை பாதுகாக்கும் நோக்குடனும், வட மாகாண சபையின் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் அனுசரணையோடு 01.03.2016ஆம் ஆண்டில் பால் சேகரிக்கவும் பாற்பொருள் பதனிடும் வகையிலும் பாற்சாலை ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. இப்பாற்சாலைக் கட்டிடத்தினை திருத்தியமைப்பதற்கென 26.1.2016 ஆம் திகதியில் இலண்டன் நலன்புரிச் சங்கமானது 80,000 ரூபா நிதியுதவியினை சர்வோதயத்திற்கு 06.05.2016ஆம் திகதியன்று வழங்கியுள்ளது. மேலும் ஏழு குடும்பங்களுக்கு நல்லின பசுக்கள் தலா 1,40,000 ரூபா பெறுமதியில் வாழ்வாதாரமாக வழங்கப்பட்டுள்ளன. இறந்த ஆத்மாக்களின் நினைவாக உதவ முன்வந்த அறக் கொடையாளர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தியே இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**கோழி வளர்ப்புத் திட்டம்**

03.4.2017 அன்று இலண்டன் நலன்புரிச்சங்க நிதியுதவியுடன் புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 10 குடும்பங்களிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலா 56,485 ரூபா வீதம் 5,64,850 ரூபா பெறுமதியான கோழிகளை வழங்கி சர்வோதய நிறுவனத்தினர் தீவகத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தினை அமுலாக்கியிருந்தனர்.

**மீன்பிடித்துறை வளர்ச்சி**

14.5.2015ஆம் திகதியன்று புங்குடுதீவிலிலுள்ள 20 கடல் தொழிலாளர்களுக்கு 2,00,000ரூபா செலவில் மீன்பிடி உபகரணங்கள் வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக வழங்கப்பட்டன.

**மர நடுகைத் திட்டம்**

புங்குடுதீவு புங்கடியிலிருந்து குறிச்சிக்காடு மற்றும் மேற்கு வீதி சுருவத்தடி வரை 300 பயன்தரு நிழல் மரங்கள் வீதியின் இரு மருங்கிலும் 11.10.2016 அன்று வரை நாட்டப்பட்டு இன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இது இறந்த ஆத்மாக்களின் ஞாபகார்த்தமாகவும், பிறந்தநாள் மற்றும் திருமண பந்தம் போன்ற மங்கள பரிசில்களாகவும் உதவுபவர்கள் பெயரின் நினைவாக பேணப்படுகிறது. எதிர்காலத்தில் இம்மரங்களில்



பெண்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கோழிக்கூடும் கோழிகளும் வழங்கும் நிகழ்வொன்றின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மொழிப் பதாதைகள் தொங்க விடப்படுவதுடன் பெயர்களும் குறிக்கப்படும். இத்திட்டத்தில் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.செல்வரத்தினம் சுரேஷ் அவர்கள் தனது 50ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 50 மரக்கன்றுகளை வீதியில் நடுவதற்கான செயற்பாட்டை முதலில் ஆரம்பிக்க உதவினார்கள்.

**பாதைகள் புனரமைப்பு, போக்குவரத்து வசதிகள்**

கனடா புங்குடுதீவு நற்பணி மன்றத்தினரின் அனுசரணையுடனும் நிதியுதவியுடனும் 08.11.2012ஆம் திகதியில் புங்குடுதீவு 06ஆம் வட்டார பொதுக்கிணறு, பொக்குளிக்குளம், கேரதீவு இந்து மயானம், இறுப்பிட்டி புளியடிச்சந்தி வீதி, தெங்குந்திடல் பிள்ளையார் கோவிலடி, சின்ன ஆலடி வீதி போன்றன துப்பரவு செய்யப்பட்டன. 27.4.2013ஆம் திகதியன்று கண்ணகை அம்மன் கோவில்வீதி ஆலடிச்சந்திவரையும், புங்குடுதீவு தேவாலய சேமக்காலை செல்லும் வீதி என்பனவும் துப்பரவு செய்யப்பட்டன.

இறுப்பிட்டி வீதி, கழுதைப்பிட்டியிலிருந்து பெருங்காட்டுச் சந்தி வரையான பிரதான வீதியானது புதர் மண்டிக்கிடந்த நிலையில், கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரிடமிருந்து 2,34,272 ரூபா நிதியுதவியைப் பெற்று 26.7.2003 முதல் 6.12.2003 வரை சர்வோதய அமைப்பினரின் மூலம் அப்பாதை துப்பரவு செய்யப்பட்டது. 98 நாட்கள் வரையில் நீடித்த இப்பணியின் விளைவாக, அவ்வீதிக்கு தார் போடப்பட்டு மக்கள் போக்கு வரத்திற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

இறுப்பிட்டி-கழுதைப்பிட்டி தொடக்கம் மடத்துவெளிவரை புதர் மண்டிக் கிடந்த இந்த வீதிகள் வெட்டித் துப்பரவு செய்யப்பட்டு தார்ச் சாலையாக மாற்ற வழி வகுக்கப்பட்டமைக்குக் காரணமான கனடா பழைய மாணவர் சங்கத்தினரின் தாயகப்பற்று போற்றத்தக்கதாகும். இவ்வாறே புளியடிச் சந்தியிலிருந்து புளியடித்துறைக்குச் செல்கின்ற பாதையும் மக்கள் பாவனைக்கேற்ற வகையில் 2016இல் தார் போட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு ஊடாக, அப்போது அமைச்சராகவிருந்த அமரர் திரு தியாகராஜா மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களினால் வட இலங்கை சர்வோதயத்தின் பாவனைக்கென முச்சக்கரவண்டி ஒன்று 11.09.2003 ஆம் திகதியன்று வழங்கப்பட்டது.

CHAP FM பயனாளிகளுக்கு மகளீர் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியினால் 10 துவிச்சக்கர வண்டிகள் 2011ஆம் ஆண்டில் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இலண்டனில் வசித்துவரும் கணேசமூர்த்தி விஜயலட்சுமி குடும்பத்தினரால் 12.05.2016 அன்று PFM 05 பயனாளிகளுக்கு 05 துவிச்சக்கரவண்டிகள் வட இலங்கை சர்வோதயம் ஊடாக அன்பளிப்பு செய்யப்பட்டன.

**புங்குடுதீவின் சுகாதார மருத்துவ சேவைகள்**

யாழ் செஞ்சிலுவைச்சங்கம், லயன்ஸ் கழகம் போன்ற அமைப்புக்களின் அனுசரணையோடு கண்பரிசோதனை முகாம், மருத்துவ சேவைகள், சிரமதானங்கள் என்பன நடைபெற்றன. லயன்ஸ் கழகத்தின் மருத்துவ பரிசோதனை முகாமானது 25.3.2004 ஆம் திகதியன்று நடைபெற்றது. தொடர்ந்து மற்றொரு வைத்திய முகாமும் அபிவிருத்தித் திட்டத்திற்கான கருத்தரங்கும் 10.12.2005 ஆம் திகதியன்றும் நடைபெற்றது.

யாழ் செஞ்சிலுவைச்சங்கம் புங்குடுதீவு மக்களுக்கான மருத்துவமுகாம் ஒன்றினை 20.02.2005ஆம் திகதியன்றும் சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் நடத்தியிருந்தது.

புங்குடுதீவு மக்களுக்கான அரசின் மாபெரும் சேவைத் திட்டமுகாம் 24.8.2008 அன்று நடைபெற்றது.

சர்வோதய வளாக சமூகக் கற்கை நிலையத்தில் பணியாற்றிய புங்குடுதீவு 03ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சகோதரி மாணிக்கவாசகர் பிரசாந்தி அவர்களுக்கு கடமை நேரத்தில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக, விபத்து இழப்பீட்டு நிதியாக இலண்டன் வாழ் புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு ஏரம்பு வசந்தன் அவர்களினால், வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக 20.03.2011 அன்று 1,00,000 ரூபா வழங்கப்பட்டது. அத்துடன் சர்வோதய சேவை வளாகத்திலே தென்னங் கன்றுகள் நடுவதற்காகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு ஏரம்பு வசந்தன் அவர்கள் மேலதிகமாக 1,65,000 ரூபா நிதியுதவியினையும் 30.5.2015அன்று வழங்கியுதவியிருந்தார்.

கனடா வாழ் புங்குடுதீவைச் சேர்ந்த சந்திரமோகன் லகீன் அவர்களின் நிதியுதவியினால் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு கணனி, பிறிண்டர் என்பன 75,000 ரூபா செலவில் 14.02.2013 அன்று வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக வழங்கப்பட்டிருந்தது.

கனடா புங்குடுதீவு நற்பணி மன்றத்தினரின் அனுசரணையுடனும் நிதியுதவியுடனும் மேற்படி வைத்தியசாலைக்கு 35,420 ரூபா செலவில் 10.5.2013 அன்று மின்சார உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

மேற்படி வைத்தியசாலைக்கு மேலும் 14.12.2013 அன்று மருத்துவ உபகரணங்கள் நோயாளர் கட்டில்கள், அவசரசிகிச்சை கட்டில் அலுமாரிகள் என்பன 10,25,535 ரூபா நலன் புரிச்சங்க நிதியுதவி மூலமாக சர்வோதயத்தினரால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. ஏப்ரல் 2015இல் 70,500 ரூபா செலவில் Electrocardiograph (Recorder) உபகரணமொன்றினை சங்க நிதியுதவியுடன் வட இலங்கை சர்வோதயம் பெற்றுக் கொடுத்திருந்தது.

பிரித்தானியா, புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கட்டிடத்தினை புனரமைப்புச் செய்து, வண்ணம்தீட்ட தேவையான நிதி உதவியினை வழங்கியிருந்தனர். 15.03.2015ஆம் திகதி புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு கட்டிடம் புனரமைப்பு செய்து பெயின்றிங் வேலை 2,29,727 ரூபா செலவில் செய்து முடிக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலைக்கு 07.01.2016 ஆம் ஆண்டிலிருந்து இலவசக் குடிநீர் விநியோகமும் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் மேற்படி வைத்தியசாலைக்கு ரூபா 3,00,000/- பெறுமதியான மின்சார உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியுதவியை கனடா பழைய மாணவர் சங்கத்தினர் வழங்கியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் சர்வோதய குடும்ப நிதியத் திட்ட சேவையாளராக இருந்தவருமான திருமதி த.கமலாதேவி அவர்களுக்கு 11.9.2018 அன்று இருதயப் பகுதி நரம்புச் சிகிச்சைக்காக ரூபா 20,000 ரூபா மருத்துவ உதவிக்காக வழங்கப்பட்டது.

### மலிவு விலைக் கடைகள்

தீவக மக்கள் தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்று பயன் பெறுவதற்கு சர்வோதய மலிவு விலைக் கடைகள், புடவைக்கடைகள், உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் என்பனவும் இயங்கி வருகின்றன.



பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றிற்கு வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் தேனீர்க் கடை நடத்துவதற்காக நிதியுதவி வழங்கிய போது

நியாய விலைக்கடைகளான கிராஞ்சிக் கடையானது இடப் பெயர்விற்கு பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புடவைக் கடையானது 29.5.2009ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டிட வசதிகள்**

நிலையப் பொறுப்பாளராகத் தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றிவரும் புஷ்பமணிஅக்கா அவர்களின் 60வது அகவையை நினைவுகூரும் வகையில் சர்வோதய சேவை வளாகத்திலே 09.05.2009 அன்று 'புஷ்பா மணிமண்டபம்' நிர்மாணிக்கப்பட்டு 14.09.2009 ஆம் திகதியன்று திறப்புவிழாவும் நடைபெற்றது. அத்துடன் இம்மண்டபத்திலே பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் என்பனவும் நடைபெற்று வருகின்றன.



புஷ்பா மணிமண்டபம்

வட இலங்கை சர்வோதயத்தினால் கட்டப்பட்டு பயன்பாட்டிலிருந்து, பின்னர் போர்க்காலத்தில் பாதிக்கப்பட்டிருந்த வேலணை துறையூர் கிராமோதய மண்டபம் இடப்பெயர்வுக்கு பின்னர் மீளவும் புனரமைக்கப்பட்டு கிராமங்களின் பயன்பாட்டுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இடப்பெயர்விற்குப் பின்னர் 30.11.2015ஆம் ஆண்டில் I.O.M நிறுவனத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு அறநெறிப் பாடசாலை, மாலைநேர வகுப்பு, பனைசார் உற்பத்தி பயிற்சி என்பன அக்கட்டிடத்தில் நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் 620 மீற்றர் நீளமும் 1.8 மீற்றர் உயரமும் கொண்ட சுற்றுமதில் அமைப்பதற்காக பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் 60,00,000 ரூபா நிதியினை புங்குடுதீவு சர்வோதய நிறுவனத்தின் ஊடாக ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தகாரர்களுக்கு 21.4.2015 அன்று வழங்கப் பட்டது. அத்துடன் மதில் கட்டிட அமைப்பிற்குத் தேவையான 18,00,000/- ரூபா பெறுமதியான தண்ணீர் வழங்கலையும் சர்வோதயம் பொறுப்பேற்றிருந்தது.

இலண்டன் வாழ் புங்குடுதீவு 09ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மகாலிங்கம் ரதி தம்பதியினரிடமிருந்து 10.1.2014அன்று புங்குடுதீவு கலட்டி வரசித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை இயங்கிவந்த நால்வர்மடம் கட்டிடத்தின் திருத்த வேலைகளுக்காகவும் பொதுக்குசினி அமைப்பதற்காகவும் ரூபா 2,00,000 அன்பளிப்பாகப் பெறப்பட்டு மடத்து வேலையும் குசினி வேலையும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த திரு நா.நித்தியானந்தன் அவர்கள் வட இலங்கை சர்வோதய நூலகம், விடுதிக் கட்டடம் என்பவற்றிற்கான வர்ணப் பூச்சுக்களையும், திரு.க.தம்பிஜயா அவர்கள் 'ஆரோபணம்' அமைப்பின் ஊடாக 100 பிளாஸ்ரிக் கதிரைகளையும் 2007ஆம் ஆண்டு வட இலங்கை சர்வோதயத்திற்கு வழங்கியுள்ளனர்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் புங்குடுதீவு பிரதேச மக்கள் தங்கள் கிராமத்திற்கு வருகை தந்து தங்களது வீடு, காணி என்பவற்றை பராமரிக்கும் பொருட்டும் தாய்மண்ணை நேசித்து உறவுகளுக்கு உதவிடவும் வருகின்ற வேளையில் அவர்களுக்கு தங்குமிடவசதி, உணவு தயாரித்து வழங்கும் சேவை என்பவற்றையும் புங்குடுதீவு சர்வோதய வளாகத்தினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் நிதிப் பங்களிப்பும் சர்வோதய நிறுவனத்தின் சமூகப் பணிகள் வெற்றிகரமாகத் தொடர உதவி புரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மனி– புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் பங்களிப்புகள்

திருநா அண்ணரின் பெயரில் புலம்பெயர்ந்த சர்வோதயக் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்ட முதலாவது நற்பணி ஒன்றியம் என்ற வகையிலும் புங்குடுதீவு சர்வோதய இயக்கத்துடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருக்கும் புலம்பெயர் அமைப்பு என்ற வகையிலும் மேற்குறிப்பிட்ட அமைப்பின் பணிகளையும் இங்கு பட்டியலிடவேண்டும்.

1. புங்குடுதீவிலுள்ள 13 முன்பள்ளி பாடசாலைச் சிறார்களுக்கான சத்துணவுத் திட்டத்தில் பால், சப்தபோஷா என்பன தை மாதம் 2016 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள். அத்துடன் இவ்வமைப்பினரின் உதவியுடன், முன்பள்ளி ஆசிரியர் 15 பேருக்கு தலா 1000 ரூபாவீதம் கடந்த 03 ஆண்டுகளாக வேதனம் வழங்கப்பட்டு வருகின்றது.

2. புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மாணவி A.சாந்தி அவர்களுக்கு இருதய மாற்றுச் சிகிச்சைக்காக அவரது குடும்பத்தினருக்கு யேர்மனி ஒன்றியத்தின் ஊடாக வழங்கப்பட்ட நிதி 50,000 ரூபாவாகும். மேலும் யேர்மனி வாழ் ஒன்றிய அங்கத்தவரான சபாபதி பத்மநாதன்




பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றிய ஆதரவில் கலட்டிப் பிள்ளையார் கோவில் நன்னீர்க் கிணறு இறைத்துத் துப்பரவு செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினரால் 35,000 ரூபாவும் அவரது தாயார் அன்ரனி சியாமளா அவர்களிடம் 27.1.2016அன்று சர்வோதய இயக்கத்தினரால் நேரில் சென்று கையளிக்கப்பட்டுள்ளது.

3. புங்குடுதீவு மகா வித்தியாலய கிறிஸ்தவ பாட ஆசிரியருக்கான வேதனமாக தை தொடக்கம் வைகாசி 2016 ஆம் ஆண்டு வரை 05 மாதங்களுக்கு மாதம் 5,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

4. கேரதீவு நிலைய சுற்றுப்புறச்சூழல் துப்பரவு பராமரிப்பிற்கான உதவிப்பணம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. தை மாதம் 2017 முதல் இன்றுவரை தொடர்ச்சியாக கேரதீவு நிலைய சுற்றுப்புறச்சூழல் துப்பரவு மற்றும் பராமரிப்பிற்கான மாதாந்த உதவிப் பணமாக ரூபா 10,000 இவ்வமைப்பினரால் வழங்கப்பட்டு வருகின்றது.

5. புங்குடுதீவு 06ஆம் வட்டாரத்தில் மக்களின் பயன்பாட்டிற்கு குடிநீர்த்தாங்கி ஒன்று ஆவணி மாதம் 2017 ஆம் திகதி மேற்படி அமைப்பினரின் உதவியுடன் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

6. 02.01.2018 ஆம் ஆண்டு வடஇலங்கையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தின் போது கண்டாவளை பிரதேசத்தைச் சேர்ந்த உமையாள்புரம், முசலித்திடல், புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் ஆகிய 04 கிராமங்களிற்கும் 3,50,000 ரூபா பெறுமதியான உலர்உணவுப்பொருட்கள் கண்டாவளை பிரதேச செயலரின் அனுமதியுடன் வடஇலங்கை சர்வோதயத்தினால் நேரில் சென்று வழங்கப்பட்டுள்ளது. அவ்வேளை, வெள்ள அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட உமையாள்புரம் கிராமத்திற்கு வட இலங்கை சர்வோதயத்தினால் ரூபா 20,000 பெறுமதியான புதிதாகத் தைத்த சிறுவர் ஆடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

7. வட இலங்கை சர்வோதய வளாகத்தின் சமயலறைப் பகுதிக்கு அலுமினிய வலையினாலான கிறீல் வேலை செய்து கொடுத்தமை போற்றப்படவேண்டிய பணியாகும். காகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான விலங்கினங்களின் தொல்லையிலிருந்து இத்தடுப்பு நிரந்தர விடுதலையை நிலையத்தினருக்கும், விருந்தினருக்கும் பெற்றுத் தந்துள்ளது. 12.5.2018 அன்று வட இலங்கை சர்வோதய உணவுப்பகுதி விறாந்தைக்கு 1,68,800 ரூபா நிதியுதவியில் கிறீல் வேலையமைப்பு செய்து நிதியுதவி வழங்கப்பட்டது.

8. PFM உற்பத்தி முகாமையாளரான திருமதி தமிழினி ஜெகசீலன் அவர்கள் 21.5.2018 அன்று அனுபவக் கற்கைக்காக இலங்கை ஏற்றுமதி அதிகாரசபையினால் தாய்லாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டவேளை அவரது பிரயாணச் செலவிற்காக ரூபா 60,000 மேற்படி ஒன்றியத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



**5.6.2019** அன்று சர்வோதய வளாகத்தில் இடம்பெற்ற தொண்டர் திருநாவுக்கரசுவின் சிலைத் திறப்பு விழாவின் போது மலர்மாலை அணிவிப்பு

9. தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் திருவுருவச் சிலையினை 11,00,000/- ரூபா செலவில் அமைத்துத் தந்துள்ளனர். சிலைத்திறப்பு விழா 05.06.2019 அன்று கோலாகலமாக சர்வோதய வளாகத்தில் ஜேர்மனி- புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் அமைப்பாளர் கணேசு மகாலிங்கம் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. வரலாற்றைப் படித்து வரலாற்றைப் படைத்து தானே ஒரு வரலாறாகி நிற்கும் தொண்டருக்கு திறப்புவிழா சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பல்வேறு சமூகச் செயற்பாடுகள்**

மனிதநேய கூட்டமைப்பின் (C.H.A) உதவியைப்பெற்று வாழ்வாதார உதவித் திட்டமாக குடும்பத்திற்கு தலா 5,000 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவரை புங்குடுதீவு 04ஆம் வட்டாரம், புங்குடுதீவு 10ஆம் வட்டாரம், புங்குடுதீவு 12ஆம் வட்டாரம் மற்றும் நுணுக்கல், மண்காடு, வேலணைத்துறை போன்ற கிராமங்களைச் சேர்ந்த 130 குடும்பங்களிற்கு சுழற்சி நிதிக்கடன் 19.7.2002 அன்று வழங்கப்பட்டது.

மனிதநேய கூட்டமைப்பின் நிறுவனத்தின் உதவியுடன், மின்னிணைப்பு இல்லாதிருந்த அக்காலத்தில் ரூபா 20,000 பெறுமதியானதும் சூரிய ஒளிச்சக்திகொண்டு இயங்கக்கூடியதுமான 10 சோலர் (Solar) மின்விளக்குகளை கேரதீவு, மடத்துவெளி, காளிகோவிலடி ஆகிய இடங்களில் உள்ள 10 குடும்பங்களிற்கு 2006ஆம் ஆண்டு வட இலங்கை சர்வோதயம் வழங்கியிருந்தது.

யுத்தகாலத்தில் தீவகப் பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் அகால மரணமடைந்த புங்குடுதீவு 07ஆம் வட்டாரம் வரதீவைச் சேர்ந்த செல்வி இளையதம்பி தர்சினி அவர்களுக்கு இலண்டன் புங்குடுதீவு நலன்புரிச்சங்கம் அனுதாப நிதியுதவியாக அவரது குடும்பத்திற்கு ரூபா 50,000 சர்வோதய வளாகத்தினரின் ஊடாக 22.03.2006ஆம் திகதியன்று வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு 09ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி. சிவலோகநாதன் வித்தியா அவர்களின் அகால மரணத்தையிட்டு அவரது குடும்பத்திற்கு பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தினரால் உதவப்பட்ட அனுதாப நிதி 2,10,000 ரூபாவை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீசன் மற்றும் J/26 பிரிவுக் கிராம அலுவலகர் சகிதம் 12.6.2015 அன்று நேரில் சென்று அவரது தாயார் திருமதி சி.சரஸ்வதி அவர்களிடம் செல்வி பொ.ஜமுனாதேவி அவர்களினால் கையளிக்கப்பட்டது.

01.10.2018 அன்று தீவகப்பகுதியில் நடைபெற்ற 'நிலமெஹவர' என்னும் நடமாடும் மக்கள் சேவைக்கென வட இலங்கை சர்வோதயத்தின் ஊடாக 50,000 ரூபா வேலணை பிரதேச செயலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

புங்குடுதீவு பிரதேசத்தில் கம்பிளியன் வீதியிலும் புங்கடி வீதி பெருங்காட்டுச் சந்தி கந்தசுவாமி கோயில் வீதிகளிலும் இதுவரை 50 வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் கம்பிளியன் வீதி மின்விளக்குகள் சுவிஸ் வாழ் திரு.பாஸ்கரன் குடும்பத்தினராலும், ஏனையவை சர்வோதய நிறுவனத்தினாலும் வழங்கப்பட்ட நிதியின் மூலம் 11.12.2018 ஆம் திகதி பொருத்தி முடிக்கப்பட்டுள்ளன.



ஜேர்மனி- புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் நிதியுதவியுடன் **5.6.2019** அன்று சர்வோதய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொண்டர் திருநாவுக்கரசுவின் சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு I

## இறுதிக் கடிதம்: புங்குடுதீவில் அவசர வேலையும் நிர்மாணப் பணிகளும்

உயர்திரு க.திருநாவுக்கரசு அவர்கள் தனது இறுதிக் காலத்தில் தன் வாழ்வில் எஞ்சியிருந்த "சில மணி நேரங்களை" செலவிடத் தீர்மானித்த அந்தக் கணங்கள், கனடா வாழ் புங்குடுதீவு மக்களுக்காக அவர் தயாரித்த புங்குடுதீவின் நிர்மாணத் திட்டங்கள் தொடர்பான கடிதமேயாகும்.

வரலாற்றுப் பெறுமதி மிக்க இக்கடிதம், கனடா பழைய மாணவர் சங்கத் தலைவராகவிருந்த திரு. சோம.சச்சிதானந்தன் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இக்கடிதத்தில் அவரது வாழ்வின் இறுதிக்கணங்களில் தன் மனதில் கனலாகவிருந்த சிந்தனைகளான புங்குடுதீவில் நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள், எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ள திட்டங்கள் என்பவற்றைப் பற்றி எழுதியுள்ளார். அந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்ற புங்குடுதீவு மக்களால் நிறைவேற்றப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

**கடிதம்**

தலைவர் அவர்கள்,
கனடா வாழ் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்,
கனடா.

சேவைக்குரிய தலைவர் அவர்கட்கு ஊடாக,
கனடா வாழ் புங்குடுதீவு மக்களுக்கு:

**புங்குடுதீவில் அவசர வேலையும் நிர்மாணப் பணிகளும்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நமது முன்னோர்களால் முன்னெடுக்கப்பட்டகிராம நிர்மாணப்பணிகள் இருபதாம் நூற்றாண்டு முடிவில் சுயம்பூரண வளர்ச்சிபெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய, சமூக, சுகாதாரம், கல்வி, விவசாயம், மின்சாரம், போக்கு வரத்து, வீட்டுவசதி, குடிநீர் வசதி, வான்பயிர் வளங்கள் அனைத் திலும் தன்னிறைவு கண்ட கிராமமாக மிளிரத்தொடங்கியது.

1991ஆம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் புலம்பெயர்வும், போர்க்கால நடவடிக்கைகளும், கட்டியெழுப்பப்பட்ட நிர்மாணப் பணிகளையும் அழித்து, மக்களையும் அகதிநிலைக்குத் தள்ளியது. புங்குடுதீவு வரலாறு சந்தித்த முதற் பேரழிவாகும் இது. இன்று ஒரு சூனியப் பிரதேசமாகத் திகழும் நமது தாயகத்தில் இரண்டாயிரத்து இரு நூறு(2200) மக்கள் எத்தகைய அடிப்படை வசதிகளுமற்று இராணுவ வலயத்திற்குள் வாழும் நிலையில் உள்ளனர். கோடிக்கணக்கான மக்களின் சொத்துக்களும் மக்களின் பெரும் முயற்சியால் கட்டியெழுப்பப்பட்ட நிர்மாண வேலைகளும் ஆலயங்களும் அழிவின் விளிம்பிற்கு வந்துகொண்டிருக்கின்றன.

கல்வியோ, ஆளுமையோ, கிராமப்பற்றோ, கடவுள் சிந்தனையோ இல்லாத மக்கள் தொகையே வாழ்வதால் குடிவெறியும் சமூக விரோதச் செயல்களும் தேச விரோதச் செயல்களும் மலிந்து கட்டுப்பாடற்ற சமூகமொன்று உருவாகி வருகிறது. இத்தகைய சூழ்நிலையிலிருந்து நமது தாயக மண்ணை மீட்கவும் புங்குடுதீவை மீண்டும் புனர்நிர்மாணம் செய்யவும் கனடா வாழ் புங்குடுதீவு மக்கள் அனைவரும் கைகொடுக்க வேண்டுகின்றோம்.

புங்குடுதீவின் தற்கால நிலைமைக்கும் எதிர்காலத்திற்கும் மேற்கொள்ளவேண்டிய அவசிய நிர்மாணப் பணிகள்.

1. கல்வி

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அரசின் புதிய கல்வித் திட்டத்திற்கும் ஏற்றவகையில், எல்லா நவீன வசதிகளும் கொண்ட கல்லூரியாக ஒரு பாடசாலையைப் புங்குடுதீவில் உருவாக்கி, மாணவர்களின் அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுக்க கனடா வாழ் மக்கள் முன்வர வேண்டும். இன்று புங்குடுதீவு பாடசாலைகள் பெரும் அவலநிலைக்கும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகிவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விவசாயம், வீட்டுத் தோட்டம், மரம் நடுகை

விவசாயம், வீட்டுத் தோட்டம், மரம் நடுகை ஆகியவற்றை மக்களிடம் ஊக்குவிக்க மரக்கறி நாற்றுக்கள், தென்னம்பிள்ளைகள், பழமரக் கன்றுகளை உற்பத்தி செய்து மக்களுக்கு இனாமாகவோ, மானிய விலையிலோ வழங்கி, உணவுற்பத்தியை அதிகரிக்கச்செய்து, கிராமச் சுயதேவையைப் பூர்த்திசெய்யத்தக்க நவீன நாற்றுமேடைகளை உருவாக்கி வழிகாட்டல்.

3. விலங்கு வேளாண்மை, கோழிப்பண்ணை

தற்போது கிராமத்திலுள்ள கால்நடைகளில் நல்லினங்களை இனவிருத்தி செய்து பால் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் குடும்பங்களின் பொருளாதாரம் வளர, புதிய விலங்குகளையும் வளர்க்க மக்களுக்குப் பயிற்சியளித்து வழிகாட்டல்.

4. மக்களுக்குப் பயிற்சியும், உதவியும் அளிக்கும் திட்டம்

கிராமத்தின் மூலப் பொருட்களில் பாதுகாப்பான கூடுகள் உருவாக்கி குடும்பக் கோழிப்பண்ணை நடாத்த மக்களுக்குப் பயிற்சியும், உதவியும் அளிக்கும் திட்டம்.

5. குளங்கள் அபிவிருத்தித் திட்டம்

கிராமத்தில் நீண்டகாலம் மக்களும், கால்நடைகளும் உபயோகித்த 30இற்கு மேற்பட்ட குளங்கள் உவர்நீராகி நிலத்தடி நீர்மட்டத்திற்கு மழைநீர் தேங்காதிருப்பதால், உவர்நீர் மட்டத்திற்கு இக்குளங்களை மூடி, மழைநீரைத் தேக்கி, நன்னீர்க் குளங்களாக இக்குளங்களை மாற்றியமைக்கும் திட்டம்.

6. கடலரிப்புத் தடுப்புத் திட்டம்

கிராமத்தின் நாலா பகுதியிலும் கடலரிப்பால் இழந்துவரும் கிராமப் பூமியை பாதுகாக்கவும் இழந்த பூமியை மீட்டெடுக்கவும் குறுகிய கால, நீண்டகால நிர்மாணத் திட்டம் தயாரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மரம் நடுகைத் திட்டம்

அதிக மழைவீழ்ச்சியைப் பெறவும் வரட்சியைக் கட்டுப்படுத்தவும் பழவகைகள் மூலம் நமது சிறுவர்களுக்கு உணவளிக்கவும் காற்றில் வரும் உவர்நீரைக் கட்டுப்படுத்தவும் வான்பயிர் மரங்களையும் பழ மரங்களையும் மூலிகை விருட்சங்களையும் வீதியோரங்களிலும் குளக்கரைகளிலும் பொது இடங்களிலும் ஆலயச் சூழல்களிலும் நட்டுப் பாதுகாக்கும் திட்டம்

8. பறவைகள் சரணாலயம்

புங்குடுதீவில் நடுவுத்துருத்திக் கிராமப் பகுதியைப் பறவைகள் சரணாலயப் பகுதியாக உருவாக்கிப் பருவ காலங்களில் ஆசியாவின் பல பகுதிகளிலுமிருந்து வரும் பறவைகளும், கிராமத்தில் நிரந்தரமாக வாழும் பறவைகளும் சுதந்திரமாக வாழப் பாதுகாப்பு வழங்கும் திட்டம்.

9. பசுக்களின் சரணாலயத் திட்டம்

குடிநீருக்கும் மேய்ச்சலுக்கும் அலைந்து திரிய முடியாமல் நா வறண்டு இறக்கும் வயோதிபப் பசுக்களையும் நோய்வாய்ப்பட்டு இறக்கும் பசுக்களின் மரணங்களையும் தடுக்க கிராமத்தில் பசுக்கள் சரணாலயம் உருவாக்கி உணவும் தண்ணீரும் பராமரிப்பும் பாதுகாப்பும் அளிக்கும் திட்டம்.

10. கால்நடை இன அபிவிருத்தித் திட்டம்

பசுக்கள் சரணாலயத்தில் இனவிருத்திக்குத் தகுந்த கிராமப் பசுக்களைத் தேர்ந்தெடுத்து, ஊசி மூலம் சினைப்படுத்தி பால்வளம் தரத்தக்க கன்றுகளை மக்களுக்குக் கொடுத்து கால்நடை வளர்ப்பில் புதிய ஊக்குவிப்பை உருவாக்கும் திட்டம்.

11. 5000 கால்நடைகளுக்கு உணவளிக்கும் திட்டம்

மேய்ச்சலுமின்றி, குடிதண்ணீருமின்றித் தவித்துத் திரியும் கிராமத்தின் கால்நடைகளுக்குப் பனையோலைகளை வெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவளிப்பதோடு பனைமரங்களின் வளத்தையும் பாதுகாக்கும் திட்டம்.

12. உணவு வங்கித் திட்டம்

கிராமத்து மக்களின் ஆரோக்கியம், சுகாதாரம், சத்துணவு தேவைகளைக் கண்காணிக்கவும், உடல் நிலைக்கேற்ற சத்துணவை சிறுவர்களும் பெரியோர்களும் பெறுவதற்கும் பருவகாலங்களுக்கு ஏற்ப மிக மலிவு விலைக்கு வரும் மரக்கறிகளையும், பழ வகைகளையும் கருவாடு, மீன் வகைகளையும் உணவு வங்கி மூலம் குடும்ப ரீதியாகப் பங்கிட்டு வழங்கும் திட்டமொன்றை உருவாக்கல்.

13. தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடம், தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட்டங்கள்

தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படும் தைப்பொங்கல், சித்திரை வருடம், தீபாவளி நாட்களில் கிராமத்தின் சகல குழந்தைகளும் மகிழக்கூடியதாகப் புதிய உடைகள் சிற்றுண்டிகள், விளையாட்டு உபகரணங்கள், கல்வி உபகரணங்கள் கொடுத்து கலாசாரக் கொண்டாட்டங்களில் சிறுவர்களைக் கவரச்செய்யும் திட்டம்.

14. தெங்கு, பனம் பொருள் கைத்தொழில்

தெங்கு, பனம்பொருள் கைத்தொழிலில் ஈடுபட்டு வரும் மக்களின் உணவு உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல், ஊக்குவித்தல், பயிற்சியளித்தல் ஆகிய திட்டங்களின் மூலம் உதவியளித்தல்.

15. இந்தியாவில் பயிற்சிநெறித் திட்டங்கள்

கிராமத்திலிருந்து தகுதி வாய்ந்த இளைஞர்களையும், யுவதி களையும் தேர்ந்தெடுத்து குடிசைக் கைத்தொழில், கால்நடை வளர்ப்பு, கிராமத் தொழில்நுட்பம், கால்நடை வைத்தியம், குடும்ப சுகாதாரம், தேனீ வளர்த்தல், மூலிகை வளர்ப்பு, சமையற்கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOhA JPL

ஆகிய துறைகளில் குறுகியகால, நீண்டகாலப் பயிற்சிகள் அளிக்கும் திட்டம்.

16. சாரதிப் பயிற்சிநெறித் திட்டம்

கடலிலும், தரையிலும் வாகனங்களை இயக்கவும், செலுத்தவும் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வேலை வாய்ப்புக்கள் பெற வழிகாட்டும் திட்டம்.

17. பயிற்சி நெறிகளும் பொது அறிவு வளர்ச்சிக்கு வழிகாட்டலும்

அரச திணைக்களங்கள், சர்வதேச நிறுவனங்கள், சமய ஸ்தாபனங்கள், தொண்டர் நிறுவனங்கள் நடாத்தும் பயிற்சி நெறிகளைக் கிராமத்தில் நடைபெறச் செய்து மக்களின் பொது அறிவு வளர்ச்சிக்கு உதவியளிக்கும் திட்டம்.

18. வாசகர் வட்டமும் வாசிப்புப் பயிற்சியும்

நாளாந்த, மாதாந்த வெளியீடுகளையும் சஞ்சிகைகளையும் வாசகர் வட்டங்களின் மூலம் வழங்கி வாசிப்புப் பழக்கத்தை மக்களிடம் ஊக்குவிக்கும் திட்டம்.

19. கிராமத் தொலைக்காட்சி நிலையம்

கிராமத்தில் மத்திய பகுதிகளில் பொதுத் தொலைக்காட்சி நிலையங்களை நிறுவி, கல்வி, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளையும் விஞ்ஞானச் செய்திகளையும் உலக விடயங்களையும் மாணவர்களும் மக்களும் அறிந்துகொள்ள உதவும் திட்டம்.

20. சிறுவர் சேமிப்புச் சேவைத் திட்டம்

இருபத்தோராம் நூற்றாண்டிலிருந்து கிராமத்தில் பிறந்த குழந்தைகளுக்கும் பிறக்கப்போகும் குழந்தைகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கி மூலம் சேமிப்புக் கணக்குகளை உருவாக்கிக் கொடுத்து கல்வியைத் தொடரவும் தொழிற்கல்வி கற்கவும் தொழிலை மேற்கொள்ளவும் இல்லறத்தை உருவாக்கவும் வழிகாட்டும் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

21. சைக்கிள் கடனுதவித் திட்டம்

சொந்தமான சைக்கிள்வண்டி இல்லாத மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் மூன்று வருடக் கடன் அடிப்படையில் சைக்கிள் வழங்கி கல்விக்கும் தொழிலுக்கும் மாணவர்களையும் தொழிலாளர்களையும் ஊக்குவிக்கும் திட்டம்.

22. சிறுவர் கடல் பூங்கா

மடத்துவெளித் துறைமுகத்தின் மேற்குப் பகுதிக் கடற்பரப்பில் சிறுவர் கடல் பூங்கா திட்டமொன்றை உருவாக்கித் துறைமுகத்தை அழகு செய்வதுடன் கிராமச் சிறுவர்களின் உல்லாசப் பிரயாண இடமாக நிர்மாணிக்கும் திட்டம்.

23. தண்ணீர் பந்தல் திட்டம்

கிராமத்திற்கூடாக நயினாதீவுக்கு வரும் யாத்திரீகர்களுக்கும் நெடுந்தீவுக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கும் பிரயாணஞ்செய்யும் பொது மக்களுக்கும் கிராம மக்களுக்கும் சுத்தமான குடிநீர் வழங்க பெருங்காட்டிலும் மடத்துவெளியிலும் நிரந்தர தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்து குடிநீர்வழங்கும் திட்டம்.

24. பொதுக் குசினித் திட்டம்

கிராமத்தில் தனித்துத் தங்கியுள்ள வயோதிபர்களுக்கு உணவு, குடிநீர், வைத்திய உதவி, சுகாதார வசதி அளிக்கத்தக்க பொதுக் குசினித் திட்டமொன்றையும் தொண்டர் சேவையையும் இணைக்கும் திட்டம்.

25. மாலை வகுப்புத் திட்டம்

கிராமத்து மாணவர்களுக்கு ஆங்கிலம், விஞ்ஞானம், கணித பாடங்களில் மேலதிகப் பயிற்சியளிக்கத் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் மூலம் மாலை வகுப்புகளை நடாத்தும் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. இயல், இசை, நாடகக் கல்வி

கிராமத்து மாணவர்களில் சங்கீதம், வாத்தியம், நடனம் கற்கத்தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து யாழ்நகரில் பயிற்சிபெற சனி, ஞாயிறு வகுப்புக்களுக்கு அனுப்பிப் பயிற்சியளிக்கும் திட்டம்.

27. புங்குடுதீவில் பண்ணிசைப் பயிற்சித் திட்டம்

தேவார, திருவாசகங்களைப் பண்முறையில் படிக்கத்தக்க திறமை வாய்ந்த மாணவர்களை வளர்த்தெடுக்கப் பண்ணிசை வகுப்பொன்றை கிராமத்தில் உருவாக்கும் திட்டம்.

28. கனடா-புங்குடுதீவு ஐக்கிய அபிவிருத்தி மன்றத் திட்டம்

கனடா வாழ் புங்குடுதீவு மக்கள் ஐக்கியத்துடன் வாழவும் புங்குடு தீவைக் கட்டியெழுப்பும் நிர்மாணப் பணியில் பங்குகொள்ளவும் கிராமத்தில் வாழும் தமது உறவினர்களையும் நண்பர்களையும் உற்சாகமூட்டி வாழ வைக்கவும் மேற்படி பெயரில் அமைப்பொன்றை உருவாக்கும் திட்டம்.

29. கனடா வாழ் இளைஞர் யுவதியர்க்கு இந்தியாவில் பயிற்சித் திட்டம்

கனடாவில் தாயகப் பணிகளில் ஈடுபடும் இளைஞர், யுவதிகள், தொண்டர்கள் ஆகியோர் தாயகப் பணிகள் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளவும் நிர்மாணத் திட்டங்களில் எப்படி ஈடுபடுவதென்பதை அறிந்துகொள்ளவும் இந்தியாவிலுள்ள காந்தி நிறுவனங்கள், சர்வோதய நிலையங்கள், விவசாயப் பண்ணைகள், பாற்பண்ணைகள், ஆடு வளர்ப்புத்திட்டம், பனை அபிவிருத்தித் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், சுகாதார சேவைப்பணிகள் அனைத்தையும் பார்வையிடவும் பயிற்சிபெறவும் வழிகாட்டும் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. கிராம மாணவர் கல்விச் சுற்றுலா

கிராமத்தின் மாணவர்கள் ஆண்டுதோறும் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு அறிவை வளர்த்துக்கொள்ள உதவியளிக்கும் திட்டம்.

31. கிணறுகள் சுத்திசெய்யும் பணி

கிராமத்தின் சகல பகுதிகளிலும் பொது இடங்களிலும் மக்கள் நீராடவும் குடிக்கவும் தண்ணீரை உபயோகிக்கும் கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்வதுடன் திருத்தப் பணிகள் மூலம் கிணறுகளைப் பாதுகாக்கும் சேவைத்திட்டம்.

ஒரு வரலாற்று அழிவையும் புலம்பெயர்வையும் சந்தித்துள்ள நமது தாயகத்தை மீண்டும் புனரமைத்து புலம்பெயர்ந்த மக்களைக் கிராமத்திற்குத் திரும்பச் செய்வது மிகக் கடினமான பணியாக இருந்தாலும் நமது அனுபவங்களையும் திறமைகளையும் அறிவையும் பயன்படுத்தி இப்பணியை விரைவுபடுத்த முடியும்.

மீளக் குடியமர்ந்த மக்களுக்கும் கிராமத்திற்கும் மிக அத்தியாவசியமாக வேண்டப்படும் வேலைத்திட்டங்களே தங்களுக்கு இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தங்கள் சங்கத்தின் சக்திக்கேற்ப இத்திட்டங்களில் தாங்கள் விரும்பும் திட்டங்களைத் தேர்ந்தெடுத்தால் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த விரிவான புள்ளிவிபரங்களும் நடைமுறைக்கேற்ற செயல் வடிவங்களும் தயாரிக்கப்படவேண்டும். செயற்பாடுகளை நிறைவேற்றித் தங்கள் நோக்கம் நிறைவேற முழுமையான எமது பங்களிப்பு தங்கள் பணிகளுக்கு வழங்கப்படும்.

கடைசி

பல இன்னல்களைக் கடந்து கனடாவில் தஞ்சமடைந்து அகதிநிலை வாழ்க்கையில் இருந்தபோதும் உங்கள் தாயகத்தை மறவாது அந்த மண்ணுக்கும் மண்ணில் வாழும் மக்களுக்கும் சேவையாற்ற வேண்டுமென எழுச்சிகொண்டு பணிபுரியத் துடிக்கும் கனடாவாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு மக்களினதும் இளைஞர் யுவதிகளினதும் தேசப்பற்றுக்குத் தலைவணங்கி வாழ்த்துகின்றோம்.

மண்ணின் பிறப்புரிமையையும் மக்களின் உறவையும் கிராமத்தின் சொந்தங்களையும் இழந்துவிடாமல் காக்க பூங்குடி மக்கள் எழட்டும்! உலகமக்களின் உறவுகளையும் அன்பையும் பெற்று “புதியதோர் உலகம் செய்வோம்”!

**நன்றும் தீதும் பிறர்தர வாரா!!**

**செய் அல்லது செத்து மடி!**

கனடாவின் பனிமலைக்கும் அரசுக்கும் வாழியுலகின் வாழ்த்துக்கள்!

அன்புடன்
க.திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு 2**

## அமரர் க.திருநாவுக்கரசு அவர்களின் அரசியல் கோட்பாடு

கிராம சுயராச்சியமே எமது சித்தாந்தம். இனவாதம், மதவாதம், மொழிவாதம், கட்சிவாதம், சாதி வாதம், பிரதேசவாதம் அனைத்தையும் கடந்து மனித குலம் எங்கள் குலம், பூமி எங்கள் கிரகம், உயிர்க்குலம் எங்கள் கட்சி, சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை, நீதி எங்கள் மதம், கிராமம் எங்கள் கோயில், ஒழுக்கம் எங்கள் யாப்பு.

## வட இலங்கை சர்வோதய யாப்பு
## (நோக்கம்–இலட்சியம்–அமைப்பு)

**சேவைத்திட்ட நிலப்பரப்புப் பிராந்தியம்:**

நெடுந்தீவு தொடக்கம் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி வரையுள்ள நகரங்கள், கிராமங்கள், குடியேற்றங்கள் அனைத்தையும் இணைத்து வட இலங்கை சர்வோதயம் செயலாற்றும் பொறுப்புரிமை கொண்டது.

**பெயர்:**

வட இலங்கை சர்வோதயம்

**உதயம்:**

23.07.1972ஆம் ஆண்டு புங்குடுதீவில்

**நோக்கம்:**

பிரிவினைகளற்ற எழுச்சியும் சுரண்டலற்ற பொருளாதாரமும் கூட்டுறவு கொண்ட சமுதாய வாழ்வும், பூர்வீக கலை கலாச்சாரமும், விஞ்ஞானமும் கொண்ட எழுச்சி மிக்க சமுதாயத்தைக் கிராம மட்டத்திலிருந்து உலக மட்டத்திற்கு எழச்செய்து புதியதோர் உலகம் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலட்சியம்:**

மக்களின் சிந்தனை, செயல், அறிவு, அனுபவம் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, கிராமங்களிலிருந்து உலகை நோக்கியெழும் வாழ்க்கை நெறிகொண்ட சமுதாயத்தை அன்பு, கருணை, அஹிம்சை, தியாகம், மனிதநேயம், மகிழ்ச்சி, கூடிவாழ்தல், என்ற சனாதன தர்மங்களுக்கூடாக மனிதோதய மேம்பாட்டிற்குள் அழைத்துச் செல்வோம்.

**முரசு:**

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

**தாரக மந்திரம்:**

"யாதுாஊம் ஊரே-யாவரும் கேளிர்"

**இலச்சினை:**

ரிசபம்

**கொடி வர்ணம்:**

இளம் சிவப்பு

**மூலை வர்ணங்கள்:**

நீலம், பச்சை, மஞ்சள், ஊதா

**தத்துவம்:**

பகவத் கீதை, திருக்குறள், பெரியபுராணம், கந்தபுராணம்

**அடிச்சுவடு:**

சனாதன தர்மம், மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், லியோ டால்ஸ்டாய்

**தலைமை நிர்வாக மையம்:**

வட இலங்கை சர்வோதய சேவை வளாகம், புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்திட்டம்:**

கிராம மட்டத்திலிருந்து உலகை நோக்கியெழும் இலக்குகளை நிர்மாணப் பயிற்சிகள் மூலம் முன்னெடுத்து மனிதகுல மேம்பாட்டுக்கு அர்ப்பணித்தல்

**பயிற்சித் தளங்கள்:**

1. ஆதாரக் கல்வியும் பண்பாட்டுப் பழக்கங்களும்
2. சுகாதாரப் பயிற்சியும் இயற்கையின் உறவும்
3. ஆதார உணவுகளும் சமையல் பாகங்களும்
4. உடையும் உடலாரோக்கியமும் சுவாத்தியமும்
5. குடிசை விவசாயமும் வான்பயிர் வளர்ப்பும்
6. விலங்கு வேளாண்மையும் உயிர்களுடன் உறவும்
7. மழைநீர் சேமிப்பும் குடிநீர்ப் பாதுகாப்பும்
8. கிராமியக் கலைகளும் பாமரர் இசையும்
9. நூலகங்கள் சேவையும் நூல்கள் பாதுகாப்பும்
10. நூதனசாலையும் தொல்பொருள் சேகரிப்பும்
11. வானொலி, தொலைக்காட்சி, செய்மதி, தொலைத்தொடர்பு, விஞ்ஞானம்
12. சேமிப்பு, காப்புறுதி, ஓய்வூதியம், வங்கி நலன் சேவைகள்
13. கடல் வளம், கடலாதிக்கம், கடற்கரை காத்தல், கடலோடல்
14. கிராம வீதிகள், நெடுஞ்சாலைகள்-பாதைகள், ஒழுங்கைகள் பாதுகாத்தல்
15. சிரமதானம், பூமிதானம், புத்திதானம், சம்பத்தானம், ஜீவதானம்
16. ஜீவோதயம், குடும்போதயம், மனிதோதயம்
17. ஆன்மீகம், அறவாழ்வு, சும்மா இருத்தல், சாந்திசேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கிராமோதயம், தேசோதயம், விஸ்வோதயம் நோக்கி எழுதல்
19. சமாதானம், சட்டம், தேசவழமை, நீதி பேணல்
20. கன்னி, மங்கை, விதவை, அனாதைப் பெண்களுக்கான சேவைகள்
21. பசு வளர்ப்பு, பசு காத்தல், பசுவதை ஒழிப்பு
22. மதுஒழிப்பு, மதுசார உற்பத்தித் தடுப்பு, போதைப்பொருள் மறுப்பு
23. இயல், இசை, நாடகம், பேசும் தமிழ்ப் பணிகள்
24. பொறியியல், இயந்திரவியல், தொழில்நுட்பவியல், கலைகள் வளர்ப்பு
25. சுதேசியம், சுயசக்தி, சுயராச்சியம், சுயம்பூரணம்
26. ஸ்ரீலங்கா தொடக்கம் ஐக்கிய நாடுகள் வரை உலக வலம்
27. விளையாட்டு, களியாட்டு, உலகாட்டு பயிற்சிகள்
28. சுதேசியத் தொழில்நுட்பங்கள் கிராமியக் கைப்பணிகள்
29. குடியேற்றங்கள், பூமி மீட்டல்கள், பூமி பாதுகாப்புகள்
30. பசுமை வளர்ப்பு, பசுமைப் பாதுகாப்பு, பசுமை நேசிப்பு
31. சைவ வாழ்வு, சைவ உணவு, சைவச் சங்கம், சைவ உலகு
32. முதியோர் சேவை, அங்கவீனர் பணிகள், நோயாளர் தொண்டு
33. யுவர், யுவதி, யுகம், தலைமுறைச் சேமிப்பு
34. பாத யாத்திரை, தலயாத்திரை, சுற்றுலாப் பயணம், உல்லாசப் பயணம்
35. குடும்ப நிதியங்கள், கிராமச் சீட்டுக்கள், கைமாற்றுக் கடன்கள், வட்டிக் கடனுதவிகள், கூட்டுறவு நலன்கள்
36. கிராமமட்ட, சமய, சமூக, கலை இலக்கிய மன்றங்கள், அரச திணைக்களங்கள், இலாகாக்கள், தன்னார்வத் தொண்டு நிலையங்கள் ஆகியவற்றுடன் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. பிரதேச, மாவட்ட, தேசிய மட்ட அரச திணைக்களங்கள், இலாகாக்கள், சபைகள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் சேவைகள், அனுபவங்கள், தொழில்நுட்பங்கள் பகிர்தல் ஒன்றியம்

38. ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய சேவைத் திட்டங்கள், உலகளாவிய தொண்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்றிட்டங்களுடன் இணைந்து செயலாற்றல், பங்குகொள்ளல், பகிர்ந்து கொள்ளல்

39. அணுவாயுத உற்பத்தி, அணுவாயுதப் போர், இயற்கை அழிப்பு, இன அழிப்பு, ஆக்கிரமிப்பு, சுரண்டல் ஆகியவற்றிற்கு எதிராகப் போராடும் உலக மக்களுடன் இணைதல், போராடுதல்

40. தனி மனித வாழ்க்கைச் சுமைகளை சமுதாயக் கடமைகளாகப் பகிர்ந்துகொள்ளல், ஏற்றல்

41. சமுதாயக் கூட்டுறவு, சமூகக் கூட்டுறவு, கிராமக் கூட்டுறவு, வலுவடைதல், கூடிவாழ்தல், பேராசை, சுயநலம், போட்டி நீங்கி நிற்றல்

42. தியானம், யோகாசனம், புலனடக்கம், உடலோம்பல், உளப் பரிணாமக் கலை

43. மூலிகைத் தோப்பு, தென்னந்தோப்பு, பனந்தோப்பு, தலவிருட்சங்கள், கோட்டம்

44. சோதிடம், வைத்தியம், வானசாஸ்திரம், பரவெளித்தத்துவம் கற்றல்

45. சமாதானம், சட்ட உதவி, நீதிமன்றுக்கு உண்மை விளம்பல்

46. மயானம், இடுகாடு, மடம், தீர்த்தக்கரை பராமரிப்பு, அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம் கிராமங்களின் சேவை நோக்கி
## வட இலங்கை சர்வோதயம் புங்குடுதீவு
### 1972 தொடக்கம் 2000 வரை மேற்கொண்ட நிர்மாணப் பணிகள்

சர்வோதய சேவையில் இணைக்கப்பட்ட குடும்பங்கள் 10,000

நிர்மாணத் திட்டங்களில் இணைக்கப்பட்ட அங்கத்தவர்கள் 25,000

நிர்மாணப் பணிக்கு இணைக்கப்பட்ட கிராமங்கள் 300

நிர்மாணிக்கப்பட்ட சேவை நிலையங்கள் 26

சுகாதார சேவைப் பயிற்சி நிலையம் 01

மாதிரிக் கிராமத் திட்டம் (கேரதீவு) 01

விவசாயப் பயிற்சிப் பண்ணை (கிளிநொச்சி) 01

அகதிகள் புனர்வாழ்வுத் திட்டம் (மாளிகைத் திடல்,ஜெயபுரம்) 02

மலையக மக்கள் சேவை நிலையம் (தலை மன்னார்) 01

குடிநீர் விநியோகத் திட்டம் (தீவகம்) 01

## அமரர் க.திருநாவுக்கரசு அவர்களின் சிந்தனைகளின் வழியாக வட இலங்கையில் செயல்வடிவம் பெற்ற சில பணிகள்

1. அகதிகள் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள்
2. அங்கவீனர் சேவைத் திட்டங்கள்
3. அன்னதானப் பணிகள்
4. ஆன்மீகக் கலை கலாச்சாரப் பணிகள்
5. இயல் இசை நாடகப் பணிகள்
6. இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பணிகள் - வாலிப முன்னணியின் வளர்ப்பு
7. உயிர் பாதுகாப்புச் சேவை
8. கடல்நீரைத் தடுத்து பூமியை மீட்கும் திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கால்நடை வளர்ப்பு, பாதுகாப்பு
10. கிராமங்கள் தோறும் குடிநீர் வழங்கல்
11. குடும்ப நிதிய சேவைத் திட்டங்கள்
12. குடும்ப பாதுகாப்பு காப்புறுதித் திட்டங்கள்
13. குருபூசை வழிபாடுகள்
14. குளங்கள் வெட்டுதல் புனரமைத்தல்
15. கோமாதாக்களுக்குத் தீன் தானம்
16. கோயில் திருப்பணிகள்
17. சத்துணவுத் திட்டம்
18. சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்
19. சித்த ஆயர்வேத வைத்திய சேவை
20. சிரமதானம்
21. சிவபூசைக்கான ஒழுங்குப் பணிகள்
22. சிறுவர் சேமிப்புத் திட்டங்கள்
23. சிறுவர் பள்ளிகள்
24. சுகாதார சேவை
25. தண்ணீர்ப் பந்தல் சேவை
26. தாய் சேய் நலன் சேவை
27. தாயகம் மீளும் மலையக மக்கள் சேவை
28. தீவகப் பிரயாணக் கஷ்டங்களால் வாடும் மக்களுக்கான சத்திரப் பணிகள்
29. நல்லூர் முருகன் வழிபாட்டாளர் நலன் சேவைப் பந்தல்
30. நற்பணி மன்றங்கள் உருவாக்குதல்
31. நன்னீர்க் கிணறுகள் கட்டுதல்
32. நியாய விலைக் கடைகள்
33. நீதி நூல்கள் மறுபதிப்புப் பணிகள்
34. நீதி நூல்கள் முற்றோதல் செய்வித்தல்
35. நூல்நிலையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. பத்திரிகை வெளியிடுதல் (தீவகம் பத்திரிகை, புங்குடுதீவுக் குரல், சேவை மலர்)
37. பசுப்பண்ணைத் திட்டம்
38. பயிற்சி வகுப்புகள் நடாத்தல்
39. பறவைகள் சரணாலயம்
40. பாதயாத்திரைகள் நடாத்தல்
41. பொதுக் குசினிப் பணிகள்
42. மயான அபிவிருத்தித் திட்டம்
43. மர நடுகை
44. மழைநீர்த் தேக்கம்
45. மாதிரிக் கிராமம் உருவாக்கல்
46. முதலுதவி வகுப்புக்கள்
47. முதியோர் பராமரிப்பு-கௌரவிப்புப் பணிகள்
48. வரட்சி நிவாரணப் பணிகள்
49. வழிபாட்டாளர் சேவைகள்
50. வாழ்க்கைப் பயிற்சி நிலையங்கள்
51. விதவைகள், கைவிடப்பட்ட பெண்களுக்கான சேவைகள்
52. விவசாயம்
53. வீட்டுத் தோட்டம்
54. வெள்ள நிவாரணப் பணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 3

# அமரர் கந்தையா திருநாவுக்கரசு பற்றிய தகவல் அடங்கியுள்ள பிற நூல்கள்




### திரு மலர்: தொண்டொன்று தொடர்ந்த காதை

த.துரைசிங்கம் (தொகுப்பாசிரியர்), புங்குடுதீவு 03: வட இலங்கை சர்வோதயம், 1வது பதிப்பு, 2001. (அச்சகவிபரம் அறியமுடியவில்லை).

136 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: இலவசம், அளவு: 21 x 15 சமீ.

வடஇலங்கை சர்வோதய இயக்கத்தின் அமைப்பாளரான சமூகத் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு (01.03.1939 - 03.10.2001) அவர்களின் மறைவையொட்டி வழங்கப்பட்ட இரங்கல் செய்திகளும் நினைவஞ்சலிகளும், அன்னாரின் சமூக வாழ்க்கைப் பாதையை ஆவணப்படுத்தும் வகையில் அமைந்த புகைப்படத் தொகுப்பும் கொண்ட நினைவஞ்சலி மலர்.




### புங்குடுதீவு கிராமசபையில் நான்கு ஆண்டுகள் 1964-1968


க.திருநாவுக்கரசு, புங்குடுதீவு: கந்தையா திருநாவுக்கரசு, நான்காம் வட்டாரம், 1வது பதிப்பு, மே 1968. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21 x 14 சமீ.

வட இலங்கை சர்வோதய சிரமதான அமைப்பின் அமைப்பாளரான அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் தான் 1964-1968ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் புங்குடுதீவு கிராமசபையில் கு.வி.தம்பித்துரை அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றியவேளை கிராமசபைக்கு உள்ளேயும் வெளியேயும் தனது வட்டாரத்திற்கும் முழு நாட்டிற்கும் எவ்வகையில் பணிகளைச் செயற்படுத்தினார் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் இந்தப் பிரசுரத்தினை வெளியிட்டிருக்கிறார். இச்சுற்றுநிருபத்தில் புங்குடுதீவு கிராமசபையின் கடந்தகால நிதி நிலைமை, அவர் பதவி ஏற்றபின் உருவாக்கப்பட்டுள்ள பண வரவு, அரசாங்க நன்கொடைகள், அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுசெய்யப்பட்ட விபரங்கள், கடந்த தேர்தலில் தனது வட்டாரத்தில் தான் கூறிய வேலைத்திட்டத்தின்படி நிறைவேற்றப்பட்டுள்ள வேலைகள், சோலைவரியால் எதிர்காலத்தில் சபையின் நிதி நிலைமை ஆகியவைகளைப் பற்றித் தெளிவாகப் புள்ளிவிபரங்களுடன் விளக்கியுள்ளார்.



**புங்குடுதீவு வாழ்வும் வளமும்**

தம்பிஐயா தேவதாஸ், கொழும்பு: புங்குடுதீவு அபிவிருத்திச் சங்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (கொழும்பு 13: சன் பிரின்டெக், 44ஏ, ஸ்ரீ கதிரேசன் வீதி).

286 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25 x 19 சமீ.

ISBN: 955-96785-2-3.

இலங்கையின் வடபுலத்தில் உள்ள சப்ததீவுகளில் ஒன்றான புங்குடுதீவு பற்றிய பதிவாக இந்நூல் அமைகின்றது. புங்குடுதீவின் கோவில்கள், பாடசாலைகள், சமயப் பெரியார்கள், வர்த்தகர்கள், கல்வியியலளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், துறைசார் விற்பன்னர்கள், சமூக அமைப்புகள் என்று பல்வேறு வரலாறுகளையும் புகைப்பட ஆவண உதவியுடன் பதிவாக்கியுள்ளார். புங்குடுதீவின் கதை, பெயர் வந்த காரணம், நிர்வாகம், தொழில்கள், போன்ற 24 தலைப்புகளில் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். தமிழ்-சிங்கள சினிமா தொடர்பான பல நூல்களை எழுதியவர். ஊடகத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர்.




**பொன்விழா மலர்: வட இலங்கை சர்வோதய அறங்காவலர் சமூக சேவகி பொன். ஜமுனா அவர்களின் சேவை பாராட்டு விழா**

கா.குகபாலன் (மலராசிரியர்), புங்குடுதீவு: பொன். ஜமுனா அவர்களின் சேவை பாராட்டுவிழாக்குழு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரிண்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).

128 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 24.5 x 19 சமீ.

வட இலங்கை சர்வோதய சங்கம், புங்குடுதீவில் அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களால் 23.7.1972இல் தாபிக்கப்பட்டதன் பின் தன் 18ஆவது வயதில் 1978இல் தன்னையும் சர்வோதய அமைப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துக்கொண்டு, சர்வோதய அமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளராகத் தன் பணியைத் தொடர்ந்தவர் பொன்னம்பலம் ஜமுனாதேவி. 3.10.2001இல் அமைப்பாளர் க.திருநாவுக்கரசுவின் அமரத்துவத்தை அடுத்து அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்று தனது மண்ணுக்குத் தன்னாலான சேவையினை சர்வோதயக் குடும்பத்துடன் இணைந்து ஆற்றி வருகின்றார். அவரது சமூக சேவையின் பல்பரிமாணத்தையும் சர்வோதய அமைப்பினதும் அதன் தாபகர் திருநாவுக்கரசுவினதும் வரலாற்றையும் பல்வேறு பிரமுகர்களின் பார்வையில் இம்மலர் பதிவுசெய்கின்றது.





**மண்மறவா தொண்டர்: திரு**

வி.ரி.இளங்கோவன் (தொகுப்பாசிரியர்). பிரான்ஸ்: ஐரோப்பிய கீழைத்தேய தொடர்பு மையம், துலுஸ், 1வது பதிப்பு, கார்த்திகை 2001. (பிரான்ஸ்: CDC Europe Orient, BP 229, 31000 Toulouse).

92 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 20 x 14 ச.மீ.

புங்குடுதீவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கிய வடஇலங்கை சர்வோதய இயக்கத்தின் அமைப்பாளரான அமரர் கந்தையா திருநாவுக்கரசு பற்றிய அஞ்சலி நூல். பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சி.காராளபிள்ளை, கலாசிதி க.தேவமனோகரன், க.மகாலிங்கம், செ.நடனசபாபதி, ஏ.வேணுகோபாலன், பேராசிரியர் வி.சிவசாமி, கலாநிதி கா.குகபாலன், மாவை சேனாதிராஜா, கலாநிதி ஏ.ரி.ஆரியரத்தினா போன்றோரின் அஞ்சலிக் குறிப்புகளைக் கொண்ட தொகுப்பு.




**மண்மறவா மனிதர்கள்**

வி.ரி.இளங்கோவன் (தொகுப்பாசிரியர்), பிரான்ஸ்: ஐரோப்பிய கீழைத்தேய தொடர்பு மையம், துலுஸ், 1வது பதிப்பு, கார்த்திகை 2001. (பிரான்ஸ்: CDC Europe Orient, BP 229, 31000 Toulouse).

52 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 20 x 14 சமீ.

சமூகத் தளத்தில் பணியாற்றிய, பணியாற்றும் ஆளுமைகள் பற்றிய அறிவை இளம் தலைமுறையினரிடம் தொற்ற வைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி. ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தை சி.இராமலிங்கம், மருத்துவக்கலையில் இலக்கியத் தமிழ்கண்ட வித்தகர் விஸ்வபாரதி, மக்கள் தொண்டன் க. திருநாவுக்கரசு, புத்தக, அச்சக வித்தகர் செம்மல் சுப்பிரமணியம், கவிஞர் சில்லையூர் செல்வராஜன், எழுத்தாளர் டானியல், மூத்த கம்யுனிஸ்ட் தலைவர் என்.சண்முகதாசன், பத்திரிகையாளர் வீ.சின்னத்தம்பி, போன்றோர் பற்றிய முக்கிய வாழ்க்கைக் குறிப்புகள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

**மண்மறவா மனிதர்கள்**

வி.ரி.இளங்கோவன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: உமா பதிப்பகம், 23, 3/3 அறத்துசா ஒழுங்கை, இணை வெளியீடு, பிரான்ஸ்: முன்னோடிகள், 2வது பதிப்பு, செப்டெம்பர் 2011, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (கொழும்பு 12: Lanka Book Depot, FL1-14, Dias Place, Gunasingapura).

100 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150.00, அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-1162-37-5.

சமூகத் தளத்தில் பணியாற்றிய, பணியாற்றும் ஆளுமைகள் பற்றிய அறிவை இளம் தலைமுறையினரிடம் தொற்ற வைக்கும் முயற்சி. மூத்த கம்யுனிஸ்ட் தலைவர் என்.சண்முகதாசன், எழுத்தாளர் டானியல், கவிஞர் சில்லையூர் செல்வராஜன், பத்திரிகையாளர் வீ.சின்னத்தம்பி, ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தை சி.இராமலிங்கம், அச்சக வித்தகர் செம்மல் சுப்பிரமணியம், மருத்துவக்கலையில் இலக்கியத் தமிழ்கண்ட வித்தகர் விஸ்வபாரதி, மக்கள் தொண்டன் சர்வோதயம் க. திருநாவுக்கரசு ஆகியோர்பற்றி முதலாவது பதிப்பில் இடம்பெற்ற கட்டுரைகளுடன் மேலதிகமாக, புத்தகசாலை அதிபர் ஆர்.ஆர்.பூபாலசிங்கம், பத்திரிகையாளர் ஆர். சிவகுருநாதன், நிர்வாகி சி.சடாட்சர சண்முகதாஸ், வித்துவான் சி.ஆறுமுகம், வித்துவான் பொன் அ.கனகசபை, பண்டிதர் வீ.வ.நல்லதம்பி, கலாநிதி க.சிவராமலிங்கம், திருமதி வேதவல்லி கந்தையா, கவிஞர் சு.வில்வரத்தினம் ஆகியோர் பற்றிய முக்கிய வாழ்க்கைக் குறிப்புகள் கட்டுரை வடிவில் இவ்விரண்டாவது பதிப்பில் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

பொது நூலகம்
19 NOV 2019
யாழ்ப்பாணம்

## சர்வோதய கீதம்

சர்வோதயம் சர்வோதயம் சர்வோதயம்
சகலதற்கும் சுயமெதென்று கேட்கும் தத்துவம்
சத்தியமே அச்சுயமென் றேத்தும் தத்துவம்
அகிலமாதா குடிபுகுந்து வாழும் இராச்சியம்
அனைத்தினிற்கும் விடிவளிக்க வாய்த்த சேஸ்திரம்
- சர்வோதயம்

கிழக்கெழுந்த ஞாயிறன்ன கிளருங் கொள்கைகள்
கேண்மை, வீரம், ஞானம், அன்பு வளரும் எல்லைகள்
மொழி மதங்கள் இனப்பகைகள் யாவும் மேவியோர்
முழுமதத்தைத் தழுவி நிற்கும் அகிலதத்துவம்
- சர்வோதயம்

கிராமம் நகர் மாநிலங்கள் யாவும் தங்களின்
கீர்த்தி மிக்க சுயவெழுச்சி பெறவும் பெற்றவை
தேசியத்தில் ஒன்றிச் சர்வதேச மாயெழ
சீர்த்தி மிக்க ஆட்சிமுறை காட்டும் அரசியல்
- சர்வோதயம்

அறிவிய லோடாத்ம ஞானம் சங்கமிக்கவும்
அகம், புறங்கள் தரம் தொழில்கள் ஒன்றி நிற்கவும்
துறையனைத்தின் பிரிவிணைந்து வாழும் பேர் நெறி
தொடர்ந்து வரும் படிமுறையில் வளரும் நன்னெறி
- சர்வோதயம்

கைத்தொழில்கள் நுட்பவேலை வர்த்தகம் கமம்
கணிதங் கலை சாஸ்திரங்கள் பொருளியற்றுறை
அத்தனையும் புதுமை நோக்கில் வகுத்தினிற்றொழில்
ஆலையெல்லாம் ஆலயங்கள் ஆக்கும் ஆய்வகம்
- சர்வோதயம்

தனியுடமை தனிநலன்கள் தேய்ந்து வீழவும்
சர்வகொடுங் கோன்முறைகள் மாய்ந்து போகவும்
பெருமனித நிலையைநோக்கி விரியும் ஓர் தளம்
பிரபஞ்ச முத்தி தழுவியதோர் சிந்தனைக்களம்
- சர்வோதயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

பொதுசனநூலகம்
19 NOV 2019
மாநகரசபை
யாழ்ப்பாணம்

## புதுயுகம் எழுகுது

புதுயுகம் எழுகுது முழுமதம் வருகுது
பூரணரே விழித்தெழுக, இளம் பூரணரே விழித்தெழுக!
இனிவருங் காலம் எங்களின் தோழன்
எதற்குமே நாம் இனி அஞ்சோம் - புது
யுகத்தையே அமைக்கவே வந்தோம்!
- புதுயுகம் எழுதுகு....

பழமையும் அறிந்த புதியவர் நாங்கள்
சத்தியமே எங்கள் பாதை - அதன்
விஸ்தரிப்பே எங்கள் வாழ்க்கை
சுயநலமொழி இனமத வெறி - யாவும்
சூழ்ந்தனவே இருளாக எம் சோதனைக்கே எதிராக
அவை விரைவாக அழிபடும் வரையும்
அகல் விளக்கேற்றுவோம் நாங்கள் - புது
ஒளித்திசை காட்டுவோம் நாங்கள்!
- புதுயுகம் எழுதுகு....

இனி ஒருபோதும் தனிவெறி எதிலும்
இருப்பதற்கே இடமில்லை - அதன்
கருக்களை அறுவைகள் புரிவோம்
எதற்குமே அடியாய் இருக்கிற சக்தியின்
எழுச்சியின் காலமிதன்றோ - அதன்
வளர்ச்சிக்கு எம்முயிர் தருவோம்
வளர்ச்சிக்கு எம்முயிர் தருவோம்!
- புதுயுகம் எழுகுது....

1303CC

274287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு
சர்வோதய நற்பணி ஒன்றியம், ஜேர்மனி

Kumaran Press (Pvt) Ltd. kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org